## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| போராடும் பெண்மணிகள் | 22-00 |
| சிநேகமுள்ள சிங்கம் | 40-00 |
| காதல் வெண்ணிலா | 22-00 |
| நானே எனக்கொரு போதிமரம் | 33-00 |
| இனி என் முறை | 30-00 |
| ஆசை என்னும் வேதம் | 40-00 |
| என் கண்மணி | 22-00 |
| அகல்யா | 24-00 |
| மெர்க்குரிப் பூக்கள் | 42-00 |
| கரையோர முதலைகள் | 38-00 |
| என்றென்றும் அன்புடன் | 27-00 |
| கானல் தாகம் | 22-00 |
| எட்ட நின்று சுட்ட நிலா | 24-00 |
| விசிறி சாமியார் | 22-00 |
| சுந்தரி கண்ணால் ஒரு சேதி | 24-00 |
| ஆசைக் கடல் | 44-00 |
| அடுக்கு மல்லி | 24-00 |
| தெல்லுச் சோறு | 40-00 |
| வன்னிமரத்தாலி | 30-00 |
| இரவல் கவிதை | 28-00 |
| அன்புக்குப் பஞ்சமில்லை | 26-00 |
| ஆனந்த வயல் | 40-00 |
| ஒரு வழிப் பாதை | 27-00 |
| கிருஷ்ண அர்ஜுனன் | 22-00 |
| முன்கதைச் சுருக்கம் | 30-00 |
| சின்ன சின்ன வட்டங்கள் | 25-00 |
| பந்தயப் புறா | 46-00 |
| வர்ண வியாபாரம் | 36-00 |
| இரும்புக் குதிரை | 55-00 |
| கண்ணாடிக் கோபுரங்கள் | 45-00 |
| மானஸ தேவி (புதிய நாவல்) | 30-00 |
| மணல் நதி (புதிய நாவல்) | 28-00 |

30192
4652721

# தாயுமானவன்

வெளியே இரவு. மனசு மாதிரி அமைதியாய் இருந்தது. மெல்லிய குளிர் ஒரு சந்தோஷம் மாதிரி உடம்பெல்லாம் சுற்றி வந்து கொண்டிருந்தது. மேல மேகங்கள் பொதிப் பொதியாய் மேய்ச்சலுக்குப் பிறகு ஊர் திரும்பும் கால்நடைகள் மாதிரி நகர்ந்து கொண்டிருந்தன.

பரமு நாற்காலியைத் தூக்கி இன்னும் வராண்டாவின் கைப்பிடிச் சுவருக்கு அருகே போட்டுக் கொண்டான். முடிந்தவரை வானம் முழுவதும் அங்கிருந்தே பார்க்க ஆசைப்பட்டான்.

தாம்பரம் தூங்க ஆரம்பித்து விட்டது. சென்னையும் அதன் சுற்றுப்புறமும் பத்து மணிக்கு அடங்கி விடுகின்றன. பதினொன்றுக்கு ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கி விடுகின்றன. பன்னிரண்டு அல்லது ஒரு மணிக்கு ஊர் சின்ன பரபரப்பு காட்டும். புரண்டு படுத்துத் தோளைச் சொறிந்து எழுந்து ஒரு மடக்கு தண்ணீர் குடிக்கிற மாதிரி இரவுக் காட்சி சினிமா முடிந்த பிறகு கொஞ்சம் முனகும். இரண்டு மணிக்கு உலுக்கினாலும் எழுப்பாத தூக்கம்.

பம்பாய் இரண்டு மணிக்குத்தான் தூங்கவே போகுமாம். பத்து மணிக்கு 'ஜேஜே' என்று இருக்குமாம். பன்னிரண்டு மணிக்கு ஒரே சிரிப்பும் கும்மாளமும் தானாம்.

## 1

நாளை மறுநாள் பம்பாய் இரவை இப்படி உட்கார்ந்து 'ஹா' என்று பார்க்கப் போகிறேன்—

என் சரசு, என் லதா, என் குட்டிப் பையா என்று மனைவியையும், மகளையும், மகனையும் நினைத்து ஏங்கப் போகிறேன்.

ஏக்கம் இப்பொழுதே வந்துவிட்டது. பிரிவுக் கவலை 'யப்பா' என்று பிறீடுகிறது. இதுகளையெல்லாம் விட்டுட்டுப் போக வேண்டுமா என்கிற வேதனை வருகிறது. எப்படி எப்படி எப்படி இருப்பேன் என்கிற கவலை எழுகிறது.

இத்தனை நாள் வரை வேலை பற்றிய கவலை. வேலை கிடைத்தவுடன் பிரிவு பற்றிய கவலை.

ஒரு நாளா—இரண்டு நாளா...வீட்டோடு அழுந்தி அயர்ந்து கிடந்தது. சரியாய் ஒரு வருடம், மூன்று மாதம், நாலு நாள்.

வேதனையான காலம்.

இரண்டாயிரத்தை நூறு ரூபாய் வேலை பனிச் சென்று வாழ்க்கையிலிருந்து பிரிய, கத்திக் குத்துப் பட்டாற்போல் கிடந்த காலம். 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்பது உடைந்து அவலமாய்த் திரிந்த காலம்.

'அப்பா...' பரமு உடம்பு சிலிர்த்தான். 'என் எதிரிக்குக் கூட வரக்கூடாதுப்பா இந்தக் கஷ்டம்,' என்று நினைத்துக் கொண்டான்.

ஆனால், எதிரிகள் யார்? எதிராகப் பேசினவர்களா ஏமாளி என்று சிரித்தவர்களா. 'ப்ரதர், இத்தோட நீ க்ளோஸ்' என்று கை தட்டினவர்களா? இந்த வேலை பிடிபட்டு, தன் திறமை முழுவதையும் அதில் கொட்டி இன்னும் அதிக வருமானம், உயர்ந்த பதவி, ஆதரவாய் ஆட்கள் என்று சென்னை வந்தால் எதிர்த்தவனும், பழித்தவனும், சிரித்தவனும் எதிர்ப்பட எதிரியாய் எண்ண முடியுமா?



''அன்னிக்கு நீ சொன்னபோது கோவம்தான் கோவிந்தா. அந்தக் கோவத்துலதான் வீட்டுக்குப் போனேன். விட்டது நல்லதுன்னு வச்சுக்கோ. இப்ப பார், இப்படி ஒரு இடம் கிடைச்சிருக்குமா. கனவுல கூட இப்படி இருப்பேன்னு நினைச்சிருப்பேனா. எல்லாம் நல்லதுக்குத்தான். என்ன சொல்றே...உங்க வீட்ல எல்லாரும் சௌக்கியமா? கோவிந்தா?''

'இத்தோட க்ளோஸ்' என்று கை தட்டியவனின் தோளில் கை போட்டுப்பேசும் போது அவன் எதிரியா, நண்பனா?

யார் எதிரி? யார் நண்பன்? காலம் காட்டும் மாயை இது. காலம்தான் எதிரி. காலம்தான் நண்பன். காலம்தான் குரு. காலமே கடவுள்.

கடவுள் மாதிரி. நல்ல காலம் சகலருக்கும் வந்து எதிரே மின்னும். வரம் கேட்க வாயைத் திறந்து பேசும் சக்தி அப்போது வேண்டும். உபயோகப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் வேண்டும். அந்த ஆற்றலுக்கு ஆயத்தமாய் இருக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆற்றலை வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டு அதுவரை அமைதியாய் இருக்கும் கலை கைவர வேண்டும். எல்லாவற்றையும்விட, நல்ல காலம் வரும் என்கிற நம்பிக்கை அவசியம்.

சரசுதான் அவன் நம்பிக்கை. அவள்தான் வாய் ஓயாது 'வரும்...நல்ல காலம் வரும்' என்று பேசியவள். அயர்ந்த போதெல்லாம் தேற்றியவள்.

பொய்யாய்த் தேற்றுகிறாள் என்று நினைத்ததெல்லாம் பழங்கதையாய்ப் போய் விட்டது. உண்மையிலேயே நல்ல வேலை கிடைத்துவிட்டது.

''காஷுவல் லேபர் வேலை கிடைச்சாக் கூட சரி சார்.''

"நோ, ஸாரி."

"சார்..."

"பதினோரு வருஷம் ஃபோர்மன் வேலை பார்த்தவர் கேஷுவல் லேபரா வேலை செய்ய முடியாது. அது உங்களுக்கும் நஷ்டம், எனக்கும் நஷ்டம்."

"சார்..."

"மிஸ்டர் பரமசிவம், ஃபோர்மன் ட்ரெயினிங்னு பம்பாய் அசெம்பிளில ஆறு மாசம், ஃபோர்மன் ஆன் டெபுடேஷன்னு டில்லியில ஆறு மாசம். பிறகு மெட்ராஸ்ல போட்டுர்றேன். சர்வீஸ் ஸ்டேஷன்ல இன்சார்ஜா இருங்க. ஒரு மாசத்துல நாற்பது வண்டி விக்கிற இடம் இது. ரொம்ப ரெஸ்பான்ஸிபிள் ஜாப். தெருவில நம்ம தயாரிப்பு வண்டி ஏதாவது நின்னாக் கூட ஏன் ஏதுன்னு நீங்களா பார்க்கணும். யூனியன் ஸ்டாஃப் மாதிரி 'சங்கு ஊதிட்டான். கைகழுவிட்டோம்'னு கூடாது."

"யெஸ் சார்...நோ சார்..."

"ரெண்டும் சொன்னா என்ன அர்த்தம்."

"நோ சார். யெஸ் சார்."

வாய்விட்டு அவர் சிரிக்க, இவனும் சிரித்தான். அப்போது சந்தோஷம் அனல்காற்றாய் அடித்தது. புது இன்ஜின் மாதிரி சீறியது. பிடிப்பு மிக்க ப்ரேக் மாதிரி தரையோடு அழுந்திக் கோடு போட்டு உள்ளே கிறீச்சிட்டது.

'சரசு வேலை கிடைச்சிருச்சு... வேலை கிடைச்சிருச்சு' நூறு கிலோ மீட்டர் விரைவில் வண்டியை வளைவு திரும்பி, இன்னும் வேகம் கூட்டி இரண்டே நிமிடத்தில் வீடு வரும் உணர்வை மனம் அனுபவித்தது.



ஆனால், பம்பாய் போக வேண்டும். ஒரு வருடம் வீடு விட்டுப் பிரிந்து, 'அன்புள்ள சரசு, நான் இங்கு நலமாய் இருக்கிறேன். நீ நலமா...' என்று கடிதத்தில் வரைந்து கொண்டிருக்க வேண்டும். நீல நிற இன்லாண்ட் பார்க்கிற போதே மனசு விம்மும்.

'குழந்தைகளை எந்தக் காரணம் கொண்டும் கோபிக்காதே சரசு. நமக்குப் பிறந்த ரெண்டும் மாணிக்கங்கள். சென்ற ஒரு வருடம் அவர்களிடமிருந்து நான் அதிகம் கற்றுக் கொண்டேன். என் வேதனையைப் போக்கி நான் மனுஷனாய் உலாவ அவர்கள்தான் காரணம். உண்மையைச் சொல்லணும்னா சரசு, எனக்கு உன் ஞாபகம்தான் ரொம்ப. வந்தவுடனே கோபிக்குப் பொம்மை வாங்கிட்டேன். லதாவுக்கு ஃப்ராக் வாங்கிட்டேன். தலைமாட்டுல இருக்கு. பொம்மையைப் பார்க்கறச்செல்லாம் குழந்தைங்க நினைப்பே..."

இரண்டு நாட்கள் பொறுத்து எழுத வேண்டிய கடிதம் இப்போதே நெஞ்சில் ஓடியது. இன்னும் அயர வைத்தது.

பாமு தலையை உலுக்கிக் கொண்டான். வீடு பிரிய அல்லல்பட்டா உருப்பட்டா மாதிரிதான். வீட்லயே உட்கார்ந்துட்ட சுகம். நடக்கணும்னா, ஓடணும்னா உதறுது.

உதறுதேன்னு பார்த்தா முடியுமா ஓடித்தான் ஆவணும். பல்லைக் கடிச்சிக்கிட்டு தொடை ரெண்டும் 'விண்விண்'ணுனு வலிச்சாலும் ஓடித்தான் ஆவணும். பதிமூணு வயசுப் பொண்ணு, அஞ்சு வயசுப் புள்ளை. தோள்ல தூக்கி ரெண்டையும் நிமிர்த்த வேணாம். நிமிர்ந்து அதுக நல்ல இடமா அமையற வரைக்கும் ஓட வேணாம். ஓடித்தான் ஆவணும். திபுதிபுன்னு துட்டே குறியா ஓடணும். இந்த ஒரு வருஷம் வீட்டிலேயே கிடந்ததுக்கு வேற ஒரு குடித்தனமா இருந்தா சந்தி சிரிச்சிட்டிருக்கும்.

சரக...சரக ஓட்டினா குடித்தனத்தை. சத்யபாமா மாதிரி ஓட்டினா, கிருஷ்ணன் சரிஞ்சிட்ட பிறகு பல்லுல குதிரை லகானப் புடிச்சுகிட்டு இடது கையில வில்லும் வலது கையில அம்புமா. அடேங்கப்பா, என்ன போராட்டம். எத்தனை காயம். எவ்வளவு வலி. என்னவெல்லாம் வேதனை.

ஐயோ, கோயில்ல வச்சுக் கும்புடணும். தேர் ஓட்டறவளா சரக, நேரா ஓட்டினா. ''நீங்க ஒண்ணும் கவலைப்பட வேணாம். உங்களுக்கு வேற வேலை கிடைக்கிறவரைக்கும் நான் பொறுப்பேத்துக்கறேன், கவலைப்படாதீங்க. நான் இல்லாத நேரம் பசங்க ஸ்கூல் விட்டு வந்ததும் பசங்களைப் பார்த்துக்கங்க... போறும்...''

தேர் சரியாதது இறைவன் அருள். பரமு கைகூப்பினான்.

இப்பேர்ப்பட்ட செல்வங்களை விட்டு விட்டு பம்பாய்க்கு ஓடி, அதன் வெளிப்புற வட்டத்தில் இருக்கும் நூற்றுக்கணக்கான தொழிற்சாலை ஒன்றில், கார்கியர்களைப் பிரித்து அடுக்கிக் கோத்து மாட்டி.. இதுவும் ஒரு நேரம் விராட பருவம். அடக்கமாய் அமைதியாய் இருக்க வேண்டியது அவசியம். 'யெஸ் சார்... நோ சார்' என்று இரண்டும் சொல்லிக் காரியமே கண்ணாய், உயர்வே முக்கியமாய் உழைக்க வேண்டிய நேரம்.

யூனியன் லீடராய், அசெம்பிளி ஃபோர்மனாய் ஒன்றுக்கு இரண்டு சிறகாய் தொப்பியில் சொருகிக் கொண்டு கம்பீரம் காட்டியதெல்லாம் பழங்கதை. நடந்த கதை. வாசல் செக்யூரிடியிலிருந்து அசெம்பிளியில் தன் நாற்காலி வரை நாற்பது பேர் குட்மார்னிங் சொல்ல நடந்த மரியாதைகள் இனி செல்லாதுபோகும்.

''சாப்பாட்டுல கல்லு நிறையன்னு கம்ப்ளெயின்ட் வந்திருக்குது. நாளைக்கு சோத்துல கல்லு பார்த்தேன் — இதே இடத்துல உன்மூஞ்சில தூக்கி அடிப்பேன்.



கான்டீன் மானேஜர்னா என்ன பெரிய எம்.டி-ன்னு நினைப்பா. மரியாதையா நடந்துக்க...'' — ஒரு உறுமலில் தவறுகள் நேராகும்.

''கல்லு இருந்தா என்னடா... பொறுக்கிப் போட்டுட்டுத் தின்னு. எட்டணைக்கு சாம்பார், ரசம், மோரு போட்டு சோறு வேணும். அதுல பெண்டாட்டி பக்குவமும் வேணும்னா திமிருதானே உனக்கு. ஆயிரம் பேருக்கு அரிசி களைஞ்சு போட சொல்ல அப்படித்தான் இருக்கும். சட்டை புடிச்சுக் கேட்டயாமே... யார்றா நீ ? எந்த செக்ஷன்?''

''டயர் மாட்றேங்க.''

''டோக்கன் நம்பர் என்னா?''

''காஷுவல் லேபருங்க. டோக்கன் நம்பர் இல்லீங்க.''

''நினைச்சேன்... புதுசு போல இருக்கேன்னு. அங்கம்மா புள்ளைதாண்டா நீ. என் பேரு சொல்லித்தானே கம்பெனில சேர்ந்தே. சட்டை மடிப்பை அவுருடா. தாடி மீசையுமா பொறுக்கி மாதிரி சுத்திக்கிட்டிருந்தவன் நீ. கம்பெனி வேலைல சேர்ந்ததும் சட்டையைப் புடிக்கிறியா.''

''எல்லாரும் 'போய்க் கேளு, போய்க் கேளு'ன்னாங்க சார். அதான் கேட்டேன், ஒரு கல்லு தின்னா செத்துற மாட்டேன்னாரு அந்தாளு. அதான்.''

''உடனே சட்டையைப் புடிச்சியா? பெரிய பிஸ்தாவா நீ... ப்ளேடு வச்சிருக்கியா, பின்னால திரும்புடா.''

''அதெல்லாம் வுட்டேங்க. பையிலயும் வவுத்துலயும் ஒண்ணுமில்லாததாங்க வேலைக்கு வரேன். உங்க பேருக்குத் தப்பு வரும்படி இனி செய்யமாட்டேங்க. இந்தத் தபா வுட்ருங்க.''

''போ. போய் மன்னிப்பு கேளு அவன்கிட்ட.''

''அவன் சோத்துல கல்லு இருந்தது... நாங்க பார்த்தோம், அப்புறம் எதுக்குப்பா மன்னிப்பு கேக்கறது?''

''இங்க நீ விடரா - நான் விடரா...'' ஒரு புலி மாதிரி திரும்பி முறைத்த முறைப்பில் பேரமைதி படரும். முயல் கூட்டமாய் ஆட்கள் பிரிய, சில நரிகள் மட்டும் அடித்தொண்டையில் பதுங்கிப் பதுங்கி உறுமும்.

இனி இவையனைத்தும் கனவான காலம். பாமு சிரித்தான். இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்தி அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

வேடிக்கையாய் இருந்தது. சகலமும் வேடிக்கையாய். குழந்தை விளையாட்டாய் பட்டது. அவசரம், ஆத்திரம், தந்திரம், மமதை, மிரட்டல், உருட்டல், மீறுதல், கடுமை அத்தனை கல்யாண குணங்களும் இந்த ஒரு வருடம் மூணு மாதத்தில் காணாமற் போய் விட்டன. இப்போது மனசுக்குள் இரவு மாதிரி ஒரு அமைதி படர்ந்து விட்டது. இரவு நேரக் குளிர் மாதிரி ஒரு மெல்லிய சந்தோஷம் உடம்பில் தங்கியிருக்கிறது. ஒரு முதிர்ச்சி கிடைத்திருக்கிறது.

இந்த முதிர்ச்சியைப் பயன்படுத்த வேலையில் இன்னும் திறன்மிகும். திறன் மிக இன்னும் நூறு பேரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக முடியும். அடுத்தவர் நம்பிக்கை தனக்கு வழிகாட்டி, உயர முடியும். தானும் உயர்ந்து குழநதைகளையும் உயர்த்தி ஒரு நல்ல நிலைக்கு வரமுடியும். இனி,குழந்தைகளின் வளர்ச்சியே முக்கியம். சரசுவைக்கூட இதுதான் சந்தோஷப் படுத்தும்.

''என்னங்க... தூங்கலையா...''— சரசு ஹாலைக் கடந்து படுக்கையை மிதிக்காமல் தாண்டித் தாண்டி நடந்து பாமுவின் எதிரே வந்து நின்றாள்.

''என்ன யோசனை'' அருகே நின்று அவன் தோளில் இடுப்பை உரசி, தலைமுடியைக் கோதினாள்.



''தள்ளி நில்லு சரசு. பசங்க முழிச்சுக்கிட்டிருக்கப் போவுது!''

''தூங்கிடுச்சுங்க. அதுங்க தூங்கட்டும்னுதானே உள்வேலையை நிதானமாக முடிச்சுட்டு வந்தேன்.''

''ஏதுனா பேசணுமா சரசு?''

''என்ன பேசறது. ஒரு பக்கம் 'அப்பாடா'ன்னு சந்தோஷமா இருக்கு. ஒரு பக்கம்'ஐயோ'ன்னு இருக்கு. பசங்களை யாராவது பார்த்துகிட்டா நானும் கூடவே கிளம்பிடுவேன். இப்ப ஒண்ணுமில்லை. காலைல நீங்க வண்டில ஏறி நகர்ந்தவுடனே 'ஓ'ன்னு வெக்கமில்லாம நடு ஸ்டேஷன்ல உக்கார்ந்து அழுவப் போறேன். நிச்சயம்''—சரசு இன்னொரு நாற்காலியை இழுத்து அவனெதிரே போட்டு அவன் முழங்கால் உரச உட்கார்ந்தாள், அவன் மடியில் கவிழ்ந்து கொண்டாள்.

''சும்மா கதை வுடாதே. அழற பொம்பளையா நீ. உன் தைரியம் ஊர்ல எந்தப் பொம்பளைக்கும் இருக்காது.''

''அதெல்லாம் நீங்க கிட்ட இருக்கற வரைக்கும் தான். பொட்டியைத் தூக்கிட்டு நீங்க போய்ட்ட பிறகு நெஞ்சே சுழண்டு வுழுந்துரும்.''

''இனிமேதான் நீ தைரியமா இருக்கணும் சரசு. இது வரைக்கும் செஞ்சதைவிட இனிமேதான்...''

''என்ன செஞ்சுட்டேன். வேலைக்குப் போனது ஒரு பெரிய விஷயமா. நூத்துக்குத் தொண்ணூறு பொம்பளைங்க வேலைக்குப் போறாங்க. புருஷன், பெண்டாட்டி ரெண்டு பேருமா ரிடையராகிற வரைக்கும் வேலைக்குப் போய் சம்பாதிக்கிறாங்க.''

''ஆனா, உன்னை மாதிரிப் புருஷனை வீட்ல உக்கார வச்சுட்டு வேலைக்கு போனவ ஆயிரத்துல ஒண்ணு.''

''யப்பா – உக்காந்திங்களே ஒரு வருஷம். ஆட்டுக் கல்லும், சோப்புக் கட்டியும், அலசுன தண்ணியுமா, கொடுமைங்க அது.''

''எல்லாம் ஒரு அனுபவம்தான்.''

''இந்தக் கொடுமைக்கு, கண் மறைவா இருந்தாலும் ஒரு வேலைக்குன்னு நீங்க போறது பரவாயில்லை. அந்த மனுஷன்—வேலை குடுத்த புண்ணியவான்—நல்லா இருக்கணும். அங்கே போய் யூனியன், கட்சி அது இதுன்னு வேணாம்பா. பாஷை தெரியாத இடம். வுட்டுருங்க இங்கயோட...''

''போகணும்னாலும் முடியாது சரசு. மானேஜ்மெண்ட் ஆளா போட்டிருக்காங்க. தலை நிமிர்த்திப் பேசினா வூட்டுக்கு அனுப்பிருவான்.''

''வேற வம்பு தும்புக்கும் போகக்கூடாது. ரூம் விட்டா ஆபீஸ், ஆபீஸ் விட்டா ரூம்னு இருக்கணும்.''

''வேற போக்கிடம்?''

''ஏதாவது தெம்படும் பெண்டாட்டி இல்லாத குறைடக்குன்னு படும். பெரிய ஊரு. கெட்ட சமாசாரம் அதிகம் அங்க.''

''தேவிடியா வீட்டுக்குப் போவேன்னு பயப்படறியா?''

''அதுக்கு சொல்லலைப்பா...''

''இந்த நீச புத்தி போவாதே உன்னை விட்டு...'' பாமு, சரசுவின் கன்னத்தை வலிக்கத் திருகினான்.

''அதுக்கில்லேப்பா... ஒரு வாரம், பத்து நாளுன்னா சரி—வருஷம்ல தாண்டணும்.''

''எனக்கும் அதே கவலைதான்.''

''என்னது ''



''நான் இல்லாத குறைக்கு இடையில நீ எவன்கூடயாவது படுத்துக்குவியோன்னு.''

''சீ... கொன்னுடுவேன், மேல பேசினா...''

''என்னை மட்டும் சொல்லலாமா—''

''நீங்க போவீங்கன்னா சொன்னேன். போயிடாதீங்கப்பான்னு கெஞ்சினேன் ''

''தத்தி புண்ணாக்கு. அதுக்கு ஒரு வயசு வேணும். முப்பத்தேழு வயசுல பொம்பளைக்கு அலைய முடியுமா...? பதினைஞ்சு வருஷம் நிறைவா குடித்தனம் பண்ணிட்டு இருபது ரூபாய்க்குப் போக முடியுமா... சீ... நினைக்கறப்பவே... கருமம். நான் கிழமைலே பெண்டாட்டி சிரிச்சுக் கூப்பிட்டாலே சில சமயம் முடியலை. சத்து பொத்து தாண்டி நாத்தப் படுக்கையிலா... கருமம்... கருமம்... கை எடுறி மேலேர்ந்து...''

''பெண்டாட்டி புருஷன்கிட்ட வரம் கேக்கற மாதிரி தானேப்பா கேட்டேன். ஏன் கன்னுன்னு கோச்சிக்கிறீங்க. சரி... உள்ளே போய்ப் படுக்கலாமா...''

''என்ன... ஒரு மாதிரியா கை கோத்து இழுக்கறே... என்ன விசேஷம்.''

''ம்... இன்னிக்கு விட்டா... ஒரு வருஷம்...''

''இருபது ரூபாய்க்கு மேலே ஒரு பைசா தரமாட்டேன் சரியா...''

''சீ... கை எடுங்க மேலேர்ந்து. எங்க போவும் பொறுக்கி புத்தி. பெரிய யோக்கியம் மாதிரி வேஷம் தான்.''

''ஹை... நீ யோக்கியமா... பக்கத்துல படுத்துக்கிட்டு செலவுக்குத் துட்டு கேட்டதில்லையா நீ...''

''ஏன்... நான் கேக்காம... படுத்துக்கிட்டும் கேப்பேன் கழுத்துல துண்டப் போட்டும் கேப்பேன்.''

"வுட்டுரும்மா. என்கிட்ட துண்டும் இல்லை, துட்டும் இல்லை. வேலைக்குப் போய் சம்பாதிச்சுக் கொண்டு வரேன். என்ன..."

"நாளைக்கு குடுங்க துரை. மொள்ள குடுங்க. நெஞ்சுல எழுதி வைச்சுக்கங்க. சரசுவதிக்கு கடன்... பத்து கட்டி வராகன்னு."

"அம்மாடீ — எனக்குக் கட்டாதும்மா."

"அட சீ... வாங்க எழுந்து."

"துட்டு வேணாங்கறியா..."

"ஆமா, கொட்டிக் கவுத்துட்டாரு வீடு முழுக்க சொர்ண மயமா. பேரம் வேற..."

"டட்டடய்ங்... யாரங்கே... என் சரஸ்வதிக்கு இரண்டு பெட்டி தங்க நாணயங்கள் உடனே கொண்டு வாருங்கள்."

"அதெல்லாம் வேண்டாம். பாம்பேலேர்ந்து வரச் சொல்ல நல்ல புடைவையா புது டிஸைனா, மேட்ச் ஆகிற ரவிக்கையோடு பத்து எடுத்தாங்க."

"இன்னும் ஒரு வருஷம் ஆவும் சரசு."

"கடவுளே... நினைப்பு மூட்டாதீங்க. சொல்றப்பவே சுத்துது எனக்கு."

நிமிர்ந்து உட்கார்ந்தபடி மெல்லச் சுழன்றாள். பரமு அவளை இழுத்து இறுக்கிக் கொண்டான். சரசு அவன் நெஞ்சில் பறவை மாதிரி ஒண்டிக் கொண்டாள்.

'சாகித்யம் தியாக சங்கீதம் நானாக
வாழ்கின்ற நம் ஜீவிதம்
சங்கீதம் இல்லாது சந்தோஷம் வேறேது
சாரீரம் என் சீதனம்.'



—எங்கோ தொலைவில் ரேடியோ பாடிற்று. சங்கீதம் பொங்கி வழியும் சாகித்யம் அந்த வீட்டில் வீணை நாதமாய், நாம்போடு ஒட்டிய இசையாய், பிரிய முடியாத தவிப்பாய் இறைஞ்சுதலாய் தாபத்துடன் எழுந்தது. பாட்டு முடிந்த பிறகு பரமு மல்லாந்தான். நாளைக் காலை பம்பாய்க்குப் புறப்பட வேண்டும். நினைக்கும் போதே தூக்கம் உடம்பை விட்டுப் போயிற்று.

உடனே எழுந்து போய், தூங்குகின்ற குழந்தைகளின் கன்னம் வருட வேண்டும் போலிருந்தது. பையனின் காலை எடுத்து மடியில் போட்டு மெல்ல அழுத்தி விட வேண்டும் என்கிற ஆசை வந்தது. தூக்கம் கலையாது கன்னங்களில், காது மடலில் குளிரக் குளிர முத்தமிட வேண்டும். நெற்றியில் இதழ் பதித்து, 'கடவுளே, பரம் பொருளே, என் புண்ணியம் அனைத்தும் இந்தக் குழந்தைகளிடம் சேரட்டும்' என்று வழங்கிவிட வேண்டும்.

முன்பெல்லாம் புரண்டால் குழந்தைகள்மீது கையோ, காலோ படும். ரொம்ப சமீபமாய்த்தான் இப்படிப் பூனை மாதிரி எழுந்து மனைவியோடு அறைக்குள் நுழைந்து படுத்துக் கொள்கிற ஹிம்சை.

"இந்த இடம் மூச்சு முட்டுது சரசு. ஹாலை விட்டு எழுந்து இதுக்குன்னு வரணும். திரும்பவும் எழுந்து படுக்கைக்குப் போகணும்."

"இஷ்டமிருந்தா வரலாம். இல்லைன்னா வேணாம்."

"பேச்சுக்குப் பேச்சு குத்தம் கண்டுபிடிச்சாஎப்படி?"

## 2

"நினைக்கா தெரியணும். இல்லே சொன்னா புரியணும். ரெண்டுமில்லேன்னா, சரி போங்கன்னுதான் பேச முடியும்."

''குழந்தைங்க முழிச்சுக்கும்னு பாக்கறியா. காலைல உலுக்கி எழுப்பினாக்கூட பத்து நிமிஷம் உட்கார்ந்தபடி சாமியாடிட்டுதான் குட்மார்னிங் சொல்லுதுங்க.''

''முழிச்சுடுச்சுங்கன்னு வைச்சுக்குவோம். அதை விட மானக்கேடு உண்டா? நினைப்பு இருக்கட்டும், நம்ம பொண்ணுக்குப் பதிமூணு வயசு.''

''இன்னிக்கில்லேன்னா நாளைக்குத் தெரிஞ்சுக்கத் தானே வேணும் எல்லாத்தையும்.''

''அது சரி, தாமரை மொட்டை உதறி பிரிச்சாப்ல சொல்லிட முடியுமா. உதறினா அடுக்கு மொத்தமும் உதிர்ந்து மொட்டைக் காம்பா நிக்கும். பூ தானா மலரணும்.''

''அடடா! என்ன உவமானம், என்ன உவமானம்.''

''புரிஞ்சா சரி...''

இத்தனை பேச்சுக்குப் பிறகு நெஞ்சு முழுக்க பையனும் பெண்ணும் நிறைந்து கொள்ள மனைவியின் நெருக்கம் உணராமல் போய்விடும்.

பெண் குழந்தை பிறந்தபோது வெறும் கர்வம்தான் இருந்தது. தவழ்ந்தபோது அதிசயம்தான் எஞ்சிற்று. மழலை துவங்கிய தளிர் நடைப் பருவத்தில் அவள் உலகமே இவன் உலகமாயிற்று. அப்பா என்று அழைத்த போது வயிறு குழைந்தது. கேவியபோது நெஞ்சு விம்மிற்று. நோயுற்ற போது உடம்பெல்லாம் பதறிற்று. இரண்டு சாக்லெட்டுக்கு மூன்று முத்தங்கள் பதிலாய்க் கிடைத்த போது கண் சொருகும் கிறக்கம் வந்தது. பிள்ளை பிறந்து அவனும் இவற்றைக் கடந்து, இரண்டும் பள்ளிக்குப் போக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடகம். அத்தனையும் குதூகலம்.

அதுவும் சென்ற வருஷம் முழுவதும் குழந்தைகளோடு இன்னும் நெருக்கம் ஆயிற்று.



இப்போது பிரிய வேண்டும்.

''என்ன...ரொம்ப கஷ்டமா இருக்கா மனசுக்கு?''

''ஹால்ல போய்ப் படுத்துக்கலாம் சரசு. பசங்க மத்தியில படுத்துக்கணும்போல இருக்கு எனக்கு.''

தூங்கும் பிள்ளையை வாரி நெஞ்சில் போட்டுக் கொண்டான். இடப்பக்கம் சுருண்டு தூங்கும் பெண் நெற்றியை வருடினான். வலப்பக்கம் முழங்கை மடிப்பில் கொஞ்சிய மனைவியின் முதுகை வருடினான்.

சரசு அவனை நெருக்கமாய் அணைத்துக்கொண்டாள். மனைவியின் திண்மையான மார்புகள் பரமுவின் வலது தோளில் அழுத்தின. நெஞ்சுக் கூட்டில் பையனின் சூடு பரவியது. இடம் கரம் பெண்ணைத் தூக்கி இறுக்கிக் கொள்ள, நெஞ்சில் வாஞ்சையும் இடப்பக்கம் வாத்ஸல்யமும் வலப்பக்கம் காதலுமாய் உடம்பு மூன்று கூறாய்ப் பிளந்து மூன்று உயிர்களுக்கும் தனித்தனியே அன்பைப் பகிர்ந்து கொடுத்தது.

'மனுஷனாலே முடியாதது எது சரசு. மனுஷனுக்கு நூறு முகம். தகப்பன், புருஷன், பிள்ளை, பேரன், சிநேகிதன், வேலைக்காரன், யூனியன் லீடர், வோட்டு போடறவன்னு நூறு முகம். ஒண்ணுக்குள்ள ஒண்ணா இருந்து ஒண்ணோட ஒண்ணு கலக்காத முகம்.''

அத்தனையும் செய்துட முடியும். ஒரே நேரத்துல கூட செய்துட முடியும். தெளிஞ்சவனுக்கு உறவுப் பிரச்னையே இல்லை. தெளியறதுதான் பிரச்னை'— பரமு மனசுக்குள் முனகினான்.

''என்க—வழில சாப்பிட என்ன செய்து தரட்டும். இட்லிக்குப் போட்டிருக்கேன். அது தவிர...''

''உன் இஷ்டம்.''

''உங்க இஷ்டமா எதாவது சொல்லுங்களேன்.''

''எதுனா ஒண்ணு ..''

''புடிச்சதா எதுவும் இல்லையா.''

''இருந்தது. இந்த ஒரு வருஷத்துல சாப்பாடே பசிக்குத்தான்னு ஆயிடிச்சு. ருசி உதறிட்டேன். அதுவும் நல்லதுக்குத்தான். தினம் ரொட்டியான்னு அங்கபோய் அழ வேணாம் பாரு.''

''என்னாலேதான் அப்படி ஆயிடுச்சு இல்லை...''

''என்னாலே உன்னாலேன்னு எதுவும் இல்லை. கை புடிச்சு யாரோ எங்கேயோ கூட்டிக்கிட்டுப் போறாங்க. நடக்கிறோம். அவ்வளவுதான்.''

''வெறுத்துப் போயிட்டீங்க இல்லை...''

''வெறுப்பா...இது நிதானம்.''

''முதல்லியே இருந்திருக்கலாம்.''

''பட்டுத் தெரியறது உசத்தி.''

''இப்படிப் படவேணாம். காண்டீன் சோறு மூணு விதமா போட்டாக்கூட பிடிக்காது. வீட்டுச் சாப்பாடு சாப்பிட்ட ஆளு. இப்ப சோறே வெறுத்துப்பேசறீங்க.''

சட்டென்று கண்ணெதிரே உயரமான டிபன்பாக்ஸ் மின்னிற்று.

பதினொரு மணிக்கு கால்மாட்டில் ஒரு காஷுவல் லேபர் வாசலில் டிபன்பாக்ஸ் வாங்கி வைத்துவிட்டுப் போவான்.

சனிக்கிழமை, அமாவாசை, கிருத்திகை தவிர மற்ற நாட்கள் நிச்சயம் அசைவ உணவு இருக்கும்.

வஞ்சிர மீனோ, சுறாப்புட்டோ, நெத்திலியோ நிச்சயம் இருக்கும்.

பிரித்ததும் குறைந்தபட்சம் இரண்டு பேராவது கையேந்துவார்கள்.



சோற்றில் கல் கிடைத்த மறுநாள் காண்டீன் போய் விட்டுத் தொழிலாளர்கள் சாப்பிடுவரை காத்திருந்தான். கொஞ்சம் அவியல் ருசி பார்த்தான்,

''தலைவரே, இங்கன வா பேரா இது புளிச்ச நாத்தம் வருது பார்.''

''டப்பா தவிரு போடறாம்பா. என்ன ஏதுன்னு கேக்கக்கூடாது. உக்காந்து சாப்பிட்டா குத்தம் தெரியும். சுறாப்புட்டு வாசனையோட மோந்து பார்த்தா...

''ஒன்னுக்கு ரெண்டா கட்டியிருக்கியே—சுறாப் புட்டு நீ எடுத்தாறதுதானே.. காண்டீன்லேர்ந்து மோரு உறிஞ்சி ஏப்பம் வுடற—''

சோற்று வாயோடு காண்டீன் சிரிக்கும்.

தலைவனுக்குத்தொழிலாளியின் சொந்த வாழ்க்கை தெரிவது அவசியம். அவனின் குடித்தனப் பாங்கை வைத்து குணம் சொல்ல முடியும்.

''தலைவரே, வரதன் குடிசுட்டு இன்ஜின் மாட்டறான். அடிபோல்ட்டுல நான் கைவைச்சுப் போடணும். ஒரு நாள் இல்லேன்னா ஒரு நாள் என் விரல் சிக்கப் போவுது. ரெண்டு தடவை சொல்லிட்டேன் உங்கிட்ட. நீ காதுல போட்டுக்கல.''

''மூணாம் தடவையும் சொல்லிட்டல்ல...எங்கிட்ட வுடு. வரதன் வீடு எங்கே...?''

''பல்லாவரம்...''

மாலையில் சைக்கிள் பல்லாவரம் போகும். வரதன் வீட்டில் காபி சாப்பிட்டு, விவரம் கேட்டு ஆழ்ந்து யோசித்தபடி வீடு திரும்பும்.

''வரதா. டயம் ஆபீஸ்ல உன்னைப்பத்தி கம்ப்ளெயின்ட் பண்றாங்க. தினம் குடிச்சிட்டு எவன் கார்டோ

பஞ்ச் பண்றியாம். மேல சொல்லிட்டுமான்னாங்க. உன் வசதி எப்படி?''

ஆறடி உயரத்துக்குத் தூண் மாதிரி வரதன் நின்று கொண்டிருப்பான்.

''வெளியே எக்கேடும் கெட்டு ஒழி. உன்னைத் திருத்த முடியாது. குடிச்சுட்டுப் பொம்பளைய அடிக்கிற பேமானிய எவனும் கரையேத்த முடியாது. ஃபாக்டரிக்குள்ள இப்படி வந்தா கையலம்பிடுவேன். எனக்குப் பதில் சொல்லிட்டுப் போ.''

''அந்த மொட்டைப் பையன் போட்டுக் குடுத்துட்டானா உங்கிட்ட?''

''அதிகப்பிரசங்கித்தனமா பேசாதே. சப்பை பாட்டில் பாக்கெட்ல வச்சுக் குடிக்கறேன்னு கேள்வி இருந்தா எடுத்து வச்சிரு.''

''வவுத்து நோவு. அதான் கொஞ்சம் போல...''

''எடு வெளிய...''

சப்பட்டையான பாட்டிலில் தண்ணீர் மாதிரி திரவம், பாதிக்கும் குறைவாய் ஆட, வெளியே வைக்கப் பட்டது.

''தலைவரே, ஜி.எம்.வராரு''—அறை வாசலில் குரல் கேட்க..

சட்டென்று பாட்டிலை மூடித்தன் மேஜை டிராயருக்குள் போட்டுக் கொண்டான்.

''பி எஸ்...வாட்ஸ் த ப்ராப்ளம், பதினொரு மணி ஆச்சு. நாலு வண்டி கூட முடியலை. இன்ஜின் போடற இடத்துல ஆள் குறையுது ..வொய் டிலே மேன்.'

' நான் பார்க்கறேன் சார்.''

''இது யாரு. என்ன மேட்டர்!''



''ஸ்டமக் பெயின் சார். அதான் கேட்டுக்கிட்டிருக்கேன்.''

''நாறுதே இவன் மேல. குடிச்சிருக்கானா.''

''இல்ல சார். ஜிஞ்சர் பீர் வாங்கிக்குடுத்தேன் அதான் வாசனை.''

''கெட் திங்ஸ்டன், பி.எஸ்.''

அதிகாரி வெளியேற, பளீரென்று ஒரு அறை வரதனுக்கு விழும். ''நாறப் பொணமே, ஒழிஞ்சிட்டிருப்ப இன்னிக்கு. மரியாதையா போய் வேலை செய் _''

பகல் நேர காண்டீனில், இந்தக் காப்பாற்றிய கதையே பெரும் பேச்சாய் புழங்கும்.

''போட்டுக் குடுத்துருக்கணும். அப்பத்தான் வரதனுக்குப் புத்தி வரும்''

''செத்தாலும் செய்ய மாட்டாரு தலைவரு. திருட்டு கேஸ்ல புடிச்சவனையே திருப்பித் கொண்ணாந்துட்டாரு.''

''என்ன திருட்டு.''

''நாற்பது வாட்ஸ் பல்பு திருடினாம்பா. போயும் போயும்...''

''கன்னியப்பன் கதையா...சோத்துல அமுக்கி எடுத்துக்கிட்டுப் போனானே அதுவா...''

''அன்னிலேர்ந்து டிபன் பாக்ஸ்உள்ள வாது தின்னு போச்சு. எல்லாரையும் வெளியேபோய் துன்னுங்கடான்னுட்டான்.''

''தலைவருக்கு வருதே உள்ளற—நமக்கு வந்தா என்ன.''

''முகரக்கட்டை, அவரும் நீயும் ஒண்ணா—தினம் பதினைஞ்சு லட்சம் ரூபாய்க்கு அவரை கம்பெனிக்

காரன் நம்பறான். பதினஞ்சு வண்டி தினம் வெளிய போறதுக்கு அவருதான் காரணம்.''

''அவரு இல்லாத போட மாட்டமா...''

''இல்லாத போயிட்டா அப்ப தெரியும்.''

அன்று மைத்துனிக்கு நிச்சயதார்த்தம் வீட்டு வாசலில் கார் நின்றது. விசேஷம் முடிந்து விட்டால் உடனே ஒரு நடை கம்பெனிக்கு வரச்சென்னது.

மாமனாரிடமும் பிள்ளை பெற்றவரிடமும் மன்னிப்புக்கேட்டு வண்டியேறி கம்பெனிக்கு விரையும்போது வழியில் சொன்னார்கள். ''க்ளச் ப்ளேட் இறங்கல. மரக்கட்டை போட்டுத் தட்டினான். விரிஞ்சு போச்சு. க்வாலிடி இன்ஸ்பெக்டர் கெட்ட வார்த்தை போட்டு திட்டிட்டான். ப்ளேட் போடறவன் எழுந்து அடிச்சுட்டான். ஒரே ரகளை.''

ஆதியோடு அந்தம் வரை விசாரித்து க்ளச் ப்ளேட் உட்காரும் ஷாடில் மூன்று நால் இழை க்ரைண்டிங் சரியாக இல்லை என்பது கண்டுபிடித்து திட்டினவனையும் திருப்பி அடித்தவனையும் ராசியாகச் சொல்லி, கூட ஒரு மணிநேரம் சகலரையும் இருக்கச் சொல்லி, பதினைந்து வண்டியும் முடித்து. மைத்துனி நிச்சயதார்த்தம் மறந்தே போயிற்று.

''வொர்க்கர் கை நீட்டறது தப்பு. பி எஸ். நான் விட மாட்டேன் இதை. பிரச்னை வேறு பக்கமாய் வளரும்.''

''பதினைஞ்சு வருஷம் சர்வீஸ் போட்டவனை நேத்து படிச்சிட்டு வந்தவன் திட்டறது சரியா, இதைப் பெரிசு பண்ணிங்க— அந்த இன்ஸ்பெக்டர் அஸெம்பிளிக்குள்ள வரமாட்டான்.''

''மிரட்டறீங்களா?''



''மிரட்டறது நீங்க, நான் பதில் விளைவு சொன்னேன். வொர்க்கர்கிட்ட எப்படிப் பேசறதுன்னு உங்க படிச்ச முட்டாள் கிட்ட சொல்லுங்க...''

''உங்களை வைக்கிறபடி வைக்கிறேன். நாளு வண்டி ரிஜெக்ட் பண்ணினா தானா வழிக்கு வருவீங்க.''

''அதுக்கு வேற ஆளைப் பாருய்யா. உன்னை மாதிரி எத்தனை பூச்சியைப் பாத்துருக்கேன்.''

க்வாலிடி கண்ட்ரோல் சீஃப் இன்ஜினியரோடு மோதிக்கொண்டு வந்தாயிற்று.

''இந்தாப்பா, நான் சொல்றதைக் கேளுங்க. ஒரு போல்ட் சரியா நுழையலேன்னாகூட கஷ்டப்படாதீங்க. போடமுடியாதுன்னு வுட்ருங்க. என்னெங் தட்டிப் போடறது. தேச்சுப் போடறது எதுவும் செய்ய வேணாம்.''

''போடச் சொல்லியோ தலைவரே. இன்னிக்கு என்ன ''

''மூண்டம், சொன்னதைச் செய். சீஃப் இன்ஜினியர் ஆட்டம் காமிக்கிறான். கொஞ்சம் வேலை காட்டினாத்தான் அடங்கும்.''

விஷயம் பிரும்மாண்டமாகும். வெளியேறும் வண்டிகள் குறையும். உற்பத்தி முடங்கும். சேர்மன் வரை விஷயம் போகும்.

''வாங்க பி. எஸ்., கோ-ஸ்லோ செய்றீங்களா?''— சேர்மன் கூப்பிட்டுக் கேட்பார்.

''நோ...சார். ப்ரொடக்ஷன்தான்; முக்கியம். பதினஞ்சுக்குக்குறையாம போடணும்னுதான் எண்ணம். பிரச்சனை இருக்கு சார் ''

''பிரச்சனை என்ன பி. எஸ்.''

''கௌரவம் சார். ப்ரஸ்டிஜ். நீ பெரியவனா நான் பெரியவனாங்கறதுதான்.''

உண்மை எங்கே உடைக்கப்பட வேண்டுமோ அங்கே உடைக்கப்படும். மொத்தமும் ஒளிவின்றி பேசப்படும்.

''அப்படியா... நான் சொல்றேன் போங்க நாளைக்குப் பதினஞ்சி வண்டி கேரண்டியா.''

''தின்னாலும் சேர்ந்துத்தரேன் சார். கம்பெனிக்குத் தொழிலாளியால நஷ்டம் வரவிடமாட்டேன்.''

''க்ரேட். கண்டிக்க வேண்டியவங்களை நான் கண்டிக்கிறேன். உங்களுக்கு ஒரு ப்ராப்ளமும் வராது. நான் கேரண்டி. ஹௌ இஸ் யுவர் டாட்டர் எத்தனை படிக்கிறா.''

''செவன்த் சார். உங்க பொண்ணுக்குக் கல்யாணம் வருதாமே கேள்விப்பட்டேன் சார்.''

''ஆமா பி.எஸ். டேட் முடிவாகலை. பேசிகிட்டிருக்கோம். ஃபாக்டரில எல்லார்க்கும் பத்திரிகை அனுப்பறேன். வந்து நடத்தனும்.''

''எது வேணா கேளுங்க. ஆள் படைக்குப் பஞ்சமே இல்லை. எல்லாம் நல்லபடியா நடக்கனும். அதான் முக்கியம். நீங்க நல்லா இருந்தாதான் நல்லா இருப்பேன். நான் நல்லா இருந்தா உங்களுக்கு சௌகரியம்.''

''ரொம்ப சரி... ஐயம் ரியலி அப்ர்ஷியேட் யுவர் அட்டிட்யூட், பி.எஸ்.''

''தாங்க்யூ சார்.''

முன் கிளையாகி, கிளையில் பிஞ்சு விட்டு பிஞ்சு காயாகி, சிவந்து, வெடித்த பிறகு இலவம் பஞ்சாய் பிரச்சனை பறந்துவிடும்.



ஆனால், பாறாங்கல்லாய்ப் பிரச்சனையொன்று இறங்க, சகலரும் விலகிக்கொண்டு இந்தத்தலைவனைக் காவு கொடுத்தார்கள்.

எல்லோராலும் கைவிடப்பட்ட இந்தத்தலைவனும், கழுத்துக்கு வந்த கத்தியை மலர் மாலையென ஏற்றான் வெட்டுப்பட்டான்.

பாறாங்கல் விழுந்த நேரம், இனிப்போடு ஆரம்பித்தது.

கம்பெனிக்குள் நுழைந்து தன் மேஜைக்கண்ணாடிக்குக் கீழே பரப்பி வைத்திருக்கும் ராகவேந்திரா படத்தைத் தொட்டு 'சத்குரு' என்று கணநேரம் கண்மூடி சிரசில் தொட்டுக்கொண்டு உட்கார, சௌந்தர பாண்டியன் அருகே வந்தான். ''குட்மார்னிங் தலைவரே, சாக்லெட் எடுத்துக்கங்க.''

''குட்மார்னிங்! வா பாண்டி... என்ன விசேஷம்?''

''நேத்தி ராத்திரி பையன் பொறந்திருக்கான், மொத சாக்லெட் உங்களுக்குத்தான்!''

''அடேங்கப்பா! கை குடு பாண்டியா நேத்து லீவுன்னு போன் பண்ணினியாம், சரி, இதுக்குத்தான் இருக்கும்னு நினைச்சுக்கிட்டேன். ரொம்ப சந்தோஷம். குழந்தையும் தாயாரும் நல்லா இருக்காங்களா?''

## 3

''நல்லா இருக்காங்க'' காலைலயே நோவு எடுத்துருச்சு. ஆஸ்பத்திரிக்கு இட்டுக்கினுபோய் அங்கேர்ந்துதான் போன் பண்ணினேன். டெலிபோன் ஆபரேட்டர் கிட்ட பூரா விவரமும் சொல்லி உங்க கையில சொல்லச் சொன்னேனே!''

''என்னமோ சொன்னான். வழக்கம்போல நேத்து டென்ஷன். லீவுன்னுதும் புரிஞ்சிக்கிட்டு சரின்னுட்டேன். அப்புறம்.''

''டிராயரைத் திறங்க தலைவரே—'' பாண்டியன் தானே குனிந்து மேஜை டிராயரைத் திறந்து இரண்டு சாக்லெட் பட்டைகளை பாக்கெட்டிலிருந்து எடுத்துப் போட்டுச் சாத்தினான்.

''எல்லாருக்கும் உண்டானது குடு பாண்டியா, எனக்கு மட்டும் என்ன தனியா...''

''உங்களுக்கில்லை. உங்க புள்ளைங்களுக்கு எம் பேரு சொல்லிக் குடுங்க. நீங்க சொல்லித்தானே என்னை கேஷுவல் லேபர்லேந்து பர்மனென்ட் பண்ணாங்க. இன்னிக்கு ஸ்கில்டு அஸெம்ப்ளராயிட்டேன். நானும் வேலைல சேர்ந்து கல்யாணம் கட்டிக் குழந்தை பெறுவேன்னு நினைக்கவேயில்லை தலைவரே. நாமா முன்னுக்கு வந்தோம்னு எவனும் நினைச்சா அது பெருங்குத்தம். யார் யாரோ தூக்கிவிடறாங்க.''

''சர்தான் போடா. கஷ்டப்பட்டே... முன்னுக்கு வந்தே. என்னைப் பாத்து நீயா... உன்னைப் பாத்து நானா... மணி எட்டாச்சு. இடத்துக்குப் போ முதல்ல!'' பரமு பொய்யாய்க் கோபித்தான்.

''மத்தியானம் அரை நாள் லீவு வேணும் தலைவரே. நாளைக்கு முடிஞ்சாதான் வருவேன்.''

''போ. போறதுக்கு முன்ன சொல்லிட்டுப் போ. யார் உன் கூட வேலை செய்யறது...''

''சுந்தரம்.''

''பாத்துக்குவானா?''

''க்ளச் ப்ளேட் தலைவரே. செய்யறது கஷ்டம். ஆள் போடணும்.''



''ஸிக்குலேர்ந்து போட்டுறலாம்.''

''ஸிக் வண்டி நிறைய தலைவரே. அங்கேயே திண்டாடறான்.''

''அந்தக் கவலை உனக்கு ஏன். நீ நாராணமா போலாம். போய் கூடமாட மாமியாருக்கு உதவி செய். சினிமாவுக்கு போயிடாத. சந்தோஷத்துல—''

ஸிக் வண்டிகள் என்பது, தயாரித்தவுடனே தயாரிப்பில் கோளாறு கண்டுபிடிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட வண்டிகள். ப்ரேக் சரியில்லை. வலது பக்க டயர் ஆடுகிறது. ஸ்டியரிங் திருப்புதல் கடினம் இன்ஜின் உயர் வேகத்தில் சலசலக்கிறது. கியர்கள் சிக்குகின்றன என்று பல்வேறுவிதமான கோளாறுகளினால் ரிஜெக்டட் என்று சிவப்பு லேபிள் கட்டி ஓரமாய் நிற்க வைக்கப்பட்டிருக்கும். இவற்றை அஸெம்பிளி ஆட்கள் மறுபடி கவனித்து சீர்செய்து ஓட்டிக் காட்டிய பிறகே க்வாலிடி கண்ட்ரோல், மேலே கூடு செய்ய அனுப்பும். இதற்குப் பிறகே கூரையும் கதவும் சீட்டுகளும் கண்ணாடிகளும் பொருத்தப்பட்டு முழு வேனாக வெளியே வரும். அது வரை வெறும் சேஸிஸ்... அதாவது, ட்ரைவர் ஸீட் மட்டும் கொண்ட எலும்புக்கூடாய் வண்டியிருக்கும். அஸெம்பிளிக்கு வெளியே எண்பதுக்கும் மேற்பட்ட சேஸிஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு வண்டி வரை ரிஜெக்டட் என்று லேபிள் போட்டு ஒதுக்கி வைக்கப்பட்டன.

பரமுவுக்கு இது கவலையளித்தது. இவை அதிகமாக அதிகமாக வேலைத் தொந்தரவு அதிகமாகும். நோயுற்ற வண்டிகளை நேர் செய்வது தொழிலாளிக்குப் பிடிக்காத விஷயம். மடமடவென்று வேலை செய்ய முடியாத இடம் ஸிக் வண்டி கவனிக்கிற இடம். சிட்டத் தட்ட ஒரு பனிஷ்மெண்ட் ஏரியா. எகிறுகிற தொழிலாளி

கனை நாளைலேர்ந்து ஷிக்ல போட்டுருவேன் என்றால் உடனே அடங்குவான்.

இது பெரிய ப்ரம்மாஸ்திரம்.

இப்போது ஷிக்கில் ஆறுபேர் வேலை செய்தார்கள். அங்கே கதிரேசன் முதன்மையான ஆள். கதிரேசன் அப்பாவி. ஷிக் வண்டி பாக்கறியா என்று கேட்டபோது சரி என்று உடனே தலையாட்டினவன் எங்கயோ ஏதோ ஒரு வேலை என்று நினைக்கிறவன் கதிரேசன்.

''கதிரேசா என்னம்மா வண்டி அதிகமாவுது. என்ன செய்யறீங்க ஆறு பேரும்?''

''மங்காத்தா ஆடறோம்.''

கதிரேசனை முந்திக் கொண்டு வைத்தி பதில் கொடுத்தான். வைத்தி சொந்த ஊர் தஞ்சை. பேச்சு மொத்தமும் லெகண்டை. வண்டிக்கடியில் பல்பு மாட்டிக் கொண்டு மாத நாவல் படித்துக் கொண்டிருப்பான். வைத்தியின் மனைவி திருமணமான மறு வாரம் தாய் வீடு போய் விட்டாள் ஏன் என்று கேட்டதற்கு இது வரை பதில் சொல்லவில்லை.

வைத்தியின் மாமனார் கம்பெனி வாசலுக்கு வந்து அழுதபோது, பரமு மட்டும் அவரிடம் பேசினான். சகலமும் கேட்டு விட்டு உங்க பொண் உங்ககிட்டயே இருக்கட்டும். அதுதான் சரின்னு படுது என்று சொல்லி விட்டு வந்து விட்டான்.

வைத்தியிடம் பேசமுற்பட்டபோது, ''நீ ஃபோர்மன் நான் வொர்க்கர். நம்ம ரெண்டு பேருக்கும் அதான் உறவு. என் வேலைல தப்பு இருந்தா சொல்லு. கேட்டுக்கறேன். மத்த விஷயம் பேசறது வேணாம். அந்த ஆள் இனி கம்பெனி வாசலுக்கு வந்தா செருப்படி வாங்குவான். அது மட்டும் நிச்சயம்' என்று உறுமினான்.



வைத்தியின் வீட்டில் அவனைத் தவிர மூணு பேர். வைத்தியின் அப்பா ஒரு அண்ணன், ஒரு தம்பி. வைத்தியின் மனைவிதான் எல்லாருக்கும் சோறு பொங்கிப் போட வேண்டும். எல்லார் துணியும் துவைக்க வேண்டும், எல்லாருக்கும் சுடுநீர் விளாவி வைக்க வேண்டும். அந்தப் பெண் இவையனைத்துக்கும் சரியென்றது. ஆனால், எல்லோருக்கும் வெற்றிலை மடித்துத் தரவேண்டும் என்று கட்டளையிட்டார்களாம். மறுத்து விட்டது. 'இது தப்பில்லையா' என்று கேட்டது 'உலகத்துல எதுவுமே தப்புன்னு இல்லை. மகாபாரதத்துல இல்லாத தப்பா. பாண்டவர் பண்ணாத அக்கிரமமா. அவங்க ஜெயிக்கலையா. ஒத்துமை தான் முக்கியம்' என்று பதில் வந்தது. அந்தப் பெண் ஒற்றுமைக்கு மறுத்து விட்டாள்.

அவள் போனதுமுதல் வைத்தி உலகத்தில் சகலரையும் எதிரியாய்க் கருதினான். தன் ரகசியம் தெரிந்த பரமுவைப் பரம எதிரியாய் நினைத்தான்.

குடும்பமே சாடிஸ்டாக இருக்கிறதே என்று பரமு வியந்து மனைவியிடம் பேசினபோது இந்த மாதிரி அதிகம் கேள்விப்பட்டிருப்பதாய் சரசு பதில் சொன்னாள்.

''வைத்தி, மரியாதைக் குறைவா இனிமே நீ பேசினா அது நல்லா இருக்காது. இது முத வார்னிங். நான் விருதுநகர்க்காரன். இரண்டு தடவை மன்னிப்பேன். மூணாந்தரம் நடக்கறதே வேற. உன்னைக் கேட்டா பதில் சொல் கதிரேசா. என்ன ப்ராப்ளம் உனக்கு.''

''ஆளுங்கதான் தலைவரே..''

''ஏன், உனக்கு ஆள் போறலையா...''

''இது போறும். வேலை செய்யணும்.''

''யார் செய்யறதில்லை.''

''யாரைச் சொல்றது. ஒரு போல்ட் ஒரு நிமிஷத்துலயும் கழட்டலாம். ஒரு மணிநேரத்துலயும் கழட்டலாம். கியர் பாக்ஸ் இறக்கி ஒரு கியர் மாத்த நாலு மணி நேரம் ஆவலாம். அதே வேலையை நாலு நாளும் செய்யலாம். செய்யணும்னு மனசு வேணும்.''

''வைத்தி ட்ரபிள் பண்றானா?''

''இல்லை. கழட்டச் சொன்னா டயம் எடுத்துக்கறாரு. கேட்டா, அப்படித்தானனு சொல்றாரு. அவருக்குப் புரியலை.''

''புரிய வைக்கலாம். எத்தனை வண்டிஎரிக்ல நிக்குது.''

''எண்பத்தொண்ணு!''

''என்ன ட்ரபிள் அதிகமா...''

''கியர்பாக்ஸ்.''

''என்னது?''

''ரிவர்ஸ் கியர் சிக்குது, இல்ல உடையுது.''

''எத்தினி வண்டி அப்பா?''

''நான் எண்ணலைங்க.''

''அடக் கடவுளே...எத்தனை வண்டி இருக்கும் தோராயமா...கியர் சம்பந்தப்பட்டு.''

''தாப்பது அம்பது இருக்கலாம்.''

''யோவ் ஏன்யா சொல்லலை என்கிட்ட.''

''வந்து கேட்டா சொல்றோம். வாராத முறைச்சுப் பார்த்துக்கிட்டே போனா...எங்களுக்கு என்னா தலையெழுத்து.''—வைத்தி இடக்காய்ப் பேசினான்.

''வைத்தி, இது இரண்டாவது வார்னிங். இந்தத் துள்ளல் என்கிட்ட வேகாது.''



''யோவ்...போய்யா. நீ ஃபோர்மனா இருந்தா அது உன் வரைக்கும். என்னால அவ்வளவுதான் செய்ய முடியும். எட்டாவது வண்டி போல்ட் நீ ஒரு அவர்ல கழட்டிட்டே. நீ என்ன செய்யச் சொன்னாலும் செய்றேன்.''

பாமுவுக்குக் கோபம் வந்தது. அவனோடு இப்போது சண்டைவிடுவதைவிட, கவலையளிக்கும் இந்தப் பிரச்னையைக் கவனிக்கலாம்.

கதிரேசனை அழைத்துக் கொண்டு எக் வண்டிகளை நோட்டமிட்டான். வரிசையா எல்லா ரிஜெக்டட் லேபிள்களும் கியர் தொந்தரவைச் சொல்லிற்று. பக்கத்தில் காஷுவல் லேபரை க்வாலிடி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பினான்.

க்வாலிடி கண்ட்ரோல் இன்ஸ்பெக்டர் ரங்கசாமி ஒரு நோஞ்சான். அடிக்கடி லீவு போடுகிற நோயாளி.

''என்ன துரை...வண்டி நிறைய ஒதுக்கிட்ட, என்ன விஷயம்?''

''ரிவர்ஸ் விழமாட்டேங்குது.''

''ம்ம்.''

''விழுந்தா சிக்கறது''

''ம்ம்.''

''அழுத்திப் போட்டா உடைஞ்சுடறது.''

''எத்தினி வண்டி இந்த மாதிரி''

''கியர் உடைஞ்சது பன்னெண்டு இருக்கு.''

''ஏன் உடையுது?''

''தெரியலை.''

''என்ன ரங்கசாமி, தெரியலைன்னா என்ன அர்த்தம்?''

''என் உடையறதுன்னு கண்டு பிடிக்கறது என் வேலை இல்லை. உடையறது. அதான் சொல்ல முடியும்.''

இந்த தேசத்தில் பெரிய குறை இதுதான். மூலம் அறிய எவரும் முயலுவதில்லை. முயற்சிக்க உதவுவதில்லை. 'எங்கப்பா சொன்னா அதனால பூணூல் போட்டுருக்கேன்.' 'எங்க வூட்டுப் பெரியவங்க பார்த்து சரின்னாங்க. அதனால கட்டிக்கிட்டேன்.' 'எங்க வீட்ல படிக்க வைக்கலை அதனால சுத்தி அடிக்க வந்துட்டேன்.

''காஷுவல் லேபரா இருந்து கல்யாணமா...எம்பா இது சரியா. குடித்தனம் பண்ண காசு வேணாமா.''

''கடவுள் இருக்காரு சார். காஷுவல்லேபர் வேலையே அவரு குடுத்ததுதான்.''

''பர்மனென்ட் ஆகலைன்னு வச்சுக்க. அப்ப என்னய்யா செய்வ?''

''கடவுள் இருக்காரு சார். எங்கனா நல்ல வேலை குடுப்பாரு.''

அதிர்ந்து போகும் பரமுவுக்கு. முன்னேற வேண்டும் என்று நினைப்பவனையும் முட்டாளாக்கும் வார்த்தையாய் படும் இது. இந்த அசைக்க முடியாத நம்பிக்கை தனக்கு ஏன் இல்லை என்கிற ஆதங்கம் வரும். ஆனால், இது ஆரோக்கியமா என்கிற சந்தேகமும் வரும்.

துயரத்தில் மனசு துவண்டது.

''ஏறுங்க வண்டில.''

சேஸிஸ் மட்டும் உள்ள வண்டியை—மேற்கூடு கட்டாமல் டயரும் இன்ஜினும் ஸ்டியரிங் வீலும் டிரைவர் ஸீட்டும் பொருத்திய வண்டியை முடுக்கிப் பரமு உதற வைத்தான். டிரைவர் ஸீட்டில் ஏறிக் கொண்டான். பின்னால் பரமுவின் தோளைப் பிடித்தபடி



ரங்கசாமி தண்டவாளம் மாதிரி உள்ள சேஸிஸ் பீமில் நிற்க, வண்டி முன்னே ஓடிற்று. விரைவு கூட்ட அற்புதமாய்ப் பேசிற்று. அழுத்தி ப்ரேக் போட்டுத் திருப்பி கியர்களை மாற்றி மாற்றிப் போட வித்தை காட்டிற்று.

''ரிவர்ஸ் போடுங்க சார்.''— ரங்கசாமி இன்ஜின் இரைச்சலுக்கு மேல் கூவினான்.

பரமு நிறுத்தி ரிவர்ஸ் கியர் போட, உள்ளே ஏதோ ஒரு சிக்கல் தெரிந்தது. மெல்ல பின்னால் வண்டி நகர, கியர் சுழலும் ஒலி தவறாய் கேட்டது. மறுபடி நிறுத்தி நியூட்ரலுக்குக் கொண்டுவந்து வேகமாய் ரிவர்ஸ் கியர் மாற்றி சர்ரென்று வண்டியைப் பின்னால் எடுக்க, டடக் என்ற குலுக்கலுடன் நின்றது.

''உடைஞ்சு போச்சு, உடைஞ்சு போச்சு.'' ரங்கசாமி கூவலுடன் தரையில் குதித்தான்.

பரமுவும் உணர்ந்தான்.

கியரை மறுபடி நியூட்ரலுக்குக் கொண்டு வந்து மீண்டும் ரிவர்ஸ் தொட பொருந்தாமல் முட்டிற்று.

சட்டென்று முதல் கியருக்கு மாற்ற, ரங்கசாமி, 'பரமுசார், வேணாம் வேணாம்' என்றான். அவனை அங்கேயே விட்டுவிட்டு இரண்டு, மூன்று, நான்கு என்று கியர் மாற்றி வேகம் கூட்டி வளைவில் திரும்ப, வண்டி 'சடேங்' என்ற குலுக்கலுடன் எகிறி நின்றது. வேகம் தாங்காது இடப்பக்கம் திரும்பியது. ஸ்டியரிங் ஒடிந்து ப்ரேக் போட, வலது பக்கம் போய் முட்டிற்று. எகிறித் தகர டின்களை முட்டிற்று. பரமு எகிறி வெளியே குதித்தான் தரையில் விழுந்து உருண்டான்.

தடார்' என்ற சப்தத்துடன் வண்டி சுவரில் மோதியது. அஸெம்பிளி சுவரின் செங்கல்கள் சிதற நொருக்கலித்துச் சாய்ந்தது.

ரங்கசாமியும் கதிரேசனும் அஸெம்பிளி தொழிலாளிகளும் ஓடி வந்தார்கள்.

வைத்தி மட்டும் திருப்பிச் சிரித்துவிட்டு வண்டிக் கடியில் புகுந்து மல்லாக்கச் சாய்ந்து 'இனி என் முறை' என்கிற மாம நாவலைவிட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தான்.

பரமுவின் வலது கன்னத்து மேட்டில் ரத்தம் கசிந்தது. யுத்தத்தின் முதல் அம்பு இது. ஆனால், யுத்தம் ஆரம்பித்து விட்டது என்று பரமுவுக்குத் தெரியவில்லை.

''பெரிசு பண்ணிடாதீங்கடா. வண்டியைப் போய்ப் பாருங்க.'' பரமு எழுந்து நின்றான்

''வண்டி கிடக்கு அண்ணே. இதுபோல ஆயிரம் வண்டி செய்துக்கலாம். ஆளுக்கு ஏதுனாச்சும் ஆச்சுன்னா...''

''ரொம்ப ஜாஸ்தி அடியா தலைவரே!''

''எகிறிட்டாருப்பா.''

''எகிறில வண்டி தூக்கிப் போட்டுருச்சு. நான் பார்த்தேனே...''

''ஸீட்ல பெல்ட் போட்டுக்கிட்டு ஓட்டணும். நாம யாரும் அதைச் செய்யறதேயில்லை.''

''பெல்ட்டு போட்டா அங்கனயே சிக்கிக்கிட்டு சாக வேண்டியதுதான்.''

''ப்ரேக் ரிலீஸாவறதேயில்லை பாதி வண்டில.''

## 4

—பல பேர் பலவிதமாய் கூவினார்கள். பரமுவை இடம் இடமாய்த் தொட்டுப் பார்த்தார்கள். கைக்குட்டையை நீரில் நனைத்து ஒருவன் கன்னத்தில் அழுத்தி வைத்தான். சுரீரென்றது.



''டேய் ஓடுறா...ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் எடுத்தா. கம்பெனி டாக்டர்கிட்ட போயிடுவமா தலைவரே!''

''ஒன்றுமில்லை. விடுப்பா.'' பரமு நொண்டியபடி உள்ளே நடந்தான். ஒருக்களித்து விழுந்திருந்த வண்டியைச் சரியாய் வைக்கச் சொன்னான். பாண்ட் முழங்கால் பக்கம் கிழிந்திருந்தது. தூக்கிப் பார்க்க சிராய்ப்பு தெரிந்தது. நடக்கக் கணுக்கால் வலித்தது. முழங்கைகள் இரண்டும் எரிந்தன. இடது மணிக்கட்டு ஊமைக்காயமாய் முனகிற்று.

நல்லவேளை. பெரிய காயமேதுமில்லை.

போன வருடம் எலக்ட்ரிக்கல் இன்ஜினியர் ஒருவர் வண்டியை ஓட்டப் பழகி, குப்புறக் கவிழ்ந்து இரண்டு விலா எலும்புகளை ஒடித்துக்கொண்டார்.

ப்ரேக் முற்றிலும் பழுதுபட, எதிரே வந்த இன்னொரு டெஸ்ட் வண்டியில் மோதி மண்டை உடைந்த க்வாலிடி கண்ட்ரோல் இன்ஸ்பெக்டர் உண்டு.

டெஸ்ட்டிங் ஒரு ஆபத்தான வேலை. ஸீட்பெல்ட், ஹெல்மெட் போடவேண்டும் என்பது விதி. யாரும் கடைப்பிடிப்பதில்லை. புதிய வண்டி என்பது சாராயம் குடித்த 'குதிரை. கட்டுப்படுவது கடினம். ஓடி ஓடித் தேய்மானம் கிடைத்த பிறகே வண்டி மிருதுவாகும். விரல் அசைவில் விழவேண்டிய கியருக்கு முழு பலம் தேவைப்படும். உள்ளங்கையில் புத்தட்டுமாதிரி சுழலும் ஸ்டியரிங்கை சில சமயம் எழுந்து நின்று திருப்பும்படியாகும். ப்ரேக் மட்டும் தட்டினால், பொறி கிளப்ப குரங்குப் பிடியாய் விழும். யந்திரம்தான் என்றாலும், வண்டியைக் கவனமாய் அன்போடு ஒரு மிரண்ட பெண்ணை வசப்படுத்துவது போலச் சமாளிக்க வேண்டும். வயிற்று வலியில் துடிக்கும் பெண்ணோடு 'வாராய், நீ வாராய்' என்று பாட்டுப் பாட முடியாது.

இந்த வண்டி வயிற்று வலியில் படுத்துவிட்டது. முடுக்கியபோது சீ... போ என்று தட்டி விட்டது. ரிவர்ஸ் கியர் உடைந்தது என்றால் பிரச்னை பெரிசு. மாற்ற மறுபடி நேராக்க அதிகக் கவனம், அதிக நேரம் அதிக உழைப்பு தேவைப்படும். ரிவர்ஸ் கியர் எப்போதாவது உடையும். இப்படி அம்பத்தியோரு வண்டி கியர் உடைந்து நிற்கிறது என்றால் எங்கோ ஏதோ பெரிய கோளாறு என்று அர்த்தம்.

கோளாறு எதில் என்று கண்டுபிடிக்காமல் வெறுமே வைத்தியம் செய்வதில் புண்ணியமில்லை. 'உடைந்த வண்டிக்கு உறுப்பு மாற்று' என்கிற ஒரு வரி சமாதானம் தேவையில்லை. ஏன் உடைக்கிறது, உடைதலுக்கு யார் பொறுப்பு . ஓட்டுபவனா... அந்த உறுப்பா.

''சரி, மாத்திடு' என்று கதிரேசனிடம் சொன்னால் மாற்றிவிடுவான். ஒரு வண்டி இரண்டு வண்டி ஒரு நாளில் மாற்றலாம் ஐம்பத்தோரு வண்டி சிக்குகிறது. என்று ரிஜெக்டான வண்டியை எடுத்து அழுத்தி ஓட்டினால் சிலீரென்று பீங்கான் மாதிரி உடைகிறது.

காபி கொடுத்தார்கள். கம்பெனி மெடிகல் ரூம் அட்டெண்டர் வந்து காயத்துக்கு மருந்து போட்டான். உணவு இடைவேளையின்போது வந்து ஊசி போட்டுக் கொள்ளச் சொன்னான். ''என் மச்சினன் ஒருத்தன் படிச்சுட்டு சும்மா இருக்கான். உங்க தயவுல ஒரு வேலை போட்டுக் குடுத்தேன்னா...''

' என்ன வேலை?''

''டெஸ்பேட்ச் க்ளார்க், டைப்பிஸ்ட்னு ஏதாவது போட்டுக் குடுத்தேன்னா...''

''சரி, பார்ப்போம்.''

''நாளைக்கு வந்து பார்க்கட்டுமா...''

''நாளைக்கே எப்படி வேலை கிடைக்கும்?''



''நான் மருந்து போடறதுக்குச் சொன்னேன்.''

''இது போறும் போ.'' ஜனங்கள் கெட்டிக்காரர்களாகி விட்டார்கள். இடது பக்கம் போனால் வலது பக்கம் தாவுகிறார்கள். வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் பயன்படுத்துகிறார்கள்.

அலுப்பாய் இருந்தது பாலுவுக்கு. கண்களை மூடிச் சிறிது நேரம் நாற்காலியில் சாய்ந்திருந்தான். மேஜையில் டெலிபோன் அலறியது. ஜி. எம்

''பி. எஸ், வாட்மேன் — என் ஆக்ஸிடெண்ட்?''— கேள்வியாய் ஜெனரல் மேனேஜர் குரல் கேட்டது.

''ஒண்ணுமில்ல சார். டாப் கியர்ல ஜாம் ஆயிடுச்சு. கண்ட்ரோல் போயிடுச்சு. எகிறிட்டேன்.''

''ரொம்ப அடியா!''

''இல்ல சார்...சிராய்ப்பு......அங்கங்க.''

''தாங்க் காட். இங்க வரியா. நான் கீழ வரட்டுமா—''

''நான் வரேன் சார்.''

ஜி. எம் குத்துக்காலிட்டு உட்கார்ந்து அவன் முழங்கால் காயம் பரிசோதித்தார். ''ஊசி போட்டியா'' என்றார்.

''லஞ்ச் அவர்ல போடப் போறேன் சார். இன்னொண்ணு பேசணும். வண்டிங்க சிக்ல ஜாஸ்தியாயிடுச்சு பாதி கியர் ப்ரச்னம். நிறைய வண்டில ரிவர்ஸ் கியர் உடைஞ்சிருக்கு சார்.''

''வீட்டுக்குப் போ மேன்!''

''சார்...''

''அது நாளைக்குப் பேசிக்கலாம். இப்போ வீட்டுக்குப் போ.''

''வேணாம் சார். சிராய்ப்புதான்.''

"இந்தக் காயத்துக்கு ஜுரம் வரும். ஊசி போட்டா நிச்சயம் வரும். நேரா மெடிகல் சென்டர் போயிட்டு வீட்டுக்குப் போ."

"உக்காந்தபடி இருக்கேன் சார். பத்து வண்டி முடிக்கலாமே!"

"நான் கவனிச்சுக்கறேன். படபடன்னு இருக்கே. உம் மூஞ்சியைப் பார்த்தா விழுந்த ஷாக் போகலை. கிளம்பு முதல்ல..."

"கொஞ்சம் பயந்துட்டேன் சார். சுவரைப் பேத்துடுச்சு வண்டி."

"கிடக்கட்டும் வுடுப்பா. டேக் ரெஸ்ட்."

பாமுவுக்குப் படுத்துத் தூங்கினால் போதும் என்றிருந்தது. எகிறி விழுந்தபோது ஒரு கலவரம் வயிற்றில் பரவி ஐஸ் கட்டியாகி, அந்த பயம் மெல்ல மெல்லத் தான் கரைந்து கொண்டிருந்தது.

"யூ ஆர் நாட் அட்டெண்டிங் டியூட்டி. ம், கிளம்பு முதல்ல."

"காலைல வந்து அந்த கியர் ப்ராப்ளம் பேசணும் சார்."

"நான் கவனிச்சுக்கறேன். நீ போ."

"தாங்க் யூ சார். க்வாலிடி இன்ஜினியரைப் பார்த்துப் பேசிட்டு..."

"விடுய்யா."

"யெஸ் சார்!"

பாமு சீட்டுக்குத் திரும்பினான். முக்கியமான தொழிலாளிகளைக் கூப்பிட்டு, வீட்டுக்குப் போவதாய்ச் சொன்னான்.



"பாண்டி, நீ கொஞ்சம் இருந்து போயேன். பர்மிஷன் போட்டுக்க. நான் இல்லைன்னா ஏதுனா சிக்கல் வரப்போவுது."

"நான் பார்த்துக்கறேன். நீங்க போங்க தலைவரே. ஆஸ்பத்திரிக்கு போன் போட்டு சொல்லிடறேன்."

"ஸாரி பாண்டி! உன் நிலைமை தெரிஞ்சும் இருக்கச் சொல்றேன்."

"அது ஒரு பிரச்னை இல்ல. மாமியார் பார்த்துக்குவாங்க. முடிஞ்சா சாயந்திரம் ஆஸ்பத்திரிக்கு வாங்க. பையனைப் பாருங்க. முடிஞ்சாதான்."

"வரேன். எப்ப இருப்ப..."

"ஆறுலேர்ந்து பத்து வரைக்கும் இருப்பேன். என் பொண்டாட்டிக்கு உங்களைத் தெரியும். வாங்க. எப்படி போறாப்பல வீட்டுக்கு?"

"சைக்கிள்தான்."

"முடியுமா..."

முடியவில்லை, சைக்கிள் மிதிக்கக் கால் மடக்கிய போதெல்லாம் விண்ணென்று தெறித்தது. அரை பெடலும், முக்கால் பெடலுமாய் மிதித்து வந்தபோது ஜுரம் தூக்கிப் போட்டது. கண்கள் நெருப்பாய் எரிந்தன. ஊசி குத்தியது. அக்குள் வரையில் கடுப்பு ஏற்படுத்தியது.

சரசு கதவு திறந்தாள். "சாப்பாடு அனுப்பிச்சிட்டேனே... வரலையா?" என்று வியந்தாள்.

"தெரியலை. நான் முன்னாடியே கிளம்பிட்டேன்."

"என்னா நொண்டறீங்க..."

"அடிபட்டுடுச்சு."

"ஐயையோ...!"

"வண்டிலேர்ந்து விழுந்துட்டேன்."

''கடவுளே— பாண்ட் கிழிஞ்சிருக்கு... ரொம்ப காயமா—''

''ஷர்ட்சேர் பிரிச்சுப் போடு'' உடைகளைக் களைந்து லுங்கியுடன் சரிய சரசு நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். 'நல்ல ஜுரம்' என்றாள்

ஜுரம் குறைக்கும் மாத்திரை தேடினாள். ''சாப்பிடலீங்களா'' என்றாள்.

''பசிக்குது சரசு எதாவது குடு.''

''அடக்கடவுளே...! இப்பத்தான் எல்லாத்தையும் ஒழிச்சுப் போட்டேன். சாதம் கொஞ்சமாத்தான் இருக்கு ஒரு பதினைஞ்சு நிமிஷம் இருங்க குக்கர் வச்சிடறேன்...' — இடதும் வலதுமாய் பறந்தாள். முன் பசிக்கு பிஸ்கட் டப்பா எடுத்து வைத்தாள்.

பரமுவுக்குப் பேயாய்ப் பசித்தது. நாலு பிஸ்கட் சாப்பிட்டபின் அடியில் இருந்த நமுத்த வேர்க்கடலை கொறித்தான். ஜலம் குடித்தான். தூங்கிப் போனான்.

பசித்தபோது உணவு கிடைப்பது பெரிய வரம். அந்தப் பதினைந்து நிமிடம்கூடப் பொறுக்க முடியவில்லை. சிறிது உண்ட பிறகு வயிறு கூச்சல் அடங்கியது. உறக்கம் தழுவியது.

சரசுவால் உலுக்கி எழுப்பப்பட்டபோது பசியற்றுப் போயிற்று. தூங்கினால் போதும் என்று தோன்றிற்று.

வெறும் ரசம் சாதம் கரைத்துக் குடித்துவிட்டுப் படுக்கையில் சாய, மறுபடி சரசு எழுப்பி மாத்திரை கொடுத்தாள். குழந்தைகள் குரல் கனவு மாதிரி கேட்டது. சரசுவின் அதட்டல் தெளிவாகும்முன் மறுபடி ஆழ்ந்த உறக்கம் வந்து விட்டது. எழுந்திருக்கும் போது மணி ஏழு வெளியே இருட்டியிருந்தது.

காபியும் ரொட்டியும் சாப்பிட அழைப்பு வந்தது.



''என்னப்பா உடம்பெல்லாம் காயம்...''

—பெண் குழந்தை லதா கன்னம் தொட்டாள்.

''வலிக்குதுப்பா'' என்று அவன் நகர, திடுக்கிட்டுப் பின்வாங்கினாள்.

''ஏன்டி சனியனே... காயத்துல கை வைக்கறே...'' சரசு இரண்டு மாத்திரை கொடுத்தாள்.

''எப்படிப்பா இடிச்சுக்கிட்டீங்க?''

பெண் குழந்தை கேள்விக்குப் பரமு விரிவாய்ப் பதில் சொன்னான். ''வண்டி சடார்னு எகிறிடுச்சி. நிக்கல. டயர் தேஞ்சுக்கிட்டே இடதும் வலதுமா ஆடி பளிச்சுன்னு மொத்தமா திரும்பிடுச்சு. கீழே குதிச்சிட்டேன். வண்டி முட்டற வரைக்கும் இருந்தா, இன்னிக்கு ஒரு வழியாயிருப்பேன்.''

மனைவியும் குழந்தையும் பயத்தில் விழி விரிய நிற்க பையன் கட்டிலில் ஏறி வயிற்றில் உட்கார்ந்தான். இரண்டு தோள்களில் தன் இரண்டு கால்களை வைத்துக் கொண்டு கார் ஓட்டினான்.

'இறங்கிடுப்பா'' என்று பரமு கெஞ்ச... சரசு அவனைப் பருந்து மாதிரி கவ்விக் கொண்டு சமையலறைக்குப் போனாள். எண்ணெய்க் கிண்ணத்துடன் வெளியே வந்தாள்.

''கொஞ்ச நேரம் விட்டுப் பார்த்துக்கங்க. நான் முனைக் கோயில் வரைக்கும் போயிட்டு வந்துடறேன். தினம் தினம் விளக்குப் போடணும்னு நினைச்சுக்கறது. பாதி நாள் போட முடியாம போயிடுது. இது சாமி குத்தம்.''

''நான் வெளிய போவணும் சரசு!''

''நீங்க எங்க இப்ப வெளிய போறது...''

''பாண்டிக்குப்பையன் பொறந்திருக்கு. சாயந்திரம் பாக்க வரதா சொன்னேன்...''

''நாளைக்கு போயிக்கறது.''

''பாண்டி மாமாவுக்கா... நானும் வரேம்ப்பா.''—பெண் லதா கூவினாள்.

''நானும்...''பையன் சரசுவிடமிருந்துதிமிறி இறங்க, எல்லோரும் கோவிலுக்குப் போய்விட்டு ஆஸ்பத்திரி போவதாய் முடிவாயிற்று. ஆஸ்பத்திரியில் குழந்தைக்கு சோப்பும் கிலுகிலுப்பையும் பவுடரும் பரிசளித்து 'பாண்டி எங்கே?' என்று கேட்க, அவன் மனைவி 'இன்னும் வரவில்லைல' ஒன்று சொன்னாள். பிற்பகல் மூன்று மணிக்கு டெலிபோன் வந்ததாம்—'இரவு பத்தாகும் வர' என்று.

''ஏன்?'' என்று பரமு கேட்டான்.

''தெரியவில்லை'' என்று பாண்டியன் மனைவி பதில் சொன்னாள்.

பரமு சந்தோஷம் இழந்தான். உடனே தொழிற்சங்கம் போக ஆசைப்பட்டான். எதிர்கடைக்குப் போய் கம்பெனிக்கு டெலிபோன் செய்ய, கம்பெனி டெலிபோன் அடித்த வண்ணமே இருந்தது.

'ஏன் பாண்டியன் வரவில்லை, என்ன பிரச்னை அங்கே' என்ற கேள்வி குடைந்தது.

மணி ஒன்பது. குழந்தைகள் கண்கிறங்கிக் கொட்டாவி விட, பஸ் பிடித்து வீடுவந்தார்கள். சாப்பிட்டார்கள். படுக்கையில் சாயும்போது வாசலில் ஃபோர்மன் சார்' என்று பாண்டியன் குரல் கேட்டது. பரமு. விலுக்கென்று இறங்கினான். தூங்கி தடுக்க நாற்காலி விளிம்பில் முழங்கால் காயம்பட, சுளீரென்று வலி உச்சி மண்டையைத் தாக்கிற்று.

இது இரண்டாவது அம்பு. ஆனால், யுத்தம் ஆரம்பித்துவிட்டது என்று இன்னமும் பரமு உணரவில்லை.



வரப்போகும் சம்பவங்களின் உக்கிரத்தை உள் மனம் பல்வேறு விதமாய் மனிதனுக்கு எடுத்துச் சொல்ல முயல்கிறது. புரிந்து கொள்ளத்தான் முடியவில்லை.

''கட்டிலுக்குப் பக்கத்தில் நாற்காலியை யாரும்மா போட்டது.'' வலியில் முகம் கோணித் துடித்தது.

''தம்பி போட்டாம்பா... கட்டில்ல ஏறதுக்கு...''—பெண் பதில் சொன்னாள்.

''சரி, எடுத்து வை.''

சரசு வேகமாய் நகர்ந்து நாற்காலியை அகற்றினாள். பரமு நடந்துபோக வசதியாய் விலகி நின்று கொண்டாள்.

ரேழிக் கதவு திறந்து வாசல் சங்கிலி உருவப்பட்டு கதவு திறக்கும்வரை பொறுமையில்லை. ரேழியில் இருந்தபடியே ''வா பாண்டி, என்ன விஷயம்'' என்று பரமு உரக்கக் குரல் கொடுத்தான். வழி நடை பெஞ்சில் பாண்டி உட்கார, ''ஏதாவது குடிக்கக் கொண்டாம்மா'' என்று சரசுவை நகர்த்தினான்.

''ஒண்ணும் வேணாங்க. தண்ணி குடுங்க போதும்.''

''தண்ணி எடுத்தா முதல்ல... அப்புறம்... ஹார்லிக்ஸ் சாப்பிடுவ இல்ல...''

''எதுக்குத் தலைவரே!''

''எனக்கு வேணும் பாண்டி.''

''சரி, எடுத்தாறட்டும்.''

''என்ன விஷயம் பாண்டி.''

''அஸெம்பிளில அடிதடி ஆயிப்போச்சு தலைவரே.''

''ஏன் பாண்டி?''

## 5

''ப்ரொடக்ஷன் நிறுத்திட்டாங்க. மத்தியானத்துக்கு மேல.''

''புரியலையே, ஏன்?''

''எல்லாரும் ஸிக் வண்டி அட்டண்ட் பண்ணனும்னாங்க.''

''யாரது?''

''ஜி. எம். உங்களைக் கேக்காத முடியாதுன்னு சொன்னோம்.''

''ம்ம்.''

''நான் பேசிக்கிறேன், போங்கன்னாரு.''

''சரி.''

''கோவிந்தன் நடுவுல பூந்தான். நான் சொல்றேன். யாரும் ஸிக் வண்டி பாக்காதீங்கன்னு கூச்சல் போட்டான். அவனைக் கூப்புட்டு பேசினாங்க உள்ளே. வெளிய வந்து ஒருத்தரும் ஸிக் வண்டி தொடக் கூடாது. ப்ரொடக்ஷனுக்கு சாமான் கொடுத்தா போலாம். இல்லைன்னா வேணாம்னான். என்ன ஏதுன்னு தெரியலை. விவரமா சொல்லுன்னேன். போட்டுத்தான் ஆவனும்னாங்க மானேஜ்மெண்ட்ல. இன்ஸென்டிவ் போனஸ் தரியான்னு கேட்டானாம். அதெப்படின்னாங்களாம். என்னால வண்டி கெட்டுப் போவல. இது அஸெம்பிளி மிஸ்டேக் இல்ல. கூட காசு குடுக்காத ஸிக் வண்டி தொட முடியாதுன்னுட்டானாம். நாலு மணி வரைக்கும் பார்ட்ஸ் தரலை. இருந்ததையும் ஸ்டோர் ஆளு உள்ள எடுத்துக்கிட்டுப் போயிட்டான். சும்மா உள்ள உக்காந்துகிட்டிருந்தோம்.''

''ம்ம்...''

'க்வாலிடி இன்ஜினியர் சாமிநாதன் வந்தாரு. டேபிட்டு கவரோரமா உக்காந்து தம்மடிச்சுக்கிட்டிருந்தான். தூக்கிப்போடுய்யா சிகரெட்டன்னு கத்தினாராம். தூக்கி ஜன்னல் வழியா முக்கா சிகரெட்டை போட்டுட்டான்.



''உனக்கு எவனடா ஓஸி சிகரெட் குடுக்கறான். துட்டு போட்டு வாங்கினதைத் தூக்கிப் போடறியே. கியர் சப்ளையர் டப்பா டப்பாவா சிகரெட் வாங்கி குடுத்தா முக்கா சிகரெட்டு. முழு சிகரெட் அணைக்கலாம். 'நீ என்டா பயந்து அணைக்கிறேன்'ன்னான் கோவிந்தன்...''

''முட்டாள்.''

சாமிநாதன் 'மரியாதையா பேசு'ன்னாரு

'உனக்கு இந்த மரியாதை போதும்''னான்.

''டாமிட்'னாரு.

இவன் 'போடா'ன்னுட்டான். அவரு கைய ஓங்கினாரு. இவன் 'ப்ளார் பளார்'னு அறைஞ்சிட்டான். உடனே மெமோ குடுத்துட்டாங்க. ஒரு வாரம் சஸ்பெண்ட் ஃபார் என்கொயரி.''

''அறிவு கெட்டவன். கோவிந்தனை யார் உள்ள போவச் சொன்னது.''

''உபதலைவராச்சே சார். நீங்க இல்லைன்னா அவன் தானே...''

''நமக்கு கேடுகாலம் அவனால வரப்போவுது பாண்டி.''

''எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். தொழிலாளிய விட்டு கொடுக்கக் கூடாதுன்னுசும்மா இருந்துட்டம்.''

''கடைசில என்ன ஆச்சு?''

''அஞ்சு மணிக்குக் கைகழுவும்போது, ஓவர் டைம் தரேன். நின்ன வண்டிகளைப் போட்டுருங்கன்னாங்க. கோவிந்தன் மெமோ வாங்கினதும் வெளியே போயிட்டான். நாங்க இருந்து பதினைஞ்சு வண்டியும் முடிச்சிட்டு...''

"சே—அசிங்கம், முட்டாள்தனம் எதுக்கு ஒத்துக்கிட்டீங்க ஓவர்டைமுக்கு. இளப்பமால்ல போயிடும். வேலை நேரத்துல உக்காந்திருந்துட்டு ஓவர்டைம்ல ரெகுலர் வண்டி போட்டா செரிக்குமா அந்தக் காசு. தப்பு பாண்டி. துட்டு வீசிப்போட்டா தொழிலாளி என்ன வேணா செய்வான்னு ஆயிடாதா..."

"... ..."

"உடனே எங்கிட்ட வரவேண்டியதுதான பாண்டி."

"ஆஸ்பத்திரிக்கு நீங்க போயிருப்பீங்க எம் புள்ளையைப் பார்க்க—அங்க புடிச்சிடலாம்னு போன்ல ட்ரை பண்ணினேன், எங்கேஜ்டாவே இருந்தது ஒம்பது மணி. கடைசி வண்டி முடிக்கறப்ப—"

"சரி, நாளைக்குச் சரி பண்ணிடலாம்."

"முள்ளுல போட்ட துணி மாதிரி ஆயிடுச்சு தலைவரே!"

"எடுக்கலாம். நிதானமா எடுக்கலாம். நாளைக்கு வரியா பாண்டி."

"இன்னிக்கே போக முடியலை தலைவரே, நாளைக்கு லீவு வேணும் முக்கியமா அதுக்கோசரம் தான் வந்தேன்..."

பரமு பெருமூச்செறிந்தான். பாண்டியன்கூட இருப்பது ஒரு பலம். ஆனால், அவனை நிலைமையில் அவனை 'வா' என்று கட்டாயப்படுத்துவது கொடுமை. சரி...யாரையும் நம்பி யாரும் இல்லை. பாண்டி வரவே முடியாது என்றால் பிரச்னையைத் தீர்க்கவே முடியாமலா போகும்.

"சரி பாண்டி, நீ லீவு எடுத்துக்க. நான் பார்த்துக்கறேன் மிச்சத்தை..."

"இன்ஜினியர் சாமிநாதன் அனாவசியமா ஆட்டங் காட்றான். சும்மா இருக்கிற வெறுப்புல டேவிட்



சிகரெட் புடிச்சான். கண்டுக்காத போயிருக்கலாம். சும்மா நின்னு திரும்பிப் பாத்தா சிரிச்சிருப்பான். கோவிந்தன் பண்ணதும் தப்பு."

"பேசினா முடிவேயில்லை பாண்டியா. ஹார்லிக்ஸ் எடுத்துக்க."

ஒரே மிடறில் பாண்டியன் ஹார்லிக்ஸ் குடித்தான். எழுந்து நின்று கைகூப்பி விடைபெற்றான். படியிறங்கி இருளில் மறைந்தான்.

வெளியே சில்லென்று பனிக்காற்று அடித்தது. திறந்திருந்த கதவு வழியே தெரு நாய் எட்டிப் பார்த்தது. இருட்டில் உட்கார்ந்திருந்த பரமுவைப் பார்த்து வால் ஆட்டியது. பரமு எழுந்து கதவைச் சாத்தினான்.

"என்னங்க—என்ன கலாட்டா, கம்பெனில."

"எல்லாம் அந்த கோவிந்தன் பண்றது. இன்ஜினியரை அடிச்சுட்டானாம்."

"யாரு? செருப்பு தேய வருவாரே ஆட்டுக்குள்ள. அவருதானே—சுருள் கிராப்பா...மூஞ்சில ஒரு வடு இருக்குமே வெட்டுத் தழும்பு மாதிரி."

"அவனேதான்."

"முரட்டு ஆளா."

"பயந்தாங்கொள்ளி. ஒரு ஒழுக்கலுக்குத் தாங்க மாட்டான். சும்மா எகிறிப் பார்க்கலாமேன்னு ஒரு திமிர். இன்ஜினியர்னா ஒரு எரிச்சல். மேலதிகாரின்னா முறைக்கணும். புரியாத முட்டாள். நான் இருந்திருந்தா இவ்வளோ தொலைவு வுட்ருக்க மாட்டேன்."

"நாளைக்குப் போணுமா..."

"கண்டிப்பா."

"உடம்பெல்லாம் காயமா இருக்கே..ஒரு நாள் லீவு போடக் கூடாதா..."

''அரைநாள் லீவு போட்ட விளைவு பார்த்தே யில்ல.''

''எல்லாம் நீங்களா இழுத்துப் போட்டுக்கிட்டது தானே. ஜுரம்...தலைவலி...நல்லது, கெட்டதுக்குக் கூட லீவு போட முடியாத எதுக்கு இது? யாராவது தலைவரா இருந்துட்டுப் போவட்டுமே, கோவிந்தன் கிட்டயே வுட்ற வேண்டியதுதானே... எப்படின்னா போங்கடான்னு.''

''முடியாது சரசு.''

''என் முடியாது.''

''பழகிட்டேன்.''

''பழகிட்டேன்னா...''

''தலைவரா இருந்து பழகிட்டேன், அவனுங்களா நீ வேணாம்னு என்னைப் போன்னு சொல்றவரைக்கும் விட முடியாது. தொழிலாளிங்க வேணாம்னு என்னைச் சொல்லவும் மாட்டாங்க.''

''புரியலையே.''

'வீட்டில் இருக்கிற பெண்பிள்ளைக்கு இது புரியாது தான். முதன்மையாய் நிற்பவனை விட்டு விட்டு முடங்கிக்கொள் என்று சுலபமாய்ச் சொல்ல முடியுமே தவிர, இதன் கடுமை எத்தகையது என்று புரியாத குணம். ஆயிரம் தொழிலாளிகள் வேலை செய்யும் இடத்தில் முந்நூறு வோட்டு வித்தியாசத்தில் ஜெயித்தவன் உதறிவிட்டு சாதாரண தொழிலாளி ஆவது கடினம். பிரச்னைகளையே சந்தித்துச் சந்தித்துப் பழகியவன், பேசாமல் நகர்வது முடியாத காரியம், பட்டயமும் கவசமும் ஏந்திய போர்வீரன் காவித் துணியுடன், கமண்டலத்துடன் நடப்பது லட்சத்தில் ஒருவருக்குத்தான் முடியும். பளு தூக்கிப் பழகுபவனுக்குப் பளுவின் எடை கூடிக் கொண்டே போவதுதான் சந்தோஷம். பிரச்னையே இல்லை என்கிற போதுதான் போராடுபவனுக்குப் பயம் வரும்.''



பாமு, கட்டிலில் மல்லாந்து தீவிரமாய் யோசித்தான். இரண்டு கைகளையும் பின்னால் போட்டுக் கொண்டு விட்டம் பார்த்தபடி தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

''யப்பா — நாளைக்காலை விடியப்போவது நிச்சயம். அப்புறம் பேசுங்களேன்... இன்னும் முணத்துக்கிட்டு...''

''தூக்கம் வரல, சரசு.''

''பொண்டாட்டி புள்ளைங்க மேல ஆசை இருந்தா தூக்கம் தன்னால வரும். ஒரு பக்தி ஞாபகமே இல்லாத ஆளுக்கு நிம்மதி எங்கேர்ந்து...''

''என்ன குறைஞ்சு போச்சு இப்ப குடும்பத்துல...''

''பசங்க வந்து நீங்க படுத்திருக்கறதப் பார்த்ததும் எப்படிப் பதறிப் போச்சு தெரியுமா, சின்னவன் தொட்டு தொட்டுப் பார்க்கறான். பொண்ணு நெத்தில கை வச்சு, ஜுரம் ஜுரம்னு கூவுது. உங்களுக்கு ஒண்ணுமே தெரியலை. அடிச்சுப் போட்ட மாதிரி தூங்கறீங்க. பையைத் திறந்து பென்சில் எடுத்து வந்து கோபி உங்களுக்கு ஊசி போட்டான். எழுப்பாதப்பா, தூங்கட்டும்னேன். ரெண்டும் உங்க கால்மாட்டிலேயே உக்காந்துகிட்டு, குசுகுசுன்னு பேசிக்கிட்டுருந்ததுங்க கோவில்ல பார்க்கலையே— புள்ளையாரண்ட கும்புட்டுகிட்டே இருந்தது பொண்ணு. வாடி நேரம் ஆச்சுன்னேன். இரும்மா அப்பாக்கு வேண்டிக்கிட்டிருக்கேன்றது. அது நூறு குட்டு குட்டிக்கிட்டா உங்களுக்கு ஜுரமே வராதாம்.''

பாமு திரும்பி மனைவியின் உடல் தாண்டி கை நீட்டிப் பெண் குழந்தையின் நெற்றியை வருடினான். குழந்தை புரண்டு தள்ளிப் போயிற்று.

இடக்கையைத் தலைக்கு அண்டக் கொடுத்து வலக் கையால் மனைவியின் முகத்தைத் தடவினான்.

50172

''ஆக, நான் வீடரா இருக்க வேணாங்கறே.''

''சும்மா ஒப்புக்குச் சப்பாணியா இருந்துட்டுப் போறதானா சரி. இப்படிப் போட்டு உளப்ப வேண்டி யிருக்கே...''

''அது என்ன ஒப்புக்குச் சப்பாணி.''

''ரெண்டு வீட்டிலே பேசினோம். தாலு மாலை வாங்கிட்டோம் பத்து பேர் கை தட்டினான். இறங்கி வந்துட்டோம்னா சரி.''

''அடடே... அப்ப வீட்லயும் ஒப்பக்குச் சப்பாணியா இருந்துரட்டுமா.''

''எப்படி?''

''சட்டை போட்டு ஆபீஸ் போனம். சம்பளம் வாங்கினம்... குடுத்துட்டு சாப்பிட்டம். மல்லாந்து தூங்கினம்னு இருக்கட்டா.''

''இப்ப மட்டும் என்ன வாழுது.''

''ரெண்டு பெத்தியே... யாருக்குப் பெத்தே... எனக் குத்தானே.''

''இந்தக் கெட்ட பேச்சு பேசாதீங்கன்னு எத்தினி தடவை சொல்லியிருக்கேன்— கண்ணகி வந்து வாக்கப் பட்டா கூட உங்ககிட்ட நல்ல பேரு வாங்க முடியாது.''

''அப்படியா...''
பாமு புரண்டு சரசு அருகில் வந்தான்.

'சுகராகமே என் சுக போகமே
சிகாரகமே என் சுக போகம் நீயே...
கண்ணே கலைமானே
கதை பேச வருவாயோ
அன்பே அனல் வீசும்
விழி வாசல் குளிராதோ.''



மெல்லிய குரலில் முகம் அணைத்து பாமு பாட, சரசு பின்பிடரியை வருடி விட்டாள்.

''பாட்டும் வேணாம். கூத்தும் வேணாம். பேசாத சமத்துப் புள்ளையா படுங்க..'

' ஒரே ஒரு தடவை கூத்து நடத்திடலாமே.''

''தூங்குங்க என் சிரமப்படுத்திக்கிறீங்க.''

''டட்டர டட்டர டய்ங். ஸ்கிரீன் நகத்திட்டாங்க.''

''என்னா வம்பு இது—''

'வந்தனம் வந்தனம்
வந்த ஜனம் குந்தணும்
வந்த ஜனத்துக்கெல்லாம்
மாரு மேல சந்தனம்.''

பாமு குதியல் பாட்டுக்கு சரசு கெக்கலித்தாள். அச்சிலம்புச் சிரிப்பில் காமம் பரல்கள் எனச் சிதறிற்று. வீணையும் வேய்ங்குழலும் குழந்தையின் மழலை பேச் சுக்கு ஈடாகாது என்று வள்ளுவர் சொன்னதுபோல இன்னொரு குறள் எழுத வந்தது. அகிலும், சந்தன மும், ஜவ்வாதும்—காமுற்ற பத்தினிப் பெண்ணின் நறு மணத்துக்கு ஈடாகாது. மனைவி வாசனையில் பாமு கண்கிறங்கினான்.

வேதனைகளை நெஞ்சு மறக்க காமம் ஒரு மருந்து. பிரச்னையின் உக்கிரம் தாங்காமல் தவித்த பாமுவுக்கு சரஸ்வதி அவசியம் தேவைப்பட்டாள். அவன் தேவைக் கும் பணிந்தாள். குளிர்வித்தாள். குளிர்ந்தாள்.

## 6

லேப் அஸிஸ்டெண்ட் கங்காதரன் தடிப்புக் கண்ணாடியை மாட்டிக்கொண்டான். கைகளுக்கு உறை

அணிந்துகொண்டான். பளபளக்கும் ரிவர்ஸ் கியரை கையில் எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பரிசோதித்தான். மெல்லிய கீறலாய் ஒரு பென்சில் கோடு அதன் குறுக்கே போடப்பட்டிருந்தது.

இதை இரண்டாய் வெட்டச் சொல்லி நேற்று மாலையே கொடுத்துவிட்டார்கள். மூன்று ரிவர்ஸ் கியர்கள் கொடுத்திருக்கிறார்கள். கம்பெனியோடு சேர்ந்த பரிசோதனைக்கூடம் இது. விலையுயர்ந்த எலெக்ட்ரானிக் கருவிகள் இங்கே உண்டு. இரும்பு என்கிற உலோகத்தின் சகல குணங்களையும், வகைகளையும் தெரிந்த ஆட்கள் இங்கே உண்டு. இந்த போல்ட் இந்த வகை இரும்பாக இருக்கலாம்; இந்த உறுப்பு இத்தனை பளு தாங்கும் என்று துல்லியமாய்க் காட்ட வகைகள் இருந்தன.

தரக்கட்டுப்பாடு பகுதியின் கீழ் லெபாரட்டரி வேலை செய்தது. கம்பெனிக்கு ஆலோசனை கூறிற்று. தர நிர்ணயத்தை அவ்வப்போது பரிசோதித்தது. இந்த கியர் தரமுள்ளதா என்று பார்க்க இரண்டாய் வெட்டச் சொல்லியிருக்கிறார்கள்.

இண்டக்ஷன் ஹார்டனிங் செய்யப்பட்ட கியர் தானா என்று வெட்டிப் பார்க்கப் போகிறார்கள். இரண்டங்குல விட்டத்துக்கு இருந்தது. கியர் இதன் பல்பகுதியைத் தணல் மாதிரி பழுக்கக்காய்ச்சி சட்டென்று நீர் ஊற்றிக் குளிர வைத்துவிடுவார்கள். தணலாகும் போது உள்ளே இரும்புக் கூறுகள் விரிவடையும். சட்டென்று குளிர்வடைய வெகு வேகமாய் இறுகும். அப்படி இறுகிய பிறகு மிகமிக உறுதியாய் அந்தப்பல் பகுதி இருக்கும். எவ்வளவு பளு வேண்டுமானாலும் தாங்கும். தேய்மானம் குறைவாய் இருக்கும்.

வட்டத் தகடு மாதிரி ஒரு சக்கரக் கத்திக்குக் கீழே அந்த கியரைப் பொருத்தி கங்காதரன் இறுக்கி முடுக்கினான். பென்சில் கோடு வட்டக் கத்திக்கும் கீழே



இருந்தது. இறுக்கப்பட்டதைச் சரி பார்த்தான். கத்தியைச் சுழலவிட்டான். கத்தியைக் கீழே இறக்குமுன் கனைத்தில் புத்தி போட்டுக்கொண்டான். பொறி பறக்கிற வேகத்தில் சுழன்ற கத்தி மெல்ல மெல்ல கியர் அருகே நெருங்கியது. இண்டக்ஷன் ஹார்னிங் செய்யப்பட்ட எந்த உறுப்பையும் இரண்டாய் வெட்டுவது கடினம். மிகுந்த நிதானம் தேவைப்படும். மற்ற இரும்புத் துண்டுகளைக் காய் நறுக்குவது போல வெட்டும் இந்த இயந்திரம் இங்கே கவனமாய் இறக்கப்பட வேண்டும். இல்லையெனில் கத்தி உடையும். துண்டு சிதறும். கண்ணோ, காதோ, மூக்கோ, கழுத்தோ இருக்கிற இடம் தெரியாது போகும்.

கத்தி கியரைத் தொட்டது. உள்ளே இரும்பும் இரும்பும் உரச நெருப்புப் பொறி பறந்தது. கங்காதரன் இன்னும் சுழல் கத்தியைக் கீழே இறக்கினான். 'ரொய்ங்' என்று கத்தி கதறிற்று. இன்னும் அழுத்தினான். உள்ளே இறங்கிற்று. கங்காதரன கலவரத்துடன் கத்தியை மேலே தூக்கினான். இரண்டே அழுத்தத்தில் ஒன்னரை அங்குலம் உள்ளே இறங்கிவிட்டது. மீதி அரையங்குலம் ஒட்டிருக்கிறது.

அப்போ...இண்டக்ஷன் ஹார்டனிங் பண்ணலை. லன் கியர் உடையாது. மறுபடி சக்கரம் சுழன்று உள்ளே இறங்கிற்று. சரக்கென்று கியர் வெட்டுப்பட்டது. சக்கரம் மேலே தூக்கி, சுழற்சியை நிறுத்திவிட்டு கியரை விடுவித்தான். தோல் உறையை மீறி இரும்பு கியர் சுட்டது. எடுத்து வெளியே ஆற வைத்தான். கியர் பிளந்த பகுதி பளபளப்பாய் இருந்தது. இண்டக்ஷன் ஹார்னிங் செய்யப்பட்டிருந்தால் உள்புறம் கறுப்பாய் இருக்கும். மிக்க கடினமானதாய் இருக்கும். இப்படி வெட்டுப்படாது.

அப்போ தப்பு தொழிலாளி பேர்ல இல்லை. கம்பெனி பேர்ல. வாங்கின பொருள் பேர்ல. தலைவர் கிட்ட சொல்லிடணும்.''

அடுத்த கியரை அறுப்பதற்கு வைத்து இருக்கிய போது பூஸ்ட் ஒலிகள் கேட்டன. ஜி எம், க்வாலிடி இன்ஜினியரோடும் வேறு அதிகாரிகளோடும் உள்ளே வந்தார்.

''என்னப்பா, கட் பண்ணினியா...'' க்வாலிடி இன்ஜினியர் கேட்டார். கங்காதரனின் பாஸ் அவர் தான்.

''ஒன்னு அறுத்தேங்க.''— வெட்டப்பட்ட கியரை காட்டினான்.

கூட்டம் திகைத்தது.

''அப்ஸெட்...'' மேஜை மீது இருந்த துண்டுகளைக் கையில் உள்ள டைரியால் ஜி. எம். கீழே தள்ளினார். வெளியேறினார். க்வாலிடி இன்ஜினியர் சாமிநாதன் முகம் வெளியேறினசர். ''அடுத்தது வெட்டு...''-கட்டளையிட்டார்.

அடுத்த இரண்டும் வெட்டப்பட்டன. பிஞ்சுக் கத்தரிக்காய்போல வெட்டுப்பட்டன. வண்டியின் வேகத்துக்கு, அதன் குதிரைச் சக்திக்கு இந்த கியர் பஞ்சுமிட்டாய். இப்படிப் பஞ்சுமிட்டாயில் கியர் போடப்பட்டு அது கவனிக்காமல் போனதற்குக் காரணம், க்வாலிடி கண்ட்ரோல்.

சாமிநாதன் தீவிரமாய் யோசித்தார்.

''கங்காதரன், லேப் அஸிஸ்டெண்டா சேர்ந்து எத்தினி வருஷம் ஆச்சு.''

''எட்டு வருஷம் சார்.''

''லெபாரட்டரி கம்பெனிக்கு ரகசியமான இடம்... தெரியுமா.''



''தெரியும் சார்.''

''இந்த கியர் பத்தி யார்கிட்டயும் பேச வேணாம்.''

''வந்து கேப்பாங்களே சார் யூனியன்ல.''

''வெட்டல இன்னும்னு சொல்லிடுங்க.''—சகல துண்டுகளையும் பொறுக்கிக் கொண்டு வெளியேறினார்.

கங்காதரன் தீவிரமாய் யோசித்தான். டெலிபோனுக்குப் போய் எண்களைச் சுழற்றினான். ''ஏங்க... ஜெயலட்சுமி மளிகைக் கடையா.. எதிர் வீட்ல கோவிந்தன்னு ஒருத்தரு இருப்பாரு. கொஞ்சம் தயவு செஞ்சு கூப்பிடுங்களேன்!''—காத்திருந்தான்.

ஆறு வருடம் வெறும் காஷுவல் லேபராய் வேலை செய்த கங்காதரனை, வாதாடி பர்மனென்ட் லேப் அஸிஸ்டெண்டாய் மாற்றியது கோவிந்தன்தான். பர்மனென்ட் ஆனதும் கங்காதரன் ஐநூறு ரூபாய் ரொக்கமும், அரைக்கிலோ ஹல்வாவும் கோவிந்தனுக்குக் கொண்டு போய்க் கொடுத்து விழுந்து வணங்கினான். லஞ்சம்தான். அதனாலென்ன...? இன்று மாதம் ஆயிரத்து நானூறு ரூபாய் சம்பளம். நிரந்தர உத்தியோகம் கங்காதரனின் எட்டாவது படிப்புக்கு எங்கே கிடைக்கும்.

''ஹலோ...''—எதிர் முனையில் அதட்டலாய்க் குரல் கேட்டது.

''கோவிந்தன் சார்—''—நன்றியில் கங்காதரனுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது செருமிக் கொண்டான்.

ஆனால், இதைப் பார்க்க நல்ல கியரை உடைக்க வேண்டிய அவசியமே இல்லை. பழு தான் அன்று வந்தவுடன், விழுந்து எகிறிய வண்டியை வெளியே நகர்த்தி ஆறு ஆட்கள் வைத்து கியர்பாக்ஸைத் தனியே கழட்டி மேல் மூடியை மளமளவென்று அகற்றிக் கவிழ்த்ததில் பளபளவென்று துண்டுகள் வெளியே விழுந்தன.

சிவர்ஸ் கியர் பாதுஷா வின்னல் மாதிரி கைக்குக் கிடைத்தது உற்றுப் பார்க்க உள்பக்கம் கறுப்பு தெரிய வில்லை. இன்டக்ஷன் ஹார்டனிங் இல்லை.

ஆக கோவிந்தன் கேஸ் சரிதான். ஆனால், சொல்லி யிருக்கக்கூடாது. அது நம் வேலை இல்லை. 'கியர் சப்ளையர் சிகரெட் குடிக்கறானா...என்டா முக்கா சிகரெட்ட வீசிப் போடறு' என்று குறுக்கப் பேசியது தவறு. தொழிற்சாலைக்குள் சிகரெட் தடை செய்யப் பட்ட விஷயம். பாதுகாப்பு முக்கியம். ஆனால், நாலு மணி நேரம் உட்கார்ந்தே இருக்கிற தொழிலாளிக்கு ஒரு சிகரெட் பிடிக்க ஆசை வரலாம். சாமிநாதன் இதைக்கண்டு கொள்ளாமல் போயிருக்கலாம். இல்லை. செக்ஷன் லீடரிடம் சொல்லியிருக்கலாம். இதுகூட வேண்டாம். ஏங்க சிகரெட் பிடிக்கிறீங்க என்று அந்தத் தொழிலாளியைக் கேட்டால் போதும். வெட்கித் நனித்து சிகரெட்டோடு அவன் விலகிப் போய்விடலாம். உடனே அணைத்து விடலாம். ஆனாலும், அதிகாரி கண்டித்தது தவறாகி விடாது அதை சாக்காக வைத்து கோவிந்தன் பேச்சு நடத்தை ரொம்பத் தவறு. இந்த நேரம் இது யூனியனின் வீக் பாயிண்ட்.

பிரச்னை திசை திரும்ப கோவிந்தன் நடவடிக் கையை மானேஜ்மெண்ட் பெரிதுபடுத்த முயலும்' கோவிந்தனுக்காக வாதாடினால் 'சரி இந்தத் தடவை ஸ்டிராங் வார்னிங் கொடுத்து விட்டுர்றேன். லீக்வன்டி போடுங்க' என்று முடியும். மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடப்படும்.

கோவிந்தனுக்காக வாதாடாது போனால் தொழி லாளியிடையே அதிருப்தி வரும். உபதலைவர் டிஸ்மிஸ். என்பது கொந்தளிப்பு வரும் விஷயம். அதைவிட முக்கியம் கோவிந்தனுக்குத் தண்டனை கிடைக்க, கவாலிடி சாமிநாதனுக்கு எக்காளம் அதிகமாகும்



'தொலைச்சுருவேன்' என்றுசற இடம் கொடுத்தாற் போல் ஆகும். அந்த ஆள் இரண்டுங்கெட்டான். கொஞ் சம் அடக்கி வைக்க வேண்டியது அவசியம். விட்டால் துள்ளல் அதிகமாகும்.

காலையில் குழந்தைகளிடம்சொல்லிக் கொள்ளாமல் ஓடி வந்து விட்டது பெரிய உறுத்தலாய் இருந்தது.

பையன் குளித்துக் கொண்டிருந்தான். லதா அன்று எடுத்துப் போக வேண்டிய தன் பாடப் புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். 'நான் வரேம்மா' என்று பொதுவாய்க் கூவிவிட்டு, சைக்கிளில் ஏறி விரைவாய் கம்பெனி வந்து முதல் வேலை கியர்தான். சிவர்ஸ் கியர்.

டெலிபோன் மணி அடித்தது.

இது ஜி எம். அவர்தான் கூப்பிடுகிறார். வரச் சொல்லப் போகிறார். பிரச்னையை எப்படி அணுகுவது என்றுஇன்னமும் தெரியவில்லை.

மெல்ல டெலிபோனை எடுத்துக் காதில் பொத்திக் கொண்டான்.

''தலைவரே, நான் கங்காதரன் பேசறேன்.''

''சொல்லு.''

''லேப்ல அறுத்துப் பார்த்தோம். மூணு சாம்பிள் சிவர்ஸ் கியர். ஒண்ணும் தேறலை.''

''ம்ம் ..''

''காலைல ஜி.எம். எங்க ஐயா எல்லாம் படையா வந்து பாத்துட்டுப் போனாங்க.''

''ம்ம்...''

''யாரண்டையும் சொல்லாதன்னு போனார் எங்க ஐயா. ஆனா, நான் உங்கிட்ட சொல்லிடணும்னு. சொல்லி...''

''ம்ம்... சரி. இத்தோட நிறுத்திக்க. வேற யார் கிட்டயும் பேச வேணாம் இதுபத்தி. நான் பார்த்துக்கறேன்.''

''ஆனா தலைவரே!''

''ஸ்... போனை வைச்சுடு. நீ எங்கிட்ட பேசினது யாருக்கும் தெரியக்கூடாது.''

''சரி தலைவரே. ஆனா—''

''வெச்சுடு போனை.''

தான் முன்பே புரிந்துகொண்ட விஷயத்தை மீண்டும் தெரிந்து கொண்ட அலுப்பில் பரமு போனை கீழே வைத்தான். 'கோவிந்தனுக்கும் இது தெரிவிக்கப்பட்டு விட்டது' என்று பரமுவுக்குச் சொல்ல ஆசைப்பட்ட கங்காதரன் எதிர்ப் பக்கம் தயங்கி நின்றான். 'சரி விட்டுருவம்' என்று நகர்ந்து போனான்.

'கோவிந்தனுக்குத் தெரியும்' என்று பரமு தெரிந்து கொள்ளவில்லை. அவன் தன் ஸ்கூட்டரில் விரைந்து கம்பெனிக்கு வருகிறான் என்பது தெரிய நியாயமில்லை.

மறுபடி மணி அடித்தது.

ஜி எம்.

''பி.எஸ். ஜி.எம். ஹியர். மேல வாங்க.''

வந்தனமின்றி ஆரம்பித்து சட்டென்று பேச்சு முடிந்தது. ஜி.எம்.செமை கடுப்பில் இருக்கிறார். யார் மீது? கேட்டுவிடவேண்டும்.

'மிஸ்டர் பரமசிவம்'' குளிர்சாதனப் பெட்டியின் ஹிஸ் சத்தம் மட்டும் அறையில் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. ஜி எம். பேச ஆரம்பித்தார். ''எனக்கு இன்னிக்கு ப்ரொடக்ஷன் வேண்டாம். கொஞ்சம் இருக்க. ஷிக் வண்டிகளும் அட்டெண்ட்



பண்ண வேண்டாம். எனக்கு வேண்டியது—'' நிறுத்தினார். குளிர் சாதனம் உதறியது.

''எனக்கு வேண்டியது டிஸிப்ளின்.''

ஆக விஷயம் சுற்றி வருகிறது. பரமு கைகளைக் கோர்த்து முகவாயைத் தாங்கிய வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தான். தும்பு எதிர்ப் பக்கம்போய் வால் வருகிறது. வாலை நகர்த்தி விடவேண்டும். தும்பு வந்தவுடன் இறுக்கி பிடித்துக் கொள்ளவேண்டும்.

''சொல்லுங்க சார்.''

''நேத்து நடந்தது கேள்விப்பட்டிருப்பீங்களே.''

''சொன்னாங்க சார்.''

''என்ன சொல்றீங்க இதுக்கு?''

''ஒண்ணும் சொல்லலை சார்.''

''நீங்கதான் யூனியன் லீடர்.''

''யெஸ் சார்.''

''ஒண்ணும் சொல்லலைன்னா என்ன அர்த்தம்?''

''நீங்க ஆக்ஷன் எடுத்துக் கோவிந்தனை வெளியே அனுப்பிவிட்ட பிறகு என்கிட்ட கேள்வி எதுக்கு?''

''அப்ப டிஸ்மிஸ் பண்ணிடலாமா?''

''என்கொயரின்னு ஒண்ணு வருமில்ல. வாதி பிரதிவாதி இரண்டு பேரையும் கேள்வி கேப்போமில்ல— அப்ப சொல்றேன் என்ன செய்யறதுன்னு. என்கொயரி இல்லாத டிஸ்மிஸ்னு தப்பா நடந்துக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்.''

''சட்டம் பேசறீங்களா?''

''நடைமுறை சொல்றேன் சார்.''

''அப்ப சட்டப் பிரகாரம் சகலமும் செய்வோம். அந்த சிகரெட் பிடிச்ச டேவிட்டுக்கும் மெமோ குடுக்க

வேண்டியிருக்கும். அவனையும் வெளியே அனுப்ப வேண்டியிருக்கும்.''

''ம்ம். செய்யுங்க ஸிக் வண்டியெல்லாம் சட்டப் பிரகாரம்தான் நடக்கும். காலல எட்டு மணிக்கு எத்தனை இன்ஜின் லைன்ல இருக்கோ அத்தனை வண்டி தான் போகும். எட்டு மணிக்கு ரெண்டு இன்ஜின் பத்து மணிக்கு நாலு இன்ஜின். மூணு மணிக்கு மச்சம்னு வந்தா வண்டி போகாது.''

''ஓகே போட வேண்டாம்.''

''ஒரு நாளைக்கு நாலு ஸிக் வண்டிதான் செய்வோம். அதுவும் அஸெம்பிளியில் தப்புன்னு தெரிஞ்சா உள்ளே செய்வோம். மூலப்பொருள் தப்பா இருந்தா. உள்ளே இருக்கிற மூலப்பொருள் தப்பா இருந்தா செய்யமாட்டோம். உறுப்புல கோளாறு இருந்தா அதை மாத்தச் சொன்னா மாத்த மாட்டோம். தப்பான உறுப்புக்குத் தொழிலாளி சாவமாட்டான்.''

''மாட்டனும்னு டிமாண்ட் பண்ணா என்னைச் செருப்பால அடிப்பீங்களாய்யா.''

''ஏன் சார் கோவப்படறீங்க.''

''நீங்க போலாம் பி. எஸ். எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியும்.''

''சார்.''

''நீங்க போகலாம்.''

''ஏன் இத்தினி கோவம்னு...''

''ஐ ஸே கெட் அவுட்.''

பரமு வெளியேறினான். வாசலில் நின்று மெல்லச் சிரித்தான். தும்பு பிற்பகலில் சிக்கும் என்று புரிந்து கொண்டான். கோபப்படுகிறவரிடம் கோபமாய்ப் பேசுவது ஜெயம் தராது. பதறுகிறவரை இடைவெளி கொடுத்து வீழ்த்துவது எளிது.



டேவிட்டையும் வெளியேற்ற உத்தரவு டைப் ஆயிற்று.

தொழிற்சாலைக்குள் சிகரெட் பிடித்த டேவிட்டுக்கு டைப் செய்யப்பட்ட மெமோவின் முதல் வடிவமும் அதன் பிரதியும் பரமுவிடம் கொடுக்கப்பட்டன.

தொழிலாளிக்குள் கொடுக்கப்படும் எந்த மானேஜ்மெண்ட் கடிதமும் யூனியன் மூலமாகவே போக வேண்டும் என்பது சட்டம். ஆங்கில அறிவு இல்லாத சட்ட நுணுக்கம் தெரியாத தொழிலாளி எங்கேனும் தவறாய் கையெழுத்திட்டுவிடக்கூடாது என்கிற கவனத்தில் கொண்டுவரப்பட்ட காரியம். ஒரிஜினல் மெமோவைக் கொடுத்து விட்டு, நகலில் சம்பந்தப்பட்டவரின் கையெழுத்து வாங்கித் தருவது யூனியன் லீடர் வேலை.

பரமு மெமோவைப் படித்தான். அஸெம்பிளியில் சிகரெட் பிடித்த குற்றத்துக்காக மூன்று நாள் சஸ்பெண்ட். நாளை விசாரணை நடக்கும். விசாரணையில் தெளிவான பதில் கிடைக்காது போனால் தண்டனை உறுதி செய்யப்படும். இன்று உடனே தொழிற்சாலையை விட்டு டேவிட் வெளியேற வேண்டும். நாளைக் காலை பத்து மணிக்கு விசாரணைக்கு வர வேண்டும்.

## 7

பரமு யோசனையோடு மெமோவை மேஜை டிராயரில் வைத்துப் பூட்டினான். மார்பின் குறுக்கே கைகளைக் கட்டி, விட்டம் பார்த்து உட்கார்ந்தபடி இந்த விஷயம் வேறு எப்படியெல்லாம் போகும் என்று யோசனை செய்தான். மனசுக்குள்ளேயே ஒரு சதுரங்கம் வரைந்து, தன்னையும் மானேஜ்மெண்ட்டையும் எதிரெதிர் அணியாய்ப் பிரித்துக் காய்களை நகர்த்த ஆரம்பித்தான்.

பெரிய பலவீனம் மானேஜ்மெண்ட்டிடம். என்ன அது? இன்டெக்ஷன் ஹார்டனிங் இல்லாத கியர் தன்னிடம் உள்ள பலவீனம், கோவிந்தன் முறைப்பு.

மானேஜ்மெண்ட்டின் மற்றைய பலவீனம் உடனடியாய் ஸிக் வண்டிகளைச் சரிசெய்ய வேண்டிய நிலைமை. குதிரை அவுட்.

மானேஜ்மெண்டின் சிறியதொரு பலவீனம்—இன்ஜினியர் சாமிநாதனின் ஆங்காரம், அடாவடித்தனம்.

தன்னுடைய சிறிய பலவீனம், டேவிட்டின் மெமோ.

ஆக, நிதானமாய் விளையாடினால் மானேஜ்மெண்ட்டின் பெரிய பலவீனத்தைச் சாதகமாக்கிக் கொள்ள முடியும். தவறான உறுப்பு என்பதை நிரூபிக்க. நிரூபணத்தில் 'செக்மெட்' செய்ய வெற்றி தனக்கு வரும்.

ஆனால், மானேஜ்மெண்ட் தவறை மறைக்கும் அல்லது உடனடியாய் தவறைச் சரிசெய்துவிட முயற்சி செய்யும். தன்னை பலப்படுத்திக் கொள்ள புதிய உறுப்புகளுக்கு உடனடியாய் ஆட்களை ஏவும். பம்பாய்க்குப் பறக்க வைக்கும். மாற்று உறுப்புகளை இருபத்துநாலு மணி நேரத்தில கொண்டு வந்து சேர்க்கும் ஸிக் வண்டி ரிபாடு. ஓவர் டைம் செய். வண்டிகளை விற்பனைக்கு அனுப்பு லாபம் காட்டு கோவிந்தனா, யார் அது? டேவிட்டா. அப்படியென்றால்? எக்காளமிடும்!

க்வாலிடி கண்ட்ரோல் மானேஜரும் பர்சேஸ் மானேஜரும் முட்டிக்கொள்ள, 'இது உன் தவறு—என் தவறு' என்று சீறிக்கொள்ள, மாற்று உறுப்பு வருகை தாமதமாகலாம். அப்படியில்லாது தோள் கொடுத்து முன்னேறினால் விரைவில் உறுப்புகள் வரலாம்.

இப்போது உளவாளிகள் அவசியம்.



''சுந்தரம் இங்க வா...''—ஒரு தொழிலாளியை அழைத்தான். ''பர்சேஸ் போய் அங்க டைப்பிஸ்ட் கிருஷ்ணராஜுன்னு ஒருத்தன் இருப்பான். அவன் கிட்ட கேஷுவலா பேசிப் பேசி, யாருக்கும் தெரியாம நான் பார்க்கணும்னு சொன்னதாக சொல்லு... அரை மணி பின்னாடி ஆயில் டாங்க் பக்கம் வரச் சொல்லு...''

''அவன் எதுக்குத் தலைவரே. சரியான உளறுவாயன்.''

''சில சமயம் உளறுவாயன் வேணும்டா. போ, போய்க் கூட்டிட்டு வா.''

ஆயில் டாங்க் அடியில் கிருஷ்ண ராஜு சகல விவரமும் சொன்னான்...

''பம்பாய்க்கு ஆள் கிளம்பியாச்சு.''

''மாற்று உறுப்பு கிடைக்குமா?''

''தொண்ணூறு சதவீதம் சந்தேகம்தான்.''

''ஏன்?''

''அந்த கியர் கம்பெனியில் தொழிலாளர் பிரச்னையாம். இரண்டு சங்கங்களுக்கு இடையே சண்டையாம். பாதித் தொழிலாளிகளை வைத்து வேலை நடக்கிறதாம். இதனாலேயே தரக்குறைவு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுகிறார்களாம்.''

டேவிட்டின் புகைபிடித்தல் ஒரு பிசகு. கோவிந்தன் முறைப்பு அடாவடித்தனம். மானேஜரை எந்நேரமும் எதிரியாலே நினைக்கும் ஆத்திரம். 'தனக்கு மேல் உள்ளவனைக் கண்ணுல விரல் விட்டு ஆட்டறேன் பார்' என்று பிறர் மெச்ச விரும்பிப் போடும் நாடகம். வாழ்க்கையில் நடிப்பவனுக்கு மன உளைச்சல்கள் அதிகம்.

கோவிந்தனால் தூங்க முடியாது. உட்கார்ந்து உண்ண முடியாது. பரபரப்பு தேவைப்பட பொய்யாய்

நடிக்கத் துவங்கி, நடிப்பே பரபரப்பாகி, விளைவுகள் எல்லாம் நாடகமாக எல்லார் வசனங்களையும் தானே தனக்குள் பேசிப்பேசி, தன் நிலை பிறர் நிலை புரியாது போகும்.

வாழ்க்கை நாடகம்தான் எல்லாரும் எங்கோ ஓரிடத்தில் நடிக்கவேண்டியிருக்கிறது என்பது உண்மை தான். ஒரு சபை உன்னிப்பாய் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்கிற உணர்வு நடிகனுக்கு அவசியம். அந்த உணர்வுக்குப் பெயர்தான் மெண்டல் பேலன்ஸ். சபையின் நாடித் துடிப்பை உணர்ந்தபடியே நடிப்பவன்தான் சிறக்க முடியும்.

ஜி. எம். நடிகர் நல்ல நடிகர். 'கெட்அவுட்' என்று அவர் சொன்னது நடிப்பு. தன் அறையை அரங்க மாக்கி, எதிரே உட்கார்ந்திருப்பவனை சபையாக்கி சட்டென்று ஒரு கோப நாடகமே நடித்தார்.

மிருதுவாய் சிரித்தபடி எழுந்து போனதும் அவருக்கு நிலைமையின் குரூரம் விளங்கிவிட்டிருக்கும். பரமுவை அசைக்க முடியாது. துருப்புச்சீட்டு பரமுவின் கையில் என்று புரிபட்டிருக்கும். ஒரு அதட்டு போட்டு ஆழம் பார்ப்போமே என்று நினைத்திருக்கிறார். கோவிந்தன் விஷயத்தை பெரிதாக்கத் திட்டமிட்டிருக்கிறார்—தொழி லாளர்களிடையே சலசலப்பு உண்டு பண்ண. சிறிய விஷயம் சிகரெட் பிடித்தது. இதற்கு மெமோ காட்டு கிறார்.

''எங்க அந்த டேவிட் வரச் சொல்லு.''

குறுக்கே போன கேஷுவல் லேபரை பரமு விரட்டி னான்.

''டேவிட், இதுல கையெழுத்து போடு.'' முதல் படிமத்தை மடித்துக் கொடுத்துவிட்டு பிரதியை நீட்டி னான் தனது பேனாவைப் பிரித்துக் கொடுத்தான்.

''என்னங்க அது?''



''கையெழுத்து போடு.''

''மெமோவ்களா...''

''ஆமா, போடு.''

''போடலாமா—தப்பில்லையே.''

''இல்லை. போடு.''

டேவிட் கையெழுத்து போட்டான். முதல்படிமத் தைப் பிரித்துப் பார்த்தான்.

''என்ன எழுதியிருக்குங்க இதுல.''

''மூணு நாள் சஸ்பெண்ட்.''

''ஐயய்யோ.''

''நீ அஸெம்பிளில உக்கார்ந்து சிகரெட் புடிச்ச துக்கு.''

''தலைவரே, தெரியாத செய்துட்டேன். சத்திய மாங்க ஏதோ வூட்டுக் கவலை பத்த வச்சுட்டேன், வத்து திட்டினதும் பட்டுன்னு அணைச்சுட்டேன்.''

''சரி, என்ன இப்போ?''

''நான் புள்ளைக் குட்டிக்காரன் தலைவரே. வேலையை வுட்டுத் தொரத்திட்டா எனக்குத் தாங்காது தலைவரே.''

''யார்யா தொரத்தினாங்க உன்னை, வேலைய வுட்டு.''

''மூணு நாள் சம்பளம் போச்சன்னா ஐயோ... நான் யார் கால்ல வேணா வுளறேன் தலைவரே. எனக்குத் தாங்காது. ஏற்கெனவே மேலே கீழே எல்லா இடத் துலயும் கடன். மூணு நாள் சம்பளமும் போச்சன்னா... வீட்டுக்கே பாதி சம்பளம் போவுது தலைவரே.''

''ஒண்ணும் ஆவாதய்யா போ... நானிருக்கேன் வூட்டுக்குப் போய் நிம்மதியா தூங்கு. நாளைக்குக் காலைல பத்து மணிக்கு வா.''

''அதிகாரிங்க கேட்டா எனக்குப் பதில் சொல்லத் தெரியாது தலைவரே. அழுதுருவேன்.''

''ஒன்னு அழுதுரு. மிச்சம் நான் பார்த்துக்கறேன்.''

''கை வுட்றாத தலைவரே. எனக்குத் தாங்கவே தாங்காது.''—பாமுவின் கைபிடித்து, உதடு பிதுங்கி, கண்களில் ஜலம் கொப்பளிக்க, டேவிட் நின்றான்.

''சீ, போய்யா. பொட்டபுள்ளை மாதிரி. இதுக்கெல்லாம் வேலைய விட்டு எடுத்துர முடியாது. மேல உக்காந்திருக்கிறவனுக்கு வேற என்னவோ ஆத்திரம். நீ மாட்டின குத்திட்டான். என்கிட்டேவுடு விஷயத்தை. பேசாத மெமோவைமடிச்சு பாக்கெட்ல போட்டுக்கிட்டு வூட்டுக்குப் போ. எவன்கிட்டயும் பேசாத. பட்டுன்னு வூட்டுக்குப் போயிடு. நாளை காலைல வா. பத்து மணிக்கு போறும். அதுவரைக்கும் வாயத் தொறக்காத.''

ஆனால் கலங்கிய முகத்தோடு வீட்டுக்குப் புறப்பட்ட டேவிட்டை தொழிலாளர்கள் மடக்கி கேட்டார்கள். டேவிட் வாய் திறந்து புலம்பினான். தலையில் அடித்துக் கொண்டு அழுதான்.

சகதொழிலாளியின் வேதனை தோழர்களுக்கு ஆத்திரம் உண்டுபண்ணிற்று.

''சட்டம். பெரிய சட்டம். அசெம்பிளில மட்டும் சிகரெட் புடிக்கக்கூடாதா மேல எல்லா கிளார்க்கும் உக்கார்ந்து டேபிள்லயே ஊதறானே. கலர் கலரா ஆஷ்ட்ரே எல்லாருக்கும் கம்பெனி வாங்கிக் குடுத்துருக்குப்பா. கிளார்க் உக்காந்து புடிக்கலாம். நாம லெட்சின் சந்துல நின்னு தம்மடிக்கணுமா. கூடாதுன்னா எல்லாருக்கும் கூடாதுன்னு வை. உனக்கு ஒரு சட்டம், எங்களுக்கு ஒரு சட்டமா.'' —யாரோ ஒருவன் குமுறிக் குமுறிப் பேச, வைத்தி இடைமறித்தான்.



''நீ கேட்டுட்ட.. மேல யார் கேக்கறது.''

''ஏன், தலைவர் தான்.''

''உங்க தலைவர் நாக்குல சுண்ணாம்பு வச்சு அனுப்புவாங்க. நல்லா கேப்பாரே உங்க தலைவரு.''

''என்கொயரி வருமில்ல.''

''என்கொயரி எதுக்குப்பா. ஏன் மெமோ கைநீட்டி வாங்கற. நானா, சிகரெட்டா புடிக்கலையேன்னு சொல்றத வுட்டுட்டு மெமோவாம், சஸ்பென்ஷனாம். முட்டாப் பசங்க.''

''ஆ. சாமிநாதன் பாத்துட்டாரே...''

''அவருக்கு எம்மேலே பர்ஸனலா கோபம். அவர் ஒரு மாதிரி சார். புத்தி சரியில்லாத ஆளுன்னு சொல்லு.''—வைத்தி எகிறினான்.

''அ - அதெப்படி...''

''சொல்ற டேவிட் சிகரெட் புடிக்கலைங்கறதுக்கு நாம எல்லோரும் சாட்சி. அடிச்சுப் பேசுவோம் என்ன பண்ணுவான். என்ன பண்ணிட முடியும்?''

''அது சுரெட்.''

''நமக்குள்ள ஒத்துமையில்லை.''

''அப்படியில்லை.''

''அதுதான். நமக்குத் தலைமை சரியில்லை. பயங்கொள்ளித்தனம் தொடை நடுங்கித் தலைவன்.''

''நியாயம், தர்மம்னு ஒன்னு உண்டு. மானேஜ்மெண்ட் கிட்ட கிடையாது.''

''வைத்தி, உன்னைத் தலைவரா போட்டுக்கணும்.''

''எனக்கு வாணாம்பா தலைவர் பதவி. அதுக்குன்னு தூக்ரா ஆசெல்லாம் இருக்கான். அவன்தான் உங்க

ளுக்குச் சரி. எனக்கேன் வம்பு. போங்கடா...எக்கேடாவது கெட்டு போங்க. பொழைக்கத் தெரியாத பசங்களா...''

வைத்தியின் பேச்சு முழுவதும் பரமுவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

நரி. குள்ள நரி. ஆளுமையின் சுவை தெரிந்து விலகிக்கொண்டு, அதே சமயம் ஆளுமைக்கு ஆசைப்படுகிற நரி. இரவு முழுவதும் ஊளையிடுகிற நரி. எதற்கு ஊளையிடுகிறாய் நரியே என்று மான் கேட்டால், சிங்கத்தின் வருகையை உனக்குச் சொல்ல என்று பதில் சொல்லுமாம். எதற்கு ஊளை என்று சிங்கம் கேட்டால், மான் இருக்கும் இடத்தை உனக்குத் தெரிவிக்க என்று விடை கொடுக்குமாம்.

''ஒரு இயக்கத்தின் ஆணிவேரைக் கொல்லுபவர்கள் இம்மாதிரி பேடிகள்.

வைத்தி. உன்னை நானறிவேன்.

ஆனால், முதுகுப் பின்னால வீசப்படும் எச்சுக்களைத் தலைவன் தெரிந்து வைத்துக்கொள்ள, வேண்டுமே தவிர, போய்க் கேட்டுவிடக் கூடாது கேட்பின், முகம் மாறும். பொய்கள் கூடும்.

''நானா... உங்களையா... திட்டினேனா... சாமி சத்தியமா இல்லியே...'' பதில் வரும்.

இப்போ எதிரி வைத்தியில்லை.

புறங்கூறுபவர்களை ஒருவனுடைய வெற்றியே வாயடைக்கச் செய்யும். வலுவிழக்க வைக்கும். இப்போது முதல் வேலை சாமிநாதனிடம் போய்ப் பேச வேண்டும் ஏன் கியர்கள் உடைகின்றன என்று அப்பாவியாய்க் கேள்வி கேட்கவேண்டும். மழுப்பினால் வற்புறுத்த வேண்டும். பரிசோதனைச் சாலைக்கு நானே போய்த் தெரிந்து கொள்கிறேன் என்று எழுந்திருக்க வேண்டும்.



சாமிநாதனிடம் அனுதாபத்தோடு பேசவேண்டும். கனிந்திருக்கிறதா என்று பார்க்க ஒவ்வொரு வாழைப் பழத் தோலையும் உரிக்கமுடியுமா என்று கேட்க வேண்டும். சாமிநாதன் வசங்களைப் பிடித்துக் கொண்டால், உதவி செய்கிறேன் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். டேவிட் விஷயமும் கோவிந்தன் விஷயமும் கண்டு கொள்ளாதே என்று பதில் கோரிக்கை வைக்க வேண்டும்.

தவறு யாருடையதாக இருந்தாலும் உற்பத்தி முக்கியம். ஸிக் வண்டிகளை வெளியே அனுப்பினால் தான் கம்பெனிக்கு லாபம். நஷ்டப்படு என்று கைகட்டிக் கொள்வது விதண்டாவாதம்.

தவறு தன் பக்கம் என்று மானேஜ்மெண்ட் ஒப்புக் கொண்டால், தொழிலாளிக்கு, ஓவர் டைம் செய்வது மூலம் காசு வாங்கித் தரலாம்.

ஒரு நாளைக்கு முப்பது வண்டி, மூன்று நாளைக்குத் தொண்ணூறு வண்டி என்கிற கணக்கில் மூன்றுநாள் ஓவர் டைம் தொகை கேட்கவேண்டும். ஒருநாள் குறைந்த பட்சம் கூலி முப்பத்தாறு ரூபாய். ஓவர்டைம் என்று இரண்டால் பெருக்க, எழுபத்திரண்டு ரூபாய்... மூன்று நாளைக்கு இரு நூற்றுப் பதினாறு ரூபாய்.

இது பெரிய காசு. டேவிட் மாதிரி தொழிலாளிக்கு நிச்சயமாய் தேவைப்படும் விஷயம். ஒரு மாத வீட்டு வாடகை, ஒருமூட்டை அரிசி, இரண்டு நல்ல புடவை, இரண்டு குழந்தைகளுக்கு மூன்று மாத பள்ளிக்கூடக் கட்டணம்—இதில் ஏதாவது ஒன்றை சரிக்கட்டலாம்

ஓவர்டைம் காசு தனக்கு முந்நூற்று அறுபது ரூபாய் கிடைக்கும். இதில் குழந்தைகளுக்கு ஏதாவது வாங்க வேண்டும்.

ஆனால், ஸிக் வண்டிகள் செய் என்கிற போதே தொழிலாளர்கள் 'ஐயோ' என்று அலுத்துக் கொள்வார்கள். தட்டிக் கொடுக்க வேண்டும்.

காசு என்பதன் சுகம் பற்றிச் சொல்ல வேண்டும். கூடுதலான ஒவ்வொரு சம்பாத்தியமும் எவ்வளவு அவசியம் என்று நினைப்பூட்ட வேண்டும்.

''சார், கோவிந்தன் டைம் ஆபீஸ்ல உக்காந்திருக்காரு உங்களை வரச் சொல்றாரு.''

மெமோ வாங்கி சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்களுக்கு டைம் ஆபீஸ்தான் எல்லை. அநாதை விடுதி. வாசலைத் தாண்டி உள்ளே வரக்கூடாது என்கிற விதியைச் சற்றுத் தளர்த்தி டைம் ஆபீஸ்வரை வரலாம் என்பது நியதியாகி விட்டிருக்கிறது.

''உள்ளே போறேன், ஜி எம் ம. பாக்றேன்னு கூவினானா, டைம் ஆபீஸ்ல அழுத்தி உக்கார வச்சு, ம வாங்கிக் குடுத்தாங்க. அவனை உள்ள விட்டா டைம் கீப்பருக்கில்ல மெமோ போகும்''—வந்தவன் அலட்டிக் கொண்டான்.

''என்ன கோவிந்தா, ஏன் இவ்வளவு தூரம்... நான்தான் சொல்லியனுப்பறேன்னு சொன்னேனே!''-பரமு கோவிந்தன் அருகில் போய் உக்கார்ந்து கொண்டான். டைம் கீப்பர் நின்று கொண்டிருந்தார். சட்டென்று ஒரு தோற்றத்துக்குக்கோவிந்தனே டைம்கீப்பர் போலவும், டைம் கீப்பர்தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டவர் போலவும் தெரிந்தது.

தோற்றத்துக்குக் கோவிந்தன் மிக மதிப்பு அளிப்பவன். சொற்களைவிடத் தோற்றமே மக்களை முதலில் சென்றடைகிறது. ஒருவன் தோற்றம் கண்டே மக்கள் முதலில் மயங்குகிறார்கள். நம்பிக்கை கொள்கிறார்கள். நெருங்கிப் பேச, உறவாட வருகிறார்கள்.

## 8

பேச்சை மிதமாய், கம்பீரமாய், அதட்டலாய் பயன்படுத்தப் பயன்படுத்த இன்னும் மரியாதை காட்டுகிறார்கள்.



''நீ சொல்லியனுப்பலேன்னா எனக்கு தெரியாத போயிடுமா...''—கோவிந்தன் சீறினான்.

''ஏன் சத்தறே கோவிந்தா?''

''நான உப தலைவரா இருக்கிறது புடிக்கலையா... சொல்லிடு, விலகிடறேன்...''

''தேர்தல்ல போட்டி போட்ட... ஜெயிச்ச... உப தலைவரா வந்துட்ட. இதுல புடிச்சது, புடிக்காதது என்னா...

'உபதலைவரை மெமோ குடுத்து அனுப்பிட்டான் உள்ள ப்ரொடக்ஷன் ஒழுங்கா போவுதுன்னா என்ன அர்த்தம். யூனியனுக்கு என்னா மதிப்பு... என்னா நியாயம். நாளைக்கு நீ போனாக்கூட ப்ரொடக்ஷன் நடத்தலாம்னு வந்துட்டா மானேஜ்மெண்ட் மதிக்குமா.''

''ஸ்ட்ரைக் பண்ணச் சொல்றியா?''

''அதுக்கு உனக்கு வயசு பத்தாதுன்னு தெரியும்.''

''கோவிந்தன், ஜாஸ்தி பேசற... உன் பந்தாவெல்லாம் காஷுவல் லேபர்கிட்ட வச்சுக்க. எப்ப என்ன, செய்யதுன்னு எனக்குத் தெரியும். விஷயம் என்ன சொல்லு.''

'உனக்கு ஒரு மண்ணும் தெரியாதுன்றேன். ஓட்டை கியர் குடுத்து, உள்ள உடைஞ்சு போவுது. இதை உன் கண்ல காட்டத மறைக்கப் பாக்கறான். தப்பைத் தொழிலாளி பேர்லன்னு மாத்தறான். என்ன செய்ற நீ.''

கோவிந்தன் சண்டைக்கோழி மாதிரி தலை சிலுப்பிக் கூவினான்.

''அப்புறம்...''

''அப்புறம் என்னவா... சிகரெட் குடிச்சதுக்கு மொமே வாங்குன்னு நீ சொல்லிட்டு உக்காந்திருக்கிற

உள்ள. இப்படி நின்னதுக்கு உக்காந்ததுக்கு மெமோ வாங்கிக் குடுத்துட்டு, ஒவ்வொருத்தன ஊட்டுக்கு அனுப்பிட்டு யூனியன் வீடர்னு வேற சொல்லிக்கற...''

''உன்னை மாதிரி சட்டையப் பிச்சிவிட்டு ஜி எம். கிட்ட போவலைன்றியா''

''நான் காட்டான், வாஸ்தவம். ஆனா, தொழிலாளி மேல துரும்பு பட வுட மாட்டேன்.''

டைம் ஆபீஸ் வாசலில் கூட்டம் கூடிற்று. ஏதேதோ வேலையாய் வந்தவர்கள் கூடி நின்றார்கள். வேடிக்கை பார்த்தார்கள்.

''கோவிந்தா, வூட்டுக்குப் போ. வேற வேலை இருந்தா கவனி.''

''என் வேலை யூனியன். இருபத்திநாலு மணி நேரமும் யூனியன்தான் வேலை. என் கூட வேலை செய்யறவன் பாதிக்கப்பட்டா என்னால் சோறு திங்க முடியாது. தூங்க முடியாது.''

முழக்கங்கள், குளறுகைகள், கோவிந்தன் தொழிற்சாலைக்குள்ளேயே தூங்குகிறவன். நினைத்தபோது சாப்பிடுகிறவன்

பாங்குக்குப் போகும் ப்யூனிடம் நாலு வாழைப் பழம், பகோடா என்று ஆர்டர் கொடுத்து வரவழைத்து நடு அஸெம்பிளியில் சாப்பிடுகிறவன்.

பரமுவுக்கு இந்தக் கூச்சல் அயர்ச்சி அளித்தது. அவ்வப்போது முரண்டு பிடிக்கும் மானேஜ்மெண்டை விட இம்மாதிரி கூச்சல் ஆட்கள்தான் ஹிம்சையானவர்கள். தெளிவில்லாத இந்த முழக்கங்கள்தான் அயர்ச்சியானவை.

''ஹார்டன் பண்ணாத கியர் வந்திருக்கிறது உனக்குத் தெரியுமா. தெரியாது. ஆனா, வூட்ல உக்காந்திருக்கிற எனக்குத் தெரிஞ்சு போச்சு. லேபாரட்டரில அறுத்துப் பார்த்துட்டு ஐயோன்னு பெரிய ஆளுங்க தலைல கை வச்சிக்கிட்டது உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். வூட்ல உக்காந்திருக்கிற எனக்குத் தெரியும்.''



''கங்காதரன் போன் பண்ணினாரா?''

''எவனோ செய்தான்.''

''கங்காதரனுக்குத் தெரியறதுக்கு முன்னால எனக்குத் தெரியும். அலட்டலா பேசறது நிறுத்து. பிரச்னையைப் புரிஞ்சுக்க. ஒன்னு கத்திட்டா உனக்கு எல்லாம் தெரியும்னு ஆயிடாது.''

பரமு தன் பாக்கெட்டில் கைவிட்டு உடைந்த கியர் துண்டுகளை எடுத்துக் காட்டினான்.

''அப்ப நீ ஏன் மானேஜ்மெண்ட்கிட்ட போவலை. ஏன் அவங்க தப்பை அவங்களுக்கு இடிச்சுக் காட்டலை.''

''அவங்க இதை எப்படி மறைக்கறாங்கன்னு நான் பார்க்கணும். பொறுமையா இருக்கேன். முதல்ல அவங்க இதை மறைக்கறாங்களான்னு தெரிஞ்சுக்கணும்.''

டைம் கீப்பருக்குப் பரமுவின் சூட்சுமம் புரிந்தது. தலையாட்டினார்.

''மறைச்சா என்ன பண்ணிவிட முடியும்.''

''நிதானமா அவங்க தப்பு இதுன்னு எடுத்துக் காட்டி, அதை அவங்க ஒத்துக்கறபோது உன்னையும் டேவிட்டையும் உள்ள கொண்டாந்துடணும்''

''வீக் வண்டி அவரே போட்டுவாரா?''

''நாம்தான் செய்யணும்.''

''அவன் தப்புக்கு நாம் ஏன் சாவணும்?''

''யார் தப்பு செய்தாலும் வண்டி அஸெம்பிளி வேலை நம்முதுதான்.''

''எப்ப செய்யப் போறீங்க.''

''அவங்க தப்பு ஒத்துக்கிட்டவுடனே.''

''இன்னிக்கே கைதூக்கி நான்தான் தப்புன்னுட்டா...''

''நாலைவேர்ந்து ஸிக் வண்டி போடணும்.''

''அப்ப டூர்... என்ன ஆவறது?''

''என்ன டூர்?''

''நாப்பது பேர் டூர் போறான். வரவியாழக்கிழமை சாயந்திரம். வெள்ளி குட் ஃப்ரைடே, சனி, ஞாயிறு கம்பெனி லீவு திங்கள், செவ்வாய் அவனே லீவு போடறான். அங்க நான் ப்ரோக்ராம் புதன்கிழமை காலைலதான் திரும்பறாங்க. அஸெம்பிளில மட்டும் முப்பத்திநாலு பேர் போறாங்க. எப்படி ஸிக் வண்டி செய்ய முடியும்?''

''யாரைக் கேட்டாங்க டூர் போறதுக்கு...

''யாரைக் கேக்கணும். சீட்டு சேர்ந்து ஆளுக்கு மாசம் அம்பது ரூபா சீட்டு போட்டு அதுல வருஷா வருஷம் போறதுதான். இந்த வாட்டியும் போறான். இதுக்கு யாரைக் கேக்கணும். மார்ச் மாசம் ஸ்டாக் டேக்கிங். அஸெம்பிளில வண்டி போவாது நிம்மதியா போவான். இப்ப அவனை என்னா செய்ய. எப்படி முப்பத்தி நாலு ஆள் இல்லாம தொண்ணூறு வண்டி செய்யறது.''

''டூர் இந்த வாட்டி கான்ஸல் செய்யட்டும்.''

''என்... ஏன் செய்யணும். யார் செஞ்ச தப்புக்கு யார் மாட்டிக்கிறது சாவணும். டூர் போய்ட்டுவந்து ஸிக் வண்டி போடுவாங்க. அதுவரைக்கும் கிடக்கட்டும்.''

''புண்ணியமில்லை, கோவிந்தன். இந்த வருஷ ப்ரொடக்ஷன் கணக்குல வண்டி வரணும். ஏப்ரல் ஒண்ணு, இரண்டு தேதி தள்ளலாம். நீங்க டூர் முடிச்சு



வர்ற வரைக்கும் காத்திருக்க முடியாது. வண்டியை கவர்மெண்டுக்கு காட்டணும். நிகர லாபம் என்னன்னு கணக்குக் காட்டணும். காத்திருக்க முடியாது.''

''போவட்டும். எனக்கென்ன...''

''உன்னையும் பாதிக்கும் வண்டி குறைஞ்சா உன் வருஷாந்திர போனஸ் குறையும்.''

''விடமாட்டேன். அவன் தப்பு என்னை பாதிக்கிறதுக்கு விடமாட்டேன்.''

''முட்டாள்''— பரமு பொறுமை மீறிச் சீறினான்.

''தலைவரே... அடக்கமா பேசு.''

''எழுந்து போடா முண்டம். குழந்தைப் புள்ளைக்குப் பாடம் சொல்ற மாதிரி சொல்றேன். கேக்கறதுக்கு முன்னாடியே கூவுறியே. ஒண்ணு சுயமா தெரியணும் இல்ல, சொன்னாலாவது புரிஞ்சுக்கணும். ரெண்டும் கிடையாது.''

''தலைவரே, எனக்கு ஒண்ணு புரிஞ்சு போச்சு.''

''என்னா புரிஞ்சுது.''

''நீ மானேஜ்மெண்ட் பக்கம்.''

''கோவிந்தன்...''

''நீ காட்டிக் குடுத்துட்டே!''

''முட்டாள்...''

''கருங்காலித்தனத்துக்கு உதாரணம் நீதான்.''

''கடைசியா சொல்றேன் கோவிந்தன்...''

''மானேஜ்மெண்ட் பண்ணின தப்பை இதுவரை ஒத்துக்காததுக்குக் காரணம் நீதான். உன் வாயை அடைச்சுட்டாங்க. உனக்குத் தனியா கொஞ்சம் மால் வெட்டிட்டாங்க அதான் ஜி. எம் கூடவேர்ந்து சிரிச்சுக்கிட்டே வந்திருக்கே. டெவிட்டுக்கு மெமோ குடுத்து அனுப்பிச்சிட்டே.''

''எய்...''—பரமு சீறி, கோவிந்தன் சட்டை காலரைப் பிடித்துக் கொண்டான்.

''அடி தலைவரே, அடி—அடிச்சுக் கொன்னுடு. கை வேற, கால் வேறா எடுத்துரு. புரட்டிப் புரட்டி அடி. மூஞ்சில குத்து. கையால அடிச்சா உனக்கு நோவும் தலைவரே. கட்டை எடுத்துக்க. ஆனா, நான் விடமாட்டேன் தலைவரே. இந்த எமாத்து வேலைக்கு உடன்பட மாட்டேன்.''

வியூகம் மூடப்பட்டது. அபிமன்யு சூழ்ந்து கொள்ளப் பட்டான். கோழையும் முன்கோபியுமான துச்சாதனனுடைய மகன், அபிமன்யுவின் பின்னால் வந்து கதை கொண்டு அடித்து வீழ்த்தினான். வியூகத்தில் முன்னெச்சரிக்கையின்றி நுழைந்தது அபிமன்யுவின் தவறு சூழ்ச்சியுள்ளவர்களிடம் துணையின்றிப்போருக்கு நுழைந்தது அபிமன்யுவின் தவறு.

டைம் ஆபீஸில் கோவிந்தன் கொடி உயரப் பறந்தது.

பரமு தவறோ என்று யோசித்தார்கள். 'அடி— அடி...என்னை அடிச்சுக் கொல்லு' என்கிற கோவிந்தனின் அலறலுக்குப் பரிதாபப்பட்டார்கள்.

வாசலில் கூடியுள்ளவர்கள் இச்செய்தியைப் பல இடங்களில் பரப்ப ஓடினார்கள். செய்திகள் வதந்தி ரூபம் எடுத்தன. கும்பல் கும்பலாகப் பேசுவதில் பிரிவு உண்டாயிற்று.

டூர் ப்ரோக்ராம் இல்லை என்று கேள்விப்பட்ட தாப்பது பேரும் உஷ்ணமடைந்தார்கள். எந்த ஏவலுமின்றி பரமுக்கு எதிராய்விவாதங்களை வளர்த்தார்கள்.

''இங்கேர்ந்து முதல்ல மதுரை, பாண்டியன் புடிச்சு போறோம். நைட் ஸ்டே. பிறகு மறுநாள் சாயந்திரம் கிளம்பி தனி பஸ்ல ராமேஸ்வரம். அங்கேருந்து அதே



பஸ்ல திருவனந்தபுரம். அங்க வேற தனி பஸ் புடிச்சு கொச்சின். நேரா கோவா. பின்னாடி பங்களூர் மெட்ராஸ். பாத்துப்பாத்து ப்ளான் போட்டு வச்சிருக்கு, என் கலைக்கறாம்.''

''கோவாலேர்ந்து பாம்பே ஸ்டீம் போட்ல போலாமே, எம்மா வுட்டாங்க.''

''அப்படித்தான் முதல்ல ப்ளான் போட்டோம். அப்புறம் அடுத்த வாட்டி போலாம்னு முடிவு பண்ணினோம். இப்ப என்னடான்னா முதலுக்கே மோசமாயிடுச்சு.''

''நான் போயிருக்கேன். ரெண்டுபாட்டில் ஃபென்னி வாங்கிக்க வேண்டியது. சும்மா தண்ணி போட்டுக்கிட்டே ஸ்டீம் போட்ல பாம்பே போயிடலாம்.''

''ஃபென்னின்னா...''

''முந்திரி சாராயம். கப்பல் முழுக்க ஒரே பாட்டு. கூத்துதான்.''

''பாட்டாவது, கூத்தாவது எல்லாம் வேலை செய்யுங்கப்பா. சனி, ஞாயிறு எல்லாம் கம்பெனிக்கு வந்து கழட்டி மாட்டுங்க.''

''அவனவன் போல்ட் இறங்கலன்னா அடிச்சு இறக்கிடுவாங்க. இப்ப கழட்டச் சொல்லத் தெரியும் வேதனை. கியர் பாக்ஸவுட்டு வருவேனான்னு சொல்றாம் போல்ட்.''

''போல்ட்வரலேன்னா செதுக்கிட வேண்டியது தான்.''

''நல்லா செதுக்க வுடுவாங்களே...க்வாலிடி கண்ட்ரோல்ல. ஐலே... ஐலேசா ஐலே ஐலேசான்னு ஸ்பானர் புடிச்சு தொங்கணும். ஒரு போல்ட் கழட்ட ஒரு அவர் ஆவலேன்னா என் பேரை மாத்திக்கிறேன்.''

''சொல்லாத. சொல்லாத— நினைக்கறப்பவே நோவுது.''

''நோவுதா, எரியுதுய்யா வயிறு. எவனோ மால் வாங்கிட்டு தம்பனை மாட்டி விட்டான் சாவப் போறம்.''

''அது சொல்லாதப்பா. பரமு துட்டு வாங்கறவர் இல்லை.''

''பெரிய யோக்கியம். போடா.''

''வாணாம். தலைவரைத் தப்பு சொல்லாத.''

''அந்தக் கூறுகெட்ட ஆளாலதான் எல்லாம் கவுந்து போச்சு, பேர் போச்சு, வீடு போச்சு. கூட கழட்டி மாட்ற வேலை வந்துருக்கு. கை சுத்தம் இல்லாத பேமானிய தலைவனா கொண்டாந்துட்டீங்க...''

கடைசி வார்த்தைக்குப் பொத்தென்று முகத்தில் அறை விழுந்தது தொச்சென்று பரிமாறப்பட்டது.

''டேய் தலைவரப் பத்தி எவனாவது தப்பா பேசினீங்க... பொலி போட்டுருவேன்...''

ஆதரவானவன் செய்கையே ஆபத்தைக் கொடுத்தது. தொண்டர்கள் நல்லவர்கள். நம்பிக்கையானவர்கள். தொண்டர்கள் நல்ல குணமும் நம்பிக்கையும் கூட சில சமயம் தொந்தரவாகப் போகும். போயிற்று.

பரமுவால் தனக்கு ஆதரவாய்ப் பேசி அடிதடியில் இறங்கியவனைத்தான கண்டிக்க முடிந்தது.

''இலைல விழுந்திருக்கற சோறு பாத்து சாப்பிட்டாத்தானே உடம்புல ஒட்டும். எங்கயோ வெறிச்சுக்கிட்டு உக்காந்திருந்தா சோத்துக்கும் மதிப்பில்லாத... செஞ்சவளுக்கும் மதிப்பில்லாத... இன்னும் கொஞ்சம் ரசம் ஊத்தட்டுமா—தளர சாப்பிடுங்களேன்... நெஞ்சடைக்கிற மாதிரி உருட்டுவானேன்...''

## 9

சரசு, முழங்கால்வரை புடவையை வழித்துக் குத்திட்டு உட்கார்ந்திருந்தாள். விலகின புடவை விளாடே ரவிக்கை விளிம்பும், மார்பின் சரிவும், தாலிக் கொடியும் தெரிந்தன. பின்னலைக் கொண்டையாக்கி முடிந்திருந்தாள்.



இரவுச் சாப்பாடு ரசமான விஷயம்! வலது இடது மாய்க் குழந்தைகள் உட்கார, டி.வி.யில் செய்திகள் கேட்டபடி நிதானமாக உண்ணும் நேரம். கொஞ்சம் ரசம் என்று கேட்டு, கூட ஒருபிடி உண்ணும் நேரம். இனி விடியல் வரை விடும், வீட்டுச் சுகமும்தான் என்கிற இனிமையான நேரம். குழந்தைகளின் அன்றைய பகல் நேர விஷயங்களைக் கேட்கும் நேரம். கூட நாற்பது ரூபா மளிகைக்கடைக்கு ஆயிருக்கு என்று சொல்லப் பட்டால் தலையாட்டும் நேரம் 'ஏய். எரும்மாடு—ராத்திரி என்ன...'' என்று மனைவியை, குழந்தைகள் அறியா வண்ணம் வம்புக்கிழுக்கும் நேரம். இன்று எதிலும் ஒட்டாது மனசு தனித்தது.

''என்னப்பா... ஏதோ மாதிரி இருக்கீங்க...'' பெண் குழந்தை கேட்டது.

''கம்பெனில கொஞ்சம் தகராறும்மா.''

''என்ன தகராறு?''

''ம்ம்.. உனக்கு சொன்னாப் புரியாது. விடு.''

''சொல்லுங்க, புரிஞ்சுக்கறேன்.''

''கோவிந்தன் கொஞ்சம் முறைக்கிறான். இன்னிக்கு பெரிய சண்டை யாடுச்சு...''

'சண்டைன்னா''—சரசு வியப்புடன் கேட்டாள்.

''அடிதடி மாதிரி வந்துருச்சு.''

''ஐயோ...!''

''ஜபர்தஸ்தா பேசினான். எழுந்து சட்டையைப் புடிச்சிட்டேன். அப்புறம்தான் தப்பு பண்ணிட்டோம்னு தோணிச்சு. ஆனா, அப்படிச் செய்யாத இருக்க முடியலை. நான் பேசினா அவன் பேசறான்னுகூட

வேலை. செய்யறவங்க பிரிஞ்சி பேசி. அந்தப் பேச்சு முத்தி பெரிய அடிதடி. ரகளை. பெரிய இடத்துக்கு யார் காதுக்கும் போகாத அமுத்திட்டோம். இருந்தாலும் பொகைச்சல் போகலை.''

வீடு மொத்தமும் தலைவனின் மனசு வேதனையை உணர்ந்ததுபோல, ஓர் அமைதியில் ஆழ்ந்தது. அவரவர் காரியத்தை விரைவாய், ஓசையெழுப்பாது முடிக்க வைத்தது.

காசு கஷ்டம் என்றால் சரி போகட்டும், இருப்பதைக் கொண்டு நிறைவு கொள்வோம் என்று நகரலாம்.

நோய் உபாதையெனில் அருகே அமர்ந்து பேச்சுக் கொடுத்து மனசு மாற்றலாம்.

மனசு வேதனையெனில், செய்தொழிலில் கலவரமெனில்... யாரோ அயலானின் ஹிம்ஸை தாங்காது வேதனைப்படுகிற தலைவனை என்ன சொல்லித் தேற்ற முடியும்? ஒரு குடும்பம் இங்கே எப்படி உதவி செய்ய முடியும்.

குழந்தைகள் ஆளுக்கொரு புத்தகம் வைத்துக் கொண்டு படுக்கையில் படுத்தபடி புரட்டிக் கொண்டிருந்தன. பரமுவும் படுக்கையில் சரிந்தான்.

பத்து நிமிஷம் கழித்துக் குழந்தைகள் பிரித்த புத்தகத்தோடு தூங்கப் போனார்கள். சரசு எடுத்து வைத்து, விளக்கை அணைக்கையில் வாசல் நாதாங்கி தாக்கு மடித்து நொட்டை போட்டதுபோல இருமுறை சப்த மெழுப்பியது.

''சரசு. வாசல் பக்கம் யார் பாரு''

சரசு கதவு திறந்து ரேழிக்குப் போய். கம்பிகளூடே நின்று ஆள் பார்த்தாள். விளக்குப் போட்டுக் கதவு திறந்து, ''வாங்க...வாங்க'' என்றாள்.



பரமு எழுந்து உட்கார்ந்து கொண்டான். ''உங்க கம்பெனி சம்பந்த முதலியார் வந்திருக்காரு. உள்ள கூப்பிட்டேன் வாசல்லயே நிக்கிறாரு.''

''வாங்க முதலியார்.''—பரமு எழுந்து வாசலுக்கு விரைந்தான்.

நரைத்த மீசை, வழுக்கைத் தலை, நெற்றிக்கு நடுவே சந்தனப் பொட்டு, காவியேறிய பற்களுக்கிடையே ஒரு தங்கப் பல், முக்கால் கை சர்ச்சட்டை, தோளில் துண்டு, இடுப்பில் பெல்ட் இறக்கிய கெட்டிக்கரை வேஷ்டி.

''வாங்க உள்ற''

''ரா நேரம். தொந்தரவு பண்றேன்'' கோச்சுக்கக் கூடாது. படுக்கை போட்டாச்சு போலிருக்கு''

''பசங்க படுத்துருச்சுங்க. நாங்க படுக்க நாழியாகும். உள்ள வாங்க.''

''முன்ன எப்பவோ வந்தது. இடம் தெரியலை. அரைமணி அலைஞ்சுட்டேன். நம்ம கம்பெனி பையன் தான் வழியில் பாத்து வீடு காட்டினான்.''

''உக்காருங்க முதலியார்.''

முதலியார் வராண்டா நாற்காலியில் உட்கார்ந்து துண்டால் தலை துடைத்துக் கொண்டார். சரசு கொடுத்த சொம்பு நீரையும் குடித்தார்.

முதலியாருக்கு அம்பத்திநாலு வயசு. அஸெம்பிளியில் மூத்த தொழிலாளி. அவர் வயசு கருதி அவருக்கு சேஸிங் ஒயரிங் வேலை கொடுக்கப்பட்டிருந்தது. சேஸிங் ஒயரிங் பளுவான வேலையில்லை. ஆனால் நச்சு வேலை. பொறுமையாகச் செய்ய வேண்டும்.

முதலியார் சந்தோஷமானவர். பிறரைச் சந்தோஷப்படுத்துபவர்.

"ரொம்பநேரம் பேசப் போறதில்லை. புருஷன் பொஞ்சாதி தூங்கற நேரத்துல வந்தது பிசகுதான். வேற வழியில்லை. இதோ. அஞ்சு நிமிஷம்தாங்க கிளம்பிடறேன்.''—சரசுவைப் பார்த்துச் சொன்னதும் சரசு வெட்கத்துடன் உள்ளே நகர்ந்தாள்.

"ஐயா இந்த டூரு ஏற்பாடு கம்பெனில பண்றது தான்தான்னு உனக்குத் தெரியுமில்லே—''

"தெரியும்.''

"பன்னண்டு வருஷமா மார்ச் மாசக் கடைசில போய்க்கிட்டிருக்கோம். சீட்டு புடிச்சு, வட்டிக்கு விட்டு ஒரு தொகைல எல்லா இடமும் சுத்தி வர்றது வழக்கம். சிவன் கோயிலு, விஷ்ணு கோயிலு, மாதா கோயிலு, குடிக்கிற இடம், கூத்தடிக்கிற இடம் எல்லாம் கலந்து எல்லார் டேஸ்ட்டுக்கும் தகுந்தாப்பல ஒரு திட்டம் போட்டுப் போவோம்.''

"ம்ம்ம்—''

"வழக்கமா போற மாதிரி இந்த வருஷமும் ஒரு மாசம் முன்னாடி எல்லா இடத்துக்கும் போய் பஸ், லாட்ஜு சாப்பாடு ஏற்பாடு பண்ணிட்டு வந்துட்டேன். அங்கங்க அட்வான்ஸா நாலாயிரம் குடுத்துட்டேன். டூரு கான்ஸல் பண்ணிடணும்னு சொன்னியாம்-சரி, எனக்குப் புரிது தம்பி நிலமை கம்பெனி கஷ்டம் எல்லாம்—தெளிவா தெரியுது ஸிக் வண்டி போடலேன்னா கம்பெனிக்கு நஷ்டம் கம்பெனி நஷ்டப்பட்டு டூர் போறது வெக்கக்கேடு. ஆனா தம்பி, ரயில் டிக்கெட் கான்ஸலேஷன், பஸ்ஸுக்குக் குடுத்த அட்வான்ஸ் நஷ்டம். பாத்தா எப்படி கான்ஸல் பண்றதுன்னு மலைப்பாயிருக்கு. அதே சமயம் ஓவர் டைம் விட்டுப்போறதுக்கும் யாருக்கும் மனசாவாது. ஏடாகூடமா அமைஞ்சு போச்சு. நூறு இருநூறுன்னா நானே ஒத்துக்கிட்டிருப்பேன். நாலாயிரத்து நானூத்திப்பதினெட்டு ருவா தம்பி.



சீட்டு வாங்கின தொழிலாளி ஒத்துக்குவாளா இந்த நஷ்டத்தை. உங்களைக் குத்தம் சொல்றதா நினைக்காதீங்க தம்பி என் கஷ்டம் சொல்றேன். உங்க சிரமம் எனக்குப் புரியற மாதிரி என் சிரமத்தை உங்களுக்குப் புரிய வைக்கிறேன். இதுக்கு நீங்க ஒரு வழி சொல்லோணும்.''

பாமு கண்மூடி அவர் கஷ்டத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். சரசு உள்ளே உட்கார்ந்தபடி அவன் கவலை படர்ந்த முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"நம் கம்பெனி ஸிக் வண்டியை நாமதான் சரி செய்யணும். யார் தப்போ, எவன் பொறுப்போ... அது பெரிய இடத்து விஷயம். ஆனா, நஷ்டம் கம்பெனி மானேஜ்மெண்ட்டுதுன்னு உறுதியா நம்ம தொழிலாளிங்க சொல்றாங்க இருக்கட்டும். ஸிக் வண்டி போட்டுறலாம். பத்து நாள் கழிச்சுப்போட முடியாதுங்களா—முடியாது. இந்த வருஷக் கணக்குல வண்டி வராத போயிடும்னு சொன்னீங்களாம். தொண்ணூறு வண்டி. லாபத்துல குறையுதுன்னா சாதாரண விஷயமா. உடனே சரி செய்துடணும். அதான் மரியாதை. ஆனா தம்பி, சம்பந்தமேயில்லாத நாலாயிரம் ரூபா அடிபடுதே. அதான் எனக்குத் தாங்கலை.''

"எல்லா இடமும் புரிஞ்சு பேசறீங்க முதலியார்.''

"அடடே—விவரம் தெரியாத உள் ஊட்டுக்கு வரலை தம்பி. சட்டமா எதுவும் எங்கேயும் பேசமுடியாது. இந்த நஷ்டம் மானேஜ்மெண்ட்னால... அது புரிஞ்சுக்குமா இதைன்னு கேக்க வந்தேன்.''

"தப்பையே இதுவரை ஒத்துக்கலை முதலியார்.''

"அடடே!''

"அப்படியே ஒத்துக்கிட்டாலும் இந்த நஷ்டம் அவங்களைக் கட்டுப்படுத்துமா?''

''அப்பனானை கட்டுப்படுத்தாது. ஒரு வேண்டுகோளா சொல்லலாம். முடியுமானா...''

''சொல்லிப் பாக்கறேன்.''

''சரிங்க தம்பி.''

''எனக்கு நம்பிக்கையில்லை. கல்லெறியற மாதிரி தான்... விழுந்தா மாங்கா இல்லேன்னா கல்லு.''

''செய்யுங்க தம்பி.''

''அவங்க கூப்பிட்டனுப்பிச்சுப் பேசி ஒரு முடிவான பிறகு இதைச் சொல்லிப் பாக்கறேன். நாளைக்குப் பேசுவாங்கன்னு உள்ள ஏதோ சொல்லுது பார்ப்பம்.''

''அப்ப வரேங்க தம்பி. வீட்ல சொல்லிக்கட்டுமா?''

''சரசு, முதலியார் கிளம்பறாரு.''

''பசங்க முழிச்சுக்கிட்டிருக்கும்னு நினைச்சு வாங்கியாந்தேன். தாயி, இந்தாம்மா.''-பூவன் பழச்சீப்பு எடுத்து நீட்டினார். சரசு வாங்கிக்கொண்டாள். 'வருஷம் இருக்கும் உன்னைப்பாத்து. நல்லா இருக்கியாம்மா?''

'எனக்கென்னங்க. இவருதான் ஊரு கவலையெல்லாம் தலைல போட்டுக்கிட்டு, அலையறாரு.'

''பொறுப்பு இருக்கறவனுக்கு என்னிக்கும் கவலை தான் தாயி. நல்ல மனசு துள்ளாது. நல்ல தலைமுறைக்கு நல்லதை யோசிச்சுக்கிட்டிருக்கும். யோசிக்க யோசிக்கக் கவலை வரத்தான் செய்யும். கவலை புருஷ லட்சணம். பயப்படாத...''

''அடிதடின்னாரே... அதான் கொஞ்சம் கவலையா இருக்கு.''

''மூக்கிருக்கிற வரைக்கும் சளி இருக்கும். தொழிலாளி இருக்கிற வரைக்கும் பிரச்சனை இருக்கும். தம்பி மேல் ஒரு நூல் பட விட்டுருவமா. நாங்க இல்லை?



உனக்கு நாலாயிரம் கஷ்டம்னா எனக்கு என்னான்னு பேசிச்சா, புரியுது. முயற்சி பண்றேன்னு வார்த்தை சொல்லுதே. அதுவே பெரிய விஷயம். தம்பி பின்னாடி என்னை மாதிரி நிறைய பேர் இருக்கோம். கவலைப் படாதே. நான் வரட்டுமா முருகா!''

—தெருவில் இறங்கி விறுக் விறுக்கென்று கைப்பை தொங்க நடந்து மறைந்தார்.

சரசு, வழிவிளக்கை அணைத்தாள் வராண்டாவில். இருள் கப்பியது நாற்காலியில் உட்கார்ந்திருந்தவன் மடியில் தடவித் தடவி அமர்ந்தாள்.

சேலைத் தலைப்பால் பிடரியையும் முகத்தையும் துடைத்தாள். அவனை இழுத்து இருக்கிக்கொண்டாள்

''என்ன தலைவரே, டல்லா உக்காந்திருக்கீங்க?''

''ம்ம்... ஒண்ணும் புரியலை.''

''உங்களுக்கு எதுக்குத் தலைவர் பதவியும் இன்னொண்ணும். உட்டுக் கடாசிடுங்க. கிடந்துஉளப்பறது பாத்தா ஐயோன்னு இருக்கு என்ன சொல்றீங்க.''

''மண்டை பாரமாயிருக்கு சரசு. படுத்தா தேவலாம்கற மாதிரி.''

சரசு எழுந்தாள். புடவைத் தலைப்பைச் சரிசெய்து கொண்டாள். எழுந்திருந்த புருஷனை அணைத்தபடி படுக்கைக்குப் போனாள். தலையணையைத் தட்டி உயர்த்தி விட்டு அவன் சரிந்தவுடன் நெற்றியை அழுத்திப் பிடித்து விட்டாள். கழுத்துப் பிடரியை நீவினாள். தோள்கள் இரண்டையும் அழுத்திவிட்டாள்.

''யப்பா...!''—பரமு சுகத்தில் கிறங்கினான்.

சைக்கிளை ஸ்டாண்டில் விட்டு டோக்கன் போட்டதும் செக்யூரிட்டி கார்ட் வந்து சல்யூட் அடித்தான்.

''ஐயா உடனே மேல வரச்சொன்னாருங்க. உள்ள போறதுக்கு முன்னாடி வந்து பார்க்கச் சொன்னாரு.''

பரமு ஜி எம். அறையை நோக்கி நடந்தான். குமாஸ்தாக்கள் வழி விட்டார்கள். வணக்கம் சொன்னார்கள்.

''கம் இன், பி. எஸ்.''—கண்ணாடிக் கதவில் கை வைத்ததும் உள்ளே குரல் கேட்டது.

''குட்மார்னிங் சார்.''

''வெரி குட்மார்னிங். லைக் டு ஹேவ் காபி?''

''ம்... யெஸ் சார்.''

இண்டர்காமை அழுத்தினார். பாலு, டு காபி ப்ளீஸ். உக்காருங்க பி. எஸ்.''

காபி நுழைந்தது. ட்ரே எதிரே வைக்கப்பட்டது.

''ஷுகர் ஒண்ணா, ரெண்டா.''

''ரெண்டு சார்.''

''லக்கி. எனக்கு ஷுகரே சேர்க்கக் கூடாது. கடும் கசப்பு காபிதான். பேசாம நானும் லேபர் லீடரா ஆயிடலாம்னு பார்க்கறேன்.''

''அக்கரைப் பச்சை சார்.''

''நேத்திக்கு என்ன நடந்தது. கீழ அடிதடி கலாட்டான்னு நியூஸ் வந்தது.''—டக்கென்று விஷயத்துக்குப் பாய்ந்தார்.

''ஒண்ணுமில்லையே சார்!''

''விட்டுக் கொடுக்க மாட்டீங்களே. தனிப்பட்ட முறையில் கேட்கறேன்— என்ன கலாட்டா.. யூனியன் ரெண்டாய் பிரியுதாம்.''



''நாங்க பிரிஞ்சுக்குவோம். கூடிக்குவோம். எல்லாம் சகஜம் சார்.''

''சரி, சொல்லமாட்டீங்க. விஷயத்துக்கு வரேன் இன்னிக்கு நம்மகிட்ட தொண்ணூத்தாறு சேவிஸ் வண்டிங்க இருக்கு...எல்லாமே ஸிக் வண்டி. காரணம், கியர். ரிவர்ஸ் கியர் ரிவர்ஸ் கியர் ஃபெயிலியர்.''

''பி.எஸ்., இதுக்குக் காரணம்...இதுக்கு முழுப் பொறுப்பும் நான்தான்.'' வலது உள்ளங்கையை உயர்த்தி சத்திய வாக்குமூலம் போல் பேசினார்.

''எல்லாம் மட்ட சரக்கு. ஹீட் ட்ரீட்மெண்ட் பண்ணாத கியர். சுத்தி வளைச்சுப் பேசலை பி.எஸ். இப்ப என்ன பண்ணலாம் சொல்லுங்க.

''நீங்க சொல்லுங்க சார்.''

''நீங்க ஜி.எம்.மா இருந்தா என்ன பண்ணுவீங்க.''

''சூழ்நிலை எப்படியோ அதுபடி நடந்துக்குவேன்.''

''இப்ப சூழ்நிலை ரொம்ப மோசம், தொண்ணூத்தாறு லட்சம் நஷ்டம். இந்த வருஷ ப்ரொடக்ஷன் கிராஃப் கீழ விழும். கம்பெனி கணிசமா நஷ்டப்படும்.''

''புரியுது சார்.''

''ஸோ, அதை உடனே சரி செய்யணும்''

''செய்துடலாம் சார்.''

''ப்ராப்ளம் இல்லையே?''

''இருக்கு சார்...இல்லாத இல்லை. அதைத்தாண்டி வண்டி சரி செய்து குடுக்கறது என் கடமை.''

''குட்... வெரிகுட். உனக்கென்ன ப்ராப்ளம் சொல்லு.''

''பேரம் பேசறதா நினைக்காதீங்க தப்பு உங்க பேர்ல. சிரமம் எனக்கு. எப்படி காம்பன்ஸேட் பண்ணுவீங்க.''

''என்ன கேக்கறே?''

''மூணு நாள் ஓவர் டைம்.''

''மை காட். ப்ளாக்மெயில் பண்றீங்க'.

''இல்லை சார் என் அதிக உழைப்புக்கு உத்தரவாதத்துக்கு... நீங்க குடுக்கற சன்மானம். சம்பளம் இல்லை சார். சன்மானம்.''

''ஓவர் டைம் கேட்டா நார்மல் ப்ரொடக்ஷன் என்ன செய்வே.''

''அஞ்சு வண்டி தரேன். பதினோரு மணிக்கு முடிச்சிட்டு ஸிக் வண்டி போயிடறேன்.''

''ராத்திரியும் பகலுமா வேலை செய்வீங்களா?''

''இருந்து வேலை செய்கிறோம். இல்லை. முடிச்சுட்டு சீக்கிரமே போயிடறோம். அது கணக்கு இல்லை. மூணு நாள் தொண்ணூத்தாறு வண்டி. எல்லாருக்கும் அந்த மூணு நாளும் டபுள். அப்புறம்.''

''அப்புறம்.. ?''

''கோவிந்தன், டேவிட் உள்ள வந்துடணும்...?''

''அது வேற இஷ்யூ''

''நீங்க பண்ணின தப்புக்கு நான் வந்து தலை குடுக்கலையா. இது நட்புதானே. அதே நட்பு எங்கிட்ட காட்டக் கூடாதா?''

''தென்... வேற என்னவெல்லாம் கேப்பீங்க. ப்ரமோஷன் வரைக்கும் போகுமா உங்க கோரிக்கை?''

''வேணாம் சார் தனிப்பட்ட முறைல ஒரு ரிக்வெஸ்ட்.''

''ம்ம்...''

''நாப்பது பேர் டூர் போறதா இருந்திச்சு. ஏற்பாடு நடந்திருச்சு. அவர்களை கான்ஸல் பண்ணச் சொல்ல



ணும். அவங்க டூர் போயிட்டா இந்த மூணு நாள்ல வேலை முடிக்க முடியாது இதுல அவங்களுக்கு டிக்கெட் கான்ஸலேஷன் மூலமா ஆளுக்கு அறு ரூபா நஷ்டம்.''

''பக்கா ப்ளாக்மெயில்யா இது.''

''இல்லை சார். வேண்டுகோள்தான். தனிப்பட்ட வேண்டுகோள்.''

''எந்தக் கணக்குல காசு கொடுக்க முடியும்.''

''காசு வேண்டாம் சார். ஒரு லக்ஸரி டூரிஸ்ட் பஸ் ஏற்பாடு பண்ணிக் குடுத்துருங்க. சந்தோஷப்படுவாங்க.''

''மாசக் கடைசிக்குள்ளே முடிச்சிருவீங்களா?''

''நிச்சயமா சார்.''

''தென் டீல்.''—ஜி. எம். கை நீட்டினார்.

''வார்த்தையா சொல்லுங்க சார்.''

''அஸெம்பிளி முழுக்க மூணு நாள் ஓவர்டைம். கோவிந்தன் டேவிட் ரெண்டு பேர்மெமோவும் திரும்ப வாங்கிக்கிறேன். லக்ஸரி கோச் பத்தி அதிகமா அலட்டிக்காத ரகசியமா வெச்சுக்க. வேற இடத்துல அரேன்ஜ் பண்ணித் தரேன். டூரிஸ்ட் ஆட்களே காசு குடுத்த மாதிரி கையெழுத்துப்போடச் சொல்லிடு.''

''நன்றி சார்.

'உடனே வேலை ஆரம்பிக்கிறீங்க. முதல் ஸிக் வண்டி மத்தியானத்துக்குள்ள சரியாகணும். புது ரிவர்ஸ் கியர் இன்னும் அரை மணில உங்ககிட்ட வந்து சேரும் இதைமுடிச்சா ஜி. எம். மாதிரி இல்லை நானும் ஒர்க்கர் மாதிரி உனக்கு ஒரு பரிசு தரப் போறேன்.'

''வார்த்தையே போறும் சார்.''

''கோ அஹெட். அடிக்கடி வந்து வண்டி நிலைமை ரிப்போர்ட் பண்ணு. என் மானேஜ்மெண்ட் டீம் முழுக்க உங்களுக்கு உதவி செய்யும்''

பரமுவுக்குள் ஏதோ பனி விலகினாற்போல் பட்டது.

''என் இனிய தோழர்களே...!''—இருநூற்றைந்து லிட்டர் ஆயில் பேரல்மீது ஏறி நின்று பரமு பேசினான். தொழிலாளர்கள் வட்டமாய் அவனைச் சுற்றிக்கொண்டிருந்தனர். ''என் இனியதோழர்களே! இன்னிலேர்ந்து வழக்கமான வேலை நேரத்துல ஸிக் வண்டி செய்யப் போறோம். அத மூணு நாள்ல முடிச்சுக் குடுத்துடறதா சொல்லியிருக்கேன். தொண்ணூத்தாறு வண்டி. அதுல கியர் ப்ராப்ளம் அதிகம் உள்ளது. பம்பாய் கம்பெனிலேர்ந்து ரிவர்ஸ் கியர் மட்டும் எடுத்தார்றாங்க. மொத்த அஸெம்பிளி வராது எனவே, ரிவர்ஸ் கியர் மாட்டினா, வண்டி வெல்லாம் மூணு நாள்ல முடிச்சா ''

''முடிச்சா...?''—ஒருவன் எதிர்க்குரல்கொடுத்தான்.

''மூணுநாள் ஓவர்டைம் துட்டு தரேன்றாங்க.''

''அப்ப மானேஜ்மெண்ட் தன் தப்பை ஒத்துக்கிச்சா...''

''ஒத்துக்கிட்டதாலதான் ஓவர்டைம் துட்டு தரேங்கறாங்க.''

கொஞ்சம் அமைதி. ''வர்ற மூணு நாளும் உங்க சம்பளம் தவிர, மூணு ஒன்பது மணி நேரத்துக்கு ஓவர்டைம் துட்டு...''

''இன்னும் கூடக் கேக்கறதுதானேப்பா...'' காலடியில் முணுமுணுப்பு கேட்டது.

## 10

'உன் தரித்திரத்துக்கு எவ்வளோ குடுத்தாலும் பத்தாது. மூணு ஒன்பது ஓவர்டைம் எவ்ளோ தெரியுமா உனக்கு''—பேசினவனை அருகிலுள்ளவன் அதட்டினான் தலைவனை நோக்கி உற்சாகமாய்க் கையாட்டினான்.



''செய்துடலாம் தலைவரே...!''

''கொஞ்சம் இருங்கப்பா அவசரப்படாதீங்க. நாங்க நாப்பது பேர் ஏர் போறோம்.''

''அதைத் தயவுசெய்து கான்ஸல் பண்ணிடுங்க.''—பரமு குனிந்து பேசினான்.

''நஷ்டம் வரும் தலைவரே.''

''முதலியார்கிட்ட நேத்து ராத்திரி பேசிட்டேன். நஷ்டமில்லாம முடிச்சுத் தரதா சொல்லியிருக்கேன். செய்வேன்.''

''அப்போ சரி.''

'தலைவரே, கோவிந்தன் சு...டேவிட்டுக்கு மெமோ குடுத்தது...''

''நாளைக்கு ரெண்டு பேரும் கம்பெனிக்கு வரலாம். மெமோ வாபஸ். மெடிக்கல் லீவு போட்டு ஷெட்ல தூங்கறவனுக்கெல்லாம் முடிஞ்ச அளவு சொல்லிடுங்க.''

''ப்ரொடக்ஷன் போடணுமா?''

''போடு, பத்து வண்டி போடு, முடியலையா, அஞ்சு வண்டி போடு.''

''எப்பத்திலேர்ந்து ஸிக் வண்டி தலைவரே?''

''இப்ப இந்த நிமிஷத்திலேர்ந்து.''

''டீ குடிச்சுட்டு ஆரம்பிக்கலாம்.''

'ஏண்டா.''

''எமகண்டம் போகட்டுமே.''

''ஓகே. உன் இஷ்டம்.''

கூட்டம் கலைந்தது.

வெளியே நிற்க வைக்கப்பட்டிருந்த பழுதுற்ற வண்டிகளைக் கும்பல் கும்பலாய்ப் பார்த்தது.

தொலைவிலிருந்து பார்க்கிறவருக்கு இந்த அலையல் ஒரு விபரீதமாய்ப் படும். கட்டுப்பாடில்லாத கூட்டம் என்று தோன்றும். மாறுதல்களை தொழிலாளி உடனே ஏற்பதில்லை. காரணமின்றி வேறு நியதிக்கு ஆட்பட விரும்புவதில்லை. ஏன் இப்படிக் கூட்டம் என்று யாரும் கேட்க முடியாத அலையலை அந்தத் தொழிலாளிகள் அனுபவித்தார்கள்.

''தலைவரே! ஸிக் வண்டி, திருப்பி வேலை செய்த வண்டின்னு எப்படி டக்குன்னு கண்டுபிடிக்கிறது— கழட்டின போல்ட்டையே கழட்டின—''

''ஒரு மார்க் போடு.''

''எங்க—''

''எந்த இடம். தண்டவாளம் மேல. இன்ஜின்கிட்ட இப்படி ஒரு டிக் மார்க் போட்டுரு சாக்பீஸ்ல.''

''சாக்பீஸா. அழிஞ்சு பூடும் தலைவரே.''

''ஈரத்துல தோச்சுப் போடு.''

விவரம் கேட்டவன் சாக்பீஸ் எடுத்து வந்து நீரில் தோய்த்து ஒரு டிக் மார்க் போட்டான். இன்ஜினுக்கு அருகே அழுத்திப் போட்டான். கூரையில் இருந்த ஒரு காக்கை அலறிற்று. அவன் தலையில் இறக்கை அடித்தபடி பறந்தது.

அந்த டிக் மார்க் வெயிலில் மெல்ல உலர்ந்து வெள்ளையாகி விஷமமாகச் சிரித்தது.

டீ கேன்களில் வர— குடித்தார்கள். சிகரெட்டும் பீடியும் புகை பரப்பின.

போல்ட் கழட்டும் சுலப முறை யாரோ முதிய தொழிலாளி சொல்லித் தர, சூழ்ந்து பார்த்தார்கள்.

கேன் நகர... வழக்கமாக வண்டி போடும் ஆட்கள் பத்து பேர் விட்டு. மீதி மொத்தமும் ஸிக் வண்டிகளை நோக்கி ஆயுதங்களுடன் நகர்ந்தார்கள்.



சில போல்ட்டுகள் சுலபமாய்க் கழட்டப்பட்டன. சிலது சிணுங்கின. இரண்டு தட்டில் விடுபட்டன. சிக்கிய போல்ட்களை ஆக்ஸா ப்ளேடு வைத்து அறுத்தார்கள்.

பரமு சுற்றிச் சுற்றி வந்தான். இருபது வண்டிகள் கழட்டப்பட்டு விட்டன. ரிவர்ஸ் கியர் வரவில்லை. காலை விமானத்தில் வந்துவிடும் என்ற மாற்று உதிரி வரவில்லை.

''தலைவரே, நானே நாலு வண்டி கழட்டிட்டேன். எங்க ரிவர்ஸ் கியர்?''

''வரும். மிச்சம் கழட்டு.''

''ரிவர்ஸ் கியர் மொள்ள வருதாம். கழட்டுங்க மிச்சத்தை.''—வந்தவன் கூவிக்கொண்டு போனான்.

மாற்று உறுப்பு இப்போது தொழிலாளிக்குக் கொடுக்க முடியவில்லையெனில் வேலை வேகம் குறைந்து போகும். ஆரம்பித்த சூட்டைத் தணிக்காது காப்பாற்ற வேண்டும்.

''டேய் இது இந்த வண்டி போல்ட்டா, நீ வாசி வெச்சுக்கினு...''

''அப்ப என் போல்ட் எங்க?''

''பாக்கெட்ல பாரு.''

''ஆமா—மறதியா பாக்கெட்ல போட்டுக்கினேன்.''

''அப்படியே மறதில கார்டு அடிக்கப் போ. செக்யூரிட்டி வூட்டுக்கு அனுப்பிச்சிருவான்.''

ப்ளேன் இரண்டு மணி நேரம் லேட். ஒரு வழியாக நூற்றிநாப்பது கியர்கள் வந்து சேர்ந்தன.

ஸ்டோர் கீப்பர்கள் ஓடிப் போய் பாக்கெட்டுகளை எடுத்தனர். தரையில் போட்டுப் பிரித்தனர். எண்ணி,

சிறிய கை வண்டியில் போட, நாற்பது கியர்களுடன் முதல் கை வண்டி அஸெம்பிளி நோக்கி ஓடிற்று.

''கியர் வந்துடுச்சு.''

''ஒரு கியர் குடுப்பா. லெபாரட்டரிக்குப் போகட்டும். யோவ்...இதை அறுத்து ஹார்டனிங் பாரு ஒடு உடனே.''

நான், நீ, என் வேலை, உன் வேலை எதுவுமின்றி சோதனைகளில் ஈடுபட்டார்கள்.

''ஓகே, பக்கா சார்.''

முதல் ரிவர்ஸ் கியர் மாட்டப்பட்டு, மறுபடி கியர் பாக்ஸ் உள்ளே இறக்கப்பட்டு, மூடப்பட்டு, போல்ட்டுகள் போடப்பட்டு, போடப்பட்ட வண்டி பரிசோதனைப் பாதைக்குத் தள்ளப்பட்டது.

பாமு வண்டியை முன்னும் பின்னும் ஓட்டிப் பார்த்தான். பிறகு சட்டென்று நிறுத்தினான். ரிவர்ஸ் கியர் உயர்தரம். தொழிலாளிகள் பலக்க கை தட்டினார்கள்.

''யார்ப்பா கியர் மாத்தினது?''

''பாண்டியன் சார்.''

''கை குடுறபா பாண்டியா. வெண்ணெய் மாதிரி போவுது வண்டி''—நாணி நின்ற பாண்டியனைக் கீழே குதித்துப் பாமு அணைத்துக் கொண்டான்.

''தம்பிங்களா, மடமடன்னு வண்டி மாட்டுங்க யாரு இன்ஸ்பெக்டர் ரங்கசாமி, நீ ஒரு தடவை ஓட்டிப் பார்த்துட்டு மேல போய்ச் சொல்லு.''

அன்று முப்பது வண்டிகள் போடப்பட்டன. ப்ரொடக்ஷன் ஐந்து வண்டி நகர்த்தப்பட்டது. ஐந்து மணி சங்குஊதும்போது யாரோ பேசிக்கொண்டார்கள்.

'இன்னிக்குத்தாம்பா ஒருத்தன்கூட கக்கூஸ் சந்துல உக்காந்து பீடி புடிக்காத வேலை செய்றது பார்த்தேன்.''



''சும்மாவா, மூனு சம்பளம் இல்லே.''

''டுசி பார்த்துட்டாங்க இல்ல. இனி ஒயர் புடுங்கி வுட்டுட்டு ஸிக் வண்டி ஜாஸ்தி தள்ளப் போறான் பாரேன்.''

''டேய், விளையாட்டுக்குக்கூட இப்படிப்பேசாத...''—பாமு அவனைத் தாண்டியபடி எச்சரித்தான்.

'இப்படித்தான் மார்க் போடணும்' என்று மாதிரிக்குக் குறி போடப்பட்ட ஒரு ஸிக் வண்டி கழட்டப்படாமலேயே வெள்ளை சாக்பீஸில் டிக் மார்க் போட்டபடி இருந்தது. அதற்கு அடுத்து முப்பது வண்டிகள் இருந்தன. அதே விதமாய் டிக் மார்க் போடப்பட்டு மின்னின. இரண்டாம் நாள் மேலும் முப்பது வண்டிகள் கழட்டிச் சரிசெய்யப்பட்டபோது கழட்டப்படாத வண்டி கலந்து போயிற்று.

இன்ஸ்பெக்டர் ஓட்டியபோது அதன் ரிவர்ஸ் கியர் பொருந்தியது. அதுவே போதுமானதாய் இருந்தது. கியர் பொருந்திப் பின்பக்கம் வண்டி ஓடினாலும் அதில் உள்ள ரிவர்ஸ் கியர் அப்பளப்பூ வகைதான். யாரும் அறியாமல் அப்பளப்பூ வண்டி கலந்து விட்டது.

நல்ல வண்டிகளுடன் கலந்துவிட்ட ஸிக் வண்டி, டில்லி நோக்கி லாரியில் பயணமாயிற்று. நாளில் போய்ச் சேர்ந்தது.

ப்ரீதி கௌருக்கு வரதட்சணைப் பொருளில் ஒன்றாய் ஐந்தாம் நாள் கொடுக்கப்பட்டது.

ப்ரீதி கௌர் தந்தை, க்ருஷிபவனில் செகரட்டரி, மகள் விருப்பப்படி உடனடியாய் மாப்பிள்ளைக்கு டெலிபோன் வைத்துக் கொடுத்தார். சம்பந்தியம்மாள் விருப்பப்படி இப்போது டீஸல் வேனும் வந்துவிட்டது. வண்டி வந்த இரண்டாம் நாள், மகள் தன் புருஷனோடு தன் புக்ககம் புடைசூழக் காசிக்குப் போக ஏற்பாடாகியது.

செகரட்டரி, தன் சம்பந்தி வீட்டுக்கு மனைவியுடன் வந்திருந்தார்.

சகலரும் எதிபதும் வண்டிக்கு மலர்மாலை சூட்டி, குங்குமமிட்டு, கங்கை நீர் தெளிக்கப்பட முன்னேறியது. வீட்டுக் காம்பவுண்டு இறங்கி மனையமடித்தது. திரும்ப முடியாத தெருவாய் இருக்க, சற்றுப் பின்னோக்கி நகர வேண்டியதாயிற்று. தெரு முழுக்க வேடிக்கை பார்க்க, பின்னால் நகர்ந்தது. வீடு கடந்து நிற்க கடக்கென்று ரிவர்ஸ் கியர் உடைப்பட்டது. உடைந்தது. தெரியாமல் டிரைவர் முதல் கியருக்கு மாற்ற லேசாய்ச் சிக்கிற்று. சீறலுடன் கிளம்பிற்று. நூறடி தொலைவு ஓடி கடக், கடக், என்று குலுங்கித் தெரு முனையில் உள்ளிருந்த கியர்கள் எல்லாம் உடைய ஒரு அங்குலம்கூட நகர்த்த முடியாதபடி சிக்கிற்று.

வண்டிக்குள் இருந்தவர்கள் மூட்டை முடிச்சுகளைச் சுமந்தபடி வீடு திரும்பினார்கள். தெரு சிரித்தது.

''நான் அப்போதே சொன்னேன். இது பழைய வண்டி என்று...''—ப்ரீதி கௌரி மச்சினன் கூவினான்.

''உன் அப்பன் நல்ல மனசோடு வாங்கித் தரவில்லை.'' செகரட்டரி எதிரேயே மாப்பிள்ளை உறுமினான்.

வீட்டு வாசலில் கியர் பாக்ஸ் கழட்ட, அத்தனை பேரும் எட்டிப் பார்த்தார்கள். இருபத்தைந்து துண்டுகள் எண்ணப்பட்டன.

லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய்.

செகரட்டரி பல் கடித்தார். 'ஸாலா மதராஸி' என்று கூவினார்.

''அரிசி இருக்கு. பருப்பு இருக்கு. ஆக்க முடியல—அடுத்த வீட்ல பொண்ணு இருக்கு. பாக்க முடியல.''



பைலா பாட்டு, கல்லூரி மாணவர்களுக்குத்தானா. வீரிடும் சந்தோஷமுள்ள எவருக்கும் பைலா பாட்டு பொருந்தும் எக்களிக்கும். சொகுசு பஸ்ஸில் நாற்பத்தி ஜோடு தொழிலாளர்கள் அட்டகாசமாய்ப் போனார்கள். நாற்பதுதான் கணக்கு. கோவிந்தன் கடைசி நேரம் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். உபதலைவர் கேட்கிறபோது வேண்டாம் என்று ஒதுக்க முடியுமா, காக வேட்க முடியுமா. ''நான் தரைல உக்காந்துக்கறேன். என் சீட்ல நீ உக்காருராஜா.''

—சம்பந்த முதலியார் படிக்கட்டில் உக்கார, கோவிந்தன் கால் நீட்டி முதல் சீட்டில் உட்கார்ந்து கொண்டான்.

''என்ன முதலியாரே, வண்டி கேளுன்னு உன்கிட்ட ஐடியா கொடுத்தது யாரு.''

''நீதானே கோவிந்தா.''

''எனக்குத் தெரியும். எப்போ எது கேக்கணும்னு—நானா போய் நிக்கக் கூடாது. தலைவன்னு ஒருத்தன் இருக்கச் சொல்ல நான் போவக்கூடாது. அதான் உன்னைப் பரமுகிட்ட அனுப்பிச்சேன். கியர் உடைஞ்சு போறதுக்குக்காரணம் முதல்ல எனக்குத்தான் தெரியும். நீபோய் வாதாடுன்னு பரமுகிட்ட பேசினதும் நான் தான்.''

மெல்ல மெல்ல வெடிமருந்தை அங்கே கோவிந்தன் திணித்துக் கொண்டிருக்க—பரமு இங்கே கடற்கரையில் விடுமுறை அனுபவித்துக் கொண்டிருந்தான். குதிரையில் பையனை ஏற்றி வைத்து கூடவே நடந்து போனான். அலையில் குழந்தைகள் கைபிடித்து முழங்கால் நனைய நின்றான். மணலில் குழந்தைகள் வீடு கட்டக் கிளிஞ்சல்கள் பொறுக்கிக் கொடுத்தான்.

அன்றிரவே விவசாய அமைச்சர், தன் செக்ரட்டரி கொடுத்த இருபத்தைந்து கியர் துண்டுகளைத் தொழில் அமைச்சருக்குக் காட்ட எடுத்து வைத்துக்கொண்டார்.

டூரிஸ்ட் பஸ் கேரளாவில் சாமி கும்பிட்டுவிட்டு, கோவாவுக்கு குடிக்கப் போயிற்று. தன் செலவில் கோவிந்தன் சகலருக்கும் மது வகைகள் வாங்கினான்.

களைத்துப் போய்க் குழந்தைகள் தூங்கிவிட, கண்களை மூடியபடி படுத்திருந்த பாமுவின் அருகே அமர்ந்த சரசு, அவனை வருடிக்கொடுத்தபடி, ''டக்குன்னு அறுநூறு ரூபா வாட்ச குடுத்துட்டாரு இல்லை, உங்க ஜி. எம்.'' என்றாள்.

''ஆறாயிரம் ரூபா நிலமே தர்றதா இருந்தாரு செங்கல்பட்டு போற வழில, நாலு வருஷத்துல அந்த இடம் மூணு பங்கு விலையாயிடுமனாரு.''

''வாங்கியிருக்கலாம்.''

''லஞ்சம் சரசு. முதமுத நிலம்வாங்கறத லஞ்சத்துல வாங்கணுமா, கையெடுத்துக் கும்பிட்டேன். மறுநாள் இதைக் கொண்டாந்து கையில மாட்டிட்டாரு. மறுக்க முடியலை.''

மறுநாள் பாராளுமன்றத்தில் ஆளும்கட்சி எம்.பியே சென்னையிலுள்ள மோட்டார் கம்பெனி தரம் பற்றிக் கேள்வி கேட்க லாபியிலும் அந்த மோட்டார் கம்பெனி பற்றிப் பேசப்பட்டது. பிற்பகலில் தொழில் துறை தரக் கட்டுப்பாடு கடுமையாகும் என்று ஆளும் கட்சி எம் பி-க்கு தொழிலமைச்சர் பதிலளிக்க, முதல் ஏற்பாடாய் அந்த மோட்டார் கம்பெனியின் டில்லி விநியோகஸ்தரும் கம்பெனி லயசன் ஆபிசரும் வறுக்கப் பட்டார்கள்



''மொத்தமும் இடிச்சு மூடி விடுத்து விடுவேன். லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மோசடியா செய்கிறீர்கள் யார் உங்கள் செக்ரடரி... அவனை நான் உடனே பார்க்க வேண்டும்.''

மோசடி என்பது மிகப் பெரிய வார்த்தை. தொழில் துறை அமைச்சர் கோபத்தை அவர் செகரட்டரிகள் அதிகப்படுத்திக் காட்டினார்கள். இன்னொரு செகரட்டரியின் சோகத்தைத் தங்கள் கோபம் காட்டிப் பகிர்ந்து கொண்டார்கள்.

டூரிஸ்ட் வண்டி சென்னை நோக்கிப் பயணமாயிற்று. கோவிந்தன் வெடி மருந்தை முற்றிலும் திணித்துவிட்டான் பற்ற வைக்க வேண்டியதுதான் பாக்கி. எப்போது பற்றவைக்க வேண்டும் என்று கோவிந்தனுக்குத் தெரியும்.

'தயை செய்து ரிவர்ஸ் கியர் துண்டு மட்டும் அவ் வண்டியிலிருந்து அனுப்பவும். மறுகண்டை அங்கேயே பரிசோதிக்கவும்.'-சென்னை டெலிபிரிண்டர் டில்லியை நோக்கித் தானமிட்டது.

'ரிவர்ஸ் கியர் மோசம். அதுவே சகல உபாதைகளுக்கும் காரணம்.' டில்லி டெலிபிரிண்டர் சென்னையை நோக்கிக் குமுற,

சேர்மன், விடியற்காலை விமானத்தில் டில்லி பயணமானார் தொழில் அமைச்சகத்தில் எதிர்ப்பட்டவரிடமெல்லாம் மன்னிப்பு கேட்டார். சிவந்தார், இரவு சென்னை திரும்பினார். விமான நிலையத்தில் ஜி எம்-முடன் நாலு இன்ஜினியர்களும் அவருக்காகக் காத்திருந்தார்கள்.

''இருபது வருட உழைப்புக்குப் பிறகு நமக்குக் கிடைத்தது மோசடியாட்கள் என்கிற பட்டம்.

''கம்பெனி விஸ்தரிப்பு பற்றி வரும் வாரம் கூட்டம்
உண்டல்லவா?''
' அது பற்றிக் கவலைப்படாதீர்கள். அதற்குள் முடி
விடுவார்கள். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்
கள்.'' நாலு வார்த்தை பேசிவிட்டு காரில் ஏறி, பட
ரென்று சாத்திக் கொண்டார்.
''இன்னும எத்தனை வண்டி இப்படிப் போயிருக்
கும். யாரெல்லாம் இன்னும் செருப்பால் அடிக்கப்
போகிறார்கள்... எனக்குத் தெரியாது. இருப்பினும்,
உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.''—கார் பறந்தது.
ஜி.எம். உறைந்து போனார். மரண பயம்போல்
ஒரு நடுக்கம் அவரைப் பற்றிக் கொண்டது.
காலைப் பத்திரிகைகள் அச்சாகிக் கொண்டிருந்தன.
மோட்டார் கம்பெனி கியர் விவகாரம் முதல் பக்கத்தில்
சிரிப்பாய்ச் சிரித்தது.
அஸெம்பிளி ஹாலில் தினமணி பேப்பரை நீட்டி
னார்கள். பரமு தலையில் கை வைத்துக் கொண்டான்.
ஜி.எம். ஒன்பது மணிக்கு வந்தார். பரமுவை
அழைத்தார்.
''மோசடின்னு பேப்பர்ல பாத்திங்களா... யார்
மோசடி செய்தது? நம்ம சேர்மனா...நானா... க்வாலிடி
கண்ட்ரோலா இல்லை நீங்களா. ஏமாத்திட்டீங்களே
பி.எஸ். மூணு நாள் ஓவர் டைம்னும் சொன்னதை, மனசு
வந்து வழங்கினதை வழிப்பறி மாதிரி செய்துட்டீங்
களே... இந்த கம்பெனி இத்தோட க்ளோஸ். ரொம்ப
நன்றி.''
''சார்...''
''நீங்க போகலாம்...''
''சார்...''
''உங்களை நான் மூணு நாளைக்கு சஸ்பெண்ட்
பண்றேன். இதுக்கு நீங்கதான் காரணம்னு சொல்
றேன். என்கொயரி வரும். வாய் கிழியப் பேசுங்க—
போங்க.''



இடி பரமுவின் தலையில் இறங்கிற்று சிதில
மாயிற்று. அந்தச் சிதிலமும் சிதற, கோவிந்தன் வெடி
மருந்துக் குப்பிக்கு நெருப்பு வைத்தான் வெடித்தது.
அபிமன்யு களத்தில் இறந்தான்.
தேவர்கள் 'ஆ—ஆ' என்று அரற்றினர்.
''மிஸ்டர் பரமசிவம் — ஜெனரல் ஃபோர்மன்
அஸெம்பிளி, உள்ளே வரலாம்.''
அழைத்தார்கள்.
ஜி.எம். அறைக்குப் பின்னே இருந்த ஹாலில
விசாரணை நடந்தது.

## 11

பரமு மெல்ல நுழைந்து நின்றான். ஹாலின்
நடுவே மிகப் பெரிய மேஜை இடதுபுறம் மானேஜ்
மெண்ட் அதிகாரிகள் வலதுபுறம் யூனியன் ஆட்கள்
நேர் எதிரே ஜி.எம். யூனியன் தலைவர் மீதே விசா
ரணை என்பதால்—உபதலைவர் கோவிந்தன் யூனியன்
சார்பாக உட்கார்ந்திருந்தான். அருகே வைத்தி. பிறகு
அஸெம்பிளி குருப் லீடர் ராஜ்குமார். கோவிந்தன் உட்
கார்ந்திருந்த தோரணை பரமுவுக்கு வெறுப்பைக்
கொடுத்தது. எத்தனை பெரிய பதவி வகித்தாலும்
சபையில் உட்காருகையில் அடக்கம் அவசியம்.
கோவிந்தனின் சாய்மானம் அவன் அடக்கமின்மையை
காட்டிற்று. வைத்தியும், ராமகிருஷ்ணனும் கோவிந்தன்
ஆட்கள், ராஜ்குமார் விவரமுள்ளவன். வலது பக்க
மிருந்து உதவி வருமெனில் அது ராஜ்குமார் மட்டும்
தான் இடதுபுறமும் முதலில் க்வாலிட்டி கன்ட்ரோல்
சாமிநாதன். அடுத்து புரொடக்ஷன் மானேஜர் சுப்ர
மண்யம். பிறகு பர்சனல், மானேஜர் பிறகு ஸ்டோர்ஸ்

அதிகாரி நாசிம்மன், பர்சனல் மானேஜர் சலனமற்று இருந்தார்.

நாசிம்மன் முகத்தில் மட்டுமே இனிமை இருந்தது. ''வாங்க பி. எஸ்.'' என்று அவர் மட்டுமே கையசைத் தார். நரசிம்மனுக்குத் தொழிலாளி, அதிகாரி என்கிற பேதம் இல்லை. புரொடக்ஷன் முக்கியம். தொழிற் சாலை முக்கியம். 'பி. எஸ். என்ன துகையல் இன்னிக்கு' என்று, கவபமாய் சாப்பிடும்போது கை நீட்டுவார்... 'பாவி. இவ்வளவு காரமா' என்று காதைப் பொத்திக் கொள்வார். ஆனால், இவரால் எவ்வளவு உதவ முடியும் என்று தெரியவில்லை. இதே விதமாய் ஆயிரம் விசாரணைகளுக்கு உட்கார்ந்ததுண்டு. இன்று நிலைமை வேறு விதமாய் இருக்கிறது.

உட்கார நாற்காலி கொடுத்தார்கள்.

துவங்கினார்கள்.

''எப்படி இந்தத் தவறு நடந்திருக்க முடியும் பி.எஸ்.'' நரசிம்மன் பேச்சைத் துவக்கினார், ''உங்க அபிப்பிராயம் சொல்லுங்க.''

''புரியலை சார்.''

''யோசனை பண்ணுங்க, ப்ளீஸ்.''

''க்வாலிடி கண்ட்ரோல் கையெழுத்தில்லாத ஒரு வண்டிகூட அனுப்பலை சார்.''

''நீங்க ஓகே சொன்ன வண்டியைத்தான் கையெழுத்து போட்டு பாஸ் பண்ணியிருக்கோம்.'' சாமிநாதன் நடுவே புகுந்து பேச...

கோவிந்தன் குரல் கொடுத்தான் :

''ஃபோர்மன் ஓகேன்னு சொன்னா கையெழுத்துப் போடறது முட்டாள்தனம். உங்க ஆள் டெஸ்ட் பண்ணி யிருக்கணும்.''



இது ஒட்டா வெட்டா பாமுவுக்குப் புரியவில்லை. பாமுவைவிட வண்டி பற்றித் தெரிந்தவன் எவனு மில்லை இங்கே. க்வாலிடி கண்ட்ரோல் இன்ஸ்பெக் டர்கள், பாமுவுக்குக் கட்டுப்பட்டவர்கள். என்ன சத்தம் அண்ணே இது என்று பாமுவைக் கேட்டுத் தெரிந்து கொள்பவர்கள்.

'ரேடி வேட்டர் ஆடுது.'

பாமு சொன்னால் குறித்துக் கொள்பவர்கள்.

''ஃபோர்மன் ஈக்வலி ரெஸ்பான்ஸிபிள்.''

''அது வேற கதை. உங்க ஆள் பார்க்காத வண்டி போயிருக்கக் கூடாது. போச்சுன்னா அது உங்க தப்பு''

''அன்னிக்கு எல்லா வண்டியும் எங்க இன்ஸ்பெக் டர் செக் பண்ணதா சொல்ல முடியாது'' — சாமிநாதன் மறுத்தார்.

''அப்ப இவர் மேல் ஏன் என்கொயரி? உங்களைத் தானே கூண்டுல நிறுத்தணும்.'' — ராஜ்குமார் குரல் உயர்த்தினான்.

''அந்த வண்டியோட இன்ஸ்பெக்ஷன் கார்டுல உங்க இன்ஸ்பெக்டர் கையெழுத்து இருக்கு சாமி நாதன்.'' — நரசிம்மன் இடைமறித்தார்.

''வாஸ்தவம். ஆனா, டெஸ்ட் பண்ணிக் கை யெழுத்து போட்டிருக்கான். டெஸ்ட்ல வண்டி க்ளியரா இருந்திருக்கு. ஆனா, கழட்டி மாட்டின அடையாளம்—சிலர்ஸ் கிலர் மாத்தின அறிகுறி வண்டில எங்கயும் இல்லை. இதுக்கு ஜி எம்...புரொடக்ஷன் மானேஜர் சுப்பரமணியம் சாட்சி. நாங்க மூணு பேரும் டில்லிபோய் வண்டி பார்த்தோம்.''

''என்னான்றீங்க இப்ப.'' ...கோவிந்தன் கிளறி னான்.

''கழட்டாத வண்டியைக் கொடுத்து ஓட்டிப் பார்த்த போது வண்டி உடையனவன்னவுடனே இன்ஸ்பெக்டர் கையெழுத்து போட்டுட்டான்.''

''தொண்ணூறு வண்டி மாத்தினவருக்கு ஒரு வண்டி மாத்தறது கஷ்டமா.''—ராஜ்குமார் இடைமறித்தான்.

''எத்தனை வண்டி இப்படிப் போயிருக்கோ, யாருக்குத் தெரியும். இனிமே வரும் கம்ப்ளெயின்ட் மொள்ள மொள்ள. டில்லி வண்டி ஏடாகூடமான இடத்துல போச்சு, கழுத்துக்குக் கத்தி வந்திருக்கு.''—சுப்பரமணியம் கத்த...

''இப்ப என்னான்றீங்க...'' —கோவிந்தன் அவரை முறைத்தான்.

''ஃபோர்மன் பி. எஸ் ஏமாத்தியிருக்கார் கம்பெனிய.''

'எப்படி...''

''கழட்டாத வண்டியைக் கழட்டினதா சொல்லிட்டாரு.''

''கண்டுபிடிக்க வேண்டியது க்வாலிடி கண்ட்ரோல்''

—ராஜ்குமார் மேஜையில் அறைந்தான்.

''அப்ப ஏமாத்தறது யூனியன் வேலையா?'' —சாமிநாதன் எகிறினார்

கோவிந்தன் நாற்காலியை உதைத்து எழுந்தான்'

''கடைசிய சொல்றேன் இது தனி நபர் பிரச்னை. இதுல யூனியனை இழுத்தீங்க, கெட்ட கோவம் வரும் எனக்கு.''

''யூனியன் லீடர், ஃபோர்மன் இரண்டும் ஒரே ஆள். அந்த ஆள் வச்சது சட்டமா போச்சு கம்பெனில. ஃபோர்மனுக்குப் பயப்படாத இன்ஸ்பெக்டர், யூனியன் லீடர்னு பயப்படறான்.''



''வேலைல பயப்படறவனை வீட்டுக்குப் போகச் சொல்லுங்க.''

''கமிங் டு த பாயிண்ட்.''—நரசிம்மன் கை தூக்கி இடைமறித்தார்.

''ஃபோர்மன் பி. எஸ். இந்த தப்புக்கு சரியான விளக்கம் சொல்லணும்...''

' க்வாலிடி கண்ட்ரோலுக்குக் கழட்டி மாட்டாத வண்டியைக் கொடுத்தது தவறுன்னு ஒப்புக்கணும்...''—சாமிநாதன் தொடர்ந்து பேசினார்.

''அது உங்களையும் மீறி எப்படி நடந்திருக்கும்னு நினைக்கறீங்க பி. எஸ் ''—நரசிம்மன் தப்பிக்க வழி காட்டினார்.

''என்னை மீறி எப்படியோ நடந்து போச்சு சார்'' என்று மன்னிப்பாய் இப்போது பழு பேச வேண்டும்.

பதினேழு வருடம் கழித்து மெல்ல மெல்ல உயர்ந்து உருக்குச் சிலையாய் நின்ற பிறகு மண்டியிட்டுக் கை சைக்கவேண்டும். கழட்டி மாட்டாத வண்டியை க்வாலிடி கண்ட்ரோல் முழுவதுமாய் சோதிக்கவில்லை என்பது பிறகு பேசவேண்டிய விஷயம். மன்னிப்பு கேட்டுக் கொண்ட பிறகு தொடரும் விவாதம்.

முதலில் கழட்டி மாட்டாத வண்டியைக் கொடுத்தது பிசகு.

ஆம், பிசகு.

இதற்கு மன்னிப்பு கேட்டால் ஒருவேளை, சிறிய தண்டனை விதிக்கப்படலாம். பரமசிவத்தின் நன்னடத்தை வேலைத்திறன் நிர்வாகத் தன்மை கருதி சிறிய தண்டனை விதிக்கப்படலாம். வேலைக்குப் பங்கம் வராது. இரண்டாயிரத்து கொச்சம் ரூபாய்க்குக் கேடு வராது வெறும் கறுப்புப் புள்ளி மாத்திரமே.

என்னால் இந்தக் கறுப்புப் புள்ளியைத் தாங்க முடியுமா. பதினேழு வருடம் பொறுத்துவரும் கசப்புகளை ஏற்கமுடியுமா... பல களங்களில் ஜெயித்து வாகை சூடியவனைக் கசையடி தண்டனைக்கு ஆட்படுத்த முடியுமா?

விடுதலை தரும் மரணமா...

மரணம் போன்ற வாழ்க்கையா?

இதை ஒப்புக்கொண்ட பிறகு யார் என் பேச்சைக் கேட்பார்கள். யாருக்கு நான் தலைவனாய் இருக்க முடியும்? எவர் எனக்குக் கட்டுப்படுவார்கள். உடனே யூனியன் தலைவர் பதவி பறிபோகும். உபதலைவரே தலைவர் என்று நியதி வரும். கோவிந்தன் கட்டளைப்படி நடக்கவேண்டும். சாமிநாதன் சொல்வதையெல்லாம் கேட்கவேண்டும்.

'டில்லிக்கு அனுப்பின வண்டி மாதிரி செய்துடாதீங்கப்பா' என்ற கிண்டல் பேச்சை அடிக்கடி கேட்க வேண்டி வரும். யூனியன் என்கிற ஸ்தாபனத்தை, யூனியன் லீடரே தவறு செய்து தண்டிக்கப்பட்டவர் என்பதைக் காட்டி, இவர்கள் நொறுக்க முயலக்கூடும். இது தனி நபர் பிரச்னை இல்லை. என் மன்னிப்பு யூனியனுக்குக் கேவலம். கழட்டி, ரிவர்ஸ் கியர் மாட்டாத வண்டி என் கண்களைத் தாண்டிப் போனது என் பிசகு. என் கவனக் குறைவு என் கெட்ட நேரம். இது யூனியனை ஒருக்காலும் தாக்கக்கூடாது. தொழிற்சங்கத்தை என் தவறு நசுக்கி விடக் கூடாது.

பரமு தலை நிமிர்ந்தான்.

''மிஸ்டர் ஜி. எம். இதை என் தவறுன்னு நான் ஒத்துக்கறதைவிட, என் தவறு இல்லைன்னு வாதாடறதை விட, இந்தப் பிரச்னையைத் தீர்க்க எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு வழி...



மறுபடி தலை குனிந்தான்.

யூனியன் ஆட்களும் மானேஜ்மெண்ட்டும் பரமு தன் வார்த்தையை முடிக்க மௌனமாய்க் காத்திருந்தார்கள். ''இதைத் தீர்க்க ஒரே வழி என்னுடைய ராஜிநாமா.''

''பி. எஸ்'—ஜி. எம். கூவினார், என்கொயரி கூட்டம் சலசலத்தது.

''நான் மன்னிப்பு கேக்கற மனநிலைல இல்லை. அதே சமயம் இதுக்கு நீங்க யாரையாவது தண்டிக்கத்தான் வேண்டும். என்ன நடவடிக்கை எடுத்தீங்கன்னு வெளியிலேர்ந்து கேட்டா நீங்க பதில் சொல்லணும். அதனால நான்—பரமசிவம் ஃபோர்மேன் அஸெம்பிளி—ராஜிநாமாவை இன்னும்பத்து நிமிஷத்துல உங்களுக்கு அனுப்பறேன். இந்த விஷயத்தை இத்தோட முடிச்சுக்கணும்னு கேட்டுக்கறேன்.''

சிங்கம் சிறுத்துத் தலை குனிந்தது. கண்ணில் நீர் திரள மூக்குறிஞ்சி விட்டம் பார்த்தது. மெல்ல எழுந்தது. கை கூப்பிற்று திரும்பி நடந்து வெளியேறிற்று.

ஜி.எம். உறைந்து போனார். இது இழப்பு. நிச்சயம் கம்பெனிக்கு இழப்பு. ஆனால், கம்பெனி என்கிற ஸ்தாபனம் எந்தத் தனி மனிதனையும் நம்பியில்லை. எந்தத் தனி மனிதனும் தவிர்க்க முடியாதவன் இல்லை. பி. எஸ். இல்லாவிடில் ஒரு கே எஸ்., ஒரு ஆர். எஸ். வருவான். யந்திரம் விடாது சுழலும்

நரசிம்மன் முகத்தைப் பொத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தார். சாமிநாதனும் சுப்பிரமணியனும் கைகுலுக்கிக் கொண்டனர். ராஜ்குமார் எழுந்து பரமுவைப் பின் தொடர்ந்தான். கோவிந்தன் அசையாது உட்கார்ந்திருந்தான் சாமிநாதனைப் பார்த்துப் புன்னகை செய்தான் 'இனிமே நீ நம்ம கிட்டதாம்பா வரணும்' என்கிற புன்னகை.

பாமு தன் கைப்பட ராஜினாமா கடிதம் எழுதினான். வளமான எதிர்காலம் கருதி இந்த வேலையை ராஜினாமா செய்வதாய். வழக்கமானவாக்கியங்களில் கடிதம் எழுதினான்.

கடிதம் பற்றி சேர்மனிடம் தெரிவிக்கப்பட்டது.

''ஏற்றுக்கொள்ளுங்கள். டில்லியிலிருந்து கேள்வி வரும். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் இதைக் காட்டுங்கள்.''

ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்று பிற்பகலே முழுப்பொறுப்பிலிருந்து விடுபட்டதாய் பரமசிவத்துக்குக் கடிதம் வந்தது.

''அவசரப் பட்டுட்டீங்கண்ணே...'' —ராஜ்குமார், பரமுவின் தோளில் கைவைத்தான்.

'இதை நீ மட்டும்தான் சொல்ற ராஜ்குமார், மத்தவங்க எங்க காணோம்''

''உங்ககிட்ட வரக் கூடாதுன்னு கோவிந்தன் மிரட்டி வச்சிருக்கான்.''

''கோவிந்தன் இந்த யூனியனைக் கட்டிக் காப்பாத்திட போறான்னு நினைக்கிறியா...''

''குழில தள்ளப் போறான்.''

''இது என் மத்தவங்களுக்குப் புரியலை.''

''நிறைய தொழிலாளிகளுக்கு உங்க மேல சந்தேகம் மானேஜ்மெண்ட் சைட் எடுத்துக்கிட்டீங்களோன்னு. ரேர் கான்சல் பண்ணி விக் வண்டி போடறதுக்கு நீங்க ஆர்வம் காட்டினதா பேச்சு.''

''இப்ப அந்தப் பேச்சு பொய்யாயிருச்சுல்ல. நான் மானேஜ்மெண்ட் சைட் இல்லைன்னு தெரிஞ்சு போச்சு. இல்லை.''

''தொழிலாளிக்கு அவ்வளவு புரியாதண்ணே.''



''இல்லை நிறைய புரியுது. தெளிவா புரியுது. இன்னும்கூடப் பத்து ரூபா கோவிந்தனால கிடைக்கும்னு ஒரு நினைப்பே வளர்ந்துடுச்சு. உழைக்காம அதிக சலுகை வாங்கலாம்னு ஆசை இருக்கு.''

''அதை நீங்க உள்ள இருந்து மாத்தணும்.''

''இதுக்கு மேல மாத்த எனக்கு சக்தி இல்லை ராஜ்குமார்.''

''சரி. வேண்டாம். வேலைய விடணுமா?''

''இரண்டு கை இருக்கு. உடம்புல உரம் இருக்கு. பார்ப்போம்.''

''அதில்லை...''

''என்னைத் தனியா விடு ராஜ்குமார்.''

ராஜ்குமார் சற்றுநேரம் நின்றுவிட்டு விலகிப் போனான். தொழிலாளிகள் தொலைவிலிருந்து வேடிக்கை பார்த்தனர். ஐந்தேகால் மணி சங்கு ஊத வெளியேறினர். அஸெம்பிளி காலியாயிற்று. பாமு எழுந்திருந்தான். நடு அஸெம்பிளியில் நின்று கண்களைப் பொத்திக் கொண்டான்.

உள்ளே துக்கம் குமுறி குமுறிப் பொங்கிற்று.

இது என் இடம் இல்லை. இனி இது என் இடம் இல்லை. மெல்ல நடந்து ஒவ்வொரு ஸ்டேஜாய் பார்வையிட்டான். ஒரு ரேக்கலிருந்து போல்ட்டுகள் சரிந்து கீழே கிடந்தன. வாரி மறுபடி ரேக்கில் போட்டான். இன்ஜின் மாட்டும் இடம் வந்தான். நாளைக்கு மாட்ட வேண்டிய இன்ஜின்கள் வரிசையாக இருந்தன. முதல் இன்ஜினை உட்கார்ந்து தடவிக் கொடுத்தான். முத்தமிட்டான்.

'ஸோ—குட்பை. நான் இல்லேன்னு மக்கர் பண்ணக் கூடாது. நல்லபடியா வேலை செய்யணும். கம்பெனிக்கு நல்ல பேர் வாங்கித் தரணும்.' —மனசுள் பேச்சு ஓடிற்று.

வீல் மாட்டும் இடம் தாண்டினான்.

மேனல் மாட்டும் இடம் கடந்தான்.

டயர்கள் போடும் இடம் வந்ததும் நின்றான்.

முதன் முதலில் இந்த கம்பெனிக்கு வந்ததும் அவனை டயர் மாட்டச் சொன்னார்கள்.

இரண்டு வரிசை டயர்களுக்கு நடுவேபோய் நின்று கொண்டான். சரிந்து டயர்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டான்.

துக்கம் பொறுக்க முடியாது விம்மலாய் வெளி வந்தது

குலுங்கிக் குலுங்கி ஒரு குழந்தைபோலப் பரமு—பி. எஸ். என்கிற பரமசிவம்—ஃபோர்மன் அஸெம்பிளி அழுதான்.

பதினேழு வருடங்கள்—பதினேழு வருடங்கள் முழுசாய் பதினேழு வருடங்கள்.

நாளைக் காலையிலிருந்து எல்லாமே அந்நியம். இந்த கம்பெனி அந்நியம். குதிரை போலச் சிலிர்த்து நிற்கும் இந்த வண்டி அந்நியம். இந்த அஸெம்பிளி இங்குள்ள மனிதர்கள் அந்நியம். ஒரு முக்கியமான விநாடியில் உறவு முறிந்துவிட்டது. ஒரு உயிர் பிரியும் நேரம்போல வாழ்வே திசை மாறிவிட்டது.

''ஐயா, வரேன்யா. எல்லாருக்கும் போயிட்டு வரேன். மனுஷங்க கிட்டே சொல்லிக்கணும்னு தோணலை எனக்கு. உங்ககிட்டே சொல்லிக்கணும்னு தோணுதய்யா.''

'எனக்குச் சோறு போட்டு, உடுக்க உடை கொடுத்து மனுஷனா நிக்கவச்சு, கல்யாணம் பண்ணி, குழந்தைங்க பெத்துக்க தைரியம் கொடுத்த உங்க எல்லாருக்கும் என் நன்றி.



''நல்லா இருக்கணும் நீங்க. இந்த கம்பெனி நல்லா இருக்கணும். ஒரேநாள்னு வரணும். பெரிசா விளங்கணும்' தாழு ஃபோர்மேன் தயார் பண்ணணும். இந்த மாதிரி வண்டி உண்டான்னு பேர் எடுக்கணும்.''

—மனசு, குமுறிக் குமுறி வார்த்தைகளை உள்ளேயே கக்கிற்று.

''பி. எஸ்.'' யாரோ கூப்பிட்டார்கள்.

நிமிர, எதிரே நரசிம்மன் நின்றிருந்தார்.

''எனக்குப் புரியுது பி.எஸ். வாங்க. எழுந்து வாங்க. நத்திங் இஸ் பர்மனென்ட். வாங்க' மெல்ல அருகே வந்து தோள் தொட்டார். துவண்டு நிமிர்ந்தவனை அணைத்துக் கொண்டார்.

''வேலையை நேசிக்கிறவனுக்கு இது ரொம்ப சிரமம். நானும் பட்டிருக்கேன். வாங்க. வெளியில வாங்க.''

''உலகம் பெரிசு பி.எஸ். இங்கேயே ஒன்பது மணி நேரம் வளைய வந்ததால இந்த இடம் பெரிசா போயிடுச்சு நமக்கு. உண்மைல அப்படி இல்லை. ஆயிரம் கம்பெனி, ஆயிரம் வேலை. தைரியமா இருங்க. பிரிவு முதல்ல கஷ்டம்தான். போகப்போக சரியாயிடும். என் வண்டில வரீங்களா. வீட்ல ட்ராப் பண்றேன்.''

''எங்கிட்ட சைக்கிள் இருக்கு சார்.''

''மனசு தளரவிடாதீங்க பி.எஸ். உங்க பலம் உங்களுக்குப் புரியலை. அதனால சரிஞ்சுட்டீங்க. யாரும் கூட இல்லையேன்னு நினைக்காதீங்க. நேர்மையைப் புரிஞ்சுக்கறது கஷ்டம். ஆல் த பெஸ்ட். ஜாக்கிரதையா வீட்டுக்குப் போங்க.''

பரமு சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். மெல்ல வீடு நோக்கி மிதித்தான்.

பாலம் நோக்கி வண்டி மெல்லப் போயிற்று. எதிர் காற்று ஹைவே ரோடில் வேகமாய் மோதிற்று. விடாது மிதித்துப் பாலம் ஏறியதும் உடம்பு முழுக்க அயர்ச்சி பொங்கியது. இனி இந்தப் பாலம் கடக்கும் அவசியமும் இல்லை. பாலத்தின் மத்தியில் வண்டியை நிறுத்தினான். வெகு தொலைவில் கம்பெனி கூரை தெரிந்தது. ஹீட் ட்ரீட்மெண்ட் வெள்ளைப் புகை வெளியே வருவது கண்ணில் பட்டது. ரிவர்ஸ் கியர், ரிவர்ஸ் கியர் லாக், போல்ட், நட் என்று ஆயிரம் உறுப்புகள் உள்ளே உலைக்குள் கொதித்துக் கொண்டு கிடக்கும். நாளை சாலை அஸெம்பிளி வரும். வரிசையாய் ஸ்டோர்ஸில் அடுக்கப்படும். அடுக்கியவை எண்ணப்பட்டு அஸெம்பிளிக்குத் தள்ளுவண்டியில் கொண்டு வந்து தருவார்கள்.

அங்கே நானிருக்க மாட்டேன்!

''எத்தினி வண்டிய்யா இன்னிக்கு...''

''இருவத்தஞ்சு''

''இருவத்தஞ்சு வண்டி...இருவத்தஞ்சு வண்டி—''— கூச்சலைக் கேட்க நானிருக்க மாட்டேன்.

முடிந்து விட்டது. இங்கே உப்பு இவ்வளவுதான். இனி எவர் உப்போ...எங்கேயோ...

ஆனால், இந்த கம்பெனி ஆட்கள் போக்குதான் வேடிக்கையாய் இருக்கிறது.

என் இப்படிக் கைவிட்டார்கள்?

பனிச்சென்று சுத்தமாய்க் கைகழுவி விட்டார்கள்.

## 12

போன மாதம் வேறு கம்பெனிக்கு உதவி ஃபோர்மேனாய் ஒரு இன்ஸ்பெக்டர் போனான். மாம்பலத்தில் டீ பார்ட்டி நடந்தது. மாலை போட்டு, சந்தனப்பேழை கொடுத்தார்கள்—நினைவாக.



லஞ்சம் வாங்கின குற்றத்துக்கு ராஜினாமா செய்த குமாஸ்தாவுக்குக்கூட வழியனுப்பு மரியாதை நடந்தது.

தன்னை மட்டும் ஏன் இப்படி சீ போ என்று அனுப்பி விட்டார்கள்.

அங்கே யாருக்குக் கெடுதல் செய்தேன். எவரை நோகடித்தேன். எவர் மீது வசை பொழிந்தேன்.

எனக்கு மரியாதை அவசியமில்லையா. என்னைப் பிரிவது இவர்களுக்கு வேதனையில்லையா. என் மீது இவர்களுக்கு அன்பில்லையா.

''நீ எங்கு போனாலும் பிழைத்துக் கொள்வாய். உனக்குத் திறமை இருக்கிறது என்கிற பொறாமையா. நீ இருந்தும் ஒன்றுதான் இல்லாததும் ஒன்றுதான் என்கிற இளப்பமா. மாசக் கடைசியில் ஆளுக்குப் பத்து ரூபா போடணுமா பார்ட்டிக்கு? என்கிற வறுமையா.''

உள்ளே வேதனையும் வெறுப்பும் மண்டின. மெல்லிய சீற்றம் கிளர்ந்தது.

ஆளுமை மிக்கவனைக் கூட்டம் அந்நியமாய்த்தான் பார்க்கும். 'அவனுக்கென்னப்பா' என்று பிரித்துவைத்து விடும்.

பிரித்து வைத்து விட்டார்கள்.

சாதாரண செய்முறை நன்றியைக் கூடப் புறக்கணித்து விட்டார்கள்.

கேவலமானவர்கள் — பேதலித்தவர்கள். திண்மையற்றவர்கள். யோசிக்க யோசிக்க நெஞ்சில் காரமும் கோபமும் பொங்கின.

ஒரு நாள் வரும். மறுபடி என்னைக் கண்டு நீங்கள் பாய்ந்து ஓடிவரும் நாள் வரும். 'என்னை ஞாபகம் இருக்கா' என்று உங்களை நீங்களே இனம் காட்டிக் கொள்ளும் நாள் வரும். 'பரமுவா, நம்ம கூட வேலை

செய்த பரமுவா' என்று நாக்குப் புரட்டிப் பேசும் நாள் வரும்.

நண்பர்களே, என் கையில் தனுசுண்டு. காண்டீபம் அதன் பெயர்.

பரமுவின் கண்கள் நிலைகுத்தி வெகுதூரம் போய் வானத்து விளிம்பில் நின்றது.

இந்த அந்தி நேரத்தில் இருளும் பகலும் கூடும் இந்த சந்தி வேளையில் இந்த செக்கர் வானத்தின் கீழே பூமியெல்லாம் தங்கத் தகடாய் மாறும் இப்பொழுதில் நான் சூளுரைக்கிறேன்.

நான் மறுபடி கிளர்வேன். முழுபலத்தோடு மீண்டும் வருவேன். உங்களால் எதிர்க்கவே முடியாத பரமுவாய் நான் மலர்வேன். நீங்கள் எழுந்து நின்று வணங்கும் பரமசிவமாய்ப் பலம் பெறுவேன்.

சுடரே, இது உறுதி
செக்கர் வானமே, இது உறுதி.
சிவந்த சூரியனே, இது உறுதி.
ஒளி பெறும் நிலவே, இது உறுதி.
காற்றே, நீரே, மண்ணே... இது
உறுதி, உறுதி.

மனசே வாழ்க்கை. எதை நினைக்கிறோமோ அதுவாக மாறுகிறோம். தொலைநோக்கு உள்ளவனுக்குத் துயரமில்லை, வரும் துயரமும் நீடிப்பதில்லை... அடி விழாத வாழ்க்கை எவருக்குண்டு. வலியிலிருந்து மீள ஆசைப்படுபவனுக்கே வலியைத் துடைத்துக் கொள்ளத் தெரியும். வலியே சுகமாகிப் போனவனுக்குத்தான், புலம்பலே பேச்சாகிப் போனவனுக்குத்தான் துயரம் தொடர்கதை. வலியைத் தாங்கு. அனுபவி. மற. வலியை வேண்டாம் என மறுக்க இன்னும் வலிக்கும்.



இனி எனக்கு வலியில்லை. பரமு தலை உலுக்கிக் கொண்டான். மெல்ல சிரித்தான். பாலத்துச் சரிவில் சுகமாய் வேகமாய் சைக்கிளை மிதித்து நீண்ட நெடுஞ்சாலையில் சந்தோஷமாய் ஓட்டினான். மனசே வாழ்க்கை.

வாசலில் குழந்தைகள் காத்துக் கொண்டிருந்தார்கள். இவன் காலூன்றி நின்றதும், தாவி வண்டியில் ஏறிக் கொண்டார்கள் பெண் காரியரில் உட்கார, பையன் முன்னே உட்கார்ந்தான்.

''அப்பா, ஒரு ரவுண்டுப்பா'' என்று கெஞ்சினான்.

''எலேய் இறங்கு கீழே—அப்பா வந்து ஒரு வாய் காபி குடிக்கட்டும்''—உள்ளே சரசு குரல் கொடுத்தாள்.

''அப்பா, ஒரு ரவுண்டுப்பா...''

''சரி, கடைத் தெரு போகலாமா?''

''உம்... போலாம். போலாம்.''

சைக்கிள் கிளம்பிற்று.

அப்படியே ஏதாச்சும் காய் வாங்கியாந்துருங்க''—சரசு வெளியே வந்து கட்டளையிட்டாள்.

வேண்டுமென்றே வளைந்து நெளிந்து சைக்கிள் குஷாலாய் ஓடிற்று.

'ஒன்று எங்கள் ஜாதியே
ஒன்று எங்கள் நீதியே
உழைக்கும் மக்கள் யாவரும்...'

—பையனும் பெண்ணும் பாட்டுப் பாடினார்கள். பரமுவையும் பாடச் சொன்னார்கள். பரமுதான் இந்தப் பாட்டைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தான். சைக்கிளில் இதை கோரஸாய்ப் பாடிக்

கொண்டு போவது குழந்தைகள் அடிக்கடி செய்யும் காரியம் இப்போதும் வற்புறுத்தினார்கள்.

பரமுவும் பாடினான்:

'ஒன்று எங்கள் ஜாதியே
ஒன்று எங்கள் நீதியே...'

கடைத்தெரு கலகலப்பாய் இருந்தது. அந்த கலகலப்பு சந்தோஷமளித்தது. பையனுக்கு ஊதுகுழல். பெண்ணுக்குத் துணியில் செய்த சிவப்பு ரோஜா, கலர் பென்ஸில், காமிக் புத்தகம், லட்டு உருண்டை, பக்கோடா, அரை கிலோ கத்தரிக்காய், கால் கிலோ உருளைக்கிழங்கு, பசலைக்கீரை, முருங்கைக்காய், சரசுவுக்கு ஸ்டிக்கர் பொட்டு, பச்சை வாழைப்பழம்.

'வாங்கடா வந்தனம் பண்ணுங்கடா,
வந்து நின்னு வடையை தள்ளுங்கடா,
பாளையம் பண்ணப் போற
சின்னத் தாயி பெத்த புள்ளை...'

இருட்டின வீதியில் மூவரும் பாடியபடி வீடு வந்து சேர்ந்தார்கள்.

வாசலில் பாண்டியன் நின்றிருந்தான்.

''வணக்கம் தலைவரே!''—கை கூப்பினான்.

பாலத்தின் மீது நின்று நெஞ்சில் பொங்கிய கோபம் நினைவுக்கு வந்தது.

'நீ கூடவா பாண்டியா' என்று கேள்வியாய்ப் பார்வை பதிந்தது.

பாண்டியன் தலைகுனிந்து கொண்டான்.

''என் மேல ரொம்ப கோபம் இருக்கும் உங்களுக்கு.''

''எனக்கு யார்மேலயும் கோபம் இல்ல பாண்டியா.''

''என்னை வர வுடாத மடக்கிட்டாங்க தலைவரே.''



''தலைவரேன்னு கூப்பிடாத இனி பரமுன்னு கூப்பிடு போதும்.''

''அப்படிச் சொல்லாத தலைவரே. நானும் உன்னைக் காட்டிக் குடுத்துட்டேன் தலைவரே. நானும் உனக்கு எதிரா நின்னுட்டேன் தலைவரே. நானும் உன்னைக் கத்தியால குத்திட்டேன் தலைவரே.'' பாண்டியன் முகம் பொத்தி அழுதான்.

''ச்சு...பாண்டி. சும்மா இருப்பா.''

''அவரா தப்பு ஒத்துக்கிட்டு ராஜினாமா பண்றாரு. எவனும் போகக் கூடாது அவர்கிட்டன்னுட்டாங்க. ராஜுமார்கூட இதுதான் சொன்னான். இது நிஜமா.''

''ஆமா, நிஜம்.''

''ஏன் தலைவரே.''

''வேற வழியில்லை.''

''அந்த க்வாலிடி கண்ட்ரோல்...''

''ச்சு...போதும். வேற ஏதாவது பேசு.''

''புரியலையே. ஏன் தடுக்குன்னு...''

''அலுத்துப் போச்சுடா. வாதாடி வாதாடி அலுத்துப் போச்சு. என்னைவிட கோவிந்தன் சரின்னு உங்களுக்குத் தோணினபோதே எனக்குள்ள விட்டுப் போயிடுச்சு.''

''யாருக்குத் தோணிச்சு அப்படி.''

''தபதபன்னு ரெண்டு கட்சியா அஸெம்பிளிலே அடிச்சுக்கிளிங்களே..அப்பவே நான் உடைஞ்சு போயிட்டேன். மால் வாங்கிட்டான்னு தொழிலாளி சந்தேகப்பட்டபோதே உள்ள நொறுங்கிடுச்சு. தலைவர் பதவிய கைவிட்டுரலாம்னு நினைச்சேன். வேலையையே விடும்படி ஆயிடுச்சு. போகட்டும் விடு.''

''பொசுக்குன்னு முடிவு பண்ணிட்ட தலைவரே.''

''முடிவு பொசுக்குன்னு வரது நல்லது.''

''என்ன பேசற நீ—''

''போ பாண்டி, போய் வீட்டை கவனி. நல்ல படியா வேலை செய். ஃபோர்மன் ஆகிற யோக்கியதை உனக்கு உண்டு. கவனமா செய்.''

''அண்ணிகிட்ட சொல்லலியா.''

''ஏன், நீ சொல்லிட்டியா.''

''இல்லை. 'வந்து கால்கடுக்க நின்னாரு. பசங்க கேட்டுச்சுன்னு கடைப்பக்கம் போயிருக்காரு'ன்னு சொன்னாங்க. முகத்துல ஒண்ணும் தெரியல.''

''சொல்லலை. உள்ள போய் சொல்லணும்.''

''நான் வரேன் தலைவரே...''

''பாண்டி, வந்து பாத்ததுக்கு சந்தோஷம்டா. அடிக்கடி வந்து போய்க்கிட்டு இரு.''

''இப்ப போட்டுருக்கிற சட்டை, பாண்ட், இருக்கிற இருப்பு நீங்க குடுத்தது தலைவரே.''

''தயவுசெய்து இனிமே தலைவர்னு கூப்பிடாத பாண்டி.''

''என்னால வேற மாதிரி கூப்பிட முடியாது தலைவரே.''

பரமு அவனைத் தட்டிக் கொடுத்தான். ''போ. வூட்டுக்குப் போ. நாளைக்கு சாயந்திரம் வா. வேற விஷயம் பேசணும்.''

பாண்டி நகர்ந்தான்.

''என்ன, பாண்டி அழுதுக்கிட்டு போறாரு.''

''என்னவோ துக்கம்.''



''என்னவாம்?''

''சொல்றேன். தம்பி, அம்மாவுக்கு லட்டு பொட்டலம் குடு.''

''என்ன...லட்டு, பக்கோடான்னு அமர்க்களப் படுது. எதுடி பூ. என்ன விலை...''

''ஒன்பது ரூபா. தெசம் பூ மாதிரி இல்ல...''

''எனக்கு கலர் பென்சில்.''—பையன் தாயின் முன்பு நீட்டினான்

''என்னடா இன்னிக்குப் பெரிய வேட்டையா இருக்கு என்ன விசேஷம். ஏதாவதுகூட துட்டு வந்துச்சா.''

''இல்ல.''

''பிறகு.''

''இன்னியோட வேலையை விட்டுட்டேன். ராஜினாமா பண்ணிட்டேன். எத்துக்கிட்டு வூட்டுக்குப் போன்னு கடுதாசும் குடுத்துட்டாங்க.''

பொட்டலம் நழுவிப் பூந்தியாய் சிதறியது.

''என்னங்க...''

''பெரிய கதை. நிதானமா சொல்கிறேன். காபி எடுத்தா தாயி.''

''நெசமாதானா... இல்லை, விளையாடறீங்களா...''

''நெஜமா... வேலையை விட்டாச்சு.''

''அடுத்த மாசம் சாப்பாட்டுக்கு''

''கையிருக்கு.''—பரமு புஜம் மடித்துக்காட்டினான்.

''இதுக்குதான் லட்டும் பக்கோடாவுமா...''

''ஏன் கசக்குமா.''

''என்ன சொல்றீங்க நீங்க. புரியும்படியா பேசுங்களேன்.''—சரசு கிட்டத்தட்ட கத்தினாள்.

''போ— காபி எடுத்தா.''— பரமு சட்டையைக் கழற்றினான். குழந்தைகள் மௌனமாய் தாயையும் தந்தையையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சரசு உள்ளே போனாள்.

காபி தம்ளரைக் கொடுத்துவிட்டுக் காலடியில் உட்கார்ந்தாள்.

''என்னமோ மனசுல தட்டிச்சு. பத்து நாளா ஒரு வேதனை. உடம்புலியா, மனசுலியான்னு தெரியாத வேதனை. நேத்துகூட கனா, வண்டி குடை சாயுற மாதிரி...இப்படித் தலைல கல்லு போட்ட மாதிரி ஏதோ நடக்க போவுதுன்னு தெரிஞ்சு போச்சு. எங்க, தெசம்தானா.''

''தெசம் ''

'விவரமா சொல்லுங்களேன்...''

''பசங்க தூங்கட்டும். அதுங்க புரியாத முழிக்குது பார். உனக்கும் எனக்கும் ஏதோ சண்டைன்னு நினைக்கும் அதுங்க தூங்கட்டும்.''

''நாளைக்கு வேலைக்குப் போக வேண்டாமா?''

''வேண்டாம்.''

பரமு, சாய்வு நாற்காலி பிரித்துச் சாய்ந்து கொண்டான். உடம்பு சாய, மறுபடி மனசில் ஒரு அயர்ச்சி பரவிற்று.

குழந்தைகள் அமைதியாய் சாப்பிட்டார்கள். படுக்கை விரித்ததும் படுத்துக்கொண்டார்கள். பரமுவும் சாப்பிட்டான். சரசுவைக்கூட உட்கார்ந்து சாப்பிடும்படி வற்புறுத்தினான்.

வாசல் வராண்டாவுக்குப்போய் சாய்வு நாற்காலியைப் போட்டு உட்கார, சரசு உள் வேலை முடித்து



விட்டு வந்தாள். மேஜை மின்விசிறியை அருகே வைத்துச் சுழலவிட்டாள். காற்று பட, அவன் எதிரே தரையில் உட்கார்ந்து அவன் மடியில் தலை சாய்த்துக் கொண்டாள்

பரமு முழு விவரமும் சொன்னான்.

பித்தளைத் தவலையும் பெட்ரோமாக்ஸ் விளக்குமாய் வாசலில் ஐஸ் வண்டி ஒன்று போயிற்று.

விடிகாலை நாலு மணி மின்வண்டியைப் பிடிப்பதற்காக கூடைக்காரப் பெண்கள் ஸ்டேஷன் நோக்கி நடந்தார்கள். ஏதோ சினிமா பேச்சும் சிரிப்புமாய் அந்தக் கூட்டம் நடந்தது.

நாய்கள் ஒன்றையொன்று துரத்தின.

சரசு புடவைத் தலைப்பைக் கண்ணில் விரல்களால் வைத்து அழுத்திக்கொண்டாள். அழுகை பீரிட்டது.

''ஏம்மா. எதுக்கு கவலைப்படுற...'' —சுவரில் சாய்ந்திருந்தவளின் தோளைப் பரமு மெல்ல பிடித்தான்

''எனக்கு வேற வேலை கிடைக்கும் சரசு. மனசு தளர விடாதே. இந்த இரண்டாயிரத்து சொச்சம் எங்கேயும் சம்பாதிக்க முடியும். அழாத சரசு.''

''நம்ம யாருக்கும் எந்தக்கெடுதலும் பண்ணலியே.''

''அதனால கஷ்டம் வராம போயிடுமா நல்லது கெட்டது ரெண்டும் வரும். இது ஏதோ நல்லதுக்குன்னு நினைச்சுக்க.''

''அவமானப்பட்டுல்ல திரும்பியிருக்கீங்க.''

## 13

''முதல்ல அப்படித்தான் எனக்கும் இருந்தது. பாலத்தாண்ட வந்து யோசிச்சதும் புரிஞ்சு போச்சு. இப்படி ஏதாவது கழட்டிவுடலேன்னா செக்குமாடா

ஒரே இடத்துல சுத்திக்கிட்டிருப்பேன். அடிபட்டு கயிறு அறுத்த பிறகுதான் உலகம் ரொம்பப் பெரிசுன்னு புரிஞ்சுட்டுது. பயப்படாத சரசு.''

''பயமில்லீங்க. காசு பயம் கொஞ்சம்கூட இல்லை. முந்நூறு ரூபாலயும் குடித்தனம் பண்ணலாம், மூவாயிரத்துலேயும் பண்ணலாம். முதுகுல குத்திட்டாங்கன்ற போதுதான் வருத்தமா இருக்கு.''

''அதான் உலகம்.''

''வேணுங்கறபோது தலைல தூக்கி வச்சுக்கிட்டு ஆடினாங்களே தலைவராயிட்ட மறுநாள் வீட்டு வாசல்ல எத்தனை மாலை ..எவ்வளவு ஆப்பிள் பழம்.''

''அதுக்காகவா தலைவரானது... இல்லையே.'

''பாதி விசேஷத்துல கார் போட்டுக்கிட்டுப் போனதும் தீபாவளிக்கு ஸ்வீட் டப்பா, வருஷ பிறப்புக்கு கேக் டப்பா உங்க பெரிய ஆளுங்க அனுப்பிச்சதும்... அந்த மரியாதை பொய்தானே...''

' எந்த மரியாதையும் பொய். பயம்தான் மரியாதை. மரியாதைக்கு மகிழ்ந்துடக் கூடாது சரசு.''

''உங்களுக்குப் பயமில்லையா? '

' எதுக்கு?''

''மேற்கொண்டு என்ன பண்ணணும்னு...''

''ஒரு நிமிஷம் இருந்துச்சு, அப்புறம் துடைச்சுட்டேன்.''

''எப்படீங்க ''

' நீ பொண்டாட்டியா இருக்கறப்ப எனக்கு என்ன பயம்.''

''நான் என்னத்துக்கு உபயோகம்?''



''இப்ப சொன்னியே... முந்நூறுலயும் நடத்துவேன், மூவாயிரத்துலயும் நடத்துவேன்னு ,அந்த நம்பிக்கை... குறைஞ்சபட்சம் முந்நூறு ,ரூபாய்க்கு காரண்டி சரசு. மூட்டை தூக்கியாவது கொண்டாந்து குடுத்துடுவேன்.''

''ராஜா மாதிரி வாழ்ந்து மூட்டை தூக்கப் போறுமா.''

''அங்கதான் தப்பாயிடுச்சு. சுத்தி வந்துக்கிட்டிருந்தா எந்தக் கவலையுமில்லை. எவனுக்கு வேணா அடிமையா மண்டி போட்டு இருந்துடலாம். மேல மேலன்னு போறவனுக்கு இடறத்தான் செய்யும். கை புடிச்ச பிடி நழுவி ரத்தம் வரும், சறுக்கின இடத்து லேர்ந்து நகரணும். பல்லைக் கடிச்சுக்கிட்டு மேல ஏறணும். மலையேறி நிக்கறதுதான் வாழ்க்கைன்னு வந்துட்டா சறுக்கலுக்குப் பயப்படக்கூடாது சரசு.''

''ஆனாலும் உள்ள கலவரமா இருக்குங்க.''

''பயப்படாதடா. இந்தக் காசுக்கு இன்னிக்கு சம்பாதிச்ச காசுக்குக் குறைவில்லாத கொண்டாந்து தரேன். இது மாதிரி மூணு மடங்கு, நாலு மடங்கு சம்பாதிச்சுக் காட்டறேன்.''

''சம்பாதிப்பீங்க. மறுக்கலை. இதுக்கு எவ்வளவு அல்லாடணுமோ. எத்தினி அலைக்கழிப்போ. ஏழு காலுக்குக் கிளம்பி அஞ்சே முக்காலுக்கு வீடு வந்து வாரத்துக்கு ரெண்டு நாள் லீவுன்னு கிடந்து ஆத்தோட போற கப்பல் மாதிரி இருந்துச்சே...''

''இப்ப எதிர் காத்து, சமாளிப்போம்.''

''சே...தலைவராகவே இருந்திருக்க வேணாம்.''

பாமு சிரித்தான் : 'என்னால முடியாது சரசு.''

''ஏன், எத்தினி பேர் இல்ல—தான் உண்டு. தன் வேலை உண்டுன்னு.''

''சில பிறவி வேற மாதிரி. எங்கேயும் மொத ஆளா நிக்கணும்னு உள்ள ஒண்ணு கிண்டிக்கிட்டே இருக்கும். கஷ்டம்னு தெரிஞ்சதும் தலை கொடுக்கும். தோள் கொடுத்துத் தனியாளா பாலற புரட்டும். புரட்டவே பொறந்திருக்கறதா நினைப்பு வரும். நான் அப்படி ஒரு பிறவி.''

''பயமே இல்லையா?''

''இல்ல சரசு.''

''கண்ணு சிவந்திருக்கு. வந்து வாசல்ல நின்னப்பவே நினைச்சேன். செருப்புச் சூடு. புகைக்காத்துன்னு தோணிச்சு அழுதீங்களா.''

கிளம்பி, கடைசியா அஸெம்பிளில சுத்தி வரப்போ கலங்கிடுச்சு.''

''அழுதீங்களா.''

''டயர் ஸ்டேஜ் போய் நின்னேன். உடம்பெல்லாம் ஆடிப்போச்சு. சரிஞ்சு உட்கார்ந்துட்டேன். மொத மொத நான் கம்பெனிக்கு வந்து நின்ன இடம் வரிசை வரிசையா டயர் அடுக்கியிருந்த இடம். வுட்டு வரவே மனசாகல. அத்தினி டயரையும், அணைச்சுக்கிட்டு...''

''அழுதீங்களா...''

பரமு சோகமாய்த் தலையாட்டினான்.

''எதுக்குப்பா...''

பரமு கண் மூடிக்கொண்டான்.

''ஒரு துக்கம்தான் சரசு. பெத்த தாயாரைப் பிரிஞ்சு வர மாதிரி துக்கம். மடில போட்டு மார் சாச்சு சீராட்டின தாயார். தலைக்கு எண்ணெய் தடவி சீக்கா போட்டுக் குளிப்பாட்டின அம்மா. சோறு பிசைஞ்சு பிசைஞ்சு போட்டவ வெளிய போடான்னு சொல்லிட்ட போது வர துக்கம் அடிச்சாலும் திட்டினாலும் ஆத்தாளைப் பிரிய முடியாதபடி புள்ளை படற துக்கம்...''



''ஐயா...''

''அழுதுட்டேன் சரசு. ரொம்ப அழுதுட்டேன்.''

பரமு குலுங்கினான்.

விண்ணென்று சரசு எழுந்திருந்தாள். சாய்வு நாற்காலியில் மல்லாந்துபடுத்து முகத்தில் துண்டு போட்டுக் குலுங்கி அழுகிறவன் தலையை இழுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டாள். துண்டை உருவி எடுத்து விழி மடலில் இதழ் பதித்தாள்.

''மாடு மாதிரி நான் இருக்கச் சொல்ல நீங்க எதுக்குப்பா அழுறணும். வுடுங்க. பேட்டையே போச்சு பெத்த தாயாராவே இருக்கட்டும். புரிஞ்சுக்கலைன்னா புகைச்சல்தான். புகைஞ்சு, புகைஞ்சு வளைய வர்றதவிட பிரிஞ்சு வந்துடலாம். மூச்சு முட்டாத இடமா ஒதுங்கலாம். நான் இருக்கேன் வுடு. பட்டுன்னு நாளைக்கே அத்தினி அதிகச் செலவையும் நிறுத்தி...''

''வேணாம் சரசு. குழந்தைங்க பாதிக்கும்படி எதுவும் செய்துடாத. அதுங்க கை நீட்டிக் கேக்கறதை இல்லேன்னு சொல்லாத.''

''நம்ம குழந்தைங்கிட்ட கோடி காட்டினா போறும். அதுங்க கை காட்டாதுங்க. வாய் திறந்து கேக்காதுங்க.''

''யப்பா... வேலை செய்யற இடம் முன்ன பின்ன இருக்கலாம் சரசு. வீடுன்ற இடம் நெஞ்சுக்கு இதமா இருக்கணும். வீடு இதமா இருந்துச்சுன்னா எத்தினி துக்கமும், எவ்வளவு கஷ்டமும் சமாளிச்சிட முடியும். வீட்டை வீடா வச்சுக்கற பொம்பளை இருந்தா போறும். ஆயிரம் யானை பலம்.''

''பொம்பளை என்ன பலம். பொம்பளைக்குப் பலம் புருஷன்தான். கொஞ்சம் பாத்துக்கறியான்னு புருஷன்

மனசோட கேட்டா போதும். வித்தை காட்டுவா பொம்பளை.''

''உன்னை அப்படிக் கேட்டுக்கறேன் சரசு.''

''சே... இதை வாயா வார்த்தையா கேக்கணுமா. ஒரு குமுறு குமுறிட்டீங்களே... பெத்த தாயைப் பிரிஞ்ச மாதிரி வந்துட்டேன்னு. அது போறாதா. நான் இருக்கேன் எதுக்கும்.''

''தாங்க்ஸ் சரசு.''

''தோமென்டின் பிளீஸ் தலை பிடிச்சு விடவா — அப்படியே சாஞ்சப்பல தூங்கறீங்களா.''

''தூக்கம் வருமா, தெரியல—''

''தூங்கினா நல்லது. காலையபளிச்சுனு விடிஞ்சாப்பல இருக்கும்.''

''உடம்பு அசதியா இருந்தாலும் மண்டைல ஏதோ கனம். தூங்க முடியாதபடி...''

''உள்ள வந்து படுங்க. தூங்கிடலாம்.''

''வராண்டால சில்லுன்னு இருக்கே.''

''வராண்டால எனக்குப் படுக்க முடியாது.''

''நீ உள்ள படுத்துக்க சரசு.''

''எனக்கும் தூக்கம் வராது.''

''இங்க சௌகர்யமாக இருக்கே.''

''என்ன சொல்ற நீ?''

''அட, வாங்க எழுந்து...கொட்டு கொட்டுன்னு நீங்க முழிச்சுக்கிட்டு கிடப்பீங்கன்னு! நினைச்சாலே எனக்குத் தூக்கம் போயிடும்.''

''உன்ன மட்டும் தூக்கம் வருமா?''



''தூங்கப் பண்ணிடுவேன்.''

''எப்படி?''

''கேட்டுக்கிட்டேயிருந்தா எப்படி... உள்ள வந்தாத்தான தெரியும்?''—வலக்கையைப் பிடித்து இழுத்தாள். பரமு புரிந்து கொண்டான்.

விடிவிளக்கு வெளிச்சத்தில் மெல்ல நகர்ந்து உள்ளேபோய் மல்லாந்து படுத்தான். சரசு சுவரோரம் நகர்ந்து விளக்கை அணைத்துக் கும்மிருட்டாக்கினாள்.

''அத எதுக்கு அணைக்கிற... பசங்க முழிச்சா தடுமாறும்.''

''தடுமாறக் கூடாதுன்னுதான அணைக்கிறேன்.'' குரல் சற்றுத் தள்ளிக் கேட்டது. பொன் வளையல்கள் சிணுங்கின. மெட்டி தரை தொட்டு தொட்டு விட்டது. நெருங்கிற்று.

''அடியம்மா...'' கனமாய் வலப்பக்க படுக்கை அழுந்திற்று. இடக்கையைத் தலைக்கு அண்டக்கொடுத்து ஒருக்களித்துப் படுத்துக்கொண்டாள். அவன் வலக்கையைத் தூக்கி தலைக்குமேல் போட்டு நெருக்கிக் கொண்டாள். மெத்தென்று மார்புகள் நெஞ்சில் அழுத்தின.

''பதினாறு வருஷம் ஆச்சு இங்க வந்து. உங்க வீட்ல ஒரு நாலு மாசம் அப்புறம் இங்க கூட்டியாந்துட்டீங்க. வந்த அன்னிக்கு ராத்திரியும் உங்க கம்பெனி பத்திதான் ஏதோ பேச்சு. ஏதோ டயர் சரியில்லை... போல்ட் சரியில்லைன்னு...''

''எப்படி இத்தினி வருஷம் கழிச்சு ஞாபகம் வச்சிருக்க...''

''முக்கியமானதெல்லாம் ஞாபகம் இருக்கும்.''

''டயரு அவ்ளோ முக்கியமா... தெரியவே தெரியாதே எனக்கு...''

''ம்ம்... உங்களுக்கு டயரு முக்கியம். எனக்கு— மொத மொத தனிக்குடித்தனம் போட்டு, தூங்கின ராத்திரி முக்கியமில்லையா ஒருத்திக்கு...''

''ஓஹோ, நீ அதைச் சொல்றியா?''

''என்னடா இந்த மனுஷன் கம்பெனிக் கவலை யாகவே இருக்காரே... நம்மளப்பத்தி கவலைப்படுவா ரான்னு ஒரு அச்சம்...''

''அப்புறம்.''

''அந்த அச்சம்ரெண்டு, மூணு மாசத்துலயே போயி டுச்சு. இந்த வீடு வந்த அன்னிக்குப் பண்ணின கூத்துல பொண்ணு பொறந்தா. அப்புறம் உங்கப்பா இறந்து போன அன்னிக்கும் இப்படித்தான் இடிஞ்சு போயிட் டீங்க. அப்பா ஞாபகம் மறக்க உங்களைத் தேத்திவுட, புள்ளை பொறந்துட்டான்.''

''இப்ப என்ன சொல்ற?''

''இனி பொறக்காது. பொறக்காதபடி காபந்து பண்ணியாச்சு. இருந்தாலும் மனசுல தோணிச்சு. கஷ்டம்னு வரப்ப நெருங்கினா, புருஷன் கஷ்டம் போக ணும்னு பிரியப்பட்டா உடம்பு, மனசு எல்லாம் மலர்ந் துடுது பார்... பொம்பளைக்கு... ஆச்சரியமில்லை.''

''ஆமா... மனசு கஷ்டத்துல இருக்கும்போதுகூட ஒரு வெறி வரும். மறக்கற போதைக்கு மனசு ஏங்கும்.''

''அப்படி ஒண்ணும் தெரியலையே... இப்ப...''

பரமு சிரித்தான். ''வயசாயிடுச்சல்ல...''

''உங்களுக்கு வயசாயிடுச்சா இல்லையானு எனக் குல்ல தெரியும்.''

''தனிக்குடித்தனம் பண்ற அச்சத்தைவிட அப்பா போன துக்கத்தைவிட இப்ப பட்ட துக்கமும் அச்சமும் பெரிசு சரசு.''



''அட, போனீங்களா... இந்த மடம் இல்லேன்னா சந்தமடம்...''—இழுத்து இறுக்கிக்கொண்டாள். அவன் திரும்பி அவன் நடுமார்பில் முகம் புதைத்தான்.

''அப்படியே தூங்குங்க. அசந்து தூங்கினாலே பாதி சிரமம் குறைஞ்சுடும்.''

''தூக்கம் வரலை.''

''ஏன்.''

''கலைஞ்சுடுச்சு.''

''எது''

''தூக்கம்.''

''அப்புறம் என்ன...''

''உடம்பு அசதி வரணும்.''

''அசந்துதானே வந்தீங்க.''

''இப்படி உடம்பு முழுவதும் புடிச்சு விட்டா தூங்கலாம் தோணும்.''

''சித்தமுன்னே வயசாச்சுன்னு சொன்ன மாதிரி ஞாபகம்.''

''இப்ப வாலிபமாயிட்ட மாதிரி ஒரு வேஷம்.''

''ஐ... யோவ்...''

''என்ன?''

''இப்படி இறக்கினா.''

''அசந்திடறேன்னு சொன்ன மாதிரி ஞாபகம்''

பெண் இசை, துக்கமோ, சந்தோஷமோ, பாட்டாய் வெளிப்படுகிறபோது பாரம் குறைந்த பிரமை வரு கிறது. காமம் சுருதி. இடையறாது வாழ்வில் சகல நிகழ்வுகளிலும் அது ஒலித்துக்கொண்டிருக்கிறது. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று அங்கே இரவு சங்கீதமாயிற்று.

''எங்க எழுந்துக்கலையா...'' சரசு பாமுவை மெல்ல உலுக்கினாள்.

''முடியலை சரசு இன்னும் ஒரு அரை மணி தூங்கறேன். தலை பாரமா இருக்கு.''

—தலையணையில் முகம் அழுத்திக் கொண்டான். ஜன்னல் வழியே வந்த வெளிச்சம், மூடிய கண்ணுக்குள் பூச்சி பறக்கவிட்டது. இன்னொரு தலையணையால் முகம் மறைத்துக்கொண்டான். காலிடுக்கில் இன்னொரு தலையணை இழுத்துக் குப்புறத் தூங்கும் புருஷனைப் பார்க்க வேதனையாய் இருந்தது சரசுவுக்கு.

இந்நேரம் வீடுவிட்டுக் கிளம்பி பாதி தூரம் போயிருப்பாங்க. இன்னிக்கு என்னமோ எழுந்திருக்க முடியலை. முடியாதது உடம்பா, மனசா. முழிச்சு உக்காந்தா ஆயிரம் வேதனைன்னு படுத்துக்கிட்டே இருக்காங்களா, தெரியலை.

குழந்தைகள் குளித்து, சாப்பிட்டு எட்டரை மணிக்குக் கிளம்புகையில், படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

''எப்பா இன்னிக்கு வேலைக்குப் போகல...''—பெண் குழந்தை கேட்டது.

''உடம்புக்கு நல்லா இல்லம்மா.''

நெற்றியில் கை வைத்தது.

''சூடா இருக்கற மாதிரிதான் தெரியுது. 'எனக்கு உடம்புக்கே வராது'ன்னு சொன்னியே, உனக்கு ஜுரம் வந்துடுச்சு பாத்தியா...'' —பையன் சைக்கிள் ரிக்ஷாவில் உட்கார்ந்து மணியசைத்தான்.

## 14

''சரி, போ லதா. சாயந்திரம் வந்து பேசிக்க.''

—சரசு துரிதப்படுத்த, பெண் குழந்தை 'கன்னத்தில் முத்தம் பதித்துவிட்டுப் போனாள்.



பல் துலக்கி, முகம் துடைத்து வராண்டாவுக்குவந்த போது தெருவில் மனிதர்கள் பறந்து கொண்டிருந்தார்கள்.

விதம் விதமான சீருடையில் குழந்தைகள் நடந்தார்கள்.

பாமுவுக்குத் தெரு ஆச்சரியமாய் இருந்தது.

யாரோ ஒரு கிழவி கூடையுடன் வந்து நின்றாள்.

''யம்மோவ்'' என்று குரல் கொடுத்தாள்.

''என்ன வேணும்...''—பாமு கேட்டான்.

''ஒண்ணும் வேணாம்.''

''எதுக்கு கத்தற?''

''சும்மா பேசிட்டுப் போறதுதான்.''

''யார்கிட்ட.''

''உங்க ஊட்டு அம்மாகிட்ட.''

''சரசு...''—உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தான்.

''வரட்டும், வரட்டும்'' கிழவி கை உள்ளே விட்டுக் கதவு திறந்து வராண்டாவில் உட்கார்ந்து கொண்டாள். வியர்வை துடைத்துக் கொண்டாள். பாமு கூடையை எட்டிப் பார்த்தான். காலியாய் இருந்தது.

''இடியாப்பம் எல்லாம் வித்துட்டேன்''

''எங்க வீட்ல வாங்கறதில்லையே.''

''ஆமா. வாங்கறதில்லை.''

''அப்ப எதுக்கு உக்காந்திருக்க.''

''நீ வேலைக்குப் போலியா.''

''போவலை.''

''என்னா''

''சும்மாதான்''

''அப்ப வரேன்.''

''சரசு, யாரோ ஒரு கிழவி வந்திருக்கு பார். தொடுக்குன்னு கதவு திறந்து உள்ள வந்துட்டு...''— கடைசி வாக்கியம் முணுமுணுப்பாய்ப் பேச, கிழவி திரும்பி முறைத்தாள்.

''என்ன முனியம்மா கிளம்பிட்ட.''—சரசு வெளியே வர, கிழவி நின்றாள்.

''உங்க வூட்டுக்காரு முணுமுணுக்கறாரே...கதவு தொறந்து வந்துட்டேனாம்.''

''தினம் முனியம்மா வருங்க...''

''எதுக்கு.''

''சும்மா உக்காந்து பேசிட்டுப் போவும். முனியம்மா. இன்னிக்கு இவரு வேலைக்குப் போவலை. அதான் உள் காரியமா...''

''இருக்கட்டும். சக்கரை கூடக் குடுக்கறாங்களாம். உனக்கு வேணுமா.''

''வேணாம் முனியம்மா, இருக்கு.''

''அப்ப வரேன்.''—கிழவி தெருவில் இறங்கி நடந்தாள்.

''யாரு இது.''

''முனியம்மா.''

''பேர் தெரியுது. யாரு, எதுக்கு வரா, என்ன விஷயம்.''

''ரேஷன் கார்டு நாலஞ்சு வச்சிருக்கா. சர்க்கரை, ரவை கூட ஒரு ரூபா வச்சுத் தருவா. வியாபாரம் முடிஞ்சு உக்காந்து பேசிட்டுப் போவா.''



''எதுக்கு ஒரு ரூபா கூட குடுக்கற. நம்ம ரேஷன் சர்க்கரை...''

''பத்து நாளுக்கு வராது. எதிர் கடைல மூணு ரூபா அதிகம். அதான் இவகிட்ட வாங்கறது...நல்ல மாதிரி.''

''திருட்டு ரேஷன் கார்டா?''

''ஏதோ ஒண்ணு.''

''சட்டமா உள்ள வரா...''

''பேசிக்கிட்டிருப்போம்.''

''என்ன பேசுவீங்க?''

''உலக விஷயம்.''

''அடேங்கப்பா.''

''எல்லாம் கிளம்பிப் போயிடுவீங்க. போரடிக்குமில்ல...வந்து உக்காந்து ஏதாவது சொல்லுவா. தான் பெத்தது, வளர்த்தது ஊர்க்கதை எல்லாம் பேசுவா. சில சமயம் இங்கியே தூங்கிடும்.''

''உள்ள பூந்து பாத்திரம் தூக்கிட்டு போறதுக்கா?''

''சே! முனியம்மாவுக்குத் தெரியாது அதெல்லாம். வாழ்ந்து கெட்ட மனுஷி. நம்ம ஜாதிதான். தலையெழுத்து, இடியாப்பம் விக்கிறா.''

''ஏன் இப்படி?''

''புருஷன் வுட்டுட்டுப் போயிட்டான். பசங்க தறுதலைங்க. இவ இன்னும் அல்லாடறா. போன வருஷம் புருஷன் வந்து சேர்ந்துக்கிட்டான். கால் விளங்கலை. அவனுக்குக் கூட இருவது இடியாப்பம் விக்கிறா.''

''கஷ்டமில்ல, இந்த வயசுல போய்.''

''அடடா...ஊர் கஷ்டம் கேக்க கேக்க நம்ம நிலைமை ரொம்ப சௌக்கியம்னு படும் எனக்கு''

''இப்ப நம்ம நிலைமையும் இடியாப்ப கேஸ் மாதிரி ஆயிட்டுருக்கு.''

''காலைல எழுந்தவுடனே அஞ்சு நிமிஷம் நேத்தி கேட்டது கனவா, நனவா.. ஒன்றும் புரியலை. பல்லு தேச்சு நிமிர்ந்த பிறகு ஐயோன்னு போயிடுச்சு.''

''பயப்படாத சரசு?''

''வந்துருச்சு. இந்த நிலைமை வந்திருக்க வேணாம் இப்ப வந்துடுச்சு. சமாளிக்கலாம் வாங்க.''

''இந்நேரம் கம்பெனில ரெண்டு வண்டி முடிஞ்சிருக்கும். மூணாவது டயர் மாட்டிக்கிட்டு இருப்பான்.''

''குளிக்கிறீங்களா?''

''பசங்க இல்லன்னா வெறிச்சுன்னு இருக்கு இல்ல. மூணு மணிக்கு வருமா.''

''மூணரையாயிடும். உடம்புக்கு முடியலேன்னா வெந்நீர் போட்டுர்றேனே.''

''முதுகு தேச்சு வுடு''

''இது என்ன புதுப்பழக்கம்.''

''பேசிக்கிட்டே குளிக்கலாமில்ல. அரக்கப் பரக்க ஊத்திக்கிட்டு கிளம்ப வேணாம்.''

''எங்கயாவது வெளிய போணுமா.''

''இன்னிக்கு இல்ல. ஒரு வாரம் வீட்ல தண்டச் சோத்துத் தடிராமனா இருக்கப் போறேன். இருக்கலாமில்லையா. இப்படி ஹான்னு இருந்ததேயில்லை சரசு.''

''என் ராசா... ஒரு வாரம் என்ன, ஒரு வருஷம் இருங்க''—நெற்றி வழித்து நெட்டி முறித்தாள்.

சொல் பலித்தது.

ஒரு வாரம் கழித்து கம்பெனியிலிருந்து க்ராஜுவிடி காசோலை இருபதாயிரம் வந்தது ப்ராவிடன்ட்



ஃபாண்ட் மொத்த கணக்கு இருபத்தி ஐந்தாயிரம் கணக்கு காட்டிற்று.

குழந்தைகள், தகப்பனுக்கு வேலை போனதைக் கேட்டு வருத்தத்தோடு கட்டிக் கொண்டனர்.

''எனக்கு தீபாவளிக்கு ஒரு கவுன் போறும்பா. பட்டெல்லாம் எடுக்க வேணாம்.''—பெண் காதோடு பேசினாள்.

''அதெல்லாம் ஒரு குறையும் வைக்கமாட்டேன் தாயி.''—பதட்டமாய் அணைத்துக்கொண்டான். ''இப்ப என்ன வேணும் சொல்லு.''

''இங்கிலீஷ் அட்லாஸ் கிழிஞ்சு போச்சப்பா''

''அப்புறம்.''

''வாட்ச் வாங்கித் தரியா... நிறைய பசங்க கட்டியிருக்கு.''

''அப்புறம்.''

''போறும்.''—சரசு இடை புகுந்தாள்.

''ஆடம்பரம் வேணாம்கறது சரிதான். ஆனா அவசியத்துக்குக்கூட காசு இல்லேன்ற தகப்பனா என்னால இருக்க முடியாது. வாட்ச்தானே . நான் வாங்கித் தரேன். போடா.''

ஒரு சனிக்கிழமை விடுமுறையில் மனைவியும் குழந்தைகளுமாய் மவுண்ட்ரோடு, என்று சுற்றினார்கள். வீட்டுக்கு அவசியம் என்று இரும்பு பீரோ வாங்கினார்கள். பெரிய நிலைக்கண்ணாடி, பிளாஸ்டிக் பக்கெட், மடக்கு சேர், மனைவிக்குப் புடவை, பெண்குழந்தைக்கு வாட்ச், பையனுக்கு நாலு அரை நிக்கர், பனியன்கள், சின்னதாய் விளையாட்டு பொம்மை, இங்கிலீஷ் அட்லாஸ்...

வீடு குதூகலத்துடன் வந்தது. வழியில் ஹோட்டலி லேயே இரவு உணவு முடிந்தது.

''ரொம்ப தூக்கியடிச்சு செலவு பண்றீங்க''

''இருக்கு. பண்றேன்.''

''வேற வேலை கிடைக்க வேணாமா?''

''அடுத்த வாரம் டிராக்டர் கம்பெனி போறேன். பஸ் கம்பெனி போறேன். அங்க ஆளுங்க தெரியும் அதிகாரிங்க தெரியும்.''

போனான்.

''மிஸ்டர் பரமசிவம், நீங்க நல்ல ஃபோர்மன். கேள்விப்பட்டிருக்கோம்.''

''எந்த ஆட்டோமொபைல் வேலையும் நல்லா செய்வேன் சார்.''

''ஆனா ஃபோர்மனா முடியாது.''

''ஸ்கில்டு வொர்க்கரா கொடுங்க சார், போதும்.''

''தரலாம். ட்ரேட் யூனியன் லீடராச்சே நீங்க.''

''சார்.''

''இங்க பாலிடிக்ஸ் வந்துரக் கூடாதே, இருக்கற லீடரையே சமாளிக்க முடியலை.''

''நான் லீடரா இருந்தது ஒரு ப்ளாக் மார்க்கா சார்.''

''யெஸ், எங்க கம்பெனி பொறுத்தவரைக்கும்.''

திரும்பினான்.

''மானேஜ்மெண்ட் ட்ரெயினியா போவீங்களா, ஸ்டைஃபண்ட் அறுநூறு ரூபா.''

''பதினேழு வருஷம் சர்வீஸ் சார் எனக்கு. எங்க போகணும்.''

''பீஹார்ல. புது ப்ளாண்ட் ஆரம்பிச்சிருக்கோம்.''



''ஸ்டைஃபண்ட் ரொம்ப குறைச்சல் ஐயா.''

''அவ்வளவுதான் செய்ய முடியும் பரமசிவம். டக்குன்னு நல்ல வேலைய விட்டுட்டீங்களே. இப்ப வேலை கிடைக்கறது கஷ்டமாச்சே...''

''இங்க ஸெமி ஸ்கில்டா சேர முடியாதா?''

''கஷ்டம்.''

''மஸ்தூரா... ஹெல்பரா...''

''எல்லா வேலையும் தெரிஞ்சவரை மஸ்தூர் வேலைக்குச் சேர்த்தா எங்களுக்கு அவமானம்...''

திரும்பினான்.

''எங்க யூனியன்கிட்ட பேசினோம். உங்களை அவங்க விரும்பல.''

''ஏன் சார்''

''முதலாளிக்கு வேண்டியவங்கதான் இங்க யூனியன் லீடர்.''

''அதனால என்ன சார்?''

''உங்களைப் பத்திக் கேள்விப்பட்டிருக்காங்க. பரமசிவம் வந்தா யூனியன் உடையும்கறாங்க. உடையாத யூனியன். போட்டியில்லாம தேர்ந்தெடுக்கப்படற லீடர்தான் எங்களுக்கு வேணும்.''

''நான் யூனியன்ல ஈடுபடலேன்னு எழுதித் தரேன் சார்.''

''ஸாரி! அவங்க விரும்பல.''

''யார் சார்...''

''எங்க யூனியன். அதாவது முதலாளி.''

''தாங்க்யூ சார்!''

திரும்பினான்.

புரிந்துவிட்டது. தலைவனைத் தொண்டனாகக் கூட எங்கேயும் சேர்க்க மாட்டார்கள். அரசனை அடிமையாய் யாரும் சேர்க்கமாட்டார்கள். ஒருநாள் இல்லையெனினும் ஒரு நாள் அடிமையாய்ச் சேர்த்த அரசன் ஆளுமைக்கு வந்து விடலாம். சிங்கத்தைக் கூண்டில் அடைத்து வளர்த்தாலும் சீறும். சற்று பிடி நெகிழ சிதற அடிக்கும். வேலியில் அமர்ந்த ஓணானை விலைக்கு வாங்குவானேன்.

இந்த ஊரில் நிச்சயம் வேலை கிடைக்காது. கிடைத்தாலும் மதிப்பிராது.

வேறெங்காவது போனால் என்ன?

கடல் தாண்டிப் போனால் என்ன?

சவுதி அரேபியா...

விளம்பரங்கள் புரட்டினான். விவரங்கள் சேகரித்தான். பாஸ்போர்ட் ஆபீஸில் போய் தவம் கிடந்தான். அங்கு ஏஜெண்டுகளை பார்த்து பேசினான். ஏஜெண்டுகள் பல இடங்களுக்கு அழைத்துப் போனார்கள்.

ஜப்பான் கம்பெனி கார்களை டெலிவரிக்கு முன் சர்வீஸ் செய்யும், சோதனை ஓட்டம் நடத்தும் சவுதி அரேபியா கம்பெனிக்கு இங்கேயே ஆட்கள் எடுப்பதாய் தெரிந்தது. அங்கே போனான்.

வாசலில் கூட்டம் நெரித்தது. பட்டறைகளில் வேலைசெய்யும் பையன்கள் முதல் சொந்தப் பட்டறை வைத்திருக்கும் பெரிய ஆட்கள் வரை அங்கே தென்பட்டார்கள். லாரி கம்பெனி ஃபோர்மன் கூட வந்திருந்தான்.

இவன் முறை வரும் வரை காத்திருந்தான். தன் சான்றிதழ்களைக் காட்டினான்.

விமானடிக்கெட், விசா, நோ அப்ஜெக்ஷன், சர்டிபிகேட், மருத்துவச் சான்றிதழ், செக்யூரிடி தொகை



என்று பதினைந்தாயிரம் கேட்டார்கள். பத்து நாளுக்குள் கட்ட வேண்டும் என்றார்கள். நேரே பாங்க்குக்கு ஓடி, பணம் எடுத்து உடனே கட்டினான். வரும் மாதம் ஏழாம் தேதி கிளம்பலாம் என்றார்கள். தயாராகச் சொன்னார்கள்.

குழந்தைகள் குதித்தன.

சரசு கவலைப்பட்டாலும் நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள்.

இங்கிலீஷ் அட்லாஸ் திறந்து எல்லோரும் சவுதி அரேபியாவைத் தேடினார்கள். ''மெட்ராஸ்லேர்ந்து கரெக்டா ஒரு ஜாண் தாம்பா தூரம்...'' என்று பையன் அளக்க, சிரித்தார்கள்.

சிரிப்பாய் சிரிக்கப் போகிறோம் என்று தெரியாமல் சிரித்தார்கள்

மாதம் ஆறாயிரம் ரூபாய் சம்பளம் என்கிற கனவு இருபதே நாளில் உடைபட்டது.

தனி குவார்ட்டர்ஸ், புகைக்கலாம், குடிக்கலாம் பெண் விஷயம் மட்டும் கூடாது என்று கேள்விப்பட்ட போது இது எதுவுமே என்கிட்ட இல்லை என்கிற புன்னகை சிதறி போயிற்று.

கைக்குட்டை, ஜட்டியிலிருந்து புதிதாய்த் தைத்துக் கொண்ட சஃபாரிசூட்வரை பல்தேய்க்கும் பிரஷ்ஷிலிருந்து தினசரி கும்பிட சின்னதாய் வாங்கின சாமி படம் வரை அர்த்தமற்றுப் போயிற்று.

## 15

ஏரோப்ளேன் கனவுகள் கடலில் இறங்கின. ''ஒரு வருஷம் என்ன செய்வீங்க தானில்லாத!''—சரசு முனகினதற்கு, ''இப்ப செய்யறதை நினைச்சக்க வேண்டியதுதான்'' என்று கிறங்கினதை மறுபடி நினைக்க அவமானமாயிற்று.

'ஆட்கள் சேர்க்கும் மோசடிக் கும்பல்—பதினெட்டு லட்சம் அபேஸ்—போலீஸ் வலைவீச்சு...'—மேலோட்டமாய்ப் படித்துப்போட்ட பேப்பரை ஏதோ உள்ளுணர்வு தூண்ட மறுபடி புரட்டினான். தான் காசு கொடுத்த இடம்தான் என்று தெரிந்ததும் நெஞ்சில் கல் விழுந்தது.

சட்டை போட்டு சைக்கிளை எடுத்து விரைகையில் நூறு பேர் கூட்டம் அந்த அலுவலகத்தில். குண்டூசி கூட இல்லை. வெற்றுத் தரையை போலீஸ் சுற்றி வந்து கொண்டிருக்க வயிற்றில் அமிலம் ஏற்றும் பல விஷயங்கள் காதில் விழுந்தன.

பங்களூரில் ஏமாற்றியவனே பம்பாயில் ஏமாற்றியிருக்கிறான். பம்பாயில் ஏமாற்றியவன்தான் சென்னையிலும்.

''துட்டு கொடுத்த முட்டாபசங்கள்ளாம் தனித் தனியா பிராது எழுதிக் குடுத்துட்டுப் போ.''

''என்ன சார் எழுதறது!''

''நான் எழுதித் தரேன். கையெழுத்துப் போடு. பத்து ரூவா வச்சிருக்கியா!'' எரிகிற வீட்டில் பிடுங்கப் பட்டது.

''தி நகர்ல ஒருத்தர் பறக்கற படை வச்சிருக்கார். இப்படிப்பட்ட ஆளை மடக்கிப் புடிச்சுடுவார். நகைக் கடை திவாலாச்சு. கண்ணுல விரல் வுட்டு நோண்டிட்டாங்க. பேர்பாதிப் பணம் திரும்பிச்சு. எல்லாம் அங்க போலவும் வாங்கய்யா.''

தியாகராய நகர் ஆள் சகலமும் கேட்டார். கேட்ட பிறகு எழுந்து நின்று திட்டினார் :

''ஆத்திரம் ஆறாயிரம், ஏழாயிரம் சம்பாதிக்கணும்னு ஆத்திரம். ஒரு ஆளுக்கு அத்தினி காசு எதுக்குய்யா. வீடியோ பெட்டி, டி.வி. செட், சென்ட் பாட்டில், புடவை கொண்டாந்து கொட்டணுங்கற ஆத்திரம் ஏன். நூல் புடவை கட்டினா நிக்காதா.



நம்மூர் டிவில படம் தெரியாதா. ஊர்ல கால் ஊன்றத் துக்கு கத்துக்கணும்யா ஒருத்தன்.''

பரமு உள்பட கூட்டம் வசவுகளை மௌனமாய் வாங்கிக் கட்டிக்கொண்டது.

ரிஜிஸ்டரில் பெயர், விலாசம் எழுதி விட்டுக் கலைந்தது.

சரசு இடிந்து அழுதாள்.

குழந்தைகள் அழுதன.

அண்டை வீடுகள் துக்கம் கேட்டன. அறிவுரை கூறின.

பரமு பி.எஸ். என்கிற பரமசிவம் ஃபோர்மன் அஸெம்பிளி — ஆயிரம் பேருக்குத் தலைவனாயிருந்த புருஷன் மல்லாந்து விழுந்தான். சகல நேரமும் தாடையில் கை வைத்து உட்கார்ந்திருந்தான்.

சரசு கந்தசஷ்டிக் கவசம் சொன்னாள்.

பசியற்று, தூக்கம் அற்று, பலமற்று அந்த வீட்டுத் தலைவன் சுருண்டு கிடந்தான்.

இரவு மனைவி மெல்ல தோள் வருட ''ப்ச்சு... என்னை தனியா விடும்மா, தொந்தரவு செய்யாதே...''

ஆதரவே வேண்டாம் என்று ஒடுங்கினான்.

''இன்னிக்குக் கொடிநாள் அப்பா. எட்டணா வேணும்.''

''என்கிட்ட காசில்லை. அம்மாகிட்டே போய்க் கேளு, போ.''

போலீஸ் தொடர்ந்து வலை வீசிக்கொண்டிருந்தது. ஒரு ஆள் சிக்கினான். எதிர்பார்ப்பு ஜாமீனில் வெளியே வந்தான். வந்தவனை, கோர்ட் வாசலில் காசு இழந்த கூட்டம் மடக்கிற்று.

''உங்களால் ஆனதைப் பாருங்கடா...'' —சவால் விட்டான்

''உங்க ஒருத்தன் கிட்டயும் நான் ஒரு பைசா வாங்கல சாமி சத்தியமா வாங்கல. நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது '' பறையறிவித்தான்.

கூட்டம் கைமுஷ்டி மடக்கி சட்டையைப் பிடித்த போது, லேசான தடியடி நடத்தி போலீஸ் அவனைக் காபந்து பண்ணிக் கூட்டிப் போயிற்று.

இது என்.

குளக்கரையில் உட்கார்ந்து ஆடி அமாவாசைக்கு இறைக்கிற என்.

அந்தப் பதினைந்தாயிரம் என்னுடையதில்லை. என் காசில்லை. நான் உழைத்துச் சம்பாதித்ததில்லை.

தேர் மலை விளிம்புக்கு வந்துவிட்டது. இனி திரும்பி வேறு பாதை தேடவேண்டும்.

தேர் துவண்டு திரும்பிற்று, லகானை மடியில் போட்டு விட்டு, தேர்ப்பாகன் வாய் பொத்தி உட்கார்ந்திருந்தான்.

உள்ளே அவன் குடும்பம் வானம் பார்த்து உட்கார்ந்திருந்தது.

இனி எங்கு போக —

என்ன செய்ய —

எவ்வளவு தூரம் —

''நான் பொட்டிக்கடை வைக்கட்டுமா சரசு.''

''எங்க.''

''வேலையில்லா ஆட்களுக்கு உதவி செய்யறவங்களைக் கேட்டு, ஒரு காபிக் கடை அல்லது பொட்டிக் கடை வச்சா என்ன.''



சரசு அவனை வெறித்துப் பார்த்தாள்

''சிங்கம் நோய்ப்பட்டால் முஞ்சூறாய் கத்துமா.''

''கத்துதே...''

''செருப்பு தைப்பீங்களா''

''என் சரசு''

''அதுக்கு உதவி தரேன்னா சின்னுடுவீங்களா''

''தைக்கிறது கஷ்டம் சரசு. கத்துக்கணும்''

''சீ''

''ஏன்... என்ன தப்பு''

''தப்புக்கு சொல்லலை. பதினேழு வருஷம் வேலை செஞ்சு ஃபோர்மனா வெளியே வந்தவரு செருப்பு தைக்கிற நிலைமைக்குப் போவணுமா.''

''அதான் வெத்தலை பாக்குக் கடை...''

''ஐயா, உங்களுக்குப் பெரிய மனசு, தொழில்ல பேதமேயில்லாத மனசு, நான் அப்படியில்லே வேற விதமா வளர்ந்தவ. பசிச்சாலும் புல் தின்ன மாட்டேன்.''

''வேறு என்ன செய்யறது திருடலாம். கொள்ளையடிக்கலாம். கூட்டிக் கொடுக்கலாம். இதுக்குப் புல் திங்கறது உத்தமம் இல்லையா''

''இல்ல. இது எதுவுமே உத்தமம் இல்ல.''

''பிழைக்க வழி கேட்டா குறுக்கே வந்து மறிக்கிறியே சரசு.''

''மறிப்பேன். ஒவ்வாத வேலை செஞ்சா மறிப்பேன்.''

''எனக்கு வேற வேலை எங்க கிடைக்கும். எல்லா விதத்திலேயும் முயற்சி பண்ணி முறிஞ்சு போயிருக்கேன்.''

''உங்களுக்குக் கிடைக்கலேன்னா என்ன.''

''புரியல.''

'எனக்குக் கிடைக்கும்.''

' செருப்பு தைக்கிற வேலையா''

''நோ...''

''அட...''

''என்ன அட...''

''விவரமா சொல்லு.''

''பதினாலு வருஷம் முன்ன நான் வேலை செஞ்ச இடத்திலேயே—அதே பெயிண்ட் விக்கிற கம்பெனி. எங்கப்பாருக்கு ரொம்ப வேண்டியவங்க. க்ளார்க் வேலை... கஷ்டம் ஒண்ணும் இல்லை...''

''நான் என்ன பண்றது.''

''உங்களுக்கு நல்ல வேலை கிடைக்கிற வரைக்கும் வீட்டோட இருங்க.''

''என்னாது...''

''ஏன்... என்ன தப்பு.''

''நான் எதுக்கு வீட்டோட இருக்கறது.''

''பசங்களை யார் பாத்துக்குவா.''

''நீ ஒண்ணும் வேலைக்குப் போக வேணாம்.''

''போனா என்ன.''

''பசங்களை யார் பாத்துக்கறது.''

''நீங்க பாத்துக்கங்க.''

''உளறாத சரசு.''

''பசங்களைப் பாத்துக்கத்தான வேலைய விட்டேன். இப்ப போனா என்ன நிலைமை கஷ்டம்தானே நமக்கு.''



''கஷ்டம்தான். ஆனாலும் எனக்கு மனசு ஒப்பலை.''

''ஏன்?''

''பொம்பளைய எதுக்கு வேலைக்கு அனுப்பறது... அவளை அனுப்பிட்டு நான் வீட்டோட இருக்கறதாவது... சே... ச்சே...''

''என்ன தப்புங்கறேன்.''

''ஊர் சிரிக்கும்.''

''சரி. ரெண்டு பேரும் எதிரும் புதிருமா உக்காந்து பரமபதம் ஆடலாம். ஊர் சோறும் போடும்.''

''நடக்கறத காரியமா சொல்லு.''

''இது நடக்கற காரியம்... மனசு வச்சா.''

''யார் மனசு வைக்கணும்.''

''நீங்க...''

''நடுவுல எனக்கு வேலை கிடைச்சா.''

''அத அப்ப பாத்துக்கலாம்.''

''எனக்கு வேலையே கிடைக்காதுங்கறியா.''—பாமு கத்தினான்.

''ஏன் கோவப்படறீங்க.''

''ப்ச்சு. எனக்கு ஒரு கோவமுமில்லை.''

''கோவம்தான். வீட்ல உக்காருங்கறாளே பெண்டாட்டிங்கற கோவம். ஆம்பளை கோவம். என்னை வேலைக்கு அனுப்பறதைவிட தான் சும்மா இருக்கணுமேங்கற கவலையினால வர்ற கோவம்.''

''கவலைதான் சரசு.''

''பசங்களை யார் பாத்துக்குவா சொல்லுங்க.''

''வாஸ்தவம்.''

''அதுக்க வேளைக்கு சோறு இல்லாத பூட்டின கதவுக்கு முன்னாடி காத்துக்கிட்டிருக்கணுமா.''

''உங்கம்மா வரமாட்டாங்களா கொஞ்ச நாள்.''

''எதுக்கு வரணும்? உங்களை விடவா எங்கம்மா உசத்தி.''

''உனக்கு வேலை கிடைக்குமா?''

''உடனே வேணாலும் வான்னு சொல்லிட்டாங்க''

''எவ்வளவு?''

''ஆயிரம் ருபா... மாசம்.''

''போறுமா.''

''ஒண்ணுமில்லாததுக்கு ஆயிரம் பெரிசில்லையா.''

''எங்க இடம்?''

''டவுன். கோட்டைக்குப் பின்னாடி.''

''யம்மா! எவ்வளவு தூரம்.''

''சீஸன் டிக்கெட் எடுத்துடலாம். எட்டரைலேர்ந்து அஞ்சரை.''

''எப்ப கேட்ட இத்தினியும்.''

''நேத்து காத்தால—''

''டாக்டர் கிட்டல்ல போறேன்ன—''

''மடக்கிடுவீங்களோன்னு பயம்!''

''பொய் சொல்ல ஆரம்பிச்சிட்டியா?''

''நெஜம் சொல்லட்டுமா.''

''சொல்லு.''



''மூவாயிரம்தான் இருக்கு பாங்குல. இந்த ப்ராவிடண்ட் ஃபண்ட் எப்ப வரும்னு தெரியாது. அந்த மூவாயிரம் எடுத்தா ஒண்ணரை மாசம் வரும் அப்புறம்...''

''அதுக்குள்ள பி. எஃப் வந்துடும்.''

''சரி. அதுக்கப்புறம்—''

''ஏதாவது வழி பொறக்கும்.''

''இது வழியா தெரியலையா?''

பாமு மௌனமாய் இருந்தான். எழுந்து சட்டை போட்டுக்கொண்டு வெளியே போனான்.

பாண்டியன் வீடு நோக்கி நடந்தான்.

முழு விவரமும் பாண்டியனிடம் சொன்னான்.

''கோவிந்தனைப் பார்க்க முடியுமா பாண்டியா?''

''எதுக்குத் தலைவரே?''

''எங்கியாவது எனக்கு சிபாரிசு பண்ணி வேலை போட்டுத் தரச் சொல்லி...''

''இதுக்கு செருப்புக் கடையே வச்சுரலாமே தலைவரே...''

''நிலைமை ரொம்ப கஷ்டமாயிடுச்சு பாண்டியா.''

''அண்ணி இப்போதைக்கு வேலைக்குப் போகட்டும். தப்பில்லை. நான் சீக்கிரம் ஒரு இடம் சொல்றேன்.''

''அது வேணாம்னுதானே உங்கிட்ட வந்தேன்.''

''சரி, என் பி எஃப்-ல லோன் போட்டு ஆறாயிரம் தரேன். வச்சு கொஞ்ச நாள் ஓட்டுங்க. அதுக்குள்ள வேற வேலை கிடைக்குதா பாப்பம்—''

''வேணாம் பாண்டியா...''

''என் தலைவரே.''

''உங்க அண்ணியே வேலைக்குப் போகட்டும்.''

''நான் சந்தோஷமா தரேன், தலைவரே வாங்கிக்கங்க'

''எனக்கு சந்தோஷமில்லை பாண்டியா.''

''என் தலைவரே?''

''புல் தின்ன முடியாது.''

''பிரிச்சுப் பேசறீங்களே.''

''வாயும் வயிறும் வேறதானே.''

மெள்ள எழுந்து வெளியேறினான் வீடு திரும்ப மனசில்லை. இருட்டிற்று. தாம்பரம் ஸ்டேஷன் பெஞ்சில் நெடுநேரம் உட்கார்ந்திருந்தான். கடைசி வண்டி போயிற்று. எழுந்து வீடு வந்தான். வராண்டாவில் உட்கார்ந்திருந்த சரசு விளக்கைப் போட்டு, தட்டு வைத்தாள்.

''பசிக்கல. சோறு வேணாம்'' என்று படுக்கையில் சரிந்தான்.

சரசு தட்டுக்கு எதிரே உட்கார்ந்து அழுதாள்.

''பொண்ணு வேலைக்குப் போவுதாம். அறுநூறு ரூவா சம்பளமாம் இஷ்டப்பட்டா மேற்கொண்டு வேலைக்குப் போவும். வேணாம்னா பாக்கு வெத்திலை மாத்தின அன்னிலேர்ந்து நிறுத்திடறோம்னாங்க.''— அம்மா, சரசுவைப் பெண்பார்த்து வந்த மறுநாள் விஷயம் சொன்னாள்.

## 16

''நிறுத்தச் சொல்லு.''

''நல்ல வேலைன்னாங்க.''

' அப்புறம் பொங்கிப் போடறது யாரு?''

30192



''வேலைக்குப் போற பொண்ணுங்க ஊர்ல ஆயிரம் இருக்கு. பொண்டாட்டியா குடித்தனம் பண்றாங்க?''

''வீட்டோட இருக்கட்டும்'' என்றேன்.

''வீட்டுப் பொம்பளை வேலைக்குப் போய் அக்கடான்னு களைச்சு வர்றதப் பாத்தா எனக்குக் கஷ்டமா இருக்கும். பொண்டாட்டிய பூ மாதிரி வச்சுக்கணும்.''

''அடடே...''—அம்மா, பொக்கை வாய் திறந்து சிரித்தாள். கண்கள் விஷமத்தில் மின்னின. ''பொங்கறதும் பெருக்கறதும் புருஷனே பண்ணிடணும்கறே.''

''அது அவ வேலைதான். ஆனா, புருஷன் கூடமாட உதவி செய்யலாம்.''

''ரெண்டு பேருக்கு பொங்கப் போறா. அதுக்குகூட மாட ஒத்தாசையா.''

''நாளைக்குப் பசங்க பொறந்துட்டா.'

''என் ராசா...ம்... எனக்கு வந்து வாய்ச்சிருக்கே ஒண்ணு...'' வெட்ட வெளியை வழித்து நெட்டி முறித்தாள்.

''ஏம்மா... அப்பா நல்லாத்தானே வச்சிருக்காரு உன்னை.''

''நின்னவாக்குல எச்சக் கை கழுவுற மனுஷன். எட்டு உடம்பொறப்பு. அதுல மூணு தங்கச்சி. மாத்தி மாத்திப் புள்ள பேறுக்கு வந்துடுவாளுங்க.''

''ரெண்டுக்கு மேல பெத்துக்கக் கூடாதும்மா.''

''அப்ப வசதியில்லையே— பப்பாளிக் காய்க்குப் பேயா அலைவமே. நெல்லு குத்தினா கலைஞ்சிரும்னு வாங்க. மூச்சு வுடாம மூட்டை நெல்லு குத்துவோம்.''

—அம்மாவும் பிள்ளையும் ஏகமாய்ப் பேசுவார்கள். அந்தப் பேச்சில் இலைமறை காயாய்க் கண்ட, பெண் ஸிம்சையைப் புரட்டிப் புரட்டி மனசில் பரமு பதித்துக் கொண்டான்.

''ஆத்தா, மொத நிமிர்ந்து என்னைப் பாரு. அப்புறம் மெட்டிபோட பேசலாம். இது நான் பெத்து வளர்த்த புள்ளை. நாலு வயசு வரைக்கும் பால் குடிச்சவன். பன்னெண்டு வயசு வரை மடில படுத்தவன். வேலைக்குப் போன பிறகுதான் சோறு பிசைஞ்சு கையில் போடறதை நிறுத்தினேன். அவனுக்குத் தாயாராகவும் நீ இருக்கணும் இவனைப்புள்ளையா நினைச்சுத் தலையக் கோதினா போதும். தாயா காலைச் சுத்திக்கிட்டிருப்பான். அம்மா அம்மானு பேசறான்னு அச்சப்பட்டுறாதே. நீதான் இனி அவனுக்கு அம்மானு காட்டிடு போதும்... ஊர்கட்டி மேய்ப்பான். என் காலம் முடிஞ்சிடுச்சு. இனி அவன் உன் சொத்து.''

—ரயில் வண்டி நிலையத்தில் மருமகளை அணைத்துக் கொண்டு அம்மா தழுதழுக்க, பரமு துக்கம் தாளாமல் உர்ரென்று நின்றிருந்தான்.

''ஏங்க... அம்மா அத்தினி இஷ்டமா.''

''ம் ம்...''—பிரிவு வேதனையில் பிள்ளை உறுமிற்று.

''ஊருக்குப் போன உடனே எனக்கு மூக்கு குத்திக்கணும் ''

''ஏன்?''

''உங்க அம்மா மாதிரி மூணு கல்லு போட்டுக்கணும்.''

''ப்ச்சு.''

'ராத்திரிக்கு தனித் தனியா தக்காளி சாதம் பொட்டலம் கட்டிக் குடுத்திருக்காங்க. ரெண்டையும் ஒண்ணா கலந்துரட்டுமா...''



''எதுக்கு?''

''பிசைஞ்சு கையில போடறேனே...'' பிள்ளை சிரித்தது.

அம்மா காதோடு சொல்லித் தந்த அஸ்திரப் பயிற்சியை இடைவிடாது பழகி, ஆறே மாதத்தில் புருஷனை வீழ்த்தினாள். அவன் நெஞ்சில் களிநடம் புரிந்தாள்.

''ஒண்ணுக்கு ரெண்டு பெத்தாச்சு. ஒண்ணும் கட்டி வரலை. இருவது தேதிக்கு பாத்துப் பாத்து சமைக்க வேண்டியிருக்கு நானும் வேலைக்குப் போனேன்னா பால் பவுடர் செலவுக்குன்னாச்சும் ஆகும். பொண்ணு வேற பெத்திருக்கோம்.''

''பசங்க...''

' உங்கம்மாவை வரச் சொல்லுங்க...''

''வயசான காலத்தில அவங்களைக் கஷ்டப்படுத்த வேணாம்.''

''ஆயா போட்டுரலாமா?''

''அப்புறம் அவன் இனிஷியல் போட்டுக்க மட்டும் நீயும் நானுமா பேசாத கிட....பால் பவுடர் வேணும்னா என்னைக் கேள். பட்டுப் புடவைக்கு அலையாத இருந்தேன்னா போதும்.''

''அதுவும்தான் வேணும்.''

' முடிஞ்சபோது வாங்கித் தரேன்.''

இடையே ஒரு காலகட்டம் தடுமாறத்தான் செய்தது. கம்பெனி வளர்ந்து பெரிதானவுடன் ஃபோர்மேன் என்று இவனுக்குப் பதவி உயர்வு கிடைத்தவுடன் வருமானம் அதிகரித்தது. வயிறாரச் சாப்பாடு, சீரான உடை, கொஞ்சம் காசு கிடைத்தால் உல்லாசம் என்று போயிற்று. பாத்திரங்கள், சிறிய அளவில் நகைகள் என்று வாங்க முடிந்தது.

வீட்டில் மகிழ்ச்சி ததும்பிற்று. புருஷன் அலுப்பு தீர்க்கவும் குழந்தைகளைப் பொறுப்பாகப் பார்க்கவும் மனைவி இருந்த சௌகர்யத்தில் சிடுசிடுப்பே மறந்து போயிற்று. இங்கிதம் வளர, வளர தலைவன் பதவி தானாய் மலர்ந்தது. கூடுதலாய் உழைக்க முடிந்தது.

இப்போது சரசு வேலைக்குப் போகிறேன் என்கிறாள். குழந்தைகளுக்கு டப்பாவில் அடைத்துக் கொடுத்துவிட்டு, ஆறு மணிக்கு சூரியன் சரிகிறபோது வந்து சமையல் துவங்கப் போகிறாள். பசித்துத் தவிக்கிற குழந்தைகளை, 'பத்து நிமிஷம் உக்காருங்க' என்று அதட்டி விட்டு அதுகளைத் தட்டோடு காத்திருக்க வைத்து, அடுப்பிலிருந்து அரைவேக்காடாய் இறக்கிப் பரிமாறப் போகிறாள். சாயந்திரம் பசிச்சா, ஆளுக்கு நாலணா பிஸ்கட் சாப்பிடுங்க என்று முடித்து விடப் போகிறாள். குழந்தைகள் பசிக் கடுப்பில் மோதிக்கொள்ளும். ஒன்றையொன்று பிறாண்டும். ஆத்திரமாய் வளரும்.

இப்படிக் குழந்தைகளை வளர்ப்பதற்குப் பதில் கொன்று போடலாம்.

'நீ பாட்டி வீட்ல இருந்து படி' என்று பிரித்துப் போடலாம்.

மூலைக்கு ஒருவராய்ப் பிரிந்து ஒருவரையொருவர் நொந்து கொள்ளலாம். குற்றம் சாட்டலாம். பிரிந்து நெடுநாளைக்குப் பிறகு கூடுகிறபோது கூடப் பொருமல் தாங்காமல் குறை சொல்லி அழலாம்.

வாழ்க்கை அழுகையாய், ஆபாசமாய்ப் போக இதைவிடச் சிறந்த வழி எதுவுமில்லை.

ஆனால், வேறு வழி?

மனைவி சம்பாதிக்கப் போனால் வேறு கதி...? இந்தக் குடும்பக் குலைவைத் தடுக்க வேறு வழி?



பெட்டிக்கடையில் என்ன வருமானம் வரும். இருபது மணி நேர வேலை அது. சூதாட்டம் அது பிடித்தாலும் பிடிக்கும், கைவிட்டாலும் விடும். கூட இன்னொரு வருமானம் தேவைப்படும்.

மண்டை குழம்பிற்று.

அம்புகளுக்குத் தப்பி அகழியில் குதிக்க, முதலையோடு போராட்டம் துவங்கி விட்டது. இந்தப் போராட்டம் குழந்தைகளையும் பாதிக்கும். தகப்பனும் தாயும் மூலைக்கு ஒன்றாய் ஓட, குழந்தைகள் ஒவ்வொரு செயலுக்கும் இடம் வலம் தேடித் தவிக்கும். குதூகலம் மறைந்து குழம்ப நேரிடும். பாடத்தில் கவனம் சிதறும்.

கடவுளே, நானே தலைவனாய் இருந்திருக்க வேண்டாமோ...என் வெற்றி. என் வீரம் என்று பதக்கம் தேடிப்போரில் இறங்கி விட்டேன். ஜெயித்தால் எனக்கு மட்டும் பதக்கம். தோற்றாலும் என குழந்தையுமல்லவா அழுகிறது

குழந்தைகளை அழவிடக்கூடாது.

எதன் பொருட்டும் அவர்கள் நிம்மதி குலையக் கூடாது.

போகட்டும்...சரசு வேலைக்குப் போகட்டும்...

நான் வீட்டிலிருக்கிறேன். இந்த யுத்தத்தில் காயம் ஆறும். என் வீரப்பிரதாபங்கள் மெல்ல மெல்ல மறக்கப்படும். நான் போராளி என்கிற பேச்சே அழியும். அதுவரை மௌனமாக இருந்து விட வேண்டும்.

முட்டி முட்டி வேலைக்கு அலைந்து அவமானப்படுவதைவிட, குழந்தைகளைப் பேணுவதே முழுநேர வேலையாய் அமையட்டும்.

இது அஞ்ஞாத வாசம்—தலைமறைவு வாழ்க்கை. பாண்டவர்கள் இருந்தார்களே...வலிவு மிக்க அர்ச்சுனன் பெண் சொல்லி சொல்லி எதிரியை வீழ்த்தியவன்.

களைக் கவர்ந்தவன். மகாபுருஷன்...பெண் வேடமிட்டுப் பேடியாய் வாழ்ந்தானே. அது போல இருப்போம்.

தன் திமிர் அத்தனையும் கரைத்துவிட்டு சகல துன்பங்களையும் அவமானங்களையும் ஒருமித்துத் தாங்கியிருக்கிறான்.

மேஜை தட்டிப் பேசிய யூனியன் லீடர் இன்று எத்தனை வண்டி போடலாம் என்று தீர்மானித்த ஃபோர்மன், நாலுபேரை வேலைக்கு வைத்துக் குடும்ப விளக்கேற்றிய வள்ளல், கை நீட்டிக் கேட்ட பொருளைக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்த தகப்பன், புதுச் சேலை உடுத்தி மனைவி வலம் வர, இழுத்துச் சேலை அகற்றிய புருஷன்...எல்லா ஆளுமையும் போகும். போகட்டும். எல்லா வேஷமும் கலைத்துப் புதுவேஷம் போடலாம். சரசு வேலைக்குப் போகட்டும். எழுந்து பின்பக்கம் போய் விட்டு வாசலுக்கு வந்து சாய்வு நாற்காலியைப் பிரித்து உட்கார்ந்து கொண்டான். வெளியே மெல்ல மேகங்கள் நகர, நிலவு எதிர்ப்பக்கம் நகர்வதாய்த் தோன்றிற்று.

உள்ளே காலடிச் சத்தம் கேட்க, ''சரசு?'' என்று குரல் கொடுத்தான்.

லதாக்குட்டி தூக்கக் கலக்கமாய் எழுந்து வந்தாள்.

''தாயி, என்னடா...'' விலுக்கென்று எழுந்து குழந்தையைப் பற்றிக் கொண்டான்.

''நீ தூங்கலையாப்பா...''

''இல்லேடா கண்ணு. சும்மா உக்காந்து நிலா பாத்துக்கிட்டிருக்கேன்.''

''உனக்கு வேலை போயிடுச்சுன்னு ரொம்ப கவலையா இருக்காப்பா.''

''இல்லியே?''

''சாப்பாட்டுக்குக் கஷ்டம் வந்துடுமாப்பா...?''



''யார் சொன்னது!''

''அம்மா சொன்னாங்க. தின்ற சோத்துல மண்ணு விழுந்திருச்சுன்னு.''

''அவ கிடக்கா. கொஞ்சம் கஷ்டம் வந்தாக்கூட ரொம்ப அலட்டிக்குவா.''

''காசு வேற ஏமாத்திட்டாங்க இல்ல...''

''சம்பாதிச்சுக்கலாம் தாயி.''

''நானும் வேலைக்குப் போட்டுமாப்பா.''

''நீ... வேலைக்கு... எதுக்குடா. என்ன வேலை செய்வ...''

''தீப்பெட்டி செய்ற வேலைப்பா வர்ற வழில ஆட்கள் தேவைன்னு தினம் போட்டுருக்கும்.''

''சீ போ. நாங்க இருக்கச்சொல்ல நீ எதுக்குப் போணும் வேலைக்கு.''

''அம்மாவை வேலைக்குப் போகக் கூடாதுன்னு சொல்லிட்டியே.''

''அதனால...''

''நான போறேன். போற நிலைமை வந்தா போய்த் தான் ஆவணும்னாங்க.''

''யாரு?''

''அம்மா...''

சட்டென்று ஒரு கோபம் தலை உச்சிக்கு ஏறிற்று. பற்கள் கடிக்கப்பட, கன்னக் கதுப்புகள் புடைத்தன. 'முட்டாள்...' உள்ளிருந்து சீற்றமாய் வார்த்தை பொங்கிற்று.

''அம்மாவைத் திட்டாதப்பா.''

''தாயி, போய்த் தூங்கு. காலைல எழுந்து ஒழுங்கா பள்ளிக்கூடம் போ.''

''நீயும் வாப்பா...''

''நீ போய்ப் படும்மா.''

''அவங்க வரமாட்டாங்க லதா. நிலா பாக்க தாங்கல்ல... நீ வா...''

உள்ளேயிருந்து சரசுவின் குரல் கேட்டது.

ஆக, அவளும் இத்தனை நேரம் தூங்கவில்லை. தூங்கும் குழந்தையை எழுப்பிப் பேச வேறு விடுகிறாள்.

''சரசு, எழுந்து வந்தேன்... பிச்சுடுவேன்... ஒரு அளவோட நிறுத்திக்க எதையும்.''

''ஆமா, இந்த வீறாப்புல குறைச்சல் இல்லை. நீ வாடி வந்து படு.''—குழந்தையின் பாவாடையை எட்டிப் பற்றி அது நிலைகுலைய, இழுத்துப் படுக்கையில் போட்டாள்.

''சரஸ்வதீ...?'' விருட்டென்று எழுந்து உள்ளே போனான்.

''ஏன் இழுக்கற குழந்தைய அப்பிடி.''

''என்ன இழுத்துட்டாங்க.''

''அடம்புடிச்சுப் பாக்கறியா என்கிட்ட...''

''அடம்புடிச்சுப் பாக்கல. நாளைக்கு சோத்துக்கு என்ன வழின்னு பாக்கறேன்.''

''ஒரு மிதி மிதிச்சேன்னா பொணமா போயிடுவ.''

''இப்படிச் சுருண்டு படுக்கறதுக்கு, போயிடறது பெட்டர்.''

''போ நாயே, போ...''

உட்கார்ந்திருந்தவளை நெட்டித் தள்ளினான். பெண் குழந்தை ''அம்மா!'' என்று கூவி, மல்லாந்து விழுந்த தாயைக் கட்டிக் கொண்டது. அவள் குரல்



கேட்டுப் பிள்ளை திடுக்கிட்டான். மிரண்டு ஒரு கணம் முழித்தான். அக்காவும் அம்மாவும் அணைத்துக் கொண்டு அழுவதைப் பார்த்து அவனும் வீறிட்டு அழுதான்.

பாமுவுக்கு உலகம் சுழன்றது. நடுங்கியபடி குழந்தைகள், சிற்றத்துடன் நிற்கும் தகப்பனைப் பார்த்தன.

வறுமையின் முதல் படி இதுதான். இந்த ஆபாசம் தான். பாமு அயர்ந்தான்.

தெளிவின்மை, தெளிவேயில்லாத மயக்கமான நேரம் இதுதான் என்னசெய்கிறோம் என்கிற நிதானம் முற்றிலும் அழிந்த நேரம் இதுதான் கடவுளே. இப்படி ஒருநேரம் இந்த வீட்டில் உண்டா. இது தேவைதானா.

அமைதியாய் இரு பாமு. அமைதியாய் இரு. உள்ளே குரல் கேட்டது. பிள்ளையைத் தாயிடமிருந்து மெல்ல எடுத்துத் தன் மார்பில் போட்டுக்கொண்டு படுக்கையில் படுத்தான். பிள்ளை தழுவி இறுக்க, அமைதியானான்.

' நான் சின்னப்பலேர்ந்தே அந்தகம்பெனி எங்களுக்குப் பழக்கம். உக்காந்து விவரம் சொன்னதும் 'உனக்கில்லாத வேலையா... வாம்மா'ன்னுட்டாங்க பெரிய வேலை ஒண்ணுமில்லை. டெஸ்பாட்ச், ஃபைல் போடறது. கேட்ட பேப்பரைத் தேடிக் கொடுக்கறது...''

''என்ன செய்யறாங்க அங்க...''

''பெயிண்ட் வியாபாரம். மொத்தமா விக்கிற இடம் லோடு எண்ணி இறக்கறதும் ஏத்தறதும் செய்யணும்...''

''பளு தூக்கணுமா.''

''ஆள் தூக்கும். என்ன போவுது. எத்தினி போவுதுன்னு கூட இருந்து எண்ணி...''

## 17

''தலையெழுத்தா இது...''

''எம்பா அறுத்துக்கறீங்க...''

''கிளம்பி அரை மணி நேரம் ஆச்சு... இன்னும் பாதி தூரம் கூட வரலை...''

''நாப்பத்தஞ்சு நிமிஷம்.''

''நெரியுது ஜனம்.''

''லேடீஸ் கம்பார்ட்மெண்ட் வசதி. நீங்க கூட வந்ததால இதுல ஏறிட்டேன்.''

''மின் வண்டி அதிகக் குலுக்கலுடன் ஸ்டேஷன் இல்லாத இடத்தில் அலைந்தது. அசுரத்தனமாய்க் கீறிச்சிட்டு வழுக்கிக் கொண்டுபோய், ஆட்கள் முன்னும் பின்னுமாய்ச் சாய, விதிர்த்து நின்றது.

ஒரு பக்கம் நீளச்சுவர், மறுபக்கம் குடிசைகள்... எல்லா ஜனங்களும் எட்டி எட்டிப் பார்க்க,

ஆள் அடிபட்டுப் போச்சு—யாரோ குரல் கொடுத்தார்கள். ஜனங்கள் இறங்கி இன்ஜின் பக்கம் போக, ஆவலுடன் பரமுவும் குதித்தான்.

''ஐயோ, நீங்க எதுக்கு... மறுபடி ஏர்றது கஷ்டம் படிக்கட்டா இருக்கு... எலெக்ட்ரிக் ட்ரெயின்.''

''என்னன்னு பார்ப்பமே.''

''தற்கொலையா இருக்கும் எம்பா அதைப்போய்—''

''ஏறுங்க சார்... வண்டி கிளம்பப் போவுது. இழுத்து ஓரம் போட்டுட்டாங்க. ஏறுங்க.''

''என்ன விஷயம்?''

—பார்த்தவரைக் கேட்க, ''தெளிவான சூயிஸைட் கேஸ். லெட்டர் எழுதி கவர்ல போட்டு, பிளாஸ்டிக் பேப்பர் சுத்தி, வண்டி முன்னால விழுந்திருக்கான்.''

''என்னவாம் சார்.''



''என்ன—வறுமை, கடன், பொண்டாட்டி பிடுங்கல், காதல் தோல்வி—நாலுல ஒண்ணு...''

''நாப்பது வயசு ஆளு. ஒரு தாலி அறுத்து தொங்குதோ. எந்தப் புள்ளை அப்பனில்லாத அழியப் போகுதோ—தெரியலை.''

''ஏற்கனவே ஆறு நிமிஷம் லேட் வண்டி, எதுக்கு நிறுத்தி எழவெடுக்கிறான். சே!''

பரமு நாணி உள்ளே ஏறினான். முதுகு ஒரு முறை ஒடிந்து அதிர்ந்தது. விபத்து நடந்த இடம் தாண்டும் போது வெறும் கை மட்டும் பாதையோரம் கிடப்பது தெரிந்தது. முகம் திருப்பிக் கொண்டான். எவளுக்கோ தாலி கட்டின கை, எவரையோ கும்பிட்ட கை, எதற்கோ கரகோஷம் செய்த கை எந்தக் குழந்தையையோ தடவி இறுக்கிய கை அநாதையாய் மண் புழுதியில் கிடக்கிறது. சற்று முன் இது சட்டைப் பித்தான் போட்டிருக்கும், தலை சீவியிருக்கும், முகம் அலம்பியிருக்கும். வேட்டி வரிந்து கட்டியிருக்கும். இப்போது வானம் பார்த்துக் கிடக்கிறது. என்னால் முடியாது இனி என்று விரித்துக் கிடக்கிறது. மான அவமானமெல்லாம் பார்த்துப் பார்த்து பட்டுப் பட்டுத் தாங்க மாட்டாது தனியே பிரிந்து கிடக்கிறது.

பரமு, தன் கையை விரித்துப் பார்த்துக் கொண்டான். மெல்ல இறக்கி சரசுவின் இடக்கையோடு பிணைத்துக் கொண்டான். இறுக்கினான்.

எது வரினும் எவ்வளவு துயர் வரினும் பிரியாமல் வாழ்வோம் சரசு என்று உறுதி சொல்லிக்கொண்டான்,

சரசு, கம்பெனி முதலாளிக்கு அறிமுகப்படுத்தினாள்.

ஜார்ஜ் டவுனில் பரம்பரையாய் வசிக்கும் தெலுங்கு நாயக்கர்கள் போல் முதலாளியின் பேச்சு தெரிந்தது. வேண்டுமென்றே தமிழ் உச்சரிப்பில் தெலுங்கு கலந்து பேசும் ஆவல் தெரிந்தது

நெற்றியில் ஒற்றைத் திருமண். வெள்ளை மீசை வைரமோதிரம். வெங்கடாஜலபதி படம். காசே பிரதானம் என்கிற பேச்சு. இது கம்பெனி இல்லை. கடை. பெயிண்ட் மொத்தமும் விற்கும் கடை. கோடவுன் வாசலில் சிறிய அறை மறுபக்கம் தடுப்பு போட்டு மூன்று நான்கு மேஜை நாற்காலி...மிச்சமெல்லாம் கட்டாந்தரை சரக்கு அடுக்குகிற இடம்.

வயதான கணக்கு குமாஸ்தா. இரண்டு ஆபீஸ் பையன்கள். மூன்று பெண் குமாஸ்தாக்கள். இவ்வளவு தான் கம்பெனி.

சரகவை விட்டுவிட்டு மறுபடி மின்வண்டி பிடித்து வீடு வந்தான் பாமு. சாவி போட்டுக்கதவு திறந்தான்.

சாய்வு நாற்காலியைப் பிரித்து உட்கார்ந்தான் எழுந்து குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான். மறுபடி உட்கார்ந்தான். தலையணையைத் தட்டித் தரையில் போட்டு மல்லாந்து கிடந்தான். வாரப் பத்திரிகை தேடி எடுத்து இரண்டு பக்கம் படித்தான். கண் மூடித் தூங்க முயற்சித்தான். முடியவில்லை. இருப்பே கொள்ளவில்லை.

எழுந்து கண்ணாடி முன் நின்று முகம் பார்த்தான். இரண்டு நாள் தாடி தெரிந்தது. சோப்புக் கிண்ணத்தில் தண்ணீர் எடுத்து வந்து நிதானமாய்க் குழைத்து முகம் முழுவதும் பூசிக்கொண்டான். 'எதுக்கு இப்ப ஷேவிங். வேணாம். தாடி இருக்கட்டும்.' துண்டால் அழுத்தித் துடைத்தான்.

'சரி— ஆரம்பிச்சுட்டம். முடிச்சிருவோம்.' மறுபடி தண்ணீரில் பிரஷ்ஷை முக்கி நிதானமாய் முகம் முழுவதும் தடவி...

அயர்ந்தது.

சே! என்று உள்ளே ஒரு வெறுப்பு படர்ந்தது.



பகல் பதினோரு மணிக்கு நிதானமாய் சிரைத்துக் கொண்டிருக்கிறேன். என்ன புருஷன் நான். வேதனை பொங்கிற்று.

''யம்மாவ்''—வாசல் கதவை யாரோ கைவிட்டுத் திறப்பது தெரிந்தது.

''யாரது''—அதட்டினான்.

இடியாப்பக் கிழவி மிரண்டு பின்வாங்கினாள்.

''அம்மா இல்லீங்களா''

''இல்லை.''

''எங்க''

''வேலைக்குப் போயிருக்கா.''

''என்ன வேலைக்கு. ரெண்டு மூணு நாள்ல நான் வேலைக்குப் போயிடுவேன். நீ அப்பப்ப வூட்டை எட்டிப் பாத்துட்டுப் போ மூளியம்மா''ஞ்சு. அதான் கேட்டேன்.''

''எப்ப சொல்லிச்சு''

''எனக்கு நினைவு இல்லை.''

''இப்படிக் கம்பிக்குள்ள கைவிட்டுத் திறக்காத. எனக்குப் பிடிக்காது.

''தெரிஞ்ச வீடுன்னுதான் திறக்கறேன். தெரியாத இடத்துல போய் நிப்பமா''

''என்ன வேணும்''

''அம்மா இல்லீலேர்ந்துதான் வேலைக்குப் போவுதா''

பாமு ஒரு கணம் தடுமாறினான்.

''ம்ம்...''

''உனக்கு ஒண்ணும் ஆப்படலையா''

''இல்லை.''

''அப்ப நான் வரேன். எதுனா வாங்கியாரணுமா''

''வேணாம்மா''

''எதுனா வேணும்னா கூச்சப்படாத கேளு. ஓடியாடின ஆம்பிளை... வூட்டோட இருக்கிறது கஷ்டம் தான். ஒரு நாள் விடியாதயா போயிடும். குடித்தனம்னா தடுக்கலும், தாங்கறது வரத்தான் செய்யும். உம் பொண்டாட்டி தங்கமான மனசுக்கு ஒரு குறையும் வராது. வந்தாலும் பொசுக்குனு அத்தினி குறையும் ஓடிப் போயிடும். கண்ணு திருஷ்டி...கலைக்கப் பாக்குது. உரமா தின்னுடணும். வுடுவேனான்னு ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சு நிக்கணும்.''

''எதுனா சாப்பிடறியா முனிம்மா.''

''வேணாய்யா. இப்பதான் டீ குடிச்சேன். நீ சாப்பிட்டியா''

''இல்லை.''

''பசங்க வந்துருமே ஒரு மணிக்கு. சோறு ஆக்கி வச்சுட்டுப் போயிருக்கா. நான் பலகாரம் ஏதாவது வாங்கியாரவா''

யாரிவள்...எதற்கு இந்த உறவு. ஏன் இந்தக் கரிசனம். இது அன்பா...கேலியா. இது நட்பா... குத்தலா. இது விசாரிப்பா...விளையாட்டா.

பரமு அயர்ந்தான்.

''ரொம்ப அழுதுச்சு சரசு. எனக்கு இப்பிடி ஒரு நிலைமையா முனியம்மான்னு அழுதுச்சு. நான் முதுகு தடவி சமாதானப்படுத்தினேன். முனீஸ்வரனுக்கு மஞ்சத் துணில துட்டு முடிச்சிருக்கேன்.''

''எதுக்கு''



''உனக்கு வேலை கிடைக்கணும்னு.''

பரமு ஆடினான். இந்த அன்பு தாங்கமுடியாமல் தவித்தான். இவ்வளவு இரக்கம் சுமத்தப்படுவது கண்டு மிரண்டான். இது பழக்கமே இல்லை. வழங்கித்தான் பழக்கமேயொழிய வாங்கியதில்லை. கூசிற்று. தலை குனிந்து தரையை வெறித்தது.

''நான் வரேன்யா... எதுனா வேணும்னா கூச்சப் படாத கேளு. கதவு தொறக்க மாட்டேன் வாசல் லேர்ந்தே குரல் குடுக்கிறேன். என்ன வேணும்னாலும் செய்றேன்... உம் பொண்டாட்டி குணத்துக்கு...''— பேசியபடி வெளியே நடந்தாள்.

பரமு துண்டால் மறுபடி சோப்பு நுரையைத் துடைத்தான். நாளைக்கு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்தான். கதவு விரியத்திறந்தான். பிள்ளைகள் வரவுக்கு காத்திருந்தான்.

சரியாய் ஒன்று பத்து. பையனும் பெண்ணும் ஓடி வந்தார்கள். ''அப்பா''— பையன் தொலைவிலிருந்து கூவினான். தோள் பையை வராண்டாவில் வீசிய விட்டுத் தந்தையை நோக்கி எகிறிப் பாய்ந்து கட்டிக் கொண்டான். பெண் பின்னாலேயே வந்தாள். குனிந்து அப்பாவின் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள்.

''சாப்பிட்டியாப்பா''

''இல்லடா.''

''வா சோறு போடறேன்.'' பையை ஆணியில் மாட்டி விட்டு சமையலறைக்குப் போனாள்.

''கோபி, கைகால் கழுவுடா. சாப்பாடு போட றேன்.''

''இரும்மா இப்பதான வெயில்ல வந்தே... கொஞ்சம் உக்காரு காத்தாட... அப்புறம் சோறு போட லாம்.''

''அம்மா சொல்லியிருக்குப்பா.''

''என்னது''

''வந்து படுத்துடாத... வீட்டு வேலை முக்கியம் அப்பாவுக்குச் சோறு போட்டுட்டு மத்ததைக் கவனின்னு...''

''உங்கம்மா உதைபடப் போறா...''

''ஏம்பா?''

''உன்னைச் சோறு போடச் சொல்லிட்டு வேலைக்குப் போயிருக்கு பார்.''

''சே, பாவம்பா...''

''என்ன பாவம்.''

''ஏன், நான் சோறு போட மாட்டேனா, பதிமூணு வயசு ஆவலையா எனக்கு. அம்மாவத் திட்டாதப்பா. ரொம்ப அழுவுது.''

''நான் இருக்கச் சொல்ல உன்னை சோறு போடச் சொன்னது தப்பில்லையா.''

''பொம்பளங்கதான் சோறு போடணும்.''

''யார் சொன்னது.''

''அம்மா.''

''ஏய், தட்டு வச்சு உக்காரு. உங்க ரெண்டு பேருக்கும் நான் சோறு போடறேன். வாய் திறக்காத சாப்புடு.''

''நானே போடறேம்பா.''

''ஏண்டா''

''எனக்கு ஆசையா இருக்கு...''

பரமு சிரித்தான்.



''சரி. நீயும் உக்காரு லதாக் குட்டி. எல்லாருமா சாப்பிடலாம்.''

குழந்தை, அவனுக்கும், தம்பிக்கும் பரிமாறி, தானும் தன் கலத்தில் இட்டுக்கொண்டது.

''அப்பா, உனக்கு இங்கிலீஷ் தெரியுமா?''

''கொஞ்சம் தெரியும்.''

''ஏழாம் பாடம் புரியலை, கொஞ்சம் சொல்லித் தரியா?''—பெண் கெஞ்சிற்று.

''எனக்கு கணக்கு டெஸ்ட்ல தொண்ணூறு மார்க்.'' பையன் கூவினான்.

''மிச்சம் பத்து எங்கடா?''

''என்னால எழுதறதுல ஒரு தப்பு. குறைச்சுட்டாங்க.''

''என்ன தப்பு?''

''நாற்பதாயிரங்கறதுக்கு ஒரு ஜீரோ வுட்டுட்டேன்.''

''ஏண்டா?''

''சரியா கண்ணு தெரியலப்பா...''

''என்ன கோபி?''

''நேர வெயிலடிக்குது.''

''தள்ளி உக்கார்றதுதானே.''

''போர்டுக்கு மேல வெயில், சாக்பீஸ்ல எழுதினது தெரியலை, தப்பா எழுதிட்டேன்.''

''என்னா நேரம் ஒக்.''

''ஒண்ணுமேயில்லை.''

''பொய் சொல்ற.''

''நிசமா. சாமி சத்தியமா. அப்பா, சாயந்திரம் வெளிய போகலாமா ஒரு ரவுண்ட்.''

''வேணாம் கோபி.''

''டேய், அப்பாவத் தொந்தரவு செய்யாதேன்னு அம்மா சொல்லியிருக்காங்கல்ல...'' பெண் அதட்டினாள்.

''அம்மா எப்ப வரும்?''

''ஆறு மணிக்கு.''

''அப்ப காபி?''

''ஏன்? நான் போட்டுத் தரேன்...'' பெண் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டாள்.

''உனக்கு காபி போடத் தெரியுமாப்பா?''

''கத்துக்கணும். லதாக்குட்டி சொல்லித் தரும் அப்பாவுக்கு.''

''ஏம்பா, ஹெர்குலிஸ்தான உலகத்துல பலசாலி?''

''இருக்கும்.''

''ப்ருஸ்லீன்னு சொல்றானே என் கிளாஸ் பையன்.''

''ப்ருஸ்லீயும் பலசாலிதான்.''

''ஏம்பா, உனக்கு கராத்தே தெரியுமா?''—பையன் கைவீசிப் பேச, சமையலறை முழுவதும் சோற்றுப் பருக்கை தெறித்தது.

பாத்திரம் எடுத்து வைத்த பெண் துணியைச் சுருட்டிப் படுக்கை திரட்ட, பாதி தரையில் தேய்ந்தது. நடக்கையில் பாதத்துக்கு அடியில் பிசுபிசுத்தது. சாருவின் நறுவிசு இல்லாதது முதல் நாளே உணர முடிந்தது.

நாலு மணிக்குக் குழந்தைகள் புடைசூழ பம்ப் ஸ்டவ் அடித்துப் பற்ற வைத்தான். பக்கென்று இரண்டடி உயரம் நெருப்பு எரிய பின்வாங்கினான். பழக்கமின்மையாலும், பதட்டத்தாலும் அதிகம் வியர்த்தான். காபி போட்டுச் சகலரும் குடித்த பிறகு குளித்தான்



சாரு வரும் நேரம் தெரிந்ததும் எழுந்து கவனமாய் ஸ்டவ் ஏற்றிப் பாலைக்கட வைத்தான். வாசலில் அவள் குரல் கேட்டதும் உள்ளே நகர்ந்து காபியைக் கலந்து ஹாலுக்கு வந்தான். காபி டம்ளரோடு ஹாலுக்கு வந்த புருஷனைக் கண்டு வாய் பொத்தி சாரு வியந்தாள். ''ஐயோ, எனக்கு இது!'' என்று வெட்கப் பட்டாள். அந்த வெட்கத்தில் அன்றைய கஷ்டம் கரைந்து போயிற்று.

''எலெக்ட்ரிக் ட்ரெயினா, ஜூஸ் பிழியற மெஷினா தெரியலை. என்னா கூட்டம், என்னா கூட்டம்'' எழுதித் தரேங்க. மெட்ராஸ் பொம்பளைக்கு வெட்கம் செத்துப் போன இடமே ரயில்வே ஸ்டேஷன்தான் 'ணங்'குன்னு ஒரு இடி தோள்பட்டைல. யாரோ ஆம்பளைதான் இடிக்கிறான்னு அச்சப்பட்டு நகர்ந்தா, பொம்பளைங்க தபதபன்னு நாலுபேர் தாண்டிட்டாங்க. பல்லாவரம் வரைக்கும் நின்னுக்கிட்டுதான் வந்தேன்... டிகாஷன் லதாக்குட்டி இறக்கிச்சா? ஃபில்டர்ல அழுத்திப் பொடியை அடைக்கணும், தூளா இறங்கிடுச்சு.''

''காலைல நீ போட்டுட்டுப் போனதுதான் சாரு.''

''நல்லா அடைச்சு வச்சேனே பொடியை.''

''கொஞ்சம் போலும் வெந்நீர் ஊத்திக் கலந்து இது லேர்ந்துதான் ஊத்தினேன்.''

''கடவுளே, பொடி அடைச்ச இடத்துலேர்ந்தா டிகாஷன் எடுப்பாங்க. அடிப்பக்கப் பாத்திரத்துலேர்ந்து துல்ல! ஐயா...! என்ன, அடிப்பக்கம் காலியா இருக்கு.''

''அதான் டிகாஷனா... கஷ்டகாலம்.''

''ஏன்?''

## 18

''நேரால ஊத்திட்டேன் ஏதோ நினைப்புல. இதுல ஃபில்டர் பண்ணி இங்க டிகாஷன் வருதா?''

''ஒரு ரூபா டிகாஷன் போச்சா. உங்களுக்கு ஏன் இந்த வேலையெல்லாம், நான் போட்டுக்க மாட்டேனா காபி...''

''சரி களைச்சு வருவியே, ஒரு வாய் காபியாவது போட்டுக் குடுக்கலாமேன்னு...''—பரமு வழிந்தான்.

''போவுது வுடுங்க. இன்னொரு டிகாஷன் இறக்கிக் குடிச்சாத்தான் வாய் நொற நொறப்பு போவும், ஏண்டி லதா, டிகாஷன் எதுன்னு தெரியாது உனக்கு...எங்க அவ மாடிக்கு விளையாடப் போயிட்டாளா. என்ன ஒட்டுது தரையெல்லாம்...''

''மத்தியானம் சாப்பிட்டோம் லதா கொஞ்சம் அழுத்தித் தொடச்சுடுச்சு.''

''ஏய் லதா—இங்கே வா...!''—சரசு மாடியை நோக்கி குரல் கொடுத்தாள்.

''அதை விரட்டாத சரசு, பாவம்!''

''ஒத்தைக்கு ரெட்டை வேலையா போச்சு—பாருங்க இந்த இடத்தைத் தண்ணி ஊத்திக் கழுவினாத்தான் நிக்கவே முடியும். பதிமூணு வயசு எருமைக்கு எச்சல் எடுக்கத் தெரியலை ''

''எனக்கே தெரியலை... அவ எங்க செய்ய...''

''பொட்டப்புள்ளை செய்யணும்தான் இனிமே அவ நிறைய வேலையெல்லாம் செய்யணும்.''

''வுடு சரசு குழந்தைதானே...''

''இப்பலேர்ந்து பழகினாத்தான் உண்டு. எத்தினி நாளைக்குக் குழந்தை குழந்தைன்னு கொண்டாட முடியும் நாளைக்கு மாமியார் வூட்டுக்குப் போனா என்னைல்ல காறித் துப்புவாங்க.''

'என்னம்மா, கூப்பிட்டியா. என்ன சீக்கிரம் சொல்லு'' குழந்தை மூச்சிரைக்க எதிரே வந்து நின்றாள் கூந்தல் பறந்து வியர்வையில் நனைந்து தாறுமாறாகக் கிடந்தது.



''ஏண்டி தலை பின்னலை ''

''போரடிக்கு, காலைல பின்னிக்கிறேன் பேர.''

''நாலுமணி ஆச்சுன்னா தலை அவுத்துப் பின்னிக்க வேண்டியதுதானே...''

''முன்னாடி மட்டும்சீவி ஒதுக்கிவுட்டேன். எல்லாம் அது போறும் போ.''

''லதா... இது உதவாது. உன்னை நம்பி வீட்டை விட்டுப் போறேன் தடிப்பயலாட்டம் ஆடாதே ''

''பாதி கேம் முடிஞ்சிருக்கும்மா.''

''இடிச்சேன்னா...அவுருடி தலையை 'சரசு உரக்கக் கத்தினாள்.

குழந்தை விக்கித்து நின்றது.பரமு வேதனையோடு நின்றான்.

''சரசு, அது ரெண்டுங் கெட்டான்— அதுக்கிட்ட போய்...''

''சும்மா இருங்க. ஏண்டி, பத்து திரட்டின லட்சணமா இது. எத்தினி தடவ சொல்லிக் குடுத்திருக்கேன். ஆடு முழுக்க கசமாக்கி வச்சிருக்கியே.''

''அப்பாதான் 'போறும், விளக்கமாத்தால தள்ளி வுட்டுரு'ன்னாங்க.''

''உனக்கு உடம்பு வணங்கல. அதச்சொல்லு. சரி, அசங்காத நில்லு''—பின்னலைப் பிரித்து உதறி, பிறையிலிருந்து சீப்பு எடுத்து அழுத்தி வாரினாள். பின்னல் போட்டு ரிப்பன் சேர்த்தாள் முடிச்சு இட்டாள். ''முகத்தைக் கழுவிட்டு.காய் நறுக்கு நான் இல்லாதப்ப வீட்டு வேலை எல்லாம் நீதான் செய்யணும். தின்னப்

புறம் தட்டைக் கழுவனும். பாத்திரம் ஒழிச்சுப் போட னும் சாப்பிட்ட இடத்தை மொழுவனும். கணக்கு தோட்டு முழுக்க பென்சில்ல கோலம் போட்டிருக் கியே... சாயங்காலம் வாசல்ல தண்ணி தெளிச்சு சின்னதா ஒரு கோலம் போடக்கூடாது?''

''எனக்கு மாவுல வராது. வூட்ல சாக்பீஸ் இல்லை.''

''ம்ம்... சாக்பீஸ்ல கோலம் போட்டு, செருப்புக் காலோட குளி. கொட்டிக்க மட்டும்தான் தெரியும்...''

''சரசு, என்னப்பா சிடுசிடுன்ற...''

''இதை நம்பி வெளிய போறேன். இப்படிப் பண் றாளே...''

''சும்மா இருங்க. இதுல நீங்க தலையிட வேணாம். எனக்கும் அவளுக்கும் உண்டானது. என்னிக்குத்தான் கத்துக்கறது.'' —அரிவாள்மனை எடுத்துக் கூடத்தில் வைத்து, பெண்ணை உட்கார்த்தினாள்.

''ஒரு காலை மடக்கி, மறுகாலைக் குத்திட்டு உக்காரு.''

''எப்படிம்மா - இப்பிடியா?''

''சீ...! இறக்குடி பாவடையை சாணி தட்டறவ ளாட்டம் உக்கார்றியே. இடது காலை மடி. வலது காலை குத்திடு. மடிச்சகால் கீழ் அரிவாமணையைக் குடு. ஏய்... நான் என்ன சொல்றேன்...நீ என்ன செய் யறே. சொல்றதை முதல்ல காதில வாங்கிக்க ஒழுங்கா. கஷ்டகாலம்... தூக்குடி காலை... அரிவாமணையை விடு.''

குழந்தை, மடித்த வலது காலை மெல்ல விலக்கி அரிவாள்மணைக்கு மேல் நீட்டினாள். பாதம் சரசுவின் முகம் நோக்கி நின்றது.



''வெளியே போய் இப்பிடிக் காலைத் தூக்கினே— குக்கக்காரக் குடித்தனம்னு என்னையும் எங்க ஆத்தா வையும் சேர்த்துத் திட்டுவாங்க.''

''ஏம்மா கெட்ட வார்த்தைல திட்டற.''

''எத்தினி தடவை பாத்துருக்க நான் காய் நறுக் கறதை...''

''பதறாத சொல்லிக் குடு சரசு. ஏன் கத்தற?''

ஒவ்வொரு வெண்டைக்காயாய் குழந்தை நறுக் கிற்று. முன்னும் பின்னும் அசைந்து அசைந்து. ஒவ் வொரு நறுக்கலுக்கும் பெரும் பிரயத்தனப்பட்டது.

''பாத்தும்மா, விரலை வெட்டிக்கப் போற...''பாமு குழந்தை நறுக்குவதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''அரிவாமனை கூர் இல்லைப்பா. வெட்ட மாட் டேங்குது. ஏம்மா... இதைக் கடைல குடுத்துத் தீட்டிக் கிட்டு வரட்டா...''

''ம்... ஆடத் தெரியாத...''

''சரசு, அதிகமா போற... ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணா ஒரு பொண் குழந்தை— என்ன பேச்சு இது. கெட்ட வார்த்தையாலே...''

''குடு. அரிவாமணையை. எழுந்து போ... எக்கேடோ கெட்டுஒழி.'' 'சரக் சரக்'கென்று வெண்டை துண்டுபட்டது. மூன்று நிமிஷத்தில் கால் கிலோவும் நறுக்கப்பட்டுத் தலையும் வாலும் தனியே திரட்டப் பட்டன. சரசு உள்ளே போனாள்.

''லதா, குப்பைய நீ திரட்டிப் போட்டுரும்மா. அம்மா அலுப்புல வந்திருக்காள்ல.''

குழந்தை குப்பையைத் திரட்டினாள். ''அப்பா, இதை சுவத்துல ஒட்டி உன் பேர் எழுதட்டுமா...''

''வேணாம். அம்மா அதுக்கு வேற கத்தும். இன்னிக்கு அது 'மூட்'ல இல்லை. இன்னொரு நாள் செய்துக்குவோம்.''

''நாம தனியா இருக்கறப்ப எழுதலாம்பா.''

சோறு பொங்கி, வீடு கழுவி, உள் வேலை முடிந்து சரசு குளித்தாள். தலையை முடிந்துகொண்டு ஸ்வாமி படத்துக்கு எதிரே விளக்கேற்றினாள். குழந்தைகள் பாடம் படித்தபடி உட்கார்ந்திருந்தனர். பரமு வெறுமே வெளியில் நின்றுகொண்டிருந்தான். இரவு நேர மாநிலச் செய்திகள் கேட்டான்.

பசித்தது.

உள்ளே வந்து எட்டிப் பார்க்க, சரசு தலையணை வைத்து முகத்தைத் துண்டால் மூடிப் படுத்துக் கிடந்தாள்.

''என்ன லதா, அம்மா தூங்கிடிச்சா?''

''தலை நோவுது— சத்தம் போடாதீங்கன்னு சொல்லிப் படுத்துச்சப்பா...''

''பசிக்குதா, நான் சோறு போடட்டுமா?''

''வேணாம். அம்மா திட்டும்.''

''சரி கொஞ்சம் போவட்டும்.''

''எனக்குப் பசிக்குதே...''—பையன் அம்மாவை நோக்கி நடந்தான்.

''டேய் வேணாம்' எழுப்பாதே பாவம். அலுப்பா இருக்கும். இரு நானே போடறேன். மூச்சுக் காட்டாத தின்னுட்டு படுக்கப் போயிடணும்... என்ன—''

''நான் சோறு போடறேம்பா.''

''வேணாம் லதா... தரைல சிந்தினா மறுபடி திட்டு வாங்குவே.''



''நான் போடலைன்னாலும் திட்டுமே.''

''நான் போடறேன். யார் போட்டதுன்னு கேட்டா லதான்னு சொல்லிடறேன். சரியா...''

குழந்தை தலையாட்டியது. சப்தம் போடாமல் சாப்பிட்டார்கள். சிதறிக் கிடந்த பருக்கைகளை ஒன்று விடாமல் பரமு திரட்டினான். பாத்திரங்களை எடுத்து மூடி வைத்தான். சாப்பிட்ட தட்டுக்களை ஓசையெழாமல் அலம்பினான். அலம்பியவற்றை லதா அடுக்கி வைத்தாள். அடுப்பு மேடையைத் துடைத்து சுமாராக ஒரு கோலம் போட்டாள்.

படுக்கையை மெல்ல தட்டிப் பிரித்துப் போட, குழந்தைகள் படுத்துக்கொண்டன. சிறிது நேரம் கதைப் புத்தகம் படித்தன. பரமு காபி ஃபில்டரைத் திறந்துப் எப்படிப் பொடி அடைக்கப்பட்டிருக்கிறது என்று பரிசோதித்தான். சரசு புரண்டாள். விருக்கென்று எழுந்தாள்.

''மணி என்னடி?''

''ஒன்பது பத்து''

''ஒன்பது பத்தா, ஏண்டீ என்னை எழுப்பக் கூடாது...?''

''அப்பாதான் எழுப்ப வேண்டாம்னு சொன்னாங்க''

''சாப்பிட்டீங்களாடீ... சாஞ்சுட்டீங்க...''

''சாப்டாச்சு''

''யார் போட்டா சோறு.''—சரசு எழுந்து நின்றாள் தடுமாறினாள். ''மண்டையிடி. அசந்துட்டேன். எழுப்பக் கூடாது?''—சுவரைப் பிடித்தபடி சமையலறைக்குப் போனாள்.

''லதாதான் பரிமாறிச்சு சரசு. எனக்குப் பசிச்சது சாப்பிட்டோம்.''

"யார் கோலம் போட்டது?"

"லதாதான்."

"ஏண்டி—அறிவு கெட்ட முண்டம்... அதுக்குள்ள உன்னை யார் அடுப்பு மேடையெல்லாம் மொழுகச் சொன்னது..."

"சும்மா அலுத்துக்காத சரசு...குழந்தை செய்யறதுக்கெல்லாம் குத்தம் சொல்லிக்கிட்டு..."

"சரிப்பா, உங்க பொண்ணை ஒண்ணும் சொல்லலை போய் படுத்துக்கடீ பொட்டை புள்ளை, ரெண்டு கழுதை வயசாவுது. இன்னும் ஒரு வேலைக்கு லாயக்கில்லை. கண்ணு பாத்தா கை செய்ய வேண்டாம். ஒவ்வொண்ணும் கூட இருந்து சொல்லியா குடுப்பாங்க ...எங்களுக்கெல்லாம் யார் சொல்லிக் குடுத்தாங்க. இந்த மாதிரி செல்லம் குடுத்தா உருப்படாது. சொல்லிட்டேன்."

குழந்தை பாராட்டை எதிர்பார்த்து ஏமாந்தாள். முகம் சிணுங்கி, கூடத்துக்கு நகர்ந்தாள்.

சரசு நின்றவாக்கில் தட்டை எடுத்துச் சோறு போட்டு மோர் ஊற்றிக்கொண்டாள்.

"எம்மா...குழம்பு ஊத்திக்கலை."

"புடிக்கலைங்க. நாலு காபி குடிச்சேன் பகல்ல. அது என்னமோ மாதிரி இருக்கு."

"டீ குடிக்கலாமே."

"அங்க எல்லாரும் அந்த காபிதான் குடிக்கிறாங்க. மொதநாளே எனக்கு காபி வேணாம், டீ இதுன்னு கேக்க என்னவோ போல இருந்தது. சரி, நாளைக்கு மாத்திக்கலாம்னு குடிச்சுத் தொலைச்சேன்."

"வேலை கஷ்டமா?"



"இன்னிக்கு சுலபம். போகப் போக அதிகமாகும். எல்லா நேரமும் நிக்க வேண்டியிருக்கு. அதுதான் கஷ்டம்."

"மரியாதையா நடத்தறாங்களா?"

"மனசு விட்டே பேசலை. எல்லாம் கல்யாணமாகாத சின்னப் பொண்ணுங்க. அதுங்களுக்குள்ளயே கிசுகிசுன்னு பேசிக்கிறுங்க. எனக்குப் பதிமூணு வயசுல பொண்ணு இருக்குன்னு சொன்னா யாரும் நம்பலை. ஒருத்தி ஒரு கேள்வி கேட்டா பாருங்க..."

"என்னன்னு?"

"உங்க வூட்டுக்காரர் உங்களோடதான் இருக்காருன்னு—ஆமான்னேன். அப்ப என் வேலைக்கு வந்தேங்கறா."

"ம்ம்."

"என்னத்தைச் சொல்ல. சிரிச்சுட்டு வந்துட்டேன்."

"கஷ்டம்தான் சரசு."

"கஷ்டம்தான். பழகினா சரியாயிடும்."

"குழந்தையை விரட்டாதே, உன் கஷ்டத்துக்கு."

"தோ பாருங்க. இதுல நீங்க தலையிடாதீங்க. நான் வேலைக்குப் போனாலும் சரி...போகலேன்னாலும் சரி... இந்தக் கூத்து, ரகளை நடக்கத்தான் செய்யும். அனாவசியமா நீங்க பரிஞ்சிக்கிட்டு வர வேணா."

"நிதானமா சொல்லிக்குடேன்."

"எந்தக் குழந்தையும் கேக்காது. ஓடற வயசு உக்காந்து செய்ய கண்ணுன்னா கேக்குமா. அதட்டி உருட்டித்தான் வழிக்குக் கொண்டு வரணுமா."

"எங்கிட்ட சொல்லு. நான் செய்யறேன்."

"வேலை ஆகணும்கறது முக்கியமில்லை. இன்னிக்கு நீங்க செய்யலாம். அவ கத்துக்க வேணாமா...நான்

கண்டிக்கிற நேரம் நீங்க குறுக்க வராதீங்க. நீங்க பரிஞ்சுக்கிட்டு வாரதாலதான் அவளுக்கு முகம் கருங்கிப் போவுது. சொல்லு பொறுக்காத பொண்ணு வளர்த்தா நாளைக்கு இன்னொரு வீட்ல போய் குப்பை கொட்ட வேணாம்? என்னதான் நீங்க குறுக்க வந்து பரிஞ்சு பேசினாலும் அவளுக்கு இன்னிக்கு இல்லேன்னாலும் நாளைக்குப் புரியும். நான் நல்லதுக்குத்தான் சொல்றேன்னு.''

''உன்னைப் பாத்தா பாவமா இருக்கு சரசு.''

''நீங்க காபி போட்டு வந்து குடுத்ததை விடவா.''

ஒழித்துப் போட்ட பாத்திரங்களை உட்கார்ந்து மட மடவென்று தேய்க்க ஆரம்பித்தாள்.

'நீ தேய்ச்சுக் குடு சரசு. நான் கழுவி வைக் கிறேன்.''

''எதுக்குப்பா?''

''உன் அலுப்புக்கு பசங்களைத் திட்டறது எனக்குப் புடிக்கலை. உன்னால முடியலேன்னா சொல்லு. நான் செய்றேன்.''

சரசு சிரித்தாள். ''சரி, கழுவுங்க. தண்ணி மேலே தெறிக்குது பாருங்க. பைப்பைக் கொஞ்சமா திறந்து வுடுங்க நல்லா தேச்சுக் கழுவணும். இல்லேன்னா சாம்பல் பூத்துக் கிடக்கும்.''

ஒவ்வொரு பாத்திரமாகக் கழுவி இடம் தேடித் தேடிக் கவிழ்த்து விட்டு கைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டான். கழுவிய கையை முகர்ந்து பார்த்தான். முகம் சுருங்கினான்.

''சோப்பு போட்டுக் கை கழுவுங்க, உங்களுக்கு என் இந்தத் தலையெழுத்து...'' சரசு உதடு கடித்து விசும்பினாள். புடவைத் தலைப்பால் கண்களை அழுத்திக் கொண்டாள்.



''சரசு...எம்பா...''

''போங்க இங்கிருந்து முதல்ல...''

குழந்தைகள் தூக்கத்தில் முனகின.

ஃபோர்மென் பரமு சோர்வோடு படுக்கைக்கு வந்தான்.

அடர்ந்த தாடி. முகம் முழுவதும் வெள்ளையாய் சுருள் சுருளாய் அடர்த்தியாய் தாடி. பிடரி வரை வளர்ந்த சுருள் தலைமுடி. அதுவும் நரைத்திருக்கிறது. நல்ல உயரம். ரோமானிய செனட்டர் மாதிரி வெள்ளை அங்கி. சிவப்புக் கரையிட்ட மேல்போர்வை. இடையில் ரோமானிய குறுவாள். முழங்கால் வரை பின்னப்பட்ட தோல் வார் செருப்பு.

பரமு அமைதியாய் நடக்கிறான். அவன் இப்போது ரோமானிய செனட்டர். பொறுப்புமிக்க பதவி உள்ளவன். கம்பீரம், தீர்மானிக்கும் திடம், எதிரினால் தட்டி வைக்கும் வலுவு உள்ளவன். வயதானாலும் வாலிபத்தின் மிடுக்கு உள்ளவன். அதே சமயம் அமைதியானவன்.

காலின் கீழ் நைல்நதி போகிறது. எதிரே செக்கர் வானம். அந்தியா, விடியலா தெரியவில்லை. தகதகக்கும் சூரியன். பறவைகள் சூரியன் குறுக்கே வரிசையாய்ப் பறந்தன. கும்பிடத் தோன்றுகிறது பரமுவுக்கு.

நைல் நதி நீரைக் கைகளில் அள்ளி எடுத்துக் கதிரை இறைஞ்சுகிறான்: 'இறையே, பரம்பொருளே, ஆதாரவித்தே வணங்குகின்றேன். நலம் தா. பலம் தா. உன் பரம் தா' உயரத் தூக்கி நதியில் எடுத்த நீரை நதியிலேயே விடுகிறான்.

## 19

மனசு அமைதியாய் இருக்கிறது. ஒரு ஞான சந்தோஷம் மிதக்கிறது. அந்த சந்தோஷ உணர்வத்

தனையும் தெற்றி நடுவுக்குக் கொண்டு வந்து நிறுத்த முடிகிறது.

இது உன் தப்பு. பெருங்கருணை மறுபடி கை குவிகிறது. அரைக்கண் திறந்து பார்க்க, சூரியன் மிக அண்மையில், மிக மிக அண்மையில் கை எட்டும் தூரத்தில் தெரிகிறது. மறுபடி கண்மூட, விலகி தொலை தூரத்தில் வட்டமாவதை உணர முடிகிறது. சூரியனிலிருந்து விலகியும் நிற்க முடிகிறது.

திரும்பிக் கரையேற காலில் செருப்படியில் வழ வழப்பாய் ஏதோ மிதிபடுகிறது. ஒட்டுகிறது நரகல். மனித நரகல், கால் வைக்க இடமில்லாதபடி சுற்றிலும் அந்த ரோமானிய செனட்டர் கரையேற முடியாதபடி தவிக்கிறான். கோபம் வருகிறது. யார் இது—என்ன அர்த்தமற்ற வார்த்தைகள் பொங்குகின்றன. எவரும் அருகில் இல்லை. உயர்ந்த கரையேறித்தான் ஆக வேண்டும்.

மிதியலில் கூச்சம் வர, பாமு தவிக்கிறான். வேறு வழியே இல்லை. இவற்றை மிதித்துதான் ஆக வேண்டும். இந்தக் கனவு வந்தாலே இப்படித்தான் முடிகிறது. அமைதியும் ஞானமும் பளிச்சென்று மறைய' ஒரு அருவருப்பு கப்பிக் கொள்கிறது. ஏன் இந்தக் கனவு வருகிறது. இதன் அர்த்தம் என்ன. இது யார். நானா... நானா ... நான் ரோமானிய செனட்டரா... கனவு இன்னும் முடியவில்லையே. முன் வைத்த கால் நழுவி நச்சென்று தரை மோத, கனவு கலைந்து விட்டது

பாமு விலுக்கென்று எழுந்து உட்கார்ந்தான். முகம் பொத்திக் கொண்டான்.

'கனவுல நரகல் பார்த்தா நல்லதுன்னு சொல்வாங்க எங்க பக்கத்துல. காசு வருமாம்,' சரசு சொல்லியிருக்கிறாள்.



அடிக்கடி வரும் கனவு இது. பிரச்னைகள் வந்து போகும் போது இந்தக் கனவும் வந்துவிடுகிறது. கனவு வரும் போதே அட, இது வழக்கமாய் வரும் கனவென்று தெரிகிறது. மீள நினைத்தாலும் கனவு. நரகல் வரை நகர்ந்து விட்டுத்தான் முடிகிறது!

நரகல் எதைக் குறிக்கிறது. மனிதர்களையா, என் சுற்றுப்புறத்தையா, பிரச்னைகளையா? கண்மூடி நெற்றிக்குள் சூரியன் கொண்டு வந்த சந்தோஷம் உடனே அழிகிறதே. இதுதான் என் வாழ்க்கையா? ஒருவாளும் உயர் பதவியும் இருந்தாலும் தத்தித்தத்தி நடக்க வேண்டிய நிலை இருக்கிறதே. அதுதான் என் தினசரி நடப்பா?

நான் எப்படிக் கனவில் கிழவனாய் இருக்கிறேன் என் புத்தி வயதான விஷயமா? ரோமானியனாய் ஏன் இருக்கிறேன். நான் பார்த்தேயிராத நைல் நதி எப்படி என் கனவில் வருகிறது. அது என் முகமேயில்லை. இருப்பினும், எப்படி என் முகமாய் நானாய் உணர்கிறேன்.

என்ன குழப்பம் இது?

வெளியே காற்று பலமாய் வீசிற்று. கொக்கி எகிறிக் கதவு படீரென்று அடித்தது. எழுந்து கொக்கியை அழுத்திப் போட, பலத்த மழை தரையிறங்கிற்று. பின் பக்க சமையலறை ஜன்னல் மூடியிருக்கிறதா. மெல்ல இருட்டில் நகர்ந்து சமையலறை விளக்கைப் போட்டான். ஜன்னலை மூடினான். பசித்தது. பொட்டுக் கடலை பாட்டிலைத் திறந்து ஒரு கை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

தூக்கம் கலைந்து போயிற்று.

''என்னது' மழையா?'' சரசு புரண்டு தலை தூக்கினாள்.

''ஆமாம்.''

''என் நின்னுக்கிட்டிருக்கீங்க?''

''சும்மாதான்.''

''வந்து படுங்களேன்.''

''தூக்கம் வரலை.''

''எனக்கு அடிச்சுப் போட்டாப்பல தூக்கம். ஆபீஸ் போய் இறங்கினவுடனேயே தூக்கம் வருது காத்தால. அவசரத்துக்கு ரெண்டு வாய் அள்ளிப்போட்டுக்கினு போறது போறலை. பத்தரை மணிக்குக் கபகபன்னு பசி. வீட்ல இருந்து நிம்மதியா பாத்திரம் பரப்பி சாப்பிட்ற நேரம் அது. வயித்துக்குப் புரியுதா நம்ம நிலைமை. வாங்களேன்.''

''என்ன வேணும் சொல்லு.''

''ஏன் அலுப்பா பேசறீங்க?''

''அலுப்பா பேசறது நீயா, நானா...''

''காபி கொண்டாந்து திட்டினதுமே ரொம்ப கஷ்டமாயிடுச்சு.''

''சரி இனிமே நான் காபி போடலை. நீயே கலந்துக்க. ஏதோ எனக்குத் தெரிஞ்சதைச் செஞ்சேன்.''

''காபியைக் குத்தம் சொல்லலப்பா. இங்க வாங்களேன் உக்காருங்க இப்படி.''

பரமு நகர்ந்து சரசு அருகில் முதுகு திருப்பி உட்கார, அவள் சுழன்று அவன் இடுப்பை நெருக்கிப் பிடித்துக் கொண்டாள்.

''அந்த வேளைக்கு அந்த காபி நல்லாதான் இருந்தது. உங்களை சமையக்கட்டுல விடும்படியாயிடுச்சேன்னு ஒரு கடுப்பு.''

''அதுக்குக் குழந்தையைப் போய் திட்டணுமா?''



''அவ பார்த்துச் செய்ய வேணாமா. எப்ப கத்துக்கும். வேலைக்குப் போற முத்தான் தனியா கூப்பிட்டு படிச்சுப் படிச்சு சொன்னேன். வீட்டைக் கவனிக்கணும் இனிமேன்னு.''

''அது ரெண்டுங்கெட்டான் வயசு.''

''அவ வயசுல நான் ஒண்டியா சமைச்சு இறக்கிடுவேன்.''

''அது ஒரு காலம். அஞ்சு பீரியட் கிளாஸ். நாலு புஸ்தகம். ரெண்டு நோட்டு. இப்ப பாரு என்னென்னமோ படிக்குது குழந்தைங்க. இருபது நோட்டு. முப்பது நோட்டு எடுத்துக்கிட்டுப் போறா. படிப்பே பெரும்பாடா ஆயிடுச்சு. இதுல இப்பவே வீட்டு வேலைன்னா...''

''போன மாசம் வரைக்கும் கேட்டேனா...காபி குடிச்ச டம்ளரைக்கூட கழுவச் சொன்னதில்லை.''

''புரியாத பேசாத. நம்ம நிலைமை தெரிஞ்சுக்கற வயசில்லை.''

''ரொம்ப கொஞ்சாதீங்க பொண் குழந்தைய. அது நல்லதில்லை.''

''சரி, கொஞ்சவும் வேணாம். இப்படி சரமாரியா திட்டவும் வேணாம். இதமா சொல்லு. போதும்.''

''திட்டற நேரத்தில் திட்டத்தான் வேணும்.''

''வேணாம்.''

''சும்மா கிடங்க.''

''கூசாத அடிச்சிருவேன் சரசு. பளீர்னு பசங்க எதிர்க்க அறைஞ்சிடுவேன். என் குழந்தைங்க என் வீட்ல ஹிம்ஸைப் படறதை என்னால பார்க்க முடியாது.''

''குட்டிச்சுவராப் போவும்.''

''உன்னை மாதிரி கர்வம் புடிச்சவ வளர்த்தாதான் குட்டிச்சுவரா போவும். பேசினா புரிஞ்சுக்கற குழந்தையை உன் அலுப்பு தாங்காத சடாபுடனா.''

''இரண்டையும் சுமந்து பெத்தது நான். பெத்தவளுக்கு இல்லாத உரிமை வேற யாருக்கும் இல்லை.''

''ஸாரி—பெத்துட்டதாலேயே நீ பொலி போட்டுட முடியாது. உன் சிடுசிடுப்பு பசங்களுக்கு ஒட்டிக்கும். அதுகளுக்கும் நிதானம் இல்லாத போவும்.''

''இப்படிக் கொஞ்சிக் கொஞ்சி சீராட்டினா வெளிய வாசல்ல புழங்க முடியாது. அங்க போய் அழுதுகிட்டு நிக்கும்.''

''அதுங்க வெளி வாசல்ல படற ஹிம்சை போறும். வீட்டையும் நரகமாக்கிடக் கூடாது. எத்தினி கஷ்டம் வெளில பட்டாலும் வீடுன்னு ஒண்ணு இருக்கற தைரியம் வரணும். நம்மகிட்டயே நம்ம குழந்தை பொய் சொல்லக் கூடாது. அஞ்சி ஒளியப்படாது.''

''எனக்கு சொல்லித் தரீங்களா புள்ளை வளர்ப்பு.''

''உனக்கு என்ன தெரியும். ஒரு நாள் வேலைக்குப் போயிட்டு இப்படிக் குதிக்கிறியே தடி மாடு.''

''ஏன் திட்டறீங்க?''

''வேற என்ன சொல்றது.''

''பொண்டாட்டி வேலைக்குப் போறது புடிக்கலை. பொச்சரிப்பு.''

''எனக்கா, கிடடீ நாயேன்னு உள்ள இழுத்துப் போட்டுருவேன். ஒரு மரியாதை கொடுக்கறேன். சமதையா நடத்தறேன். புரிஞ்சுக்கிட்டுப் புழங்கறது நல்லது.''

''சமதையா நடத்தற ஆளைப் பார்க்கலை. நாயே பேயேன்னு பேசிக்கிட்டு.''

''உங்களுக்கு வேற பாஷை புரியலை. செருப்பு தூக்கினா தான் வால் ஒடுங்குது.''



''வாணாம்பா. நீங்களாச்சு உங்க பசங்களாச்சு. எக்கேடும் கெடுங்க. உங்களுக்கு உதவியா இருமன்னேன். கொஞ்சம் அதட்டினேன். அதுக்கு இத்தினி பேச்சா.''

''எனக்கு யார் உதவியும் வேணாம்!''

''என் உதவி கூடவா.''

''இதோ பார் சரசு. நீ வேலைக்குப் போறே. நான் வீட்டைக் கவனிச்சுக்கறேன் இதான் பேச்சு. இது ரெண்டும் பொம்பளை வேலைங்கற மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு, சுத்தி இருக்கிறவங்களைக் கடிச்சுக் குதறாதே. ரெண்டும் உன்னால முடியாது.''

''வீட்டு வேலை அவ்வளவு கஷ்டமில்லை.''

''இருக்கலாம். பழகிக்கிடணும். தப்பு வரும். ஆரம்பத்துல கஷ்டமாத்தான் வரும். என்கிட்ட குடுத்துட்டில்ல, விடு. நிம்மதியா படு. ஏன் பூனை கஞ்சி உரசின மாதிரி மூஞ்சியை சுளிச்சுக்கிட்டு உள்ள நுழையறே...''

''வரலைப்பா வரலை. வீடு வந்து நாற்காலி போட்டு செருப்பு அவுக்கறேன். காபி கொண்டாந்து குடுங்க. புத்திகெட்டுப் பேசற ஆம்பளைகிட்ட விட்டுத்தான் புடிக்கணும். ''என்னால முடியலை சரசு நீ செஞ்சு வச்சுட்டுப் போன்னு ஒருநாள் பேச்சு வரும். அன்னிக்கு சொல்லிக் காட்டறேன்.''

''வராது சரசு!''

''இரண்டு பாத்திரம் தேச்சுட்டு கைமுகர்ந்து பாக்கற ஆளு நீங்க.''

''ஆரம்பம் சரசு.''

''சரிப்பா. மொத்த சமையல்கட்டும் உங்களுது. நான் வரலை.''

''அப்படிச் சொல்லிட்டா—''

''வேற எப்படிச் சொல்றது?''

''சொல்லிக் குடுத்துட்டுப்போ.''

''என்ன சொல்லித் தர்றது—''

''பருப்பு ரசம், வெங்காய சாம்பார், ஒரு காய்... மோர் உறைகுத்தது...''

''என் புடவை மடிக்கிறது—பாடீஸ் தைக்கறது... இது வேணாமா...''

''சொல்லிக் குடேன்.''

''இப்படிப் பேசிப் பேசி சரிக்கட்டிடறீங்க. இப்படி ஒரு ஜென்மத்தை வீட்ல வுட்டுட்டு வேலைக்கு போறமேன்னு துக்கம் பொத்துக்கிட்டு வருது.''

''அதுக்கு குழந்தைகளைத் திட்டாத. கோபமா—என் மேல சாமி. என்னைத் திட்டு. எனக்கு யாரு சரசு, நாமே போட்டு மிதிக்கறதா அதுங்களை.''

''சரி இனிமே திட்டலை. அதுவும் கத்துக்கணுமே நாலு விஷயம்.''

''என்கிட்ட விடு. எனக்கு சொல்லித்தா. நான் அதுக்குக் கோவமில்லாம செய்து காட்டறேன். நாலு மாசத்துல அது நூறு வேலை செய்யும்.''

''சரி, படுங்க...பேசிக்கிட்டே இருந்தா.''

பரமு சரிந்து அவளருகே கால் நீட்டிப் படுத்தான். சரசு மார் சேலையை விசிறிப் பின்பக்கம் போட்டுவிட்டு அவன் தோளில் கை வைத்தாள்.

''எம்பா இப்படி இருக்கீங்க.''

''எப்படி...''

''மெத்து மெத்துன்னு பேசற புருஷனா, இப்படிப் பெண்டாண்டி தாசனா...''

''இதுக்குப் பேரு பெண்டாட்டி தாசனா. ஒரு விஷயம் சரசு.''



''சொல்லுங்க.''

'ஒரு விதத்துல எனக்கு உன் மேலகூட அக்கறை கம்மி.''

''ம்ம்!''

''உன்னைவிடப் பசங்க மேல பிரியம் அதிகம்.''

''புரியுதே. வேலைக்குப் போன்னு துரத்திட்டீங்களே.''

''நானா துரத்தினேன். நீதானே அழுது புரண்டு ஆயிரம் பேச்சுப் பேசி ஓடற.''

''என்னா ஒரு விதத்துல எனக்கு உங்க பேர்ல அக்கறையில்லை. உங்க கஷ்டம் பத்திக் கவலையில்லை.''

''ம்ம்...''

''உங்களைவிடப் பசங்க மேல பிரியம் அதிகம். அந்தப் பிரியம்தான் தொண்டை கிழியக் கத்தி, தலைல குட்டி கத்துக்கடி கத்துக்கடின்னு பண்ணுது.''

''புரியுது சரசு.''

''என்னா புரியுது.''

''ஒரே பக்கமா நின்னு ஒரே விஷயத்துக்காக சண்டை போடறோம்.''

''என் ராசா...''

''என்ன ஆச்சு.''

''காலைல பருப்பு ரசம் வைக்க என்கிட்ட கத்துக்க வேணாம்?''

''வேணும்.''

''குருதட்சணை எங்கே.''

பரமு வழங்கினான். சரசு பெற்றுக்கொண்டாள். பாடம் காலையில் துவங்கிற்று.

ரவை உப்புமா கொஞ்சம் கட்டி தட்டிப் போயிற்று. வாணலியைப் பிடித்துக் கொள்ள கைபிடித் துணி தேடும் நேரத்தில் கிளறப்படாமல் கொதிக்க, கொதித்த நேரத்தில் சிறு சிறு உருண்டைக் கட்டிகள் வந்து விட்டன. கரண்டியில் கிளறியபடியே உருண்டைகளைத் துண்டு போட முயற்சித்தபோதும் சிக்காமல் நழுவின.

களியாய்க் கிளறித்தரையில் இறக்கி வைத்தபோது, மங்கின வெள்ளை நிறத்தில் உப்புமா பார்க்கவே அழகாய் இருந்தது.

தூவற மாதிரி கொட்டிக் கொண்டே விடாது கிளறணும்...' —சரசு படித்துப் படித்துச் சொல்லியிருந்தாள். கிளறும் போதும் ஞாபகம் இருந்தது. கைப்பிடித்துணி தான் எது என்று தெரியாமல் போயிற்று. பழைய ரவிக்கைதான் கைப்பிடித்துணி என்று நினைவுபடுத்திக் கொள்ளவே சற்று நேரம் ஆயிற்று. எடுத்துப் பிரித்ததும் இது நல்லதா இல்லை கைப்பிடித் துணியா என்று சந்தேகம் வந்தது. இந்த ரவிக்கை கைப்பிடித் துணியாய் உபயோகிக்கலாமா, இல்லை மேல் துண்டு தேடலாமா என்று சமையலறையின் உள்ளும் புறமும் நடந்து யோசிப்பதற்குள் கட்டிதட்டி விட்டது. விடாது கிளறணும் என்பது மறந்து போயிற்று. கொஞ்சம் ஆறினதும் சாப்பிட்டுப் பார்க்கணும். கட்டி தட்டினாலும் பரவாயில்லை. சாப்பிட முடியும் பதத்தில் இருந்தால் வெற்றிதான்.

## 20

''குழம்பு, ரசமெல்லாம் நானே பண்ணிடறேம்பா. விடுங்க. ஆறு மணிக்கு எந்திரிக்கறத அஞ்சு மணிக்கே எந்திரிச்சா உள் வேலையை முடிச்சுடலாம். பாத்திரம் ஒழிச்சுப் போட முடியாத போயிடும். இடியாப்பக் கிழவிகிட்ட சொன்னா செய்துருவா. சாயங்காலம்



குழந்தைங்க பசிக்குதுன்னா சாதம் போடுங்க. வேண்டாமுனா பிஸ்கட் குடுங்க. டிபன்லாம் நீங்க ஒண்ணும் பண்ண வேண்டாம். என்ன, முறைக்கறீங்க...சரி... உப்புமாதான் ரொம்ப ஈஸி, கத்துத் தரேன். ரவையை நானே சலிச்சு வாணலில வறுத்து ஒரு டப்பால... இதோ, இதுலதான் கொட்டி வச்சிருக்கேன். தீர்ந்து போய் நீங்க வாங்கிப் பண்றதா இருந்தாக்கூட சலிச்சுட்டு வாணலில வறுத்துடணும்.

பெரிய வெங்காயம் ஒண்ணு போதும். நீள நீளமா மெல்லிசா நறுக்கி, இஞ்சி, பச்சை மிளகாய்.. இஞ்சிய அப்படியே இல்லை...தோல் சீவித்தான்.. கறிவேப்பிலை எடுத்து வச்சுக்கங்க. கொஞ்சம் போல எண்ணெய் விட்டுக் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு தாளிச்சு, வெங்காயம் இதெல்லாம் நறுக்கி வச்சதையும் போட்டு வதக்கி...

''எழுதிக்கட்டுமா சரசு, கொஞ்சம் இரு. பேப்பர் எடுத்தாரேன்.''

''கஷ்டகாலம். வேணாம், சும்மா இருங்கன்னாலும் முறைக்கறீங்க—இது ரொம்ப சிம்பிள்தாம்பா. எழுதிக்கல்லாம் வேணாம். கேட்டு, திருப்பச் சொல்லுங்க போதும்.''

''உப்புமா செய்வது எப்படி என்று பராமு திருப்பிச் சொன்னான். 'வெரிகுட்' என்று சரசு பாராட்டினாள்.

அவள் ஆபீஸுக்குப் போன பிறகு மறக்காதிருக்க, பேப்பரில் எழுதிக் கொண்டான். இரண்டு முறை படித்து மனனம் செய்தான். கைவிடாமல் கிளறுவது பற்றிக் குறிப்பு இருக்கிறது. ஆனாலும் கட்டி தட்டி விட்டது.

''ஏங்க இன்னொரு வேலை செய்துடணும்.''

''என்ன சரசு...''

''துணி தோச்சுப் பிழிஞ்சுட்டேன். அந்த பக்கெட்ல இருக்கு. பசங்க யூனிஃபார்ம். எனக்கு நேரமாயிடுச்சு. சாயங்காலம் வரைக்கும் அப்படியே இருந்தா வீணாப்

போயிடும். அது மட்டும் உதறி மொட்டை மாடில கொஞ்சம் காயப் போட்டுடுங்க. இன்னொரு பக்கெட்ல என் பாவாடை, புடவையெல்லாம் இருக்கு. அதைத் தொட வேணாம். இது மட்டும் காய வச்சா போறும்.''

''ஏன் சரசு, அது துவைக்கலியா.''

''துவைச்சதுதான். நான் வந்து பாத்துக்கறேன். இது பசங்க யூனிஃபார்ம், முக்கியம், உங்க டிரஸ்ஸூம் இருக்கு.''

''சரி, கவலை விடு. உனக்கு லேட்டாச்சு. கிளம்பு வாட்ச் கட்டிக்கிட்டியா. கொண்டா இங்க, நான் கீ குடுக்கறேன். கர்ச்சீப் இருக்கா. டிபன்பாக்ஸ் எடுத்துக்கிட்டியா.''

''டப்பால மோர் சாதம் போட்டா ஒழுகுது. பையெல்லாம் ஒரே புளிச்ச வாசனை.''

'பிளாஸ்டிக் கவர் இருந்ததே இரு. அதுல போட்டுத் தரேன்.''

''கிளிப் போட்டுறனும் துணிக்கு ..மறக்காதீங்க. இல்லேன்னா காத்துல பறந்து போயிடும்.''

''நெத்தில பவுடர் திட்டுத் திட்டா நிக்குது பார். துடைச்சுக்கோ.''

''இடியாப்பக் கிழவிகிட்ட தினம் காலைல பத்து தேச்சு பெருக்கி, துணி துவைக்க நாப்பது ரூபா தரேன்னு பேசிப் பாருங்க.''

''பேனா எடுத்துக்கிட்டியா?''

''எடுத்துக்கிட்டேன். ஏதனா புக்ஸ் இருந்தாக்கூட நல்லா இருக்கும், வண்டில போறப்ப படிக்க...''

''தந்தி பேப்பர் இருக்கு. எடுத்துக்கிட்டுப் போயேன்.''

''உங்களுக்கு?''



''பரவாயில்லை. நீ எடுத்துக்கிட்டு போ. லேட்டாயிடுச்சுன்னா சொல்லு. சைக்கிள்ல டபிள்ஸ் கொண்டு போய் வுட்டுர்றேன் ஸ்டேஷன்ல.''

''பசங்களைக் கூட்டிக்கிட்டு போங்க. ஏய், ரெண்டு பேரும் சீக்கிரம் சாப்புடுங்க. தட்டு கழுவி வச்சாதும் என்ன?''

''அதுங்களை நான் பார்த்துக்கறேன். நீ கிளம்பு. சில்லறைக் காசு இருக்கா...மத்தியானம் காபிக்கு.''

''என்கிட்ட பர்ஸ்ல எப்பவும் ரெண்டு எட்டணா இருக்கும். உங்ககிட்ட காசு இருக்கா ஏதனாச்சும் வாங்கணும்னா...''

''என்ன வாங்கப் போறேன். வீட்ல இருக்கற காசு போறும்.''

'முடிஞ்சா பசங்க துணிகளைக் காயப் போடுங்க... இல்லேன்னா வேணாம். ஏய்...சாப்பிட்டீங்களா ரெண்டு பேரும்...''

''நீ கிளம்பு சரசு. வண்டியை வுட்றப் போற...''

செருப்பு மாட்டி விருக்விருக்கென்று சரசு தெருவில் நடந்து போகும்போது ஏனோ கவலையாகவும் வேதனையாகவும் இருந்தது. ஒரு சிறிய பிரிவுத் துக்கம் படர்ந்து அழுத்திக் கொண்டது. மாலை ஆறு மணிக்கு வரப் போகிறாள்—களைத்து துவண்டு. கண்கள் கீழ் சோர்வு படர்ந்து, முருகா, என் அப்பனே என்று கூடத்தில் சரியப் போகிறாள். அதுவரை உப்புமா சூடா இருக்குமா.

காலைக் காட்சி மனசில் ஓட, மெல்ல உப்புமாவைப் புரட்டிக் கண்ணுக்குத்தெரிந்த கட்டிகளை உடைத்தான். புரட்டிப் போட ஆவி பறந்தது. தட்டில் சிறிது தனியே எடுத்துப் பரப்பி ஆற வைத்தான். ஒரு துணுக்கு எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

''பரவாயில்லை. நல்லாத்தான் இருக்கு. சரக, ஏ கிளாஸ், உப்புமா ரெடி. சாம்பார் போட்டுக்கறியா, சர்க்கரையா...''

நினைவு அறுந்து மீண்டும் தொடர்ந்தது.

''சர்க்கரை, அரிசி, மண்ணெண்ணெய் வேணா வாங்கியாறேன். உக்காந்து பாத்திரம் தேய்க்க, துணி துவைக்கலாம் முடியாது. உக்காந்து, எந்திரிக்கச் சொல்ல முழங்கால் ரெண்டும் புடிச்சுக்கும். ஒரே வலி, அதனாலதான் இன்னிக்கு ஒரு நாள் வேணா பாத்திரம் தேய்ச்சுக் குடுத்துட்டுப் போறேன்.''

—இடியாப்பக் கிழவி மறுத்து விட்டாள்.

''சரி வேணாம் வுட்டு. சாயந்திரம் வந்து பாத்திரம் தேய்ச்சுக்கும்.''

கிழவி போனதும் வாசற்கதவைத் தாழிட்டு விட்டுப் பாத்திரங்களை வாரிக் கொண்டு குழாயடிக்குப் போனான். அரப்புப் பொடியையும், தேங்காய் நாரையும் பக்கத்தில் வைத்து, பலகை மனை போட்டு உட்கார்ந்து கொண்டான். மரக் மரக்கென்று சப்தமெழத் தேய்த்தான். ஆறேழு பாத்திரங்கள்தான். ஆனாலும் பால் பாத்திரம் தேய்க்க அதிக நேரமாயிற்று. பாத்திரங்களை அலம்பி எடுத்துக் கொண்டு எழுந்து நிற்கும் போது லேசாய் முதுகு வலித்தது.

குழாயடியைச் சுத்தமாய் அலம்பித் தள்ளிவிட்டு நிமிர்கையில், ஒரு முறை குளித்தால் நல்லதென்று பட்டது. மாடிக்குத் துணிகளை எடுத்துப் போனான். யூனிஃபாரம், லுங்கி, சட்டை என்று அழகாய்ப் பிரித்து உலர்த்தி இரண்டு இரண்டு கிளிப் போட்டு, கீழே வந்து ஜட்டியோடு குளிக்கத் துவங்க, புடவை பாவாடை பக்கெட் கண்ணில் உறுத்தியது. இது என் இப்படிக் கிடக்க வேண்டுமென்று தோன்றிற்று.



குளித்துவிட்டுத் துண்டோடு புடவை பக்கெட் எடுத்து மேலே போய் புடவையை எடுத்தான். தலை உயரத்துக்கு மேல் புடவை நீண்டது. உதறி இரண்டாக்கி மடிக்கையில் இரண்டு முறை கை நழுவித் தரையில் விழுந்தது. நாலாய் மடித்துக் கொடியில் போட்டு வெள்ளைப் பாவாடையை உதறுகையில் பின்பக்கம் யாரோ 'கரும்ம் கரும்ம்' என்றார்கள்.

பக்கத்து மாடியைத் திரும்பி பார்ப்பதற்குள் நிழல் மாதிரி யாரோ இறங்கி மறைந்தார்கள்.

''கொஞ்ச நேரம் பாவாடையைக் கையில் வைத்தபடி காத்திருந்தான். யாரும்வராது போகவே, உலர்த்தி விட்டுக் கீழே வந்தான். எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட்டான்.

சாய்ந்த நாற்காலியில் கண் கிறங்கிச் சாய அரை மணி தூங்கினான். எழுந்து ஒருமுறை சுற்றி வந்தான். ஒட்டடை அடித்தான். டி.வி. மேஜை, பீரோ என்று பார்த்துப் பார்த்துத் தூசி தட்டினான். பெருக்கினான். வாசல் பக்க தாழ்ப்பாளுக்கு எண்ணெய் போட்டான்.

படிக்க எதுவுமே இல்லை. தினசரி காலண்டர்தான் இருந்தது. எடுத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு தாளாய்ப் புரட்டி, எந்தத் தேதியில் எங்கு, என்ன விசேஷம் என்று பார்த்தான். தலையணையைக் கொண்டு வந்து ஹாலில் போட்டு வெறுமே விட்டம் பார்த்துப் படுத்துக் கிடந்தான்.

இன்னிக்கு எத்தனி வண்டி ப்ரொடக்ஷன் போயிருக்கும் என்று கேள்வி வந்தது.

வீல் மீது டயர் போட்டு, இடைவெளியில் ட்யூப் சொருகி, காற்று ஏற்றி, பருத்து நிமிர்ந்தவுடன் மரச் சுத்தியால் அடித்து டயர் மாட்ட வேண்டுபோல் ஒரு உணர்வு மதமதப்பு தோளில் பொங்கியது. புது டயர் வாசனை முகர ஆசை வந்தது

மறுபடி டயர் மாட்டற வேலை கொடுத்தாக்கூட நல்லா இருக்கும், யார் தருவார்கள். எப்படித் தருவார்கள்?

அவ்வளவுதான். அந்த கம்பெனி உப்பு அவ்வளவுதான்.

இப்ப மணி இரண்டு. முக்கால்வாசி ப்ரொடக்ஷன் முடிஞ்சிருக்கும். இரண்டு வண்டி லைன்ல இருக்கும். அதையும் இன்னும் அரை மணி ஒரு மணில முடிச்சுக் கை கழுவிடுவாங்க. மூணு மணிக்குப் பொட்டி மேல உக்காந்து பேசிக்கிட்டிருப்பானுங்க. என்னைப் பத்தி ஏதாவது பேசுவானுங்களா. யார் பேசுவார்கள்...என்ன பேசுவார்கள்...

மணி ரெண்டரை, கடைசி வண்டிக்கு பாட்டரி போட்டுக்கிட்டிருப்பான். அப்புறம்தான் டயர் மாட்டணும். இன்னிக்கு எத்தினி ப்ரொடக்ஷன்.

ச்சு எனக்கு எதுக்கு இது. வெறும் படுத்துக்கிடக்கறதைவிட அடுப்பு எத்தி ரவா உப்புமா செய்யலாம். இப்ப ஆரம்பிச்சா நாலு மணிக்கு முடிப்போமா...

முதன் முதலாய்க் கிளறிய உப்புமா நன்றாய் இருந்தது. கொஞ்சம் கட்டி தட்டிப் போயிருப்பினும் சாப்பிடுகிற பதத்தில் இருந்தது. முதன்முதல் டயர் மாட்டுகிறபோதும் சரியாய் மாட்ட முடிந்தது. ட்யூப் சொருகும்போது கொஞ்சம் புறங்கை கீறி விட்டதே தவிர. வேலை சுத்தமாய் இருந்தது. கவனமாய்ச் செய்தால் எந்த வேலையும் செய்யலாம்.

பருப்பு ரசம், கத்தரிக்காய் சாம்பார், பீன்ஸ் பொரியல் எல்லாம் செய்யலாம். டயர் ஸ்டேஜிலிருந்து கியர் பாக்ஸ், பிறகு இன்ஜின், பிறகு ஹைட்ராலிக் பம்ப், ஸ்டியரிங் வீல்... எவ்வளவு இடம் மாறினோம். ட்ரெயினி, ஸெமி ஸ்கில்ட், ஸ்கில்ட், செக்ஷன் லீடர் பிறகு ஃபோர்மன் என்று எப்படி உயர்ந்தோம்.



இப்ப நான் ஸெமி ஸ்கில்டா, ட்ரெயினியா?

மாடிக்குப் போய்த் துணி எடுத்து வந்து விடுவோம். யூனிஃபோர்ம் துணிகள் மொட மொடத்து இருந்தன. புடவை ஈரம் காய்ந்து பூவாய் மிதந்தது.

சகலமும் வாரிக் கொண்டு திரும்ப, அடுத்த மாடியில் நிழலாடிற்று. பேச்சுக் குரல் கேட்டது.

''இல்லேன்னா உன்னை நான் எதுக்கும்மா கூப்பிடறேன்...ஆயிரம் வேலை மாடில. இப்படித் திடும்னு வந்து நின்னாக்க தூக்கி வாரிப் போடுது...''— யாரோ பேசினார்கள்.

நின்று குரலைக்கேட்க, வயதான மூதாட்டி அடுத்த வீட்டு 'மாடிப் படியேறும் மறைவிலிருந்து வெளிப்பட்டாள்.

''வேலைக்குப் போறீங்களா...''

''இல்லீங்க...''

''சுக போவது போல இருக்கு.''

''ஆமாங்க...''

''துணி காயப் போட சொல்லிச்சா...''

''ஆமாங்க...இல்லை, நானாதான் செய்றேன். என்ன விஷயம்...?''

''இல்ல...''

''சொல்லுங்கம்மா...''

''தினம் துணி காயப்போட மாடிக்கு வருவீங்களா''

''ஆமாம்மா, என்ன விஷயம்''

''எங்களுக்குக் கொஞ்சம் சிரமமா இருக்கும், வீட்ல எல்லாம் பொம்பளைங்களா இருக்கோம்...''

''புரியலீங்களே...நான் என்ன...''

''சரி அப்போ பத்து மணிக்கு முன்னாடி வந்து துணி காய வச்சுட்டுப் போங்க. பாப்பா கஷ்டப்படுது எம் பொண்ணு பாதி நேரம் மாடிலதான் இருக்கும். நீங்க திடுப்னு பாவடை துணியெல்லாம் காயப் போட வந்ததும் அச்சப்படுது.''

''சரிங்க. பத்து மணிக்கு முன்னாடி இந்த முடிச் சுடறேன்.''

''எடுக்கற நேரம் சொல்லிட்டீங்கன்னா அப்பவும் இங்க வராத ஒதுங்கிக்குவோம்.''

''நாலு மணிக்கு வந்து எடுத்துட்டேறன். ரெண்டு நிமிஷ வேலை.''

''அவரை ஏம்மா தொந்தரவு பண்றே. நாம ஒதுங்கி நின்னுடலாம்.''—முப்பது வயது முதிர்ச்சியாய் ஒரு பெண் மாடி வளைவிலிருந்து தலை நீட்டினாள் பரமு பார்க்க, பின்பக்கம் சாய்ந்து மறைத்து கொண் டாள்.

''தப்பா நினைச்சுக்காதீங்க தம்பி, பாப்பா கொஞ்சம் கூச்ச பாவம். ஆம்பளை துணி காயப் போட வர்றத பார்க்கவே கஷ்டமா இருக்கு...செய்யறவங் களுக்கு எப்படி இருக்கும்.''

''சரிங்க...நான் கீழ போயிடறேன்.''

கையில் வைத்திருந்த புடவை நெகிழ, கால் சிக்கித் தடுமாறிப் படி இறங்கினான்.

''அப்பா''

வாசலில் குழந்தைகள் குரல் கேட்க, கதவு திறந்து இரண்டையும் வாரிக் கொண்டான்.

''என்ன வாசனை அது...'' லதாக்குட்டி கேட்டது.

''உப்புமா...''—பரமு பதில் சொன்னான்.

''இல்லை. பருப்பு ஏதோ தீயுது.''



''ஐயோ''— ரண்டையும் இறக்கி விட்டு சமைய லறைக்கு ஓடினான். தண்ணீர் கண்டி பாத்திரம் மட்டும் தகதகத்துக் கொண்டிருந்தது. வந்து விரைவில் அதைத் தொட, சிவ்வென்று கட்டை விரலில் சூடு பரவிற்று. கொப்பளித்தது. உதற பாத்திரம் உருண்டது.

லதாவும், கோபியும் அப்பாவை வியப்போடு பார்த் தார்கள்.

''நேத்திக்கு கோபியோட அப்பாவே உப்புமா செஞ்சிருக்காங்க...''

''ஐயோ, பாவம்.''

''காபிக்குத் தண்ணி கொதிக்க வைக்கறப்ப சுட்டுக் கிட்டாங்க.''

''ஐயோ, பாவம்''

''சரசு எங்களாண்ட ஒரு வார்த்தை சொல்லியிருக் கலாம் அஞ்சு நிமிஷம்.. ஒரு உப்புமா கிளறி இறக்க மாட்டமா...லதாக்குட்டி சொல்லிச்சு எல்லாக் கூத்தை யும்.''

''ஐயோ, பாவம்''

''சரசு அக்கா ஒரு மாதிரி. தப்பா சொல்லலை. தான் உண்டு, தன் வேலை உண்டுங்கற குணம். என்னக்கா இன்னிக்கு சமையல்னு கேட்டா, சிரிச்சுக் கிட்டுப் போயிடுவாங்க. நாங்களும் கேக்கற தில்லைன்னு வச்சுக்கங்க.''

## 21

''த்து மணிக்கு மேல்மாடியில் எட்டிப் பார்த்து பக்கத்து மாடியில் யாரும் இல்லை என்று உறுதிப் படுத்திய பிறகு ஒவ்வொரு துணியாய்க் காயப்போட, பின்பக்கம் குரல் கேட்டது.

அம்மாவும் பெண்ணும் துணி காயப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''என்ன செய்யலாம் என்று யோசிக்கையில், அந்தப் பெண் சிநேகமாய்ப் புன்னகை செய்தாள். அவனை முன் நிறுத்தி அம்மாவிடம் பேசத் துவங்கினாள். பரமுவுக்கு, பாதியில் இறங்கிப் போவதா, இல்லை தொடர்ந்து துணி காயப் போடுவதா என்று புரியவலை. பேச்சு சாந்தமாய் இருக்கவே, தொடர்ந்து துணிகளைக் கொடியில் விரித்து 'க்ளிப்' போட்டான். பக்கெட்டுக்கடியில் கடைசித் துணியாய்ப் புடவை இருந்தது. எடுப்பதா வேண்டாமா என்று தயங்கினான. சிரிப்பார்களோ என்று சங்கடப் பட்டான் சரி, சிரிக்கட்டும். என் பெண்டாட்டிப் புடவை தானே என்ற நினைப்பு எழ, பிரித்து உதறினான்.

''ஐயோ...! அத வாங்குமமா...பார்த்துக்கிட்டு நிக்கிற...''

' சுவரு தாண்டி எப்படி போவேன்.''

''ஏங்க, கொண்டாங்க அதை.''—அந்தப் பெண் சுவருக்கு அடுத்த பக்கமிருந்து கை நீட்டினாள்.

''எதுக்குங்க...''

''கொண்டாங்க அதை.'' அதட்டினாள்.

''வேணாங்க. தானே காயப் போட்டுடறேன்.''

''ஆம்பளைங்களுக்குத் தெரியாது இதெல்லாம. சரசு அக்காவுக்கு அந்தப் புடைவைன்னா உசிரு. அவங்க மொதத் தடவை கட்டினப்பவே விலை கேட்டேன். தெரியாதுன்னுட்டாங்க.''

''விலை தெரிஞ்சுக்காத புடைவை கட்டுவாங்களா எந்தப் பொம்பளையும்.''

''தெரிஞ்சிருக்கும். சொல்ல இஷ்டம் இருந்திருக்காது. புருஷன் ஆசையா வாங்கின புடைவைக்கு விலை என்னா, விவரம் என்னா...உடுத்தறப்பவே நிறைஞ்சுறாதா...''



''அது சரி !''

அந்தப் பெண் கட்டைச் சுவரின் விளிம்பில் நின்று கை நீட்டியபடியே இருந்தது.

உதறி மடித்துத் திருப்பிக் கொடுத்து விடுவாள் என்கிற நினைப்பில் பரமு புடவையை நீட்டினான்.

கை நீட்டிப் புடவையை வாங்கினவள் சரசரவென்று பிரித்து உதறினாள் நாலாய் மடித்தாள்

''சொல்றேன்னு தப்பா நினைக்கக்கூடாது. ஆம்பளைங்க புடவை காயப் போடறது என்னால பாக்கவே முடியலை.''—அவள் வீட்டுக் கொடியில் புடவையைப் போட்டு, இரண்டு துனியிலும் க்ளிப் பொருத்தினாள்.

''இங்கேயே இருக்கட்டும். சாயந்திரம் மடிச்சுத் தரேன். சரசக்கா துணி காயப் போடற மட்டும் என்னாண்ட வுட்ருங்க.''

''எதுக்குங்க சிரமம்.''

''என்ன சிரமம் இதெல்லாம் முப்பது வயசுப் பொண்ணு சிரமம்னு சொன்னா முட்டங்கால்லயே போடணும்.''—அம்மா இடிப்பாய்ப் பேசினாள்.

'அதுக்கில்லீங்க. எங்க வீட்டுத் துணி— நீங்க எதுக்கு—''

''எது எங்க வூடு... உங்க வூடு... அரை அடிச் சுவரு தானே...எல்லார் வூடும் ஒரே மாதிரிதான். என் வூட்லயும் ஒரு மாதிரி கஷ்டம்தான். எம்.ஏ., படிச்சிருக்கு எங்க பாப்பா. அதுக்காக வீட்டு வேலை செய்யாம இருக்க முடியுமா. பொம்பளைன்னா செஞ்சுதான் ஆவணும்.''

''வேலைக்கு ஏதும் போலிங்களா?''

''நாங்க போகக்கூடாதுன்ட்டோம். படிக்கிற முட்டும்படி. வேலைக்கு கீலைக்குப் போறது கூடாதுன்னுட்டாங்க அவங்க அப்பா. எங்களுதுல பொண்ணை வேலைக்கு அனுப்ப மாட்டாங்க.''

''கல்யாணம் செய்துடலாமே!''

''நாப்பது சவரனுக்கு ரெடி நாங்க. எங்க பக்கத்துல பசங்க யாரும் இப்படி படிச்சவங்களா இல்லை வெளியூர் ஆளும் எம்.ஏ.வான்னு தயங்கறாங்க ஆறாவது படிச்ச பொண்ணு போறுங்கறானுங்க!''

''அடடா....''

''போனவாட்டி பொண்ணு பாக்க வந்தவங்ககிட்ட ஆறாவது படிச்சிருக்குன்னுதான் சொன்னோம்.''

''நான் வேணாம்னுட்டேங்க.''

''ஏங்க''

''தண்ணி போடுவானாம் ஜாடை மாடையா தெரிஞ்சுது.''

''எங்க பக்கம் ஆம்பளைங்க முன்னப் பின்ன இருக்கறதுதான். இவ அப்பா சின்ன வயசுல ஆடாத ஆட்டமா சரி போன்னு விட வேண்டியதுதான். ஆம்பளை எத்தினி நாளு ஆட முடியும்?''

''நல்ல பையன் எனக்குத் தெரிஞ்சுதுன்னாலும் சொல்றேங்க''

''எங்க பக்கத்துல பசங்க கொஞ்சம் முரட்டுத்தனம் தான். எம்.ஏ., படிச்சவனாகவும் இருக்கணும் எடுப்பார் கைப் புள்ளையாகவும் இருக்கணும்னா முடியுமா.. இவளுக்கு யார் புத்தி சொல்றது தம்பி.''

''என் சரசக்காவுக்கு ஒருத்தர் அமைஞ்ச மாதிரி எனக்குக் கிடைக்க மாட்டாங்களா.''

''அதுபோன ஜென்மத்துப் புண்ணியம்டி. எல்லாருக்கும் கிடைக்குமா. எட்டுப் பேர் ஆம்ளைங்க குடும்பத்துல வாக்கப்பட்டு எல்லார் துணியும் தோச்சும் போட்டுருப்பா. இன்னிக்கு அவளுக்கு நல்லபடியா அமைஞ்சிருக்கு. என்ன சொல்றீங்க தம்பி உனக்கும் அப்படியே வேணும்னா நான்எங்கேருந்து புடிச்சாரா?''



''நீ ஒண்ணும் புடிச்சுட்டு வரவேணாம். வரபோது வரட்டும். திருப்பிச் சொல்றேன். இன்னும் ரெண்டு வருஷத்துக்குள்ளே ஒண்ணும் முடியலேன்னா அரளி விதையை அரைச்சு முழுங்கிடுவேன்.''

''இடிச்சேன்னா தெரியுமா முகரக்கட்டை—என்னை இழுத்துப் பொதச்சிட்டு எங்க வேணா போ... எப்படி வேணாப் போ... என்னாங்க தம்பி நான் சொல்றது''

''அடடா! என்ன பேச்சு இது— நல்லதனமா படலியே''

''பொழுதன்னிக்கும் புடுங்கிக் கல்யாணம் பண்ணிக் கன்னு காட்டானாட்டம் ஆளைக் கொண்டாந்து காட்ட வேண்டியது... நல்ல மாப்பிள்ளையா பாத்து வச்சா நானா வேண்டாங்கறேன். வெளிய வாசல்ல போனா நாலுபேர் இதே கேக்கறாங்க. நாக்க புடுங்கிட்டு சாவலாம்போல இருக்கு நல்ல மாப்பிள்ளையா பாக்க இந்த வூட்ல யாருக்கும் வக்கில்ல...''

''நாற்பது சவரன் நகை பண்ணி வச்சிருக்குங்க...''

''உருக்கி வாசலுக்குத் தடவு. நகை பண்ணி வச்சா மட்டும் போறுமாங்க...''

உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது காற்று இல்லாமல் வெம்மையை பூமி கக்கிற்று. மிக வியர்த்தமான ஒரு பேச்சில் ஈடுபட்டிருக்கிறோம் என்று தெரிந்தாலும் இடம் பெயர முடியவில்லை. அடுத்த வீட்டுக் கொடியில் படர்ந்து பரவியிருந்த சரசுவின் துணியைப் பார்க்க மிகவும் வேதனையாய் இருந்தது எகிறிக் குதித்துப்போய் எடுத்து வந்துவிட வேண்டும்போல் இருந்தது.

''நான் வரேங்க...''—பாக்கெட் எடுத்தபடி பின் வாங்கினான்.

30192
4656721

''வுடும்மா... அவராண்ட நம்ம புராணத்தையெல்லாம் அளந்துக்கிட்டு... அடுப்புல எதை வச்சிட்டு வந்தாரோ என்னமோ... எங்க, சமையல் ஆயிடுச்சா ...''

''ஆச்சுங்க...''

''என்ன சமையல்.''

''சரசு ஏதோ செஞ்சு வச்சுட்டுப் போச்சு. இன்னும் சாப்பிடலை.''

''போய் சாப்பிடுங்க. எங்க வூட்ல காரக் குழம்பு ஒரு கிண்ணி கொண்டாரவா...''

''வேணாங்க. ரொம்ப தாங்க்ஸ்''

''புடிக்காதோ என்னவோ. ஏண்டி பாவம் அவரைத் தொந்தரவு பண்ற...''

''சரசக்கா ஏதும் சொல்லிடுமோன்னு பயப்படறாங்க போல இருக்கு...''

பரமு பதில் சொல்லாது நின்றிருந்தான்.

''வரேங்க'' என்று மெதுவாய்ச் சொல்லிவிட்டு கீழே வந்தான். உடம்பு முழுவதும் வியர்த்திருந்தது. மின் விசிறியை வேகமாகச் சுழலவிட்டுச் சற்று நேரம் நின்றான் குளித்துவிட்டு வந்தான்.

'சரசக்கா ஏதும் சொல்லிடுமோன்னு பயப்படறாங்க .'

சரசு நிச்சயம் சொல்லுவாள். 'அடுத்த வீட்டு சாப்பாடு, தெரிஞ்ச சிநேகிதி புடவை, கூடப்பிறந்தவன் நகை தப் பெண்ணின் அழகு இது நாலும் உத்துப் பார்க்கக்கூடாது. நமக்கு உறுத்தவும் கூடாது.'

'உங்க வூட்ல பாயாசமா... சரி. உன்னோடது புதுப் புடவையா...ரொம்ப சந்தோஷம் நகை நாலு பவுனா... நல்லா இருக்கு. எம் பொண்ணு கிளி கொஞ்சற



அழகா இருக்கட்டும். இவருக்கு சிரங்கு வந்தது எனக்கில்ல தெரியும்னு விட்டுரணும்.''

''ஏன் சரசு...''

''சீப்பாயிடும். எங்க ஒட்டணும், எவ்வளவு ஒட்டணும்னு தெரிஞ்சுக்கிட்டா எல்லார்கிட்டயும் சிநேகிதம் இருந்துடலாம்.''

''எல்லாம் சரி. தன் பொண்ணு அழகா இருக்கறதை பெத்தவ பாராட்டக் கூடாதா.''

''கூடவே கூடாது. உடனே மாரை நிமிர்த்திக்கிட்டு நிக்கும். இடுப்பை இன்னும் ஒடிச்சு ஒடிச்சு நடக்கும். எங்கம்மாவே சொல்லிட்டா நான் அழகுன்னு...இந்தக் கர்வம் வளர்ந்ததுன்னா தேவடியாத்தனம் தானா வரும். இன்னும் ரெண்டு பேர் உத்துப் பார்க்க மாட்டான்னான்னு என்னிக்குத் தோணிச்சோ அன்னிக்குப் போச்சு பொம்பளைன்ற பேரு. அப்புறம் குடித்தனத்துக்கு லாயக்கில்லை. வேற எதுனா செய்யலாம்.''

''யப்பா...''

''கேக்கறதுக்கு அருவருப்பா இருக்கும். ஆனா, உண்மை.''

''பொம்பளைங்க பாண்ட்டும், சர்ட்டும் போட்டுத் திரியற காலம் இது சரசு.''

''தப்பே சொல்லலீங்க நல்லா உடுத்து. உன் சௌகரியத்துக்கு உடுத்து. பட்டோ, பனியனோ எதுவேணா போத்திக்கோ, காட்டறதுக்குத்தான் உடுத்தறேன்னு தோணிச்சுனா வாழ்க்கை வேற திருசா போயிடும்.''

''வீட்டோட இருந்துக்கிட்டு எப்படி இவ்வளவு பேசற.''

''அண்டை அசல் தெரியாதயா இருக்கோம்.''

சரசு இப்போது வேலைக்குப் போகிறாள். இன்னும் ஆயிரம் கண்ணுக்குப் படும். நூறு மனிதர்கள் பழக்கமுண்டாகும். எடைபோட்டு, சகலமும் புத்தி குறித்துக் கொள்ளும். சரசு ஒரு குட்டிகையான பெண். விவேகம் மிக அதிகம் சில சமயம் சிரமங்கள் கூடக் கொடுக்கும்.

''குடிக்கிறது தப்புன்னு சொல்லலை. உங்களுக்கு இஷ்டமா, குடிங்க குடிச்ச பிறகு என்ன செய்யப் போறீங்க, அதை யோசனை செய்யணும். நான் பக்கத்துல வந்து படுக்க மாட்டேன். நினைவு இல்லாத ஆம்பளை புரள, கடனேன்னு கிடக்க என்னால முடியாது. சாப்பிட்டு லைலன்டா படுத்துருவேன்னு சொன்னா அதுவும் தப்புதான். அவனுக்கு என் பொண்டாட்டி. பிராந்தி பாட்டிலையே கட்டிக்கிட்டு தூங்கற அளவுக்கு வண்டி மாடா நீங்க உழைக்கல. இந்த ஊர் குளிர் நடுங்கற ஊருமில்ல.

''எப்பவாச்சும் ஒருநாள்தானே ஒரு தமாஷ்தான்.''

''அந்த தமாஷ் ஒரே ஒருநாள் நான் செஞ்சா இந்த ஜென்மத்துக்கு மறக்குமா...''

''ஏய்ய்...''

''நீ என்னடி சொல்றது. நான் என்னாடி கேக்கறதுன்னு வீம்பா...குடிங்க வீம்புக்குக் குடிக்கிறவன்தான் கெட்டவன். அயோக்கியன், அல்பன், பொம்பளைமேல மரியாதையே இல்லாதவன்.''

''சரசு, நான் சும்மா ஒரு பேச்சுக்குகேட்டேம்பா...''

''கேக்கணும்னு தோணிச்சே அதுவே என கெட்ட காலம்தான்'' சரசுவின் கண்ணில் நீர் கோத்துப் பளபளத்தது. தன் பற்களால் அவள் உதட்டைக் கடித்துக் கொள்ள, கன்னத்தில் நீர் வழிந்தது. பரமு இதை வியப்புடன் உற்றுப் பார்க்க, லேசாய் விசும்பல் எழுந்தது.



''டேய் டேய்...என்ன இது என்ன இது...''-இரவு முழுவதும் கொஞ்சி, கெஞ்சி சமாதானப்படுத்த வேண்டியிருந்தது.

வேண்டவே வேண்டாம் என்று மதுவை விலக்க வைத்தது இவள் கட்டிப்போடத் தெரிந்தவள். அந்த குட்சுமக்காரியிடம் இந்தப் பகல் நேரத்துப் பெண்கள் பேச்சைச் சொன்னால் என்னவாகும்.

'எவ அவ...மொத நான் பயந்து ஒதுங்கறவளாட்டம் ஒதுங்கிட்டு இன்னிக்குக் காரக் குழம்பு வைத்தறாளாமா இன்னிக்கு நான் துணி காயப்போட மாடிக்குப் போறேன் காரக் குழம்பு வருதா பாக்கலாம்.' சிடுவென்று சீறினாலும் சீறலாம். 'நீங்க போவேணாம். நானே அந்த வேலையும் செஞ்சுட்டுப் போறேன், இன்னும் பத்து நிமிஷம் முன்னாடி எழுந்திருச்சா போச்சு...'' என்று இன்னும் முன்கூட்டி எழுந்திருக்கலாம்.

சரசுவிடம் சொல்லலாமா வேண்டாமா...பேசினால் தானே வம்பு. பேசாது நாம் துணியைக் காயப்போட்டுவிட்டு வந்திருக்க வேண்டும். புடைவையைக் கேட்டதும் கொடுத்தது தப்பு. சமையல் என்னாக்கா என்றால் சிரித்து விட்டுப் போகத் தெரிந்த மாதிரி புடைவை கொடுங்க என்று கேட்டபோது பேசாமலிருந்திருக்க வேண்டும் சரசு புடைவை அடுத்த வீட்டுக் கொடியில் இருக்கிறது. சே...! என்ன முட்டாள்தனம் போய் எடுத்து வந்து விடலாமா.

பரமு படியேறினான். அடுத்த மாடி வெறிச்சோடியிருந்தது. சுவர் ஏகிறிக் குதித்தான். க்ளிப்பை நீக்கினான். புடவையை உருவினான்.

''யாரது...'-படிக்கதவில் பெண் குரல் கேட்டது. கதவு திறந்தது. பாப்பா மாடிப்படி கூண்டு முடியும் ரேழியில் சேலைத் தலைப்பு கீழே கிடக்க உட்கார்ந்திருந்தாள். கையில் புடவையுடனிருக்கும் பரமுவைப்

பார்த்துவிட்டு ஐயோ!' என்றான் சேலைத் தலைப்பு பிருஷ்டத்தின் கீழ் சிக்கிக்கொள்ள, இழுத்து மேலே போட்டுக் கொள்ளத் தடுமாறினாள். பரமு தடுமாறி னான், புடவையுடன் சுவர் ஏறிக் குதித்து தன் வீட்டு மாடியில் குதித்தான்.

இறங்கிக் கீழே வந்தான். திரண்டு சரிந்த பாப்பா வின் மார்புகள் கண்ணுக்குள்ளேயே நின்றன. ஏதோ ஒரு வேதனை பிடுங்கித் தின்றது.

சீக்கிரமே உப்புமா செய்ய ஆரம்பித்தான்.

''ஐயையே உப்பே போடலப்பா உப்புமாவுக்கு...'' பள்ளியிலிருந்து திரும்பிய பெண் ஆசையோடு ஒரு வாய் தின்றுவிட்டு, தட்டிலேயே துப்பி விட்டாள்.

உப்பே போடாது செய்த உப்புமாவின் உப்பு எப்படிப் போடுவதென்று தெரியவில்லை. யாரும் சொல்லித் தரவில்லை. இந்தச் சிக்கல் ஒரு புது அனுபவம்.

''வென்னீர்ல தான் உப்பு கரைச்சுத் தெளிச்சு அடுப்புல வச்சுக்கிளறி விட்ருப்பா சரியாயிடும்.'' லதாக் குட்டி சொல்லிக் கொடுத்தது.

கிளறினான். சுமாராய் இருந்தது.

''அம்மாகிட்ட சொல்ல வேணாம் லதா...''

''உப்புப் போட மறந்ததையா—சரி, சொல் லலை.''—குழந்தை உறுதியளித்தது.

இதோடுகூட, மேல் மாடி விஷயத்தையும் பரமு சரசுவிடம் சொல்லவில்லை. மறைத்தான்.

நாளை மாடிக்குப் போய்த் துணி காயப் போடுவது எப்படி என்று கவலைப்பட்டான்.

## 22

தட்டில் சோற்றைச் சரித்துக் குழம்பை ஊற்றி, அழுத்திப் பிசைகிறபோது லதா எதிரே வந்து உட் கார்ந்து கொண்டது.



''சாதம் சூடாயிருக்கே... எப்படிப்பா பிசைய றீங்க...''

''கொஞ்சம் கடும் பொறுத்துக்கணும். சுடச் சுடப் பிசையலேன்னா உண்டைக் கட்டியா நின்னுடும்.''

''இல்லப்பா. ஆற வச்சுப் பிசைஞ்சாத்தான் குழம் புச் சோறு நல்லா இருக்கும். சூடாப் பிசைஞ்சா இறுகிப்போய் ஒரு மாதிரி வாடை வருதுப்பா...''

''சொல்லவேயில்லையே என்கிட்ட. பத்து நாளா இப்படித்தான் பிசையறேன்.''

''வருத்தப்படுவியோன்னு சொல்லலை.''

''தெரியலேன்னா சொல்லிக் குடு லதா.''

''உனக்குப் போய் நான் சொல்லித் தரதா... எவ்வளவோ பெரியவங்க நீ...''

''அது சரிதான். ஆனா, இந்த வேலையெல்லாம் எனக்குப் புதுசுதானே...''

''நீ விட்டுடுப்பா. நான் ஆறவிட்டு ரெண்டு பேருக் குமா பிசைஞ்சுடறேன்.''

''பையன் எங்க காணோம்?''

''ரெண்டாம் தடவை பின்பக்கம் போயிருக்கான். வெளிக்குப் போற இடத்துல நோவுதாம்.''

''டேய் கோபி— இத ஆற வச்சுடும்மா. டேய் தம்பி கதவைத் திற...''

''வேணாம்ப்பா!''

''அழுவுறியா?''

''ஆமா.''

''ஏண்டா...''

''நோவுதுப்பா.''

''கதவைத் திறடா.''

''வேணாம்.''

''தம்பி, அடம்புடிக்கக்கூடாது. அப்பாதானே... கதவு திற.''

கதவு திறந்தது. அவிழ்ந்த அரைநிக்கரை நெஞ்சில் சுருட்டி வைத்தபடி பையன் எழுந்து நின்றான்.

''சாதாரணமாத்தானேடா இருக்குது ஏன் அழுவுற.''
''போ சொல்ல எரியுதுப்பா.''

''தம்பி. நீ குனி. நான் கழுவி வுடறேன்.''

''வேணாம்பா!''

''அடம் புடிக்காதே. உக்காரு!''

பரமுவின் இடது கைவிரல்பட, பையன் அலறினான். கழுவி அவனை அப்படியே தூக்கி வந்து நடுக் கூடத்தில் குப்புறப்படுக்க வைத்து ஆசனவாய் பிரித்துப் பார்க்கையில் சிறு கொப்புளங்கள் தெரிந்தன. போரிக் பவுடரும் தேங்காய் எண்ணெயும் கலந்து தடவினான். மனது சங்கடப்பட்டது.

'லதா, சாப்பாடு பிசைஞ்சுட்டியா.''

' ஆயிருச்சுப்பா.'

' லதாம்மா, மாடில துணி காயப் போடணும். இன்னும் பத்து நிமிஷம் இருக்குல்ல கிளம்பறதுக்கு''

''எனக்குக் கஷ்டம்பா... புடவை, பாவாடை காயப் போடறதெல்லாம்.''

''நான் கத்துத் தரேன், வா.''

''வேணாம்பா!''

''எனக்கு உதவி செய்ய வேணாமா!''

''அதான் சோறு பிசைஞ்சேனே!''



''ஒருத்தரா இத்தனை துணியும் மொட்டை மாடிக் குத் தூக்கிட்டுப் போய் காயப் போடறது கஷ்டமா இருக்கும்மா. நீயும் வா மாடிக்கு.''

''பவுடர் வெயில் பட்டு கலைஞ்சிடும்.''

''வந்து போட்டுக்க.''

''திட்டு திட்டாவும்.''

''நல்லா முகத்தைத் துடைச்சுட்டு போடேன். சொல் பேச்சு கேள். வா மேலே.''

''போ. நான் வரல.''

''நீ வா மேல...சொல் பேச்சு கேக்கறதில்லேன்றது சரியாத்தான் இருக்கு''

பெண் அதிர்ந்து நின்றது.

பதில் பேசாது படிகளில் ஏறிற்று.

' லதாக்குட்டி, கோவமா.''

கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு கவிப் போட்டது.

''அப்பா கூடத் திட்டறேன்னு வருத்தமா.''

கண் பனிக்க 'இல்லை'யெனத் தலையாட்டி விட்டுக் காரியம் கவனித்தது.

''கோச்சுக்காதடா. இதெல்லாம் செய்யறது எனக்குக் கஷ்டமில்லையா?''

''அப்ப ஏன் வேலையை விட்டே? அம்மாவை வேலைக்கு அனுப்பிச்சுட்டு... இப்ப அம்மாவும் எங்களைத் திட்டுது. நீயும் திட்டற. எப்பப்பாரு திட்டிக் கிட்டே இருந்தா நான் வீட்டை விட்டு ஓடிப் போறேன்...''

பரமு சட்டென்று குழந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''நீ வேலைக்குப் போப்பா. நீ வீட்டுல இருந்தா கஷ்டமா இருக்குது.''

''ஏம்மா''

''அம்மா இருக்கற மாதிரி இல்ல நீ இருக்கறது.''

''சரிடா...என்ன பண்றது. வேறு வழி...''

''அம்மா திட்டினா கஷ்டமாயில்ல. நீ திட்டி முறைச்சா அப்படியே...அப்படியே...''— குழந்தை விக்கி விக்கி அழுதது.

''நீ திட்டினா ரொம்ப பயமாயிருக்குப்பா. காலெல்லாம் நடுங்குது, தம்பிக்கு நாலு நாளா நோவு. அப்பாக்கிட்ட சொல்லாத சொல்லாதன்னு கெஞ்சறான்...''

''ஏன் லதா?''

''அம்மா மருந்து போட்ற மாதிரி உனக்குப்போடத் தெரியாதேன்னு.''

''இப்ப போட்டேனே லதா.''

''போடத் தெரியுமோ தெரியாதோன்னு பயம்.''

''நான் உங்களைக் கோவிச்சுக்கறதேயில்லியேடா''

''இருந்தாலும் பயம்.''

''லதாம்மா. நான் ஏன் உன்னை மாடிக்கு வரச் சொன்னேன் தெரியுமா.''

ஏன் என்கிற மாதிரி குழந்தை ஏறிட்டு நோக்கினாள்.

''அடுத்த வீட்ல அம்மா ஒரு மாதிரி பேசறாங்க, என்கிட்ட குடுங்க, நான் புடவை காயப் போடறேன்னு சுவரு தாண்டி வராங்க.''

''ஐயோ, அது பஜாரிப்பா.''

''ஆ''



குழந்தை குரலைத்தாழ்த்திக் கொண்டாள். ''அம்மா அப்படித்தான் சொல்லும் அதுவும் அந்தச் சின்னது இருக்கே...அம்மா சேர்க்கவே சேர்க்காது. முனிம்மாக்கு இடியாப்பக் காசு நாப்பது ரூபா பாக்கி. கேட்டா, குடுத்துட்டேனுட்டாங்களாம். ஒரு நாள் தெருவுல நின்னு ஒரே கெட்ட வார்த்தையா சண்டை...'' தகப்பன் சிறினதைக் குழந்தை மறந்தே போனாள்.

''என்னப்பா சொல்லிச்சு உங்கிட்ட.''

''ஆம்பளை புடவையெல்லாம் காயப் போடறது தப்பு, கொண்டாங்க. அக்கா புடவையை நான் காயப் போடறேன்னு கையிலேர்ந்தே பிடுங்குது.''

''குடுத்துட்டியாப்பா.''

''வேறென்ன செய்யறதுன்னு தெரியலியே. வாங்கி அவங்க வீட்டுக் கொடியிலேயே போட்டு க்ளிப் குத்திடுச்சு.''

''அம்மாவுக்குத் தெரிஞ்சா உண்டு இல்லேன்னு பண்ணிடும்.''

''என்ன பண்றதுன்னே தெரியல லதா, எங்க சாப்பாடு, யாரு சமையல் இப்படி ஏதாவது தொண தொணன்னு கேள்வி. எனக்குப் பேசவே பிடிக்கலை. முறிச்சுக்கவும் முடியலை.''

''என்னிக்கு இது?''

''நேத்து, முந்தா நேத்து...''

''நேத்திக்கே எங்கிட்ட சொல்றதுக்கென்னப்பா— சாயங்காலம் அவங்களே புடவையை எடுத்துட்டு வீட்டுக்கு வந்துட்டாங்களா...''

''இல்லை...நானே சுவரு ஏறிக் குதிச்சு...'' பெண் விழி விரித்து வியந்தது. மேற்கொண்டு நடந்ததை இந்த குழந்தையிடம் சொல்வதா, வேண்டாமா என்று

தயக்கம் வந்தது. பரமு சின்ன அவஸ்தையில் நெளிந்தான். வானம் பார்த்தான். நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

''துணி பிசிக்கப் படுத்துக் கிடந்ததா.. எனக்குத் தெரியும். அந்தப் பீடை எப்பவும் அப்படித்தான் இருக்கும்.''

அடிவயிற்றில் குத்தி முகவாயைத் தட்டியது போல் ஒரு இரட்டை அடியைப் பரமு உணர்ந்தான்.

''அதனாலே அம்மாவுக்கு அதைக் கண்டா புடிக்காது பொம்பளையா அது, கழிசடைன்னு திட்டுவாங்க. அப்பா''

''என்னம்மா''

''நீ கீழே போ இனிமே நானே துணி காயப் போட்டுட்டுப் போறேன்.''

பரமு படிச்சரிவுக்கு நெருங்கி இறங்க அடுத்த வீட்டில் குரல் கேட்டது.

''எங்கடி உங்கப்பா...தினமும் அவர் வந்து துணி காயப் போடுவாரே...'' அந்தப் பெண் குரல் கேட்டது. பரமு அசையாது சுவர்ப்பக்கம் சாய்ந்து நின்றான்.

''உன்னைத்தான். எங்கே உங்கப்பா''

''எதுக்கு கேக்கறீங்க.''

''ஆங்...மாவரைக்க கேக்கறேன். நேர் பதிலா சொல்லாத நீ கேள்வி கேக்கறியே...ஏன் நீ வந்து துணி காயப் போடறே...''

''எங்க வீட்டுத் துணிய நாங்க யார் வேணாலும் வந்து காயப் போடுவோம்...எடுப்போம். உங்களுக்கு என்ன அதைப் பத்தி...''

''புடவை கீழே விழுதுடி''

''விழுந்துட்டுப் போவுது உங்களுக்கென்ன...''

''அடிச்சக்கை...உங்கம்மா ஆள் மாத்திட்டாளோ.''



''ஆமா... ஆள் மாத்திட்டாங்கதான்...''

''புடவை தோச்சது நீயா, உங்கப்பாவா...''

பெண் பதில் சொல்லாது இருந்தது.

''அம்மா ராங்கி அப்படியே வந்திருக்கு. ஒரு புடவை தொகவத் தெரியல. வாயைப் பாரு.''

''எல்லாம் இது போதும். நீங்க உங்க வேலையைப் பாருங்க.''

''பல்லு மேலயே போட்டேன்னா... அடங்காதது?''

''அதெல்லாம் நீங்கதான்...''

''எப்படிப் புடவை தொங்க வுடறா பார்... கறிக்கடைக்காரன் ஆடு அறுத்துத் தொங்க வுடற மாதிரி... உங்கப்பார் கிட்டே கத்துக்கிடறதுதான்...'' —கூடவே கேலிச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

''எங்கப்பாவைப் பத்தி நீங்க ஒண்ணும் பேச வேணாம்.''

''நாங்க ஏன் பேசறோம். அதான் தெருவே பேசுதே. சரசு புருஷன் பாவாடை தோய்க்கறதும், பாத்திரம் தேய்க்கறதும் பாலு காய்ச்சி காபி போட்டுக் குடுக்கறதும்...சரி உங்கம்மாவுக்கு என்ன வேலை.''

''தெரியாது?''

''உங்கப்பாவுக்குத் தெரியுமா, இல்ல அவருக்கும் தெரியாதா.''

''இதப் பாருங்க - அநாவசியமாவம்புக்கு வந்திங்க. எங்கம்மா பிச்சுப் போட்டுரும். சொல்லிட்டேன். முன்னாடியே ஒரு தடவை நல்லா எங்கம்மாக்கிட்டே வாங்கிக் கட்டிருக்கீங்க, மறந்து போச்சா திருப்பியும் வேணுமா...''

''என்னடி பண்ணுவீங்க நீயும் உங்க அம்மாளும். மிரட்டறியே கிடந்து...''

குழந்தையைக் கூப்பிட்டிருக்கக் கூடாதோ... இந்த ராட்சசியிடம் பேசும்படி இந்தச் சிறுமியை விட்டிருக்கக் கூடாதோ— தாடகையை வதம் பண்ண குழந்தை ராமனை அனுப்பிய தசரதன்போல பரமு கலங்கினான்.

வதம் நிகழ்ந்தது. வேறு விதமாய் நடந்தது. ராமனைப் புறங்கையால் தள்ளிவிட்டு இந்தத் தாடகை தசரதனுக்கு ஒரு பெரும் அறை வைத்தாள்.

'குளிக்கிறபோது பாத்ரும்ல மாடில நிக்கற ஆம்பளை நிழல் தெரியுது. சுவர் ஏறிக் குதிச்சு எட்டிப் பார்க்கற மாதிரி ஆளு வருது. என்னா ஏதுன்னு கேட்டா மிரட்டறியே...எங்கடி உங்கம்மா— என்னா குடித்தனம் உங்களது... இன்னிக்கு ராவுல வரட்டும். ரெண்டுல ஒண்ணு பாத்துடறேன்.''

குழந்தை காலி பக்கெட்டுடன் படிபக்கம் பார்த்தாள். சிவந்து போயிருந்தாள். அப்பாவின் கைகளைப் பிடித்துச் சரசரவென்று கீழே இறங்கி வந்தாள்.

''நீ இனிமே மேல போவாதப்பா... நான் சாயங்காலம் வந்து துணி எடுக்கறேன்.''

''என்ன லதா, இப்படிப் பேசுது அந்தம்மா...''

''பேய் சரியான பேய்ப்பா அது. இன்னிக்கு சாயங்காலம் அம்மா வரட்டும். சரியா வத்தி வைக்கிறேன்.''

தோளில் பை மாட்டித் தம்பியை வீட்டிலேயே விட்டுவிட்டுப் பள்ளிக்குப் போனாள்.

மாடியில் சற்றைக்கொரு முறை கொடிப் பக்கம் தட்டுகிற சப்தம் கேட்டது. ஆள் சுவர் தாண்டித் தொம்மென்று குதிக்கிற சப்தம் கேட்டது. நடக்கிற சப்தம் கேட்டது. மாடிக்கதவை இழுத்து இழுத்து அசைக்கிற சப்தம் கேட்டது.



பரமு புரியாமல் தவித்தான். கண நேரத்தில் கதையை மாற்றிக் குரலை உயர்த்திச் சண்டைக்கு அலையும் அந்தப் பெண் மனோதத்துவம் புரியாமல் விழித்தான்.

மாலையில் என்னென்ன ரகளைகள் வருமோ என்று கவலைப்பட்டான். சரசுவின் கோபக் குரல் மனத்துக்குள்ளே கேட்க, ஒரு முடிவோடு மாடிக்குப் போனான். மாடிக் கதவுத் தாளைத் திறந்தான். அந்தப் பெண், இவன் வீட்டு மாடியில் சுவர் நிழலில் உட்கார்ந்து கதைப் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தது. புடவை சரியாய் உதறப்பட்டுச் சுத்தமாய் நீவி விடப் பட்டிருந்தது. கறிக்கொத்து போலத் தொங்கி வலை சரியாக்கப்பட்டிருந்தன.

''என்னங்க...'' —பரமு பவ்யமாய்த் தள்ளி நின்றபடி கேட்டான்

''துணிய தாறுமாறா போட்டுட்டுப் போச்சு உங்க பொண்ணு. நான் சரி பண்ணினேன்.''

''நன்றிங்க.''

''ஏண்டி இப்படிப் போடறேன்னதுக்கு அதிகப்பிரசங்கித்தனமா பதில் பேசிடுச்சு...''

''சின்ன பொண்ணுங்க அது.''

''இல்லீங்க. சரசக்கா தப்பா வளர்த்திருக்கு. இத்தினி பேச்சு நல்லதில்லை.''

''வுட்ருங்க?''

''உங்களுக்காக வுட்டேன். சரி, புரியாத பேசுதுன்னு பொறுத்துக்கிட்டேன். சாப்பாடாச்சுங்களா?''

''ஆச்சுங்க. நீங்க உங்க வீட்டுக்குப் போயிடறீங்களா?''

''ஏன்...''

''இல்லீங்க... ஆனா இனிமே இப்படிச் செய்யாதீங்க. சரகக்கு இதெல்லாம் புடிக்காது.''

''எங்க, என்ன தப்பு.''

''தப்புதான். இஷ்டமில்லேன்னா வுட்றணும்?''

அந்தப் பெண் வெறித்தாள்.

''நாங்க என்னா, ஆம்பளை கையப் புடிச்சா இழுத்தோம். என்னவோ தப்பு, இஷ்டமில்லேங்கறீங்களே.''

''என் கையை நீங்க இழுத்துட்டு நான் உங்களை இழுத்ததா சொல்லிட்டீங்கன்னா உங்களைத்தான் ஊர் நம்பும். கெட்ட பேர் வாங்கறதுக்கு தெம்பில்லைங்க. போயிட்டு வாங்க.''

''படுத்துருக்கற பொம்பளைய எட்டிப் பாத்துட்டுப் போறது தப்பில்லையா... எனக்கு பகீர்னு ஆயிப் போச்சு நாங்க ஊரை கூட்டினமா, உங்க மேல குத்தம் சொன்னமா...''

''நான் புடவை எடுக்கத்தாங்க வந்தேன் நிலைமை தெரியாத வந்துட்டேன். கண்ணுலபட்டது, கண்ணோட போச்சு. இதை விவகாரமாக்காத வுட்டது உங்க பெரிய மனசு, வுட்ருங்க. உங்க வீட்டுக்குப் போங்க.''

''எதுனா கதைப் புஸ்தகம் இருக்கா உங்களாண்ட?'' சகல பேச்சையும் ஒரு வீச்சில் உதறிவிட்டுப் புதிதாய் ஆரம்பித்தாள்.

''போம்மா... வூட்டுக்குப் போ முதல்ல... ஆயிரம் ஆயிரம் வேதனை ஒவ்வொரு வீட்டிலயும். நீ ஏன் வேலில போற ஓணானை விரட்டற. வீட்டுக்குப் போ.'' பரமு வெறுப்பின் உச்சியில் பேசினான்.

''ஆங்... ஓடற ஓணானை விரட்டிப் புடிச்சு...'' அந்தப் பெண் பெண்மையில்லாதவை பேசினாள். எகிறிக் குதித்து வீட்டுக்குப் போனாள். பத்து நிமிடம்



கழித்து பெண்ணும் தாயாரும் வாசலில் வந்து கத்தினார்கள்.

''எட்டிப் பார்க்கறாங்க பொம்பளை குளிக்கறப்ப... கேட்க ஆளில்லையா... என்ன அநியாயம்... தடிமாடு மாதிரி ஆம்பளைய காவல் வச்சுட்டுப் பொட்டச்சி போயிடறா. அடுத்த ஊட்டுல பொம்பளைங்க இருக்கறதா வேண்டாமா...'' — நாலு பேர் வேடிக்கை பார்க்க குரைக்கத் துவங்கினாள்.

'லதாக்குட்டி, நீ இன்னிக்கு ஏண்டா பள்ளிக்கூடம் போனே...'

தகப்பன் கம்பியின் பின் முகம் செத்துப் புலம்பினான்.

கற்பு என்பது பெண்ணுக்குக் கைவிலங்காய் இருக்கலாம். தலையில் ஏற்றபட்ட சுமையாய் இருக்கலாம். ஆனால் அதைக் களவாட எவனும் முற்படின், தலைச் சுமையில் கை வைக்கத் துணிந்த பின் தரும அடி தவறாது விழும். இங்கேபிராது சொன்னவளே பலமான சாட்சி, அவள் புலம்பல் பெரும் சாதகம். அவள் கண்ணீர் முக்கியமான வாக்குமூலம். அவள் அபயக் குரல் கொடுக்க, உடனே போர் மூளும்.

வழக்கு பொய்யாய்ப் போடப்பட்டாலும் இந்த வலுவான உதவிகள் குற்றம் சுமத்தப்பட்டவனை அதலபாதாளத்தில் தள்ளும்.

பெண் என்பவளைப் பேதை என்று உலகம் முத்திரை குத்தியிருக்கிறது. அதே போல், ஆணுக்குக் காமுகன் என்றும் பட்டம் கொடுத்திருக்கிறது. இதில் விதிவிலக்கு இருக்கக் கூடும் என்கிற யோசனை எவருக்கும் வந்ததில்லை.

## 23

பெண், விரல் நீட்டிக் குற்றம் சுமத்தினால் கடவுளையும் காமுகன் என்று, உலகம் நம்பும். கேள்வியின்றி

சக்தியை உருவும். தண்டித்த பிறகு நீதி விசாரணை நடத்தாலும் நடக்கும்.

''உங்கண்ணாவர...சரியான போக்கிரி. பாக்கற பார்வையே சரியில்லை'' என்று தம்பி மனைவி சொன்னால் போதும். ஒட்டி விளையாடிய உடன் பிறப்புப் பாசம் ஒரு நொடியில் போகும். பாசம் அறுக்கவும் நட்பைக் கலைக்கவும், பிள்ளையையும் தகப்பனையும் பிரித்துப் போடவும் பெண்ணால் முடியும். பேரரசுகள் சாய்ந்திருக்கின்றன என்று சரித்திரம் சொல்கிறது.

பேதை எப்படிப் பேரரசுக்கு எதிராக முடியும் என்று யாரும் இதுவரை கேள்வி கேட்டதில்லை. சரிந்த பிறகும் விசாரணை செய்து புரிந்து கொண்டதில்லை. பேதைதானா என்று யோசித்ததே இல்லை. சாய்ந்து விட்டு பேதையிடம் தவறுக்கு மன்னிப்பு கேட்டுப் போய் விட்டார்கள்.

ஆண் ஆணுக்கே எதிரியாகும் இடம் பேதை குறை சொல்கிற நேரம்தான். பெண் புலம்பினால் போதும். ஆணுக்குப் புத்தி பேதலித்து விடும்.

'செல்வ மகனே...அந்த வஞ்சகனின் நெஞ்சைக் கொண்டு வா' என்று கதறினாள், கதை முடிந்தது. நெஞ்சு ரத்தம்தான் நினைவேயொழிய வஞ்சகமா? இல்லையா என்கிற கேள்வியே இல்லை.

வாசலில் தாயும் பெண்ணும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள் சின்ன கூட்டம் கூடியிருந்தது.

''நல்ல குடித்தனமா இருந்தா அதது இருக்கிற இடத்துல இருக்கும். பொம்பளை எட்டு மணிக்கு பவுடர் அப்பிட்டு வேலைக்குப் போயிடுது. என்னா வேலையோ யாருக்குத் தெரியும் நீ போய்க் கேளு.''

'வூட்ல இருக்கிற ஆம்பளை துணி காயப் போடற சாக்குல வெய்ய நேரத்தில் நின்னு எட்டிப் பார்க்கறான். எம்மா நேரம் ஒரு ஆளு துணி காயப் போடறதுக்கு.''



''எம் பொண்ணு நாலுநாள் முன்னமே சொல்லிச்சு. 'நிழலு வுழுதும்மா மேல'ன்னு. அதெல்லாம் ஒண்ணு மில்ல, காக்கா நிழலா இருக்கும், சும்மா திட்டினேன். காக்காவலியும் காக்கா அண்டங்காக்கான்னு இப்ப தான் தெரியும்.''

''சும்மானா சுத்திப் பாத்துக்கிட்டுருப்பாங்க. எம்மா உடனே தப்பா சொல்லணும்னு நானும் விட்டேன்.''

''ஆனா, பாக்கற பார்வை என்னா மாதிரின்னு பொம்பளைக்குத் தெரியாது...இப்ப நீயும்தான் பாக்கற-உன் எதிர்க்கதான் நிக்கறேன். தாயும் புள்ளையும் பாக்கறாப்பல இல்லை...எது தெரியுதோ தெரிய லையோ பொம்பளைக்குப் பாக்கறதுல தப்பு இருந்துச் சுன்னா பட்டுன்னு புடிபட்டுரும். ஆத்தமாட்டாமதான் கத்தறேன்.''

கூட்டம் இருவர் பேச்சுக்கும் தலையாட்டிக் கொண்டிருந்தது. மூடின இவன் வீட்டுக் கதவை அடிக்கொரு முறை பார்த்துக்கொண்டது. கதவு திறந்தால் போதும் கொண்டாட்டம்தான். தெரு இரண்டு படும் சந்தோஷம் தான். நின்று பார்த்துவிட்டு, கூச்சலை ரசித்துக் கேட்டு விட்டு, கூட நாலு முறை தலையாட்டிவிட்டு...

ஊரெல்லாம் திண்ணை கட்டி
வெறும் பேச்சு வெள்ளை வேட்டி

அப்பா! எவ்வளவு குமுறல் இந்தக் கவிதை வரி களில்! எவ்வளவு பெரிய சோம்பேறித் தேசம் இது... உழைத்து அழுக்குப்படாத வேட்டியும், வெட்டிப் பேச்சும், வெற்றிலைக் குதப்பலும், உரத்த சிரிப்பும்... எவ்வளவு மனிதர்கள் இங்கே...

''எனக்குத்தான் வேலையில்லை, போய்விட்டது. இவ்வளவு பெரிய கூட்டத்துக்குமா வேலையில்லை. கடவுளே! நான் ஏன் அந்த வேலையை விட்டேன். மெஷின் சுருதியும் சுத்தியல் நாதமும், வண்டிகளின்

ரீங்காரமும்... அந்த சங்கீத உலகத்தை ஏன் புறக்கணித்தேன். இப்படி நாராசம் கேட்கும்படி ஏன் ஆயிற்று. எனக்கு கதவு திறந்து ஒரு கணம் புயலெனப் புறப்பட்டு விடலாம். பேசுகிற வாயைப் புறங்கையால் ஒரு அறை அறைந்து நிறுத்தலாம். அதே குரலில் அதே மாதிரி குற்றச்சாட்டை இறைக்கலாம்.

''எங்க வூட்ல கவத்துல ஏறி தின்னவடி நீ'' என்று ஏக வசனம் பேசலாம். எடுபடுமா?''

ஆணைக் காமுகன் என்று இவ்வுலகம் வர்ணித்திருக்கிறது. கை ஓங்க கயவன் என்கிற பெயரும் வரும். சண்டாளன் என்கிற ஏற்றமும் வரும். சண்டாளன் என்றால் கீழ்மகன். பிறன் மனைப் பெண்ணைத் தொடுபவனே கீழ்மகன்.

'மாபெரும் சபையினில் நீ நடந்தால்—உனக்கு
மாலைகள் விழ வேண்டும்—ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று
போற்றிப் புகழ வேண்டும்'

சமய சந்தர்ப்பம் தெரியாமல் உள்ளே பாட்டு ஓடிற்று. பாமுவுக்கு இந்தப் பாட்டு மிகவும் பிடிக்கும். பிள்ளையைத் தோளில் போட்டுக் கொண்டு பாட, நெஞ்சில் உவகை பொங்கும். ஏழு வயதுப் பையனுக்கு இதன் முழுப்பொருள் விளங்க வேண்டுமே என்கிற தாபம் எழும். தன்னுடைய சின்ன வயசில இந்தப் பாட்டும், இதைப் பாடிய கதாநாயகனும் பெரும் உந்துதல் தந்தது போலத் தன் பிள்ளைக்கும் வரவேண்டும் என்கிற ஆசை எழும்.

உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்...

பாமு நகம் கடித்தான்.

'உலகத்தில் போராடலாம்'

முகம் துடைத்தான்.



'உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்'

—நெற்றியில் கை வைத்துப் பாமு. பாமு என்கிற பரமசிவம் ஃபோர்மன் அலெப்பினி. எதுவும் புரியாமல் பெருமூச்சு விட்டபடி உட்கார்ந்திருந்தான்.

எனக்குப் போராடத் தெரியவில்லையோ... என்னை யார் என்று எனக்குப் புரியவில்லையோ, என்னை ஆராய்ச்சி செய்து கொள்ளாமல் அதிகம் அலட்டிக் கொண்டு விட்டேனோ!

மானம் பெரியதென்று வாழும் மனிதர்களை
மானென்று சொல்வதில்லையா பிறர்
தேவையறிந்து கொண்டு வாரிக் கொடுப்பவர்கள்
தெய்வத்தின் பிள்ளையில்லையா.

ஏய்... இதென்ன கூத்து. அடுத்த வீட்டுப் பெண்ணின் தேவையென்ன... எதை நான் வாரிக் கொடுத்திருக்க முடியும்?

நெஞ்சு ரவிக்கையைப் பிரித்துவிட்டு மல்லாந்து படுத்து கிடக்கிற பெண்ணை சம்பந்தமில்லாத ஆண் என்ன செய்ய... கடவுளே... முப்பது வயது... படிக்கிறாள் திருமணமாகவில்லை. வெளி வாசலில் புழங்கும் சுதந்திரமில்லை. வீடு, வீடு என்று ஒரு எல்லைக்குள் வளைய வந்து கொட்டடியில் அடைப்பட்ட குதிரை மாதிரி சதைத் தெறிப்பில் நரம்பு இழுப்பில் குதிரை மிரண்டு உதைத்து விட்டது.

என் வெட்கம், என் பலம், என் அவமானம் என்னைக் கலவரப்படுத்த. எதிர்ப்பக்கம் புரிந்து கொள்ளவில்லை.

மிரண்டு எகிறும் குதிரைகள் எத்தனை உண்டு. தொழிற்சாலையில், தட்டி எவ்வளவு சமாளித்திருக்கிறேன். பேசிப் பேசி லகானை இறுக்கி எப்படி நிறுத்தியிருக்கிறேன். ஓடவிட்டு அயரச் செய்து மடக்கியிருக்

கிறேன். ஏன் இப்போது மறந்துவிட்டது. இங்கு ஏன் அடிபட்டுவிட்டேன். என் தவறு என்னுள் நிதான மில்லை. விழிப்பு இல்லை. ஓயாத கவலை. பெண் என்பதால் ஒரு மிரட்சி.

அஸெம்ப்ளியில் ஆயிரம் ஆண்களைச் சமாளித்து வேலை வாங்கியவன், ஒரு பெண்ணைக் கண்டு மிரண்டு விட்டேன்.

பெண் எனக்குப் பழக்கமில்லை. தாய், தமக்கை, மனைவி, மகள் என்ன பரிச்சயமுண்டே தவிர, பெண்— வெறும் பெண் பழக்கமில்லை. பெண்ணோடு கை குலுக்கியதில்லை. அம்மா கையைத்தான் ஹாப்பி பர்த்டே என்று குலுக்கியிருக்கிறேன். பெண்ணை காதலித்த தில்லை. மனைவியைத்தான் காதலித்திருக்கிறேன். தமக்கைக்குப் பரிசளித்திருக்கிறேனே தவிர, வெறும் பெண்ணுக்கு எதுவும் கொடுத்ததில்லை.

ஏனோ அந்தப் பெண் மீது கோபம் வரவில்லை. முப்பது வயதுத் தனிமை. என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற்றம் தனிமை. தனிமை தந்த ஆங்காரம். மன முறுக்கல். இந்த இளமையும் படிப்பும், அழகும் காட்டில் எரிந்த நிலவாய் வெறும் மேல்மாடி வெயிலாய்... சிரமம்தான். கதைப் புத்தகம் கேட்டுத் திருப்பிக் கொடுக்கிறபோது நிச்சயம் 'லவ் யூ' சொல்லிவிடும்.

சரி தாயே...என்னால் ஆகுமா!

இந்தச் சண்டை ஒரு விதத்தில் நல்லது. இதமாய்ப் பேசலாம் என்று நினைத்து, உன் லவ் யூவைச் சுமந்து அலைக்கழிவதை விட, உன்னை அலைக்கழிவதை விட, இரண்டு வீட்டையும் சிதறி எறிவதைவிட, உன் கூச்சலும் என் அவமானமும் எவ்வளவோ தேவலாம். உன்னால் ஆனதைச் செய். நீயாகவே கத்தி ஓய்ந்து போ.



நான்கு மணிக்கு லதா வந்தாள். அப்பாவும் பெண்ணும் மாடிக்குத் துணி எடுக்கப் போனார்கள்.

''அப்புறம் அந்தப் பொண்ணு எதுனா கேட்டுதாப்பா?''

''உம்.''

''என்னா?''

''சுவரு தாண்டி இங்க வந்து இறங்கிக் கதைப் புத்தகம் கேட்டுது.''

''ஐயோ...''

''ஒண்ணும் கிடையாது. போம்மானுட்டேன்.''

''அப்புறம்.''

''வாசல்ல நின்னு கூச்சல் போட்டாங்களே பாக்கணும், அம்மாவும் பொண்ணும்.''

''கதைப் புத்தகம் குடுக்கலைன்னா...''

''இல்லை... குளிக்கறப்ப நான் எட்டிப் பார்த்தேனாம்.''

''அப்பா...''

''நான் உள்ளறயே இருந்துட்டேன். கத்திட்டுப் போட்டும்னு, தெரு கூடிடுச்சு''

''எம்பா— நீ வெளிய வந்து...''

''எதுக்கும்மா..பாவம், அந்தப் பொண்ணு. கல்யாண வயசு தாண்டியிடுச்சு. மனசுல ஆயிரம் கவலை அதுக்கு. நாம வேற கோபத்துல எதாவது கெட்டது பேசி...''

''அவங்க ரொம்ப கெட்டவங்கப்பா... அம்மாவும் பொண்ணும்.''

''இல்லம்மா...வாழ்ந்து கெட்டவங்க ..''

''அப்படின்னா...''

''வசதியா இருந்துட்டு மெள்ள மெள்ள நம்மளை மாதிரி ஆயிட்டாங்க''

''அதுக்கு கல்யாணம் ஆகலேன்னா நம்மளை எதுக்குத் திட்டணும்? நாம என்ன பண்ண முடியும்?''

''நல்ல மாப்பிள்ளையா தெரிஞ்சா சொல்லலாம்''

''இப்படித் தப்பா பேசறாங்களே...''

''நாம தப்பு பண்ணலியே. மனசாரவும் தப்பே பண்ணலியே.''

''அவங்களுக்குப் புரியாதுப்பா...''

''புரியும். ஒரு நாள் புரியும்.''

''அம்மாக்கிட்ட சொல்லிவுட்டா ரெண்டா கிழிச்சிரும்.''

''கிழிச்சு என்னா புண்ணியம்—''

''சொல்ல வேணாங்கிறியா?''

''சொல்லிடணும். இதமாதிரி தப்பு பேசினதை நிச்சயமா சொல்லிடணும் சொல்லிட்டு சண்டை போடாதேன்னு தடுத்துடணும்.''

சரசு சாப்பிட்டதும் சொன்னார்கள்.

''யாரைப் பார்த்துச் சொன்னா? வாடி என்கூட....''—சரசு புடவையை வரிந்து சொருகி, எழுந்தாள்.

''எதுக்குப் போற சரசு—சண்டை போடவா— இன்னும் ஒரு அவர் பொறுத்துப் போனா... ஊர் அடங்கிடும் உன் கூச்சல் தெளிவா கேக்கும், அப்ப போயேன்.''

''விளையாட்டா இது அசிங்கமா பேசியிருக்காங்க உங்களை.''

''சேத்துல கல் எறிஞ்சா...''

''இறங்கிக் கலக்கிடுவேன். சரசு வீணா சண்டைக்குப் போமாட்டா. வந்த சண்டைய விடவும் மாட்டா.''



''வுட்டுரு சரசு.''

''ஏன்?''

''ரொம்ப அசிங்கத்துக்குப் போவும்.''

''ஒரு கேள்வி கேக்கட்டுமா?''

''கேளு—''

''உங்க பேர்ல தப்பு இல்லையே.''

பாமு அதிர்ந்தான். முற்றிலுமாய் நிலைகுலைந்தான். முகம் முழுவதும் கேள்வியாய் மனைவியைப் பார்த்தான். எழுந்து நின்றான்.

''போ சரசு போய் சண்டை போடு. ஆனா ஒரு விஷயம்.''

''என்ன?''

''அந்தப் பொண்ணு உன்னைவிட உத்தமி. அவளுக்கு எம்மேல் சந்தேகமேயில்லை. நீ போகலாம். போய் சண்டை போடலாம்.''—சட்டையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான். வாசல் இருட்டில் செருப்புக்குத் துழாவினான்.

''எங்க போறீங்க, இந்த நேரத்துல—''

''என்னால முடியலை—''

''என்ன முடியலை...''

''வீட்ல இருக்க முடியலை. கம்பெனி மாதிரி ஒரு நிம்மதியான இடம் உலகத்துல எங்கயும் இல்லை.'' சட்டையை மாட்டி வெளிக்கதவைத் திறந்தான். இருட்டில் இறங்கி நடந்தான். தொலைவில் தாம்பரம் ரயில் நிலையத்தின் விளக்குகள் மின்னின.

ஏனோ வானம் பார்த்த துண்டான கை நினைவுக்கு வந்தது.

சொல் தாங்காமல்தான் அந்தக் கை செத்துப் போயிற்றோ... மண்ணில் விழுந்து மல்லாந்து வானம் பார்த்ததோ!

நாவினாற் சுட்ட வடு. காயம் கூட இல்லை...வடு. சுட்டுப் பொசுங்கிப் பிண நாற்றம் வந்து, பிறகு காலத்தால் ஆற்றப்பட்டாலும் வடுவாகி நின்று நெஞ்சையறுக்கும் வடுவை வருட, ரணப்பட்ட நேரம் நெஞ்சில் மோதி வலி மறையாது நிற்கும்.

''உங்க பேர்ல தப்பு இல்லியே...''

''தப்பு இருந்தா என்னாடி பண்ணுவே...'' பல் கடித்து மூஷ்டி மடக்கும் கோவம் வந்தது. பிசகு. பெண்ணைக் கொண்டாடியது பிசகு. மனைவியை மதித்தது பிசகு. எய் என்கிற ஆங்காரக் கூச்சல்தான் உயர்வு. அதிகாரம் கொடி கட்டிப் பறக்காமல் அனுசரணை அனுசரணை என்கிற மயக்கம் போய்—

உள்ளே பொங்கிய கோபம், வேகமாய் நடக்க வைத்தது. முதுகு முழுவதும் வியர்வையில் நனைந்து சட்டை ஒட்டி இழுத்தது.

தந்திரம் காட்டியிருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் தந்திரசாலியாய் இருந்திருக்க வேண்டும். மாடியில் சுவர் ஏறிக் குதித்து வரும் பெண்ணை ஓடிப் போய் சட்டென்று தோள் தாங்கி 'என்னங்க இது...படாத இடத்துல பட்டிருச்சுன்னா...' என்று பொய் அனுதாபம் காட்டியிருக்க வேண்டும்.

# 24

தொட்டுட்டீங்களே என்று வெட்கப்படும் பெண்ணை நோக்கி, 'தாங்கலீங்க...தொட்டுட்டேன்... மன்னிச்சுருங்க' என்று இரண்டு அர்த்தமாய்ப் பொய் சொல்லியிருக்க வேண்டும். சுவர் தாண்டியது தாங்கவில்லை என்று எடுத்துக் கொள்ளலாம். உன்



னைப்பின் இழப்பு தாங்கவில்லை என்றும் சொல்லலாம். நேரத்துக்கு தகுந்த பேச்சு. ஆளுக்குத் தகுந்த சமாதானம். குழந்தைகளைப் பள்ளிக்குத் துரத்திவிட்டு மாடிக்குப் போய் விக்கிரமாதித்தன் கதை பேசலாம்.

'ராஜா தாசியோட பொண்ணைக் காதலிச்சான். தாசிக்கு ராஜாவோட புள்ளை மேல ஒரு இது. அப்பனுக்குத் தெரியாது புள்ளையும், புள்ளைக்குத் தெரியாம அப்பனும் போய்க்கிட்டிருந்தாங்க. தாசிக்கு ஒரு புள்ளை பொறந்து பெரியவனாகி ராஜ்யத்துல பங்கு கேட்டு ராஜகுமாரனாயிட்டான். தாசியோட பொண்ணுக்கு ஒரு பொண்ணு பொறந்து பெரிய நாட்டியக்காரி ஆயிட்டா. அவங்க இரண்டு பேரும் தன் பிறப்பு தெரியாம ஒரு காட்டுல எதிரும் புதிருமா பார்த்துக்கிட்டாங்க. அவங்க இரண்டு பேருக்கும் நடுவுல என்ன வரும்? பாசமா, காதலா, காமமா...'

உச்சி வெயிலில் சுவரோர நிழலில் உட்கார்ந்து பேய்கள் போலப் பேசிச் சிரித்திருக்கவேண்டும். கதையில் பொங்கிய காமம் கண்ணில் தங்க அடுத்த வீட்டு முல்லைக் கொடி என்று வசனம் பேசியிருக்கவேண்டும்.

''பக்கத்து வீட்டுல இருக்கறவங்க நல்ல மாதிரியா படுது—நீ என்ன நினைக்கிற...' என்று மனைவியின் எண்ணத்தை நோட்டமிட்டிருக்க வேண்டும்.

உதறியதும் பிசகு. உதறினேன் என்று சொல்லியதும் பிசகு.

உண்மைதானா என்கிற கேள்வியைத் தாங்காது நடப்பதும் பிசகு.

தந்திரமற்றவனுக்குத்தான் காயம் படும். அனுபவம் கசப்பாகும், சொல் தாங்காது சோர்வு வரும்

மிஞ்சி விஷயம் வெளிப்பட்டால் 'என்னான்றா கூப்பிட்டுச்சு, போனேன். இஷ்டமிருந்தா இரு-

இல்லைன்னா கடையைக் கட்டு' என்று கத்தியிருக்க வேண்டும்.

முடியுமா என்னால்...முடியாது. எங்கோ !ஒரு தொய்மை நெஞ்சடியில் நிரந்தரமாகி விட்டது. இது தொய்மையா, நீதியா தெரியவில்லை.

இப்போதெல்லாம் சின்ன வேதனைக் கூட மனசு அரண்டு பதற ஆரம்பித்து விடுகிறது. தெருவில் நின்று பக்கத்து வீட்டுப் பெண்கள் கூச்சல் போட்டபோதுகூட, இப்படி ஒரு கோபமும் கழிவிரக்கமும்தான் ஒரு சேரப் பொங்கின. இப்பவும் கழிவிரக்கம்தான். கோபத்தை விடக் கூடுதலாய்க் கழிவிரக்கம் வந்து விடுகிறது. போதும், எக்கேடோ கெட்டுப் போங்கள் என்று ஒரு விரக்தி சுற்றிக் கொள்கிறது. வீட்டை விட்டு இப்படி விரைந்து எங்கோ இலக்கின்றி நடப்பதற்குக்கூட இந்த விரக்திதான் காரணம்.

மனசு அடியில் ஏதோ ஒன்று தடம் புரண்டு தொட்டதெல்லாம் பாம்பாய்ச் சீற, பயந்து ஓடி ஒளியும் இயல்பு ஏற்பட்டு விட்டது. என்ன நடக்கிறது என்னுள். குறுகிக் குறுகி முடியாதவனாய் அமிழ்ந்து போகிறேனே... என் இது எதிர்ப்பு, எதிர்ப்பை அடக்கும் வலிவும் எங்கே போயின. நான் சரியாக இல்லை என் வீடு சரியாக இல்லை. மலை விளிம்பு மாதிரி ஓர் இடத்தில் நிற்பதாகப் படுகிறது. ஒரு சின்ன சறுக்கல் கூட என்னைச் சிதிலமாக்கிவிடும்.

என்னுள் நடப்பதை என்னால் கவனிக்க முடியவில்லை. மேகமூட்டமாய்ச் சிந்தனைகள் தறிகெட்டு ஓடுகின்றன. நிற்கும்போதே தலைசுற்றும் மயக்கம் வருடுகிறது. மலர்ச்சி மொத்தமும் அழிந்து முகம் இருள் படுவதைக் கண்ணாடியின்றி உணர முடிகிறது.

பரமு ஸ்டேஷன் படியேறி மறுபடி படியிறங்கி, புத்தக ஸ்டால் தாண்டி இருட்டான இடத்தில் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டான்.



தெற்கே போகும் ரயில் ஒன்று பிரயாணிகளுடன் மெல்லக் கடந்தது. தடதடப்புடன் வண்டி நகர்ந்து கடைசிப் பெட்டி மறைய, சட்டென்று ஸ்டேஷனில் அமைதி உண்டாயிற்று. அந்த அமைதியை மின்வண்டி தடதடத்து நுழைந்து அழித்தது. அது நகர மீண்டும் அமைதி.

பரமு கண்களை மூடிக்கொண்டான். விழித்தபோது அருகே யாரோ நின்றிருந்தார்கள்.

''நெருப்பு இருக்கா?''

கேள்வி புரிகிறது. ஆனால் பதில் சொல்ல முடியவில்லை. சிந்தனை எங்கோ வெட்டவெளியில் நிற்க—

''நெருப்பு இருக்கா?''—கேட்டவன் வாயில் பீடி ஒரு முறை சுழன்று நின்றது.

இவன் யார்...? என்ன கேட்கிறான். உலகத்தில் உள்ள இத்தனை கோடி ஜனங்களையும் விட்டுவிட்டு என்னிடம் என்ன கேட்கிறான். கொடுப்பதற்கு என்ன இருக்கிறது. என்னிடம் எதுமில்லை. மனசு பேசுகிறது. சொல் வெளியாகவில்லை.

''இல்லேன்னா இல்லேன்னு சொல்லேன். ஆன்னு பேஸ்த்தடிச்சாப்பல பாக்கிறியே...'' —கேட்டவன் நகர்ந்து விட்டான், புரிந்துவிட்டது.

உள்ளே நட்பு நூல் அறுந்து விட்டது. காற்றில் மிதக்கிற பட்டம்போல, காண்பதும் கேட்பதும் சம்பந்த மற்றுப் போகின்றன. இது தற்காலிகமா, இல்லை நிரந்தரமா— வெட்டவெளியாய் ஒரு உணர்வை நெஞ்சு இப்போது அனுபவிக்கிறதே. இது முழுமையாய்ப் படிந்துவிடுமா இல்லை, பிரமையா... இது உயர்வா, இல்லை வீழ்ச்சியா...?

என்ன நடக்கிறது உள்ளே? ஏதோ உடைந்துபோய் ஒரு பலவீனம் ஏன் இப்போது...?

பரமு கண்களை மறுபடி மூடிக்கொண்டான். நீலம் பரவிற்று. நீலம் இருட்டாயிற்று. கறுப்புத் திரையாய் ஏதோ சுற்றிக்கொண்டது. போர்வை மேல போர்வையாய்க் கறுப்பு ஏறி தலை துவள, உள்ளே சின்னதாய் ஒரு ஒளிப்புள்ளி தோன்றியது. புள்ளி தோன்றிக் கணத்தில் ஹூம் என்று ஒரு சங்கொலி காதில் ஏறியது. தொடர்ந்து நீண்ட சங்கொலி பசியில் காது அடைத்துக் கொண்டால் ரீங்கரிக்கும் நாதம். ஆனால், பசியில்லையே! ஏன் இந்த சப்தம்...? என்ன இது? ரீங்காரத்தில் மனசு ஈடுபட சப்தம் ஒலியலையாய் விட்டு விட்டு வந்தது. புள்ளி பெரிதாயிற்று.

கை ஒன்று மல்லாந்து தரை பார்த்தது. அது பரமுவின் கைபோல இருந்தது. பரமு தன் கால்கள் எங்கே என்று தேடினான். அவை தனித்தனியே தெரிந்தன. வலக் கை, இடக் கை; வலக் கால், இடக் கால் என்று கண்மூடி மனசுக்குள்ளே துழாவ, தனித்தனியே பொருத்தப்பட்ட பொம்மைபோல, தன்னை உணர்ந்தான்.

புள்ளி மீண்டும் பெரிதாயிற்று சப்தம் கூடிற்று. சிரசில் உஷ்ணம் பரவியது.

சங்கொலி இப்போது தம்பூர் சுருதியாய் மாறிற்று. சின்ன தாளக்கட்டைபோல் ஒரு துடிப்பு உணர முடிந்தது. தம்பூர் சுருதியும், தாளமும் உடம்பெங்கும் பரவின. ஒளிப்புள்ளி எதிரே வெகு அருகே நின்று பெரும் சிரிப்பாய்ச் சிரிப்பதுபோலப் பட்டது.

அந்தச் சிரிப்பு பயத்தை ஏற்படுத்தியது.

வேண்டாம்... எனக்கு வேண்டவே வேண்டாம். என்னை விட்டு நான் அமிழ இடம் கொடேன். நான் வேண்டும்... எனக்கு நான் வேண்டும். பரமுபதறி உலுக்



கினான், புள்ளி உடைந்து சிதற, கருமை மறுபடி பரவி பிறகு வெளிர் நீலமாய்க் கரைய, திடுக்கிட்டு விழித்தான்.

உடம்பு சில்லிட்டது.

எழுந்து நிற்க கால்கள் நடுங்கின. என்ன செய்வது இப்போது. எங்கே போவது... திணறி நாலு பக்கமும் சுற்றிப் பார்க்க, லதா காய்கறிப் பெண்களுடன் படி இறங்கி வந்தாள்.

''அப்பா'' என்று ஓடிவந்து கட்டிக் கொண்டாள்.

குழந்தை தொட்டதும், பரமு பழைய நிலைக்கு வந்தான். நடந்தவையனைத்தும் மனசில் மறுபடி ஓடின.

''அப்பா'' —குழந்தை உலுக்கினாள்.

' என்னடா...''

''அம்மா சாப்பிடக் கூப்பிடுச்சு ''

பரமு சிரித்தான். குழந்தை இறங்கி வந்த வேகத்தில் மூச்சிரைக்க நின்றாள்.

''உட்கார் லதா...''

''கல்லு குத்திடுச்சப்பா...''

''செருப்புப் போட்டுட்டு வரக்கூடாது...'

''வாசல்லியே நின்னேன். அம்மா உள்ள அழுது விட்டு படுத்துருச்சு. எழுந்து அப்பாவ கூட்டியான்னதும் உடனே ஓடிவந்துட்டேன். அம்மா மேல கோவமா...''

''இல்லடா...''

''வேலைக்குப் போறதுனால அம்மா சிடுசிடுன்னு ஆயிடுச்சு ''

''ம்ம்...''

''அதுவும் பாவம்தான்...''

''ஆமாம்...''

''சும்மா உட்கார்ந்து ட்ரெயின் பார்த்துக்கிட்டு இருந்தியா.''

''ம்ம்.''

''நீ வேகமா போனது பார்த்து நான் ரொம்ப பயந்துட்டேன்...''

''எம்மா...''

''வரவே மாட்டியோன்னு தோணிடுச்சுப்பா.''

''சீ போ.''

''என்னை உனக்குப் புடிக்கும் இல்ல.''

''ஏண்டா...''

''எங்களை வுட்டுட்டுப் போவமாட்டியே.''

''தாயி...எதுக்கு கேக்கற இப்படி?''

''தினம் வீட்ல ஏதாவது சண்டை... வருதுப்பா... எனக்குப் புடிக்கவே இல்லை. எதுக்குடா பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரோம்னு இருக்கு...''

''சீ... சீ''

''பாடமே படிக்க முடியல. தேத்திக்கு ஹோம் ஒர்க் போடல மறந்துட்டேன் டீச்சர் இன்னிக்கு லொட்டு லொட்டுன்னு முட்டிலயே அடிச்சாங்க. அடிச்சா அடிச்சிட்டுப் போங்கன்னு வுட்டேட.''

''எந்த டீச்சர் அது?''

''அது ஒரு மாதிரிப்பா! எப்பவும் சிடுசிடுன்னே இருக்கும். சிடுசிடுங்கறவங்களைக் கண்டாலே எனக்குப் புடிக்கலை, ஏன் போடலைன்னாங்க. மனசு சரியில்லைன்னேன். பெரிய மகாராணி, மனசு கவலையான்னு அடிச்சாங்க. திருப்பித் திட்டிடலாம்னு வந்துச்சு. சரி, சொன்னா அதுக்கு ஒண்ணும் புரியாதுன்னு சும்மா இருந்துட்டேன்.''



''இன்னிக்குப் போட்டுட்டியா?''

''இல்ல.''

''எம்மா...''

''எனக்குப் பள்ளிக்கூடமே புடிக்கலை.''

''ஏம்மா...''

''ராஜம்மா...எனக்கு ஒண்ணுமில்லையே.''

''நீ இப்படி உக்காந்திருக்கறதைப் பார்த்தா 'ஒ'ன்னு அழுகை வருதுப்பா...''

''இல்லை உனக்கு... எங்களையெல்லாம் கூடப் புடிக்கலை. நாங்கள்லாம் வேணான்னு நினைக்கிறே.'' குழந்தை, பாமுவின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

பாமு வியப்புடன் அந்தக் குழந்தையைப் பார்த்தான். இவனுக்கு உள்ளுணர்வில் ஏதோ ஒன்று புரிந்து விட்டது. தகப்பன் வேதனை, தவிப்பு இவளுக்குப் புரிந்து விட்டது.

''லதா, அழுகையை நிறுத்து. எதுக்கு இப்படி வேதனைப்படுது என் பொண்ணு. அம்மா மேல கொஞ்சம் கோவம். வீட்ல இருந்தா பேச்சு ஜாஸ்தியாவும். இங்க வந்துட்டேன்.''

''விறுவிறுன்னு போயிட்டியே''

''கொஞ்சம் கோவம், அதாண்டா.''

''அப்படிப் போவாதப்பா.''

''ஏம்மா...'

''பயம்மா இருக்குது''

''மாட்டேன் தாயி.''

''சத்தியமா...''

''சத்தியமா''

''வா போகலாம். என் கை புடிச்சுக்க''—லதா, கை சுற்றிப் பற்றிக் கொண்டாள். எழுந்து நடக்க நெஞ்சுவரத்துக்கு நடந்தாள். குழந்தையின் தோளில் கை போட்டுக் கொண்டு தெருவில் நடக்க, ஏதோ பாரம் குறைந்தது போலிருந்தது. முகமும் உதடும் மின்விளக்கொளியில் பளிச்சிட, மழமழப்பான கன்னத்தில் கோடு திட்டுகள் தெரிந்தன. பிடித்த புஜங்களில் ஒரு பெண்மைக் குழைவு உணர முடிந்தது.

பரமு மெல்ல அவள் தோளிலிருந்து கை விலக்கி, அவள் விரல்களை மெல்லப் பற்றிக் கொண்டான்.

அந்த ஒளிப்புள்ளியும் சங்கு ரீங்காரமும் என்ன என்று யோசித்தான்.

''அப்பாவைக் கால் கழுவச் சொல்லு.'' லதா வீட்டு வாசலுக்குள் நுழைந்ததும் சரசு குரல் கொடுத்தாள். பிள்ளை கால் பரப்பித் தூங்கிக் கொண்டிருந்தான். ஒரு சமுத்திரத்திலிருந்து கரையேறிய மாதிரி பரமுவுக்குப் பட்டது. மறுபடி சமுத்திரம் இழுக்காது என்பது என்ன நிச்சயம். இழுக்கும்... அப்போது இன்னும் மூன்று கவனிக்க வேண்டும்.

சோறு பரிமாறுகிற பொழுது சரசு இரண்டு மூன்று முறை முகத்தை உற்றுப் பார்த்தாள்.

குழந்தைகள் கையலம்ப எழுந்தவுடன், அவன் தொடையில் கை வைத்து, ''கோவமா?'' என்றாள்.

பரமு பேசாது சாப்பிட்டான்.

## 25

கையலம்பப் போனான். குழந்தைக படுக்கைகள் விரித்து விரிப்புகளை இழுத்துப் பரப்பிக் கொண்டிருந்தார்கள். சரசு பின்பக்கம் வந்து நின்றாள். கையலம்பித் திரும்பினவனை இழுத்து இறுக்கிக் கொண்டாள்.



''இப்படிப்பேசாதிருந்தா எப்படி...ஏதோ அலுப்புல கத்திட்டேன். வுட்டுங்களேன்.''

பரமு அசையாதிருந்தான்.

''எம்பா என்னை இப்படி வதைக்கிறீங்க. ஒரு வார்த்தை சொல்லப்படாதா...''

—பின்பக்கம் வந்து இறுக்கிக் கொண்டாள்.

அவள் பிடியிலிருந்து பரமு விலக்கிக் கொண்டான்.

கையலம்பும் இடத்திலிருந்து சமையலறை போக பின்னால் வந்து கைபிடித்தாள்.

''இதோ பாருங்க... பேசினா சாப்பிடுவேன், இல்லே, பச்சைத் தண்ணிதான், நான் சாப்பிடவா, வேணாமா...''

—அவள், பிடித்த பிடியை இறுக்கினாள். பரமு, விரல்களை மெல்லப் பிரித்தான். நகர்ந்தான்.

''போங்க...உதறிட்டுப் போங்க... நல்ல வேலையை உதறியாச்சு. பெண்டாட்டியையும் உதறிடுங்க இத்தினி கோவம் குடித்தனத்துக்கு ஆவாது. அப்படி என்ன தப்பா கேட்டுட்டேன். உங்க பேர்ல தப்பு இல்லியேன்னு கேட்டதுக்கு இத்தினி ஆத்திரமா? இல்லைன்னு சொல்றது ஏண்டி கேட்டேனு அறையறது. உதறிட்டு மடமடன்னு வெளியே போயிட்டா... எங்க போக முடியும் நான் வேலைக்குப் போறேன்னுது என் தப்பு... அதிகாரமா கேட்டேனா... குத்தமா சொன்னேனா... ஏன், என்னான்னு விவரம் கேட்டதுக்கு இத்தினி கோவமா...''

பரமு துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். குழந்தைகள் படுத்துவிட்டன.

தூக்கம் கண்களை சுழற்றியது. சரசு சமையலறைப் படியில் நின்றபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பரமு சாய்ந்தான். தலையணையை இழுத்துக் கழுத்துக்குக் கொண்டு வந்தான்.

கூடத்தில் பரப்பப்பட்ட சாப்பாட்டுப் பாத்திரங்களை வாரி உள்ளே கொண்டு போய்ப் போடும் சப்தம் கேட்டது.

''சாப்பிடு சாசு. சோத்துல என் கோவம் காட்டற.'' ஒரு வார்த்தை சொல்லலாம். எதற்குச் சொல்ல வேண்டும். பசித்தால் சாப்பிடட்டும்.

கண்களை மூடிக்கொண்டான். உணவு வயிற்றுள் புரள, கண் கிறங்கிற்று. தூக்கம் அழுத்த நாலு விநாடியில் தூங்கிப் போனான்.

நெஞ்சில் சில்லென்று கைப்பட்டதும் திடுக்கிட்டு எழுந்தான். பத்து நிமிடம் இருக்குமா படுத்து? இல்லை மணி பன்னிரண்டு. இரண்டரை மணி நேரம் இருக்கும் படுத்து. இருட்டில் நிழலாய் சாசு தெரிந்தாள். சாப்பிட்டாளா தெரியவில்லை.

''எம்பா இப்படி கோச்சுக்கறீங்க கேட்டது தப்புதான். மன்னிச்சுக்கங்கப்பா. அந்தப் பொம்பளை மேல ஆத்திரம் உங்க மேல காட்டிட்டேன். பேசாம இருக்காதீங்கப்பா. எவ்ளோ கஷ்டமா இருக்கு. கோபம்னா திட்டுங்க, அடிங்க, சொல்லுங்க. உதறித் தள்ளாதீங்க...''

பரமு அவள் இறுக்கத்தில் திணறினான்.

''சாப்பிட்டியா?''

''இல்லை.''

''போய் சாப்பிடு.''

''பசிக்கலை.''

''போய் சாப்பிடு.''

''நான் கேட்டது அத்தினி வேதனையாயிடுச்சா.''

''இல்லை.''

''ஏன் சட்டுன்னு வெளிறிப் போச்சு உங்க மூஞ்சி.''



''குடித்தனத்துக்கும் குழந்தை பெத்ததுக்கும் அர்த்தமே இல்லாத போச்சு.''

''நான் பத்து நிமிஷம் லேட்டா வந்தா உங்களுக்கு தப்பா தோணாதா...''

''சீ...சீ''

''அத்தினி நம்பிக்கை எம் பேர்ல...இல்லை...''

''உனக்கு இல்லையே எம் பேர்ல''

''வீட்டோட இருக்கீங்களே...''

''அதனால...''

''தப்புதான் கேட்டது. மன்னிச்சிருங்கன்னுட்டேனே.''

''அதெல்லாம் அப்புறம். கேள்வி எப்படி வரலாம்.''

''பொம்பளை அப்படித்தான். கொஞ்சம் மட்டம் தான்.''

''வேற எவளாவது அப்படி இருக்கலாம். நீ ஏன் அப்படிக் கேட்டே...''

''அதுங்க கதை எனக்குத் தெரியும். பாத்திரக்காரன். பேப்பர் பையன். மளிகைக்கடை ஆளுன்னு நாலு கதை கேட்டிருக்கேன். அதுங்களைப் பத்தி, ரெண்டுமே கெட்டுப் போனதுங்கதான்.''

''உங்களையும் சுருட்டி கைக்குள்ள போட்டுக்கிட்டாகளோன்னு பயம்தான்.''

''ஆக...எவளாவது சிரிச்சா உன் புருஷன் வழிச்சுக்கிட்டு நிப்பான்னு முடிவு கட்டிட்ட...''

''பயந்துட்டேன்.''

''இன்னும் நாம ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கவே இல்லை.''

''மனுஷர்தானே எல்லாரும். நான் அவதி அவதியா பொங்கிக் கொட்டிட்டுப் போயிடறேன். ராத்திரி வந்து அடிச்சுப் போட்டாப்பல தூங்கறேன்.''

''ம்ம்...சொல்லு.''

''துருதுருன்னு இருந்த ஆளு...மத்தியானம் முழுக்க வீட்டோட இருந்து நிலைகொள்ளாத சுத்தி வரீங்க...''

''நான் வேலைக்குப்போய் நீ வூட்டோட இருக்கறப்ப ஒருநாள் உன்னை இப்படி நினைச்சிருப்பேனா... உனக்குத் தோணிடுச்சுப் பாரு...''

''ப்ச்சு... கெட்ட நேரம்''

''இல்லை சரசு. உனக்கு வேலைக்குப் போற பதட்டம் குறையலை. அங்க போய் வீட்டு நினைப்பா இருக்கற...இனி நீ வேலைக்குப் போவேணாம். நின்னுடு.''

''ஐயோ...சாப்பாடு''

''எதாவது டீக்கடை, பீடிக்கடை வைப்போம்.''

''எதுக்குங்க...''

''நாம பண்றது குடித்தனமில்லை சரசு''

''போட்டு சாத்திருங்களேன் என்னை.''

''என்னா பலன். பசங்க பசங்க மிரண்டு அழும். வெறுப்பு பொங்கும். தொட்டதுக்கெல்லாம் கோபப் படும். வேணாம், நின்னுடு.''

''நீங்க சொல்றது சரி. எனக்கு எப்பவும் வீட்டு ஞாபகம், அதைவிட உங்க ஞாபகம். மடில படுத்துச் சிரிச்சு நாலு மாசமாச்சு. எட்டு மணிக்கு சோறு சாப் பிடறப்பவே திட்டம் போட்டுக்கறது நின்னு போச்சு.''

''எனக்கு அந்த நினைப்பேயில்லை.''



''எனக்கு இருக்கு. தப்பு பண்றமோ, புருஷனை வாட்ட வுட்டுர்றமோன்னு தோணுது. வேளைக்கு கவனிச்சு சோறும் பரிமாறலை. வாடின்னு கூப்பிட மாதிரியும் வைக்கலைன்னு தோணுது''

''பைத்தியம்''

''ஆமாம்ப்பா. டிரெயின்ல போறப்ப நானா பேசிக் கிறேம்ப்பா. எதிர்சீட்ல இருக்கறவங்க சிரிக்கிறாங்க.''

''வேணும்னா கேக்கமாட்டேன்.''

''கேக்கலியே.''

''எதுக்கு உன்னைப் போட்டுப் படுத்தணும்னு சும்மா இருக்கேன். அலுத்துக்குவியேன்னு பயம்.''

''நீங்க கூப்பிடறதே இல்லையேன்னு எனக்கு ஒரு பதட்டம். சரி. மனசு கவலை. தொந்தரவு பண்ண வேணாம்னு படுத்த உடனே தூங்கிடறேன்.''

''பசிக்கலையா?''

''பசிக்குது.''

''போய் சாப்பிடு.''

''வேணாம். சோம்பலா இருக்கு.''

''எழுந்திரு.''

''வேணாம்ப்பா. இப்படியே படுத்துத் தூங்கிட லாம்.''

''எழுந்திரு சரசு.''

பரமு எழுந்து இருட்டில் தடவி சமையலறை விளக் கைப் போட்டான். நீர் கொட்டிய சாதம் பிழிந்து தயிர் ஊற்றினான். சரசு பின்னால் வந்து நின்றாள். ஊறுகாய் பாட்டில் திறந்து தட்டில் ஒரு துண்டு போட் டான்.

சமையலறை மேடையில் சாய்ந்து நின்று சாதம் பிசைந்து சாப்பிட்டாள். பரமு அவள் அருகில் நின்று

அவன் தலையை வருடிக் கொடுத்தான். சரசு தட்டை விலக்கி, தயிர் எச்சில் உதட்டோடு அவன் உதட்டில் முத்தமிட்டாள்.

"கோச்சுக்கிட்டு எங்க போனீங்க?"

"ஸ்டேஷனுக்கு."

"எதுக்கு."

"வண்டிஏறி எங்கனா போயிடலாம்னு தோணிச்சு."

"வுட்டுட்டுப் போற கோவம் வரலாமா?"

"அவ்வளவு கோவம் வந்துச்சு போனேன்."

"வுட்டுற முடியுமா?"

"முடியாது சரசு. ரெண்டு பசங்களும் என்னை ஆணி அறைஞ்சு நிக்க வச்சிருக்கு."

"உங்க பொண்ணு என்னா பதறிடுச்சு தெரியுமா? அப்பா வேகமாபோறாரு. வேகமா போறாரும்மான்னு ஒரே அழுகை..."

"முருகா..."

"ஒவ்வொரு சமயம் அதுக்குத்தான் வீட்டு பாரம் ஜாஸ்தி ஆயிடுச்சோன்னு படுது."

"ஆமா சரசு. அது வயசுக்கு இந்த நிலைமை ரொம்ப பாரம்."

"ஒரு விதத்துல நல்லதுங்க. சீக்கிரம் மனசு பக்குவமாயிடும்."

"ஒடிஞ்சுறக் கூடாது."

"பன்னெண்டு வயசுப் பையன் உடைஞ்சுடுவான். பொண்ணு தாங்குவா."

தட்டு கழுவி வாய் துடைத்தாள். இடுப்புப் பாவாடையை ஏற்றி இடுப்பில் சொருகித் தண்ணீர் ஊற்றி முகம் கழுவினாள். பல் தேய்த்தாள். புடவைத்



தலைப்பால் கை துடைத்து, சமையலறைக்குள் அவன் எதிரே வந்து நின்றாள். மெல்ல கை பிரித்து அவனைச் சுற்றிக்கொண்டாள். இறுக்கி முகம் முழுவதும் முத்தமிட்டாள். மெல்ல அவளை அணைத்துத் தூக்கிப் பரமு அவள் தலைக்குழல் வாசனையை நுகர்ந்தான்.

பாயும் தலையணையும் தூக்கியபடி கூடத்தில் மெல்ல நடந்து அறைக்குள் நுழையும் மனைவியைப் பரமு அதிசயமாய்ப் பார்த்தான். விளக்கை அணைத்து விட்டு, பாய் விரித்து, இறுக்கின உடைகளை ஒவ்வொன்றாய்க் களைந்து... அம்மா என்று மல்லாக்கச் சாய்ந்தவளை மெல்ல அணைத்துக் கொண்டான். உடம்பில் உஷ்ணம் பரவிற்று.

"சரசு, இனிமே நாம எதுக்கும் சண்டை போடக் கூடாது. முடிவு பண்ணிக்கணும்."

"செய்துக்கலாம். இருக்கணுமே."

"ஏன், என்ன கஷ்டம்."

"அனுசரணையா ஆம்பளை இருந்தா பொட்டச் சிக்கு வீராப்பு காட்டத்தான் தோணும். சொல்றதுல ஒண்ணு தப்பா தெரிக்கும்."

"போட்டுறட்டுமா பட்டுன்னு அப்பப்ப..."

"செய்யுங்கன்னுதானே சொல்றேன்."

"நம்மால முடியாதுப்பா. கை நீட்டிப் பொண்டாட்டிய அடிக்கிற காரியம்."

"அதான் திமிரா போச்சு எனக்கு."

"இரு. திமிராவே இரு நான் தாங்கிக்கறேன்."

"அப்பா முருகா, நீ எனக்கு நல்ல புத்தியைக் கொடு."

"அடிப்படையில நீ நல்லவதான் சரசு. மாற முடியாம தவிக்கிறே. பதட்டப்படறே. படு. மெள்ள மெள்ள உனக்கே புரியும்."

புருஷனும் மனைவியும் இறுக்கிக்கொண்டு கிடந்தார்கள். லதாக் குட்டி தூக்கத்துல காலைத் தூக்கிப் போட்டாள். அவள் கனவில் நிறைய செம்பருத்திப் பூக்கள் பூத்தன. செடிகளிடையே ஓடி ஓடி தகப்பனைத் தேடினாள். காணாது போகவே திடுக்கிட்டு எழுந்தாள். அப்பா என்று கூவினாள்.

தம்பதி சரக்கென்று பிரிந்தார்கள். வாரி உடுத்திக் கொண்டார்கள். பரமு எழுந்து ஹாலுக்குப் போனான். 'தாயி லதாம்மா... படு, படுத்துத் தூங்கு.'' குழந்தையைத் தட்டிச் சமனப்படுத்தினான்.

சரசு புடவையைச் சுற்றிக்கொண்டு ஹாலுக்கு வந்தாள், ''மணி ஒண்ணு பத்துங்க.''

''தூங்கு சரசு. காலைல எழுந்திருக்க வேணாம்?''

வீடு தூங்கிற்று.

குழந்தைகளின் வெள்ளை ஷூக்களுக்குச் சுண்ணாம்பு பாலிஷ் போட்டு வாசல் வெயிலில் வைத்து விட்டு பரமு வெங்காயம் நறுக்கினான். மூக்கு எரிந்தது. வாசற் கதவை யாரோ தட்டினார்கள்.

''சரஸ்வதி யாருங்க...'' —காக்கிச் சட்டை ஆள் கதவருகே நின்றிருந்தான்.

''எம்ப்பா, என்ன வேணும்.''

''நான் பள்ளிக்கூடத்து ப்யூனுங்க. லதா—எயிட்த் ஸ்டாண்டர்ட் பொண்ணோட அம்மாவை கூட்டியாரச் சொன்னாங்க.''

''என்னப்பா, என்ன ஆச்சு.''

''தெரியலைங்க.''

''சொல்லு.''



''அம்மா இருந்தா கூட்டியாரச் சொன்னாங்க. மயக்கமாயிடுச்சு பொண்ணு.''

''ஐயோ!''

''இப்ப ஒண்ணுமில்லை. எழுந்துஉட்கார்ந்திருச்சு.''

பரமு சட்டை போட்டு சைக்கிளை எடுத்தான். வாசலைப் பூட்டிக்கொண்டான். வெங்காயம் ஹாலிலேயே இருந்தது. அவசரமாய் எதிர்க்காற்று கிழித்து பள்ளி நோக்கி மிதித்தான்.

தலைமையாசிரியை அறையில் நுழைந்தான்.

''மேடம், நான் லதாவோட அப்பா.''

''அவங்க அம்மா எங்கே?''

''வரலிங்க. வீட்ல இல்லை அதான் நான் வந்தேன்.''

உங்களை யார் கூப்பிட்டது? எயிட்த் டீச்சர் எங்கே? மதர் கூட்டியாரச் சொன்னா ஃபாதர் வருது.''

''என்னங்க விஷயம்?''

''உங்க பொண்ணு வயசுக்கு வந்துருச்சு.''

''உங்களை யார் கூப்பிட்டா...மதர் கூப்பிட்டா ஃபாதர் வராரு.''

இதற்கு என்ன அர்த்தம். இனி என் பெண்ணுக்குத் தகப்பன் தேவையில்லையா... தாய் மட்டுமே பெண் குழந்தைகளுக்கு வயது வந்த பிறகு கார்டியனா—

அப்போது தகப்பன் நிலை என்ன?

# 26

''ம்ம்... சரி, சரி மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனிங்க' என்று வாசலில் நின்று அந்நியனாய்ப் பேச

வேண்டுமா... இது தகப்பனுக்கும் மகளுக்கும் நடுவே விழுந்த திரையா?

ஏன் இது... காலம் காலமாய் பூப்பெய்துவது என் ரகசியமாய்ப் போனிற்று.

'உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. அன்னாண்ட போங்க'... ஏன் சடங்காக்கினார்கள்? ஏன் பயமுறுத்தினார்கள்? ஏன் விலகி இரு என்று மகளையும் தகப்பனையும் பிரித்தார்கள்.

மூச்சிரைக்க ஓடிவந்து ஸ்டேஷன் படியிறங்கித் கை பிடித்துக்கொண்டதே நேற்று அப்படி வேகமா போவாதப்பா என்று கெஞ்சியதே புஜம் பிடித்து—

இனி அது வேற்றாளா, பெரிய மனுஷியா? முகம் நிமிர்ந்து என் குழந்தை என்னையும் பார்க்க மாட்டாளா?

பிரிவின் வேதனைபோல் ஒன்று உள்ளே தாக்கிற்று. இப்போது என்ன செய்வது? பள்ளிக்கூடத்திலிருந்து சரசுவுக்கு போன் போட்டு வரச் சொல்லலாமா? போன் போட்டாலும் இங்கு வரக் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் ஆகும். அதுவரை பள்ளிக்கூடத்து வாசலில் நிற்க வேண்டுமா...சரி எதற்கு...வந்து என்ன செய்வாள்.

'பெரியவளாயிட்டியா? ரொம்ப சந்தோஷம் ஏற்கனவே வீடு அல்லோலகல்லோலப்படுது இப்ப உன் கவலை வேற. ஏண்டீ அழுவுற? பொட்டச்சியா பொறந்துட்டல்ல... இனிமை அழுகைதான்'—கன்னம் இடித்துக் கரிப்பாளோ.

'உனக்கு அடுப்புப் பத்த வைக்கவே தெரியாது நீ பெரிய மனுஷி. இனிமேயாச்சம் சோத்துப் பானைஏற்றி இறக்கக் கத்துக்க. நாற்காலி மேல காலு போட்டுக்கிட்டு கதைப் புத்தகம் படிக்கறத விடு. திபுதிபுன்னு உங்கப்பா பின்னாடி ஓடறத நிறுத்து.'



குட்டுக்கோலாய் வார்த்தை விழ, அந்தக் குழந்தை என்ன செய்யும்.

'சரசு, ஒண்ணும் அதட்டாத. அது பயந்துக்கிட்டு இருக்கும். பக்குவமா அணைச்சு விவரம் சொல்லு.' சரசு பள்ளிக்கூடம் நுழைந்ததும் வேண்டிக் கொள்ளலாம்.

ஒரு நல்ல மன நிலையில் சரசு, லதாவை அணைத்துக் கொண்டு கொல்லைப்புறம் போய்விடலாம். போய் கால் கிலோ அல்வா வாங்கி வரச் சொல்லலாம். சின்ன ஓலைத் தடுக்கு ரேழியில் போட்டு உட்கார வைத்து அருகே உட்கார்ந்து கொள்ளலாம். நல்ல நட்சத்திரம் ருதுவானது சௌபாக்கியவதின்னு போட்டிருக்கு. நாலு வீடு தள்ளி ஐயர் வீட்டில பஞ்சாங்கம் வாங்கிப் பார்த்து விட்டு சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

குழந்தை எங்கே... கிளாஸ் ரூமிலா... இல்லை, இப்பவே தனியாய் பின்பக்கம் உட்கார வைத்து விட்டார்களா...? பள்ளிக்கூடத்தில் இது பற்றி என்ன சொல்லித் தருவார்கள். என்னடி எழவே என்று இங்கும் சொல்வார்களா... இல்லை. சாக்லேட் குடுடீ பெரிய வளானதுக்கு என்று வம்பு இழுப்பார்களா. எத்தனை குழந்தைகளைப் பார்த்திருப்பார்கள். இதை எப்படி நடத்துவதென்று தெரியாமலா இருக்கும். சொல்லி, குழந்தையை நாம் கூட்டிப் போனால் என்ன?...எங்கே கூட்டிப் போவது. வீட்டுக்குள்ளா—

''அவ நுழையவே கூடாது என்ன கஷ்டம்டா எனக்குச் சொல்ல வேண்டியதுதானே...'' சரசு சலித்துக் கொள்வாளே—

பரமு புரியாமல் தவித்தான்.

''என்ன செய்யப் போறீங்க. மதர்தான் வேணும் இப்ப...உங்ககிட்ட பேச உங்க பொண்ணு பயப்பட

லாம். அழுதுச்சு. நாங்க தைரியம் சொல்லி கிளாஸ்ல உக்கார வச்சிருக்கோம். மதர் கூட்டியாரீங்களா... இருக்காங்க இல்ல...''

''இருக்காங்க மேடம், வேலைக்குப் போயிருக்காங்க.''

''நீங்க போகலியா?''

''இல்ல.''

''லீவா.''

பரமு மௌனமாய் இருந்தான்.

''உங்களைப் பார்த்து அது மறுபடி அழுதுச்சுன்னா கிளாஸ் பசங்க மிரளும். எல்லாமே ரெண்டுங் கெட்டான் வாது பாருங்க. உங்க பொண்ணு சீக்கிரம் பெரியவளாயிடுச்சு, என்னா சொல்றீங்க.''

''இங்க வரச் சொல்லிடுங்க மேடம். என்கூட வீட்டுக்கு வந்தா நான் கூட்டிக்கிட்டுப் போறேன்.''

''மதர் எப்ப வருவாங்க வேலைலேர்ந்து.''

''ஆறு மணியாகும் மேடம்.''

'ஐயோ...அதுவரைக்கும் நாங்க காத்திருக்க முடியாது. நாலு மணிக்குப பள்ளிக்கூடம் முடியுது எயிட்த் டீச்சர்கிட்ட நான் பி. லதாவை அனுப்பச் சொன்னேன்னு சொல்லு.'

''மயக்கம் போட்டிருச்சா?''

''சின்ன கிடினஸ். இது வரும். பயத்துல, சோர்வுல வரும், கூட்டிட்டுப் போயிடுவீங்களா? கூட ஆயாவை அனுப்பட்டுமா?''

தெரியவில்லை,

கூட பெண் துணை வேணுமா, தெரியவில்லை.



சரசு வீட்டோடு இருந்தால் இது பூஞ்செடியைப் பதியன் மாத்துகிற மாதிரி பக்குவமாய் நடந்திருக்கும். கம்பெனியிலிருந்து வந்ததும் அப்படியா—என்னென்ன வாங்கணும் சொல்லு என்று சந்தோஷமாய் சைக்கிள் எடுத்துக் கடைத்தெரு பக்கம் பையனோடு போயிருக்கலாம். கேட்டதற்கு மேல் இரண்டு முழம் பூ, கூட கால் கிலோ அல்வா என்று வாங்கியிருக்கலாம்.

அம்மாவும் பெண்ணும் தனியே படுத்துக்கொள்ள ஹாலில் சந்தோஷக் கவலையோடு சரியலாம்.

''பெண்ணின் திருமணம், பையனின் மேற்படிப்பு என்று எந்தக் கவலையுமில்லாத இந்தக் குருவியே சேமிக்கிறபோது' என்கிற விளம்பர வாசகம் நினைவுக்கு வந்து. லதாவுக்கு என்னவிதமாய் சேமிப்பது என்று யோசனை செய்யலாம். குருவி சேமிக்குமா... அன்றன்றைய உணவு அன்றன்றைக்கு மனிதனுக்குத் தான் சேமிக்கிற நிர்ப்பந்தம் என்று கவலைப்படலாம்.

இப்போது வரும்படியும் இல்லை. சேமிப்பும் இல்லை.

பெண்ணை ஒரு வாரம் பள்ளிக்கூடம் போகாதே என்று உட்கார வைத்து விட்டு வாசலில் காவல் காக்க வேண்டும்.

பரமு காத்திருந்தான்.

தொலைவில் புத்தகப் பையோடு பள்ளிக் கட்டடத்துக்கு நடுவே உள்ள இடத்தை லதா தாண்டி வருவது தெரிந்தது.

ஆரோக்கியமாய் இருக்கிறாள். நடையில் தளர்வு இருக்கிறது. முகத்தில் சோர்வும் கவலையும் தெரிகின்றன. குழந்தை வாடிப் போயிருக்கிறது. பயந்து போயிருக்கிறது. என்னைக் குறித்துக் கவலைப்பட்ட குழந்தை இது. 'அப்படி வேகமா நடக்காதப்பா பயமா இருக்குது. எங்களை விட்டுட்டுப் போயிடுவியோன்னு பயம்மா இருக்குது.'

'எப்படித் தாயி விட்டுட்டுப் போக முடியும்.'

ரத்தினங்களாய் இரண்டு பெற்று விட்டு ஒரு தகப்பன் எங்கு ஓடி விட முடியும்

பாமு தலைமையாசிரியை அறையை விட்டு வெளியே வந்தான்.

லதா புத்தகத்துச் சுமையை வலது தோளிலிருந்து இடது தோளுக்கு மாற்றிக்கொண்டாள். வராந்தாவில் ஏறினாள். இருபதடி தொலைவில் அப்பாவைப் பார்த்து விட்டாள்.

குழந்தை முகத்தில் சட்டென்று இன்னொரு கவலை படர்ந்தது. அந்த இருளைக் கண்டு பாமு வேதனைப் பட்டான்.

இரண்டு அடி முன்னேறி, 'வா' என்று இரண்டு கைகளையும் விரித்துத் தன் குழந்தையை அழைத்தான்.

குழந்தை புத்தகப் பை எகிற ஓடி வந்தாள். அப்பாவுக்கு அருகே வந்து தயங்கி நின்றாள். உதடு மெல்லிய தாய் கோண அழுகை புறப்பட்ட நேரத்தில் பாமு அவளை இறுக்கிக் கொண்டான்.

''என் தங்கம், என் தாயி. என்னத்துக்குடா அழற... அப்பா வந்துட்டேன்...என் குழந்தைக்குக் கஷ்டம்னவுடனே அப்பா வந்துட்டேனே...''—தன் பரந்த வலது உள்ளங்கை மொத்தமும் குழந்தையின் கன்னத்தில் பதித்து அதன் நெற்றியில் முத்தமிட்டான்.

குழந்தை மெல்லியதாய் ஒரு வெட்கம் உணர்ந்தது.

''அம்மாடி... அப்பாகூட வீட்டுக்கு வந்துடறியா.''

குழந்தை சரியென்று தலையசைத்தாள்.

''மேடம்கிட்ட சொல்லிட்டு வந்துடு.''

மேடம் வெளியே வந்தார்கள்.



''என்ன லதா, அப்பாகூட போறியா. அழுகை கூடாது. நாங்கள்லாம் எதுக்கு இருக்கறோம். நாலஞ்சு நாள் ரெஸ்ட் எடுத்துக்க.'' குழந்தை கும்பிட்டு தந்தையுடன் நடந்தாள். பாமு பையை வாங்கித் தோளில் போட்டுக் கொண்டான். டிபன்பாக்ஸ் அடிபடாமல் சைக்கிளில் மாட்டினான்.

பள்ளிக்கூடம் விட்டுத் தெருவில் திரும்ப, பளிச்சென்று புத்தியில் டாக்டர் என்று மின்னிற்று. சைக்கிளை வலப்பக்கம் திருப்பி, சரசு போகும் லேடிடாக்டர் வீட்டுக்குப் போனான்.

''வீட்டுக்குப் போலியாப்பா?''

''இல்லடா. லேடி டாக்டர்கிட்ட உன்னைக் கூட்டிட்டுப் போகலாம்.''

''ஐயோ, ஊசி போடுவாங்களா...?''

''இல்லம்மா. செக் பண்ணி அனுப்பிடுவாங்க.'' குழந்தை டாக்டர் வீட்டுப் படியேறும் போது அதிகக் கவலையுடன் இருந்தது.

பெஞ்சில் உட்கார்ந்து டாக்டருக்குச் சொல்லியனுப்பியபோது 'வாணாம்பா' என்று கெஞ்சினாள்.

''அம்மாடி...அப்பா உனக்குக் கெட்டது செய்வேனா?''

''எனக்கு நோவு ஒண்ணும் இல்லப்பா.''

''ரொம்ப நல்லது.''

''டாக்டரம்மா வேணாப்பா.''

''ஏண்டா?''

''என்கிட்ட எதுனா கேப்பாங்க, எனக்கு வெக்கமா இருக்குதுப்பா.''

''ராஜாத்தி, வெட்கப்படறதுக்கு இதுல ஒண்ணும் இல்லடா''

''என் அப்பாவோட வந்தே—அம்மா எங்கன்னு அவங்களும் கேப்பாங்க.''

''வேறு யாரு கேட்டாங்க லதா.''

''பியூன் வந்து சொன்னப்ப, 'ஏண்டி, உங்கம்மா வரலையாமே, அப்பாக்கிட்ட என்ன சொல்வே'ன்னு டீச்சர் கேட்டாங்க. நான் பேசாத நின்னேன்.''

''ம்ம் ...''

''சரி சரி...போன்னாங்க.''

''ஏண்டா அப்பா வந்தார்னு படுதா.''

''இல்லப்பா. ஆனா, எல்லாரும்—''

''கிடக்காங்க. இது என் லதாக்குட்டி இல்லையா, என் பொண்ணு இல்லையா...அது மயக்கம் போட்டிருச்சுன்னா நான் வூட்ல இருக்க முடியுமா?''

''எனக்குத் தெரியும் நீ ஓடியாந்துடுவேன்னு. அம்மா வரதுக்கு லேட்டாவும், இல்லப்பா.''

''ஆறு ஆறரை ஆயிடும். போன் போட்டு சீக்கிரம் வரச் சொல்லிரட்டுமா?''

''வேணாம் பயந்து ஓடியாரும்.''

''உனக்கொண்ணும் கஷ்டமாயில்லையே லதா.''

''தூக்கம் வருதுப்பா.''

''களைப்பாயிட்டிருக்கும்.''

பரமு அவள் தலையைத் தோளில் சாய்த்துக் கொண்டு மெல்ல கோதிக் கொடுத்தான்.

''இது ஒண்ணும் இல்ல லதா, பயப்படக்கூடாது. இது சந்தோஷமான விஷயம். டாக்டரம்மாகிட்டே சொல்லு. செக் பண்ணுவாங்க. மருந்து ஏதாவது சாப்பிடணுமான்னு கேளு. வீட்டுக்குப் போய் அப்பா காபி போட்டுத் தரேன். சாப்பிட்டுப் படுத்துடு. அம்மா வந்ததும் சின்னதா சடங்கும் செய்யும்.''



''திட்டுமா?''

''எதுக்குத் திட்டறது?''

''ஹேமா வீட்ல திட்டினாங்களாம்?''

30192

''யாரு ஹேமா?''

''பக்கத்து வீட் பொண்ணு.''

''நம்ம அம்மா திட்டுமா...அதுக்கு லதா மேல உசிராச்சே...''

''அதுக்குக் கஷ்டம் ஜாஸ்திடா. முடியலை. அவ்ளோ தொலைவு போய் உழைச்சிட்டு வீட்டுக்கு வந்து வீட்டு வேலை செய்யறதும் கஷ்டமில்லையா?''

''என்னைத் திட்ட வேணாம்னு சொல்லுப்பா''—குழந்தை தகப்பன் புஜத்தில் முகம் வைத்து ஒண்டிக் கொண்டாள்.

''லதா கண்ணு, நான் இருக்கேன். அப்பா இருக்கற வரைக்கும் என் குழந்தைகளுக்கு எந்தக் கஷ்டமும் வராது.''

''வயிறு இன்னும் நோவுதுப்பா.''

''தூங்கினா சரியாயிடும்.''

''மாசா மாசம் நோவுமாப்பா?''

பரமு முகத்தைத் துடைத்துக் கொண்டான். என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. எந்த ஆணுக்கும் இது பற்றி ஞானமில்லை. ஆமெனில் குழந்தை கலவரப்படும்.

''பழகிடும்மா...''

டாக்டரம்மா வெளியே வந்தாள். விவரம் சொன்னதும் 'கங்கிராட்ஸ்' என்றாள். குழந்தை வெட்கப்பட்டது. டாக்டருடன் தனியாய் அறைக்குப் போயிற்று.

''டாக்டர் குழந்தைக்கு கொஞ்சம் விவரமா சொல்லிக் குடுங்க. அவங்கம்மா வேலைக்குப் போயிருக்காங்க. சாயந்திரம்தான் வருவாங்க.''

வாசலில் இருந்தபடி பரமு சொன்னான்.

டாக்டர் 'யெஸ் யெஸ்' என்று குரல் கொடுத்தாள்.

குழந்தை பதினைந்து நிமிடம் உள்ளே இருந்தாள். மருந்துச் சீட்டுடன் வெளியே வந்தாள். ''ஷி இஸ் நார்மல் நல்லா சாப்பிடு. நாலஞ்சு நாள் ரெஸ்ட் எடுத்துக்கட்டும். அவளுக்குப் புரியுது. கவலைப்பட வேண்டாம்.''

வீடு வந்து, பெண் ஹால் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ள, பரமு உப்புமா கிளறினான். டிபனும் காபியும் கொண்டு வந்து பெண்ணுக்குக் கொடுத்தான். ''கதவு சாத்திக்கடா. கோபியைக் கூட்டிட்டு வந்துடறேன்.''

பையனைப் பத்தே நிமிடத்தில் பருந்து மாதிரி கொத்திக் கொண்டு வந்து வீட்டில் இறக்கினான். பிள்ளைக்கும் டிபன் கொடுத்தான். அரிசி களைந்து உலை வைத்தான். காய் நறுக்கினான். ஹாலுக்கு வர பெண் சாய்வு நாற்காலியில் தலை சரிந்து தூங்கிக் கொண்டிருந்தாள். விளக்குப் போட்டு மெல்ல உலுக்கி எழுப்ப, சரசு உள்ளே நுழைந்தாள். குழந்தைகள் ஆவலுடன் வாசலை நோக்கின.

சரசு ஒரு பொட்டலம் பிரித்துப் பெண்ணிடம் ஒரு ஜாங்கிரி நீட்டினாள். பிறகு பிள்ளைக்குக் கொடுத்தாள்.

''அட, நான் கடைக்குப் போய் வாங்கணும்னு நினைச்சேன். நீயே வாங்கிட்டியா? யார் சொன்னாங்க?'' பரமு அதிசயித்தான்.



''யார்...ஒண்ணும் சொல்லலியே...என்னது?'' சரசு வினவினாள்.

''பின்னே? ஜாங்கிரி கொண்டாந்து குழந்தைகிட்ட குடுக்கறே?''

''தோணிச்சு வாங்கினேன். லதா கண்ணுல பட்டுது, குடுத்தேன்.''

பாமு சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''லதா பெரிசாயிடுச்சு. பள்ளிக்கூடத்துல சொல்லியனுப்பிச்சாங்க. போய் சீக்கிரம் கூட்டிட்டு வந்துட்டேன்.''

''நிசம்தானா...அடி என் தாயி!''

ஒரு விள்ளல் ஜாங்கிரி கடித்து நிற்கும் பெண்ணை சரசு தழுவிக் கொண்டாள். பெண் அம்மாவின் நெஞ்சில் முகம் புதைத்திருக்க, பரமு வாயில் விரல் வைத்து, மிரட்டாதே என்று சைகை செய்தான். சரசு தலையசைத்தாள்.

''காலைலதான் மனசுக்குள்ள பொறி தட்டுச்சுங்க, மதமதன்னு நிக்குதேன்னு எப்படா...?''

''ஒரு மணிக்கு.''

''உள்ள வா'' அம்மாவும் பெண்ணும் அறைக்குள் போனார்கள். பரமு இடக்கையில் இருந்த மோதிரம் கழட்டி சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். செருப்பு அணிந்து வாசலுக்கு சைக்கிள் நகர்த்தினான்.

''எங்க...வாழைப்பழம், பூ வெத்திலை, பாக்கு கிழங்கு மஞ்சள்...'' சரசு பேசியபடியே வெளியே வந்தாள்.

வாசலில் தயாராய் இருக்கும் புருஷனைப் பார்த்துச் சிரித்தாள்.

''செலவுதான் உங்களுக்கு.''

''சந்தோஷமா செய்யறேன். என்னென்னு சொல்லு.''

''இது ரொம்ப நல்ல விஷயம்மான்னு சொல்லிக் கூட்டிட்டு வந்தீங்களாமே... உங்களுக்கு வேணுமா இந்த நிலைமை.''

''சீ...! அது எம்பொண்ணு... அதுக்கு நான் தைரியம் சொல்லாத யார் சொல்லுவா... இதுல என்ன அவமானம்...?''

''அவமானம் எனக்குத்தாங்க. எல்லாத்தையும் புருஷன் தோள்ல போட்டுட்டுமாடு மாதிரி வேலைக்குப் போறேன்.'' புடவைத் தலைப்பால் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

''நாம் யோசனை பண்ணிச் செய்த விஷயம்தான்— எதுக்கு அழுவற...?''

''ஒரு சந்தோஷம்தான். ஒரு கவலைதான்...''

பரமு சிரித்தான். சந்தோஷமாகக் கடைத்தெருவுக்குப் போனான்.

## 27

அடுத்த நாலுநாளும் சின்னச் சின்னதாய் நூற்றுக் கணக்கில் சடங்குகள் நடந்தன.

ஒண்ணரை சவரன் மோதிரம், வெல்லப்பாகாய்க் கொதித்தது. தேங்காய்த் துருவலாய் மணத்தது. சோமாஸும் வெல்லப் புட்டும் வெற்றிலை பாக்குப் பழங்களோடு அண்டை வீடுகளுக்கு விநியோகிக்கப் பட்டன.

புதுத் தாவணி சுற்றி வந்து லதா தகப்பனை நமஸ்கரித்தாள். கண் மையும் நெற்றித் திலகமும், தலை நிறைய மல்லிகையும், கன்னம் முழுக்க வெட்கச்



செழுமையும் அடையாளம் முற்றிலும் மாற்றி அந்நியமாக்கிய உடையும், பார்க்கப் பார்க்க பிரமிப்பைக் கொடுத்தன.

என் குழந்தையா இது! நான் தோளில் தூக்கிக் கடைக்குக் கூட்டிப் போன பெண்ணா—முப்பது ரூபாய் கவுன் போட்டுச் சொப்பு விளையாடிய பெண்ணா.. தூக்கத்திலேயே படுக்கையை விட்டு விழுந்து எழுந்து மார்க்கூட்டில் கன்னம் வைத்து தூங்கிய மகளா...!

' நல்லா இரு தாயி...! ' சட்டென்று இருவருக்கும் இடையே இருந்த நிலம் துண்டாயிற்று கண்ணுக்குத் தெரியாத எல்லைகள் போடப்பட்டன இனி அளவு மீறி அதட்ட முடியாது. கை ஓங்கி நிற்க முடியாது. என்னம்மா இது. வளர்ந்த பொண்ணு...நீ பேசறது நல்லாவா இருக்கு என்று கண்டிப்பைக் கூட மிருதுவாகத்தான் காட்ட முடியும்

திரும்பி மனைவியை நோக்கினான். குழந்தையைப் பார்த்த கண்ணோடு மனைவியைப் பார்க்க, சட்டென்று மூப்படைந்தவளாய்த் தோன்றினாள்.

''உச்சி பரபரவென்று அரிக்குது. என்னாது— வெளிச்சத்துல பிரிச்சு விட்டுப் பார்த்தா, மூணு, நாலு நரை...''

—சரசு சொல்கிறாள்.

தனக்கும் இனி நரைக்கும். கண் மங்கும். கன்னத்தில் கோடு விழும். தோல் சுருங்கும். புஜம் கட்டுவிட்டுப் போகும். முதுகு கண்டும்,

அதற்கு முன்—அதற்கு முன் எப்படியேனும் இந்தக் குடும்பத்தைச் சரியாய் எழுந்து நிறுத்திவிட வேண்டும். இதுவரை சிரிப்பும் ஆட்டமுமாய் ஓடிவிட்டது. இனி ஒவ்வொரு அடியும் கணக்காய் எடுத்து வைத்தால்தான் உருப்பட முடியும்.

போன வருடம் லதா பெரியவளாகி இருந்தால் வேலையை விட்டிருக்க மாட்டேன். இனியும் இப்படி

வீட்டோடு இருக்க முடியாது. வேலை வேண்டும். எங்கு கிடைக்கும் வேலை. அம்பத்தூர், ஆவடி பக்கம்—சின்ன கடைகளில், மெஷின் ஷாப்பில். டர்னிங் மெஷினில் ஆட்கள் சேர்ப்பார்கள். தினக்கூலி கொடுப்பார்கள், பதினெட்டு ரூபாய், இருபது ரூபாய் வேலை முடிந்ததும் கிடைக்கும். அங்கு யூனியன் இருக்காது லீவு கிடையாது கூலி உயர்வு பார்க்க முடியாது. இஷ்டமிருந்தா வேலை செய். இல்லேன்னா போய்க்கினே இரு போய் விடலாமா—

லதாவுக்கு இப்போது பாதுகாப்பு அவசியமில்லையா? காலை ஆறு மணிக்குப் போய், பத்து மணிக்கு வர வீட்டுக்குக் காவல் யாரை வைக்க முடியும். பருவமடைந்த பெண் இன்னும் பத்திரமாக்கப்பட வேண்டிய விஷயமில்லையா!

"என்ன தலைல கை வச்சுட்டு உக்காந்துட்டீங்க."—இரவு சாப்பாடு முடிந்து சரசு அருகே உட்கார்ந்தாள்.

"நீ வேலையை வுட்டுரு சரசு."

"சரி, அப்புறம்..."

"எங்கேயாவது பட்டறைல நான் வேலை செய்யறேன். குழந்தைக்கு நீ வேணும் இனிமே, காபந்தா."

"வீட்டியேயா இருக்கப் போவுது. ப்ளஸ் டூ முடிக்கணும். காலேஜ் போவணும்... அங்கெல்லாம் யாரு காபந்து...?"

"மடையன், நல்ல வேலையைத் தொலைச்சுட்டு நிக்கிறேனே!"

"அது குறையே இல்லை. அரேபியாவுக்குப் போகாத இருந்ததே பெரிசாப்படுது இப்ப..."

"சே...! அதுவும் கைவுட்டுப் போச்சு..."

"இத்தினி சந்தோஷமா கொண்டாடியிருக்க முடியுமா...?"



"கொண்டாட்டம் முடிஞ்சது எப்படின்னு தெரியுமா?"

"தெரியும். ஒன்னரை சவரன் மோதிரம்... உருவி பாக்கெட்ல போட்டுக்கறப்ப பாத்தேன் சரி, வேற வழி... ஒரு வளையல் எடுத்து வச்சுடலாம்னு நினைச்சேன் நீங்க முந்திட்டீங்க. சரி இன்னும் பொறுப்பு குறையலேன்னு நினைச்சுக்கிட்டேன். எவ்ளோ குடுத்தான்?"

"ஆயிரத்து நூறு வட்டியோடு குடுத்தான். அவசரத்துக்கு சரின்னு வந்துட்டேன். என்ன செய்யலாம் மேற்கொண்டு, சொல்லு சரசு."

"பட்டறை வேலை ஒத்துக்குங்க."

"பசங்க...?"

"தானா வந்து, தானா சாப்பிடும். உள்ள தாழ் போட்டுகிட்டு இருக்கும்—நான் வரவரைக்கும்."

"கொடுமை சரசு."

"பொறுப்பு வரும். கஷ்டம் பார்த்தா முடியுமா? ரெண்டு வருஷத்துல முழு சமையல் பண்ணி இறக்கிடும் பாருங்க அது. அப்புறம் மீதி காசு இருக்கில்ல..."

"அறு நூத்தி சொச்சம் இருக்கு."

"வர ஞாயிற்றுக்கிழமை எங்கேயாவது பசங்களைக் கூட்டிக்கிட்டு போயிட்டு வரலாம்."

"எதுக்கு சரசு."

"எனக்குப் பைத்தியம் புடிச்சிடும் போல இருக்கு. ஆபீஸ், வீடுன்னு ஓடறது. அக்கடான்னு எங்கயாவது போய் மல்லாரணும். பசங்களையும் எங்கயும் கூட்டிக்கிட்டுப் போவலை ரொம்ப நாளா..."

"சரி..."

"தூங்கலையா."

"தூக்கம் வரலை."

''நான் போய்ப் படுக்கட்டுமா...''

''படு.''

''ரொம்ப உழப்பிக்கிட்டிருக்காதீங்க காசு வந்தாத் தான் வீடு. பசங்க சுகம் பாத்தா சம்பாதிக்க முடியாது. எழுவது ரூபா இல்லாத நல்ல தாவணி இல்ல. உங்க பசங்க தங்களை பாத்துக்கும். வேலை முக்கியம்ங்க ''

—சரசு எழுந்து உள்ளே போனாள்.

தெருவில் நிசப்தம் கூடிற்று. யாரோ நடந்தார்கள். ஸ்கூட்டர் கடந்தது. நாய்கள் யாரையோ துரத்தின.

சொடேர் என்று வாளி ஜலம் இறைக்கிற சப்தம் கேட்டது.

''எழுந்து போ சனியனே. நீ தூங்கவா திண்ணை கட்டி வுட்டுருக்கேன். நாதாங்கி போடலேன்னா கண்ட நாயும் உள்ள வருது பாரேன்.'' குரல் கேட்டது பக்கத்து வீட்டுப் பொண்ணும் தாயாரும்.

எழுந்திருக்காமலே தெளிவாய்த் தெரிகிறது. ஆங்காரக் குரல். மறுபடியும் சொடேர் என்று இரண்டு வாளி ஜலம்.

யார் அது?

எழுந்து கதவு திறந்து பார்த்தான். தெரு விளக்கடியில் சொட்ட சொட்ட ஒரு கிழவன் நின்று கொண்டிருந்தான். படீரென்று கதவு அறைந்து சாத்தப்பட்டது.

கிழவன் மெல்ல நடந்து பரமுவுக்கு அருகே வந்தான். மெல்ல சிரித்தான். வயது ஐம்பதிருக்கும்.

முகம் முழுவதும் வெண்மையான தாடி, காவிப் பற்கள், உயரம், இடுப்பில் அரைத்துண்டு, காலில் நைந்த செருப்பு, கைப்பைக்குள் கந்தை, நீண்ட கைகள் நறுமணமா, துர்வாசனையா என்று கண்டுபிடிக்க முடியாதபடி ஒரு மணம்.



''யாருங்க...என்ன வேணும்...?''

''பசி—''—கிழவன் ஒரு வார்த்தையில் பதில்சொல்லி விட்டுப் பரமுவை உற்றுப் பார்த்தான்.

''அதுக்கு என் வீட்டுக்குள்ளாற போறீங்க. இருங்க, ஏதாச்சும் இருக்கா பாக்கறேன்.''

ஹால் தாண்டி விடிவிளக்கு வெளிச்சத்தில் நடவி சமையலறை விளக்குப் போட, நீர் ஊற்றிய சாதம் தென்பட்டது. குழம்பு, ரசம் கலந்து ஒரு ஈயக் குடுவையில் இருந்தது.

இரண்டு பாத்திரமும் எடுத்து வாசலுக்கு வந்தான்.

''சாப்பிட எனம் இருக்கா...'' என்று கேட்டான்.

கிழம் இப்போது வராண்டாவுக்கு வெளியே கதவுப் பக்கம் உட்கார்ந்திருந்தது. ''எனம் இருக்கா'' மறுபடி கேட்க சிரித்தது.

''கேட்டபோதெல்லாம் சிரிச்சா...என்னசெய்வாங்க தண்ணி ஊத்தித் துரத்தாம—சரி, சாப்பிட்டுக் குடுங்க.''

கிழம் ரசம் முகர்ந்து விட்டுத் தனியே நகர்த்தி வைத்தது.

''செத்தமுன்னாடி நாங்க சாப்பிட்டது தாங்க. மோந்து பாத்திங்கன்னா என்ன அர்த்தம்?'' கிழம் கை விட்டுச் சோறு பிசைந்து, நீரை மெள்ள தூக்கிக் குடித்தது.

சோற்றைக் குழம்பில் உருட்டிப் போட்டது. 'ச்கவ். ச்கவ், ச்கவ், ச்கவ்''—உதடு குவித்து விநோதமாய் யாரையோ கூப்பிட்டது.

தெரு நாய்கள் சுற்றிக் கொண்டன.

குழம்பில் உருட்டிய சாதத்தை, தரையை ஊதிக் கிழம் பங்கு வைத்தது. நாய்கள் கவ்வின.

'போவ் கொழுப்புதானே உனக்கு? பசின்னி யேன்னு குடுத்தா நாய்க்கா சோறு போடற. குடுய்யா பாத்திரத்தை.''

கிழவன் நீர் கேட்டதுபோல் கட்டை விரலை வாய்க்கு உயர்த்தினான். வராண்டாவில் உள்ள சொம்பு நீரை ஊற்ற கையலம்பிக் கொண்டான்.

''நீராகாரம் மட்டும் போதுமா?''

''சிவோஹம்''

''ஒரு வார்த்தைக்கு மேல பேசமாட்டீங்க போல. ஊர்ல அத்தினி பிச்சைக்காரனுக்கும் சரியான கொழுப் புய்யா. எனக்கு ஒண்ணு தோணுது. திமிர்னுடைய உச்ச கட்டம் பிச்சை எடுக்கறது.''

கிழம் தலையசைத்தது.

''ஆமான்றியா.''

கிழம் மறுபடி தலையசைத்தது.

''வெட்கமாயில்லை ஆமான்னு சொல்றதுக்கு.''

''வெட்கம் விண்டு போயிற்று.''

''என்ன?''

''வெட்கம் உடைய, வெருளித்தனம். வெருளியும் மறைய நிர்மலம்''

''என்ன சொல்றீங்க...?''

''உன்னால் பிச்சையெடுக்க முடியுமா?''

''யோவ்...எழுந்து போய்யா...''

''போவேன். எழுந்து எங்கயாவது போவேன். நீ எங்கு போவாய். போய் விட்டு மறுபடி இங்கு வருவாய். கோபத்தோடு போவாய். கோபம் கரைய வருவாய். மறுபடி கோபித்துக் கொள்வாய்.''

பரமு திகைத்தான். என்ன சொல்கிறது கிழம்?

''வாங்கியவன் கை வானம் பார்க்கும். வழங்குபவன் கை பூமியை மறைக்கும்.''



''கவிதை எழுதிட்டிருந்தீங்களா...?''

''நீயுமொரு பிச்சைக்காரன். வெட்கம் விட்டுப் பிச்சை கேளேன்.''

''புரியலீங்க.''

''போ. போய்த் தூங்கு.''

''தூக்கம் வரலீங்க.''

''இப்போது விழித்துக் கொண்டா இருக்கிறாய்?''

''புரியலீங்க''

''நிறைய ஆசை இருக்கிறதல்லவா''

''ஆமாங்க''

''ஆசையெல்லாம் கனவாய் தெரிகிறதல்லவா?''

''ஆமாங்க.''

''கனவு எப்போ வரும்?''

''தூங்கற போது!''

''இப்போது நீ என்ன செய்கிறாய்?''

பரமு விழித்தான். கிழம் கைகொட்டிச் சிரித்தது.

''இருக்க பாத்திரம் வச்சிட்டு வரேன்.'' பரமு பாத்திரங்களை எடுத்து உள்ளே போனான். கலங்கியபடி வெளியே வந்தான். கிழம் சரிந்து வெளிச் சுவரில் சாய்ந்து நடைபாதையில் படுத்து விட்டது.

பரமு அருகே உட்கார்ந்து கொண்டான்.

''தப்பா பேசியிருந்தா மன்னிச்சுக்கங்க. உங்களைப் பார்த்தா பிச்சைக்கரானா தெரியலீங்க.''

''உன்னைப் பார்த்தால் எனக்குத் தெரிகிறது.''

''எப்படி.''

'பிச்சைக்காரனாய்.''

''சில விஷயம் புரியலைங்க.''

''பிச்சை கேட்கிறாயா?''

''புரிய வச்சா நல்லா இருக்குங்க.''

'வாங்குபவன் கை வாளம் பார்க்கும். வழங்குபவன் கை பூமியை மறைக்கும், கொட்டி இறைத்திருக்கிறதே ...எடுத்துக் கொள்''

''எதை எடுக்கிறது எதை விடுறதுனு தெரியலீங்க.''

''அன்பை விடு.''

''ஐயா...''

''அன்பை விடு.''

''அன்பு நல்ல விஷயம் இல்லீங்களா?''

''ஆசையின் விளைவு அன்பு.''

''ஆசைப்படாதேங்கறீங்களா?''

''ஆசையில்லாத போது அன்பு வருமா...?''

''ஆசைப்படாம இருக்கறது எப்படீங்க?''

''ஆசை எங்கிருந்து வருகிறது?''

''தெரியலீங்க''

''கேள்''

''கேக்கறேங்க''

''உன்னைக் கேள். ஆசை எங்கிருந்து வருகிறது?''

''மனசுலேர்ந்து.''

''மனசு என்பது எது?''

''புரியலீங்க.''

''பிச்சையெடு.''



''ஐயா...''

''மண்டி போட்டுப் பிச்சை கேள்.''

''உங்ககிட்டயா.''

''உன்னிடத்தில்.''

பரமு தலையைப் பிடித்துக் கொண்டான். தன்னிடத்தில் மண்டியிட்டுப் பிச்சை கேட்டல்...என்ன பிச்சை. தன்னிடத்தில் என்பது தன் நெஞ்சுக்குள். நான் என்பது தன் உடம்பு உருவம் உள்ளேயிருக்கிற என்னிடம் என் உருவம் மண்டியிடுகிறது. சரி. உள்ளே என்ன இருக்கிறது... நினைப்பா. யோசனையா, புத்தியா... உணர்வா... உள்ளே என்ன...?

நெற்றிக்குள் நீலம் படர்ந்தது. நீலம் கருப்பாயிற்று. கருப்பு மேலும் விழுந்து இருட்டாக...ஒளிப்புள்ளி தோன்றியது.

அடேய்... உடம்பு சிலிர்த்துப் போட்டது. உள்ளே அமிழ்வது தெரிந்தது. ஒளிப்புள்ளி விரிவாயிற்று. என்ன கேட்பது... என்ன... என்ன... என்ன மறந்து போயிற்று. கேட்க ஒன்றுமில்லை. கேள்வியில்லை. பதிலுமில்லை. அடேய்...அடேய் ...எவ்வளவு பெரிய வெளி...

''அதுதான்—அதுதான்'' என்றது கிழம்.

பரமு திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''வாய் மலர்ந்த சிரிப்பு தெரிந்தது.

''ஏங்க...ஏங்க... என்னமோ பண்ணிட்டீங்க. நீங்க என்னமோ பண்ணிட்டீங்க...''

''என்னாங்க அது. என்னங்க அது...'' பரிதவித்தான். ''பளிச்னு கவுத்துட்டீங்களே''—கிழவன் கையைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டான்.

''அது—என்ன?'' கிழம் கேட்டது.

''ஒன்னுமில்லீங்க.''

''அதுவே...'' கிழம் கை விரித்தது. ''அதுவே'' மறுபடி சொல்லிற்று.

ஒன்றுமில்லை. எதுவுமில்லை. உள்ளொன்று எதுவுமில்லை. உள்ளே காலி. வெளியே—ஏதோ ஏதோ... ஏதேதோ இருக்கிறது. எனக்கு சம்பந்தமில்லை. பரமு மௌனமாய் இருந்தான்.

''அதுவே'' என்றது கிழம் மறுபடி.

பரமு தலை துவண்டு மடியில் கை பிணைத்துச் சம்மணமிட்டுக் கிடந்தான்.

''ஆக. ஆசை என் என்பது எங்கே...எது...?''

பரமு இல்லையென்பதாய் கை விரித்தான்.

ஆசையே இல்லையெனில் அன்பென்பது...?

பரமு மௌனமாய் இருந்தான்.

''பொய்...'' கிழம் ரகசியம் போலப் பேசிற்று.

''பொய்... சகலமும் பொய். கற்பிதம்.''

பரமு மெல்லத் தன் தலையைக் கோதிக்கொண்டு நிமிர்ந்தான். ஒன்று புரிந்து விட்டது.

இந்த ஓட்டம் அநாவசியம். இந்த உழப்பல் அநாவசியம். நான் யாரையும் தாங்கவில்லை. எவரும் என்னைத் தாங்கவில்லை. அவரவரை அவரவர் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது அது அதனதன் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறது. இதில் எனக்கும் மற்றவர்க்கும் தொடர்பில்லை. தொடர்பிருப்பதாய் நினைத்துக் கொள்கிறேன். இயக்கம் நிரந்தரம். குமிழிகள் உந்தி ஆறு போகவில்லை. ஆறு இயக்கம்... குமிழிகள் நாம்.

இப்போது என்ன செய்வது?

தொடர்ந்து போ. முடிந்தளவு போ.

ஒரு நாள் சிதறும். அது நிச்சயம்.



அடுத்த குமிழியை மனைவியென்றும், பின் வரும் குமிழியை மகளென்றும் எப்படி நினைப்பது. நினைப்பு பொய். நினைப்பு கற்பிதம். நினைப்பு எங்கிருந்து வருகிறது ஒரு மயக்கத்தில். தூக்கம் போன்ற மயக்கத்தில். தூக்கம் விரட்டி விழிப்போடு பார்க்க ஏதுமில்லை உடம்பு முழுக்க ஒரு பிரமிப்பு படர்ந்தது. பரமு தானே கேள்வியும் பதிலுமாய் கிடந்தான்.

''ஐயா, நீங்க யாரு?''

கிழம் வாய்விட்டுச் சிரித்தது.

''முட்டாளே, தூங்கப் போ.''

புரிகிறது. மறுபடி மயக்கம் சூழ்கிறது. சற்று முன் கொண்ட விழிப்பு அகன்று மறுபடி நினைவலைகள் மோதுகின்றன.

''ஐயா,'' பரமு கைகூப்பிக் கெஞ்சினான்.

''விழிப்பும் முடியலை, தூக்கமும் வரலை. ஒரு வழி சொல்லுங்கய்யா...''

''சிவோஹம்'' கிழம். பரமுவின் கன்னம் வருடியது.

''மித ஆசாரம், மித நித்திரை, மிதமான வார்த்தைகள் இது போதும் உனக்குத் தொடர்ந்து போ—தெரியும்.''

''ரொம்ப நன்றிங்க!''

''நீ வாங்குபவனும் இல்லை. வழங்குபவனும் இல்லை. கொட்டிக் கிடக்குதய்யா.''

''ஆமாங்க.''

''கண்ணுக்குள் கண்ட பிம்பம்
காதலென்று பொய்யைச் சொல்லும்
கண்மூடி பார்த்தாலென்ன கிளியே
காற்றுக்கு நிறமேதடி...
நிறத்தினில் ஏழு வகை...
நீரில் முகம் பார்த்தபோது

'பிறந்தவர் பார்த்தாலென்ன...கிளியே
நெற்றிக்குள் நெருப்பாச்சடி...'

—கிழம் கைகொட்டிப் பாடிற்று. சிவோறம் என்றது. கிழம் எழுந்திருந்தது பரமு எழுந்திருந்தான். கிழம் நடந்தது. பரமு பின் தொடர்ந்தான். கிழம் திரும்பிற்று பரமு நின்றான்.

"உன் வழியில் நீ போ. நான் என் வழியில் போகிறேன்." திருப்பி அவனை வீடு நோக்கி நிற்க வைத்தது.

'வழி வெவ்வேறாயினும் முடிவு ஒன்றே. எங்கும் கொட்டிக்கிடக்குதய்யா. எடுத்துக்கொள். என்னைத் தொடர வேண்டாம்.'

கிழம் நகர்ந்து விட்டது.

'நெருப்புக்குள் நெஞ்சை வைத்து
நெஞ்சுக்குள் நெருப்பை வைத்து
விந்தையாகு செய்தானடி—கிளியே
வேடிக்கை உலகமடி'

—பாட்டு வெகு தொலைவில் கேட்டது.

பரமு வராண்டாவுக்குத் திரும்பினான். தாழிட்டான். அசையாது இரவு முழுவதும் உட்கார்ந்திருந்தான்.

விடிந்து பால் பைகள் வாசலில் வைக்கப்பட்ட போது பரமு எழுந்து நின்றான்.

தூங்கவேயில்லையே என்று தோன்றிற்று. ஆனால் உடம்பில் சோர்வு இல்லை. பால் பைகளை சமையலறைக்குள் வைத்துவிட்டு, குளிர்ந்த நீர் முகத்திலடித்துப் பல் தேய்த்தான் வேட்டி நுனியில் துடைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான். இன்னும் இருட்டு பிரியவில்லை.

## 28

**திசைக்கொன்றாய் குழந்தைகள் உருண்டு கிடக்க மனைவி ஒருக்களித்துக் கிடந்தாள்.**



யாரு இவங்கள்லாம் என்று கேள்வி மறுபடி எழுந்தது. அரை நிக்கரோடு மல்லாந்து கிடந்த பையன் மார்க்கூடு எழுந்து எழுந்து அமிழ்ந்தது. மண்டியிட்டு அமர்ந்தான். யார் இந்த சுவாசக் கூட்டுக்குள்? யார்? இது என் இங்கு வந்து கிடக்கிறது. என்னை இழுத்துப் பற்றி நிற்கிறது. என்று என கூப்பிடுகிறது. என்னை அப்பா என்று கூப்பிடுவது எது? இந்தக் கூடா? கூட்டில இருக்கும் பொருளா?

ஏன் கன்னத்தில் கன்னம் வைத்து என்னை இது இறுக்கிக் கொள்ளும்போது நான் எதை உணர்கிறேன். என்ன உணர்கிறேன்?

என்னை எதிர்பார்த்தா இது இங்கு பிறந்திருக்கிறது. என்ன எதிர்பார்ப்பு—மனைவி என்கிற இந்தப் பெண் பிள்ளைக்கு நான் காவலா...காவலுக்காக இந்த உடம்பு முழுவதுமா...கை வைத்து உறங்க அரை விழிப்பில் 'முனகுவாள். அழைப்பு என்று நினைத்துப் படுக்கையில் இடம் விட்டு நகர்வாள் என்ன செய்தாலும் ஈடு கொடுப்பாள்... என்ன செய்ய... மறுபடி, மறுபடி, மறுபடி... மறுபடி முடிவெங்கே?

இந்தப் பண்டமாற்றில் காதல் எங்கனம்? காதல் என்பது எங்கே இங்கு? பிள்ளைக்கு உப்புமா கிளறி பள்ளிக்கு அனுப்பி, வரவழைத்து, பெரியவனாக்கி, பெரியவனாகி அவன் போடுவதற்குக் கையேந்தி 'நான் சோறு போட்டேன் நீ போடு' என்று வலியுறுத்தி... இதில் பாசம் எங்கே?

காதல், பாசம் இல்லையெனில் எதற்கு இந்தக் கூட்டு. எங்கோ, எவரோ கொடுத்த நீராகாரம் உண்டு விட்டு எப்பம் விட்டுப் போகலாம். கால் போன போக்கில் போய் என்ன செய்ய...எங்கேயாவது மறுபடி நீராகாரம் கேட்க வேண்டுமில்லையா...ஞானிக்குக் கூடப் பசிக்குமே.

நிலத்தில் நிலம் காட்டி நெருப்பாய் ஒரு புள்ளி வளர்த்து. புள்ளி வளர உள்ளே புகுந்து. புகுந்த பிறகு பிரமிப்பாகி. பிரமிப்புக்குப் பிறகு...பசிக்குமே...

அப்போது என்ன அர்த்தம், புத்தியை, உணர்வை, ஆழ்நிலைத் தியானத்தை. தியானத்தில் அமிழ வரும் தெளிவை, ஞானத்தை. வயிறு கட்டிப்போட்டிருக்கிறது. இல்லையா?

எண் சாண் உடம்புக்கு சிரசே.. இல்லை, வயிறே பிரதானம்.

வயிறு புத்தியை அழுத்தி நசுக்கும். வேளா வேளைக்குக் கூலி கேட்கும். கேட்டு, தரவில்லையெனில் எதிர்த்துத் தாக்கும். உறைய வைக்கும்.

சோறு போடு. சோறு போடு என்று கூவும். சோற்றுக்கப்புறம்தான் சொர்க்கம். உடம்பு உட்கார்ந்தால்தான் தியானம்.

வேளா வேளைக்கு கொட்டிக் கொள்ளத்தான் பிறப்பு, தீனி தேடத்தான் வாழ்க்கை. தின்று, ஏப்பம் விட்டு, மலமாக்கி... திரும்பத் திரும்ப இதேதான்.

யப்பா! என்ன கொடுமை இது...உள்ளேயும் புறத்தேயும் தோன்றும் அத்தனையும் பிச்சை சோறு போட்டால்தான் புரிகிறது.

இங்கே கூடத் தின்று கொழுப்பு வளர, கூடல், கூடலில் பிறந்த குழந்தைக்குக் காவல். காவலுக்கு வண்டி இன்னும் கூடத் தின்று, கூடலுக்கு என்று அதில் கொழுப்பு சேர்.

உழன்று கிட பன்றியாய் இப்படிப் பன்றியாய் நாள் தவறாது தின்றாலும் இடறும், பொசுக்கென்று ரத்த நாளம் வெடித்துக் கதை முடியும். கொழுப்பேறிக் கிடந்ததை நாறுமென்று நெருப்பேற்றிக் கரைத்து விடுவார்கள். தின்றதற்கும், தின்று சேர்த்த கொழுப்புக்கும் அர்த்தமே இல்லை.



சே! என்ன பீங்கான் வாழ்க்கை. அந்தப் பளபளப்பும் வழவழப்பும் உடைந்து போக, தூக்கியெறியப்பட்டு விடுகிறது.

இந்தப் புன்னையும் ஒரு பீங்கான். இந்தப் பெண்ணும் ஒரு பீங்கான். நான் பெண்டாடல் செய்த பிறப்பும் ஒரு பீங்கான். இங்கே நான் பெரிய பீங்கான்

ஐயோ.. எப்பேர்ப்பட்ட நரகம் இது! ஏன் இங்கு வந்து மாட்டிக் கொண்டோம். சாகவே பிறப்பு எனில் பிறப்பெதற்கு. எதனால், எவரால், எதன் கட்டளையின் பேரில்? என் விருப்பம் எங்கே. என் விழைவு எது...?

என் எது... நான் யார்.

தேடு என்றது கிழம்.

எப்படித் தேட.. எங்கு தேட....

பிச்சையெடு என்றது கிழம்.

என்னிடத்தில் நான் மண்டியிட்டுப் பிச்சை கேட்க வேண்டுமாம். என் எது—

என் வழியில் நான் போகிறேன். உன் வழியில் நீ போ என்றது கிழம்.

அது சரி. என்னுள் என்னைத் தேட எவன் வழியிலோ நான் ஏன் போகவேண்டும். என் வழியில் நடந்து என்னுள் என்னைத் தேடி...

என் வழி எது...

இது.. இந்த வீடு இந்த வாழ்க்கை. இந்தக் காவல் வேலை. இந்தக் கூடல் தொழில். இதற்காக இடதும் வலதும் ஓடுதல்...இதுவே என் வேலை. என் வழி. வழி வழியாய் வந்த வழி. சோறு தேடும் வேலை ஞானிக்கும் சோறு வேண்டியிருக்கிறதே..!

இங்கே தேடேன். என் எது... நான் யார்.

'முழிச்சிட்டீங்களா...''—சரசு விருக்கென்று எழுந்திருந்தாள்.

தூங்கினால்தானே முழிக்க—

அவன் பதில் சொல்லாதிருந்தான்.

பிள்ளையும் பேச்சுக்குரல் கேட்டுத் திரும்பிப் படுத்தது. தகப்பன் அருகே இருக்க, புரண்டு வந்து அவன் காலைக் கட்டிக்கொண்டது. பாமு வருடி விட்டான்.

நெருப்புக்குள் நெஞ்சை வைத்து
நெஞ்சுக்குள் நெருப்பை வைத்து
விந்தைகள் செய்தாரடி—கிளியே
வேடிக்கை உலகமடி

உடம்பு முழுவதும் நெருப்பு. ஒரு கணைச் சூடு. அந் நெருப்புக்குள் ஒரு நெஞ்சு. சூடான இடத்தில் தாமரையாய் ஒரு நெஞ்சு. அந்த நெஞ்சுத் தாமரைக்குள் ஆசையெனும் நெருப்பு, யம்மா—உடம்பு நெருப்பு எரியஎரிய. நெஞ்சு நெருப்பும் வளரும்.

''யாப்போவ்...''

''என்ன...''

''யப்போவ்...இன்னிக்கு எங்கனா வெளிய கூட்டிக் கிட்டுப் போறியா...''

''எங்கப்பா...''

''அம்மா சொல்லிச்சே எங்கனா போயிட்டு வரலாம்னு கூட்டிக்கிட்டுப் போறியா...''.

''எங்கப்பா...''

''வண்டலூர் ஸூ' போலாம்மா...''

''அங்க காடு மாதிரியே வளர்த்து சிங்கம் புலியெல்லாம் அவுத்து வுட்டுருக்காங்களாம் கயிறு கிடையாது. கம்பி கிடையாது.''



'ஆனா ஒண்ணும் வெளிய வராது. அதுபாட்டுக்கு ஓடும், ஆடும், விளையாடும். கூண்டு மாதிரி இருக்காது. ஆனா கூண்டுதான்.''

தகப்பன் இடி முழக்கமாய் சிரித்தான்.

அவனுக்குப் புரிந்து விட்டது.

குழந்தைகள் அப்பன் சிரிப்புக்குப் பல் தெரிய விழித்தனர்.

வாசலில் நாலு ரூபாய் பிளாஸ்டிக் பைனாகுலர் வாங்கித் தந்ததும் மாறி மாறி மிருகங்களைப் பார்த்தனர்.

'ஸூ' இன்னும் முழுசா கட்டலை. கட்டி முடிச்சா காடு மாதிரியே ஆயிடும்.''—யாரோ பெண் பிள்ளை பக்கத்தில் பேசினாள்.

காடு மாதிரி இருந்த இடம்தான்... —பாமு நினைத்துக் கொண்டான்.

காட்டை அழித்துக் காடாக்கி...கட்டைக் காட்டை அழித்து, கல், சிமெண்ட் காடாக்கி—

''யானை அசையுதுப்பா...சிங்கம் நடக்குதுப்பா—குரங்கு குதிக்குதுப்பா!''

வேறென்ன செய்யும்.

பாமு பைனாகுலர் வாங்கிப் பார்த்தான். ஜனங்கள் சாரிசாரியாய் நடந்து கொண்டிருந்தார்கள். அங்கங்கே தயங்கித் தயங்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

இது ஏன் வியப்பாய் படவில்லை. மனிதர்களுக்குக் குரங்குக் குதிப்பு மாதிரி, யானை ஆட்டம் மாதிரி சாரி சாரியாய் ஜனங்கள் நடப்பது அதிசயமில்லையா...ஏன் பார்க்கத் தெரியவில்லை மனிதர்களுக்கு...

'நிமிர்ந்தவர் பார்த்தாலென்ன கிளியே, நெற்றிக்குள் நெருப்பாச்சுடி.

பாமு நிமிர்ந்தான். பைனாகுலர் வழியே சூரியன் சுட்டது.

வானத்துக்கும் பூமிக்கும் உள்ள இடைவெளி உயரம் புரிந்தது அந்த உயரத்துக்கு மனித உயரம் தூசு. நிமிர உயரம் தெரியும். தாழ தன் பிம்பம். எழு நிறம் வண்ணக் கலவை ஹோஹோ என்று ஆனந்தம் குதியல் ஆட்டம், அட்டகாசம் – இது பொய்.

விலகியிரு.

இதைத்தான் சொல்லித்தரா கிழம்.

வாங்கியவன் கை வானம் பார்க்கும். உன்னுக்குள் வாங்க வாங்க தொலைதூரம் புரியும் சொல்லித் தருகிறேன். வழங்குகிறேன் என்று துவங்கிவிட்டால்... புரட்டிக் கொண்டால் இந்தச் சின்ன பூமி கூடக் கண்ணுக்குப்பட்டது. வாங்கிக் கொண்டேயிரு. கற்றுக் கொண்டேயிரு.

சொல்லித் தராதே சொல்லித் தரத் தெரியும் என்று நினைக்காதே தெரிந்தவையும் மறையும், மறைக்கப்படும்.

சொல்லித் தருபவன் யார்? குரு—டீச்சர். தகப்பன் ஒரு டீச்சர். யூனியன் லீடர் ஒரு டீச்சர் அடேய், கற்பிப்பதை நிறுத்து. கற்றதை அழி. கேள், பார், உணர். உணர்வோடு இரு. எனக்குத் தெரியும் என்கிற நினைப்பே திமிரைத் தருகிறது. அப்போது கிழவன் போதித்தது என்ன?

எதுவும் போதிக்கவில்லை வழிகாட்டினான். கேள்விகள் மட்டும் கேட்டான். பதில் தேடிக்கொள் என்று போய் விட்டான். உன் வழியில் நீ தேடு என்று திரும்பி விட்டான்.

ஆக, இங்கே அலட்டிக் கொள்ள ஏதுமில்லை. வேலை இருந்தது. உழைத்தோம். வேலை போயிற்று.



வேறு விதமாயிருந்தோம் அவன் உழைக்க வீட்டிலிருந்தேன்; நான் உழைக்கையில அவன் வீட்டிலிருந்தான் இது பண்டமாற்று. இதில் துக்கமேதுமில்லை.

மந்தார இலை தாங்கிப் புளியோதரை வாங்கிக் கொண்டார்கள். வறுவல் துணைக்கு வைத்துத் தின்றார்கள். விக்கல் எடுக்க, நீர் குடித்தார்கள்.

''தம்பி, கூஜால தண்ணி கொண்டாடா''—சரசு பிள்ளையை உலுக்கினாள்.

''மாட்டோம் போ. எனக்குக் கால் நோவுது.''

பாமு எழுந்து காலி கூஜாவுடன் குழாயடிக்குப் போனான். தளும்ப நீர் கொண்டு வந்தான்.

''அப்பாவ நடக்கவுட்ட இல்ல நீ''—சரசு கடிந்து கொண்டாள்.

''தாங்ஸ்ப்பா!''—பிள்ளை கண்மூடி மரத்து நிழலில் படுத்தபடி பேசிற்று. பெண் குழந்தை புத்தகத்தோடு பேசிக் கொண்டிருந்தாள்.

''இப்ப ஒரு யானை இங்க ஓடி வருதுன்னு வச்சுக்கோ... என்ன பண்ணுவ...''—லதா. தம்பியிடம் கேட்டாள்.

படுத்துக் கிடந்த பிள்ளை விருக்கென்று எழுந்து 'எங்கடா' என்று கண்களால் தோட்டம் துழாவிற்று.

''வரலடா...வந்தா என்ன பண்ணுவ.''

மறுபடி கண்மூடிப் பிள்ளை படுத்துக்கொண்டது.

''மரத்துல ஏறி ஒளிஞ்சுக்குவேன்.''

''அம்மா... நீ?''

''பள்ளத்துல இறங்கிடணும். யானை பள்ளத்துக் குள்ள வராது.''

''நான் அப்பா பின்னாடி ஒளிஞ்சுக்குவேன்...''—லதா தகப்பனின் தோள்மீது முகவாய் வைத்தது.

''நீ என்னாப்பா பண்ணுவே...'' —படுத்தபடியே பிள்ளை கேட்டான்.

''உங்களை விட்டுட்டு யானை வராத இடமா பாத்து ஸ்பீடா ஓடிடுவேன்.''

''எங்களைக் காப்பாத்த மாட்டியா...'' பெண் சிணுங்கிற்று.

''ஆபத்துன்னா அவங்கங்க ஓடணும். என்னைக் காப்பாத்து, என்னைக் காப்பாத்துன்னா கூண்டோட போக வேண்டியதுதான்.''—சரசு பதில் சொன்னாள்.

''அப்போ... அப்பானு ஒருத்தர் எதுக்கு இருக்கிறது.''

''தலை தெறிக்க யானை வரப்போ அப்பாவா புள்ளையா, ஆம்பளையா, பொம்பளையா...அடிபடாத தப்பிச்சுக்கணும். அதுக்கு ஓடணும்.'' சரசு பாத்திரங்கள் அடுக்கியபடி பேசினாள்.

''யானை வருது'' யானை வருது லதா பதறினாள்.

சரசு பாத்திரங்களை நெஞ்சோடு அப்பிக்கொண்டாள்.

பிள்ளை 'ஐயோ!' என்று கூறியபடி துள்ளிற்று.

பரமு அசையாது அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பெண் வாய்விட்டுச் சிரித்தாள்.

''எல்லாம் பயந்துட்டீங்க இல்ல?''—பெண், சோழி இரையலாய் சிரித்தாள்.

''அப்பா, உனக்கு யானைன்னா பயமில்லையா—''—பிள்ளை கேட்டான்.



''பயம்தான்.''

''அப்ப நவுராவே இல்லியே.''

''நிஜம் யானை வரபோது நகர்ந்துடுவேன். பொய்யா வர யானைக்குப் பதறமாட்டேன்.''

''நெஜம், பொய்னு உனக்கு எப்படித் தெரியும்...''

''உள்ளே தோணும்.''

''நெஜ யானை வருதுன்னு தெரிஞ்சுடுமா.''

''நமக்கே தோணும், ஏதோ கஷ்டம் வருதுன்னு.''

''அப்ப என்ன செய்வே...''

''அப்ப என்ன தோணிச்சோ அதைச் செய்வேன்.''

''கைல கொம்பு ஒடிச்சு வச்சுக்கலாம்ப்பா. யானை வந்துடிச்சுன்னா...'' -பிள்ளை, ஆவாரஞ் செடிக் கிளையை ஒடித்து உருவி வைத்துக் கொண்டது.

யானை எதிரே ஆவாரஞ்செடி கிளை எம்மாத்திரம். இந்தப் பிள்ளைக்குப் புரியவில்லை. எல்லோருக்கும் முன்னால் குச்சி வீசி நடக்கிறது. ''அதோ, யானைடா...'' முனை திரும்ப மறுபடி லதா பொய் சொல்கிறாள். சிரிக்கிறாள்.

பையன் பயந்து நிற்கிறான். தெரிய, கைவீசி முன்னேறுகிறான்.

பெண் பொய் யானை காட்டுகிறாள்.

பையன் பொய் தைரியம் காட்டுகிறான்.

இதுவே வாழ்க்கை இங்கு.

யானை வர ஆளுக்கு ஒருபக்கம் என்பதே நிச்சயம்.

யானை வரும்வரை நடப்போம்; ஒன்றாய் நடப்போம்.

பரமுவின் மனசுள் அமைதி படர்ந்தது.

நெடுஞ்சாலைக்கு வந்து ரூட் பஸ்ஸுக்குக் காத்திருந்தார்கள். மாலை வேளை இரண்டு பஸ்ஸில் நல்ல கூட்டம். நிற்காமல் போயிற்று. சரசு சபித்தாள்.

பரமு பேசாதிருந்தான்.

பெரிய இம்போர்ட்டட் கார் பஸ் ஸ்டாண்ட் அருகே உதறி நின்றது. சின்ன குலுக்கல். முக்கலோடு மெல்ல கடந்தது. உள்ளே வழுக்கைத் தலை மனிதர், கியர்கள் மாற்றி இன்ஜினைச் சீற வைத்துக் கொண்டிருந்தார்.

கியர் பொருந்த, இன்ஜின் சீற, வேகத்தோடு வண்டி புறப்பட்டது.

'கர...கர...கட்டாக்' என்ற சப்தம் எழ, விநோதமாய் கிறீச்சிட்டுத் திரும்பி நின்றது

பரமு அசையாது அந்த வண்டியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த மனிதர் இறங்கி வண்டியைத் தெருவோரம் தள்ள முயன்றார். முடியவில்லை.

அது கியர் ஜாம். இனி பிரிப்பது கடினம்.

# 29

உயரத்திலும் அகலத்திலும், உல்லாச வசதிகளிலும் சில சமயம் குதிரைச் சக்தியிலும் வண்டிக்கு வண்டி வித்தியாசம் உண்டே தவிர, தரையில் ஊர்கிற எல்லா நாலு சக்கர வண்டிக்கும் இயக்க அமைப்பு ஒன்றுதான். ரேடியேட்டர், இன்ஜின், கியர்பாக்ஸ், டிரான்ஸ்மிஷன் என்கிற வரிசைதான். இந்த வரிசையை இணைக்கும் நட்டுகள் வித்தியாசப்படும்.



தனி ஆளாய் வண்டி ஓட்டி வந்த அந்தப் பெரிய மனிதர், முக்கி முகம் சிவக்க வண்டியை ஓரம் தள்ள முயற்சித்தும் முடியவில்லை. லாரிகள் பிளிறலோடு அந்த இடத்தை உரசினாற் போலக் கடந்தன. பஸ் ஸ்டாண்ட் கூட்டம் வேடிக்கை பார்த்தது.

சப்தம் கேட்ட க்ஷணமே பரமுவுக்கு வண்டி நகராது என்பது உறுதியாய்ப் புரிந்து விட்டது.

''கொஞ்சம் இரு சரசு.''—மனைவியிடம் சொல்லி விட்டு, தெற்குப் பக்கம் பஸ் வருகிறதா என்று ஒரு முறை பார்த்து விட்டு அருகே போனான். கதவுப்பக்கம் கை வைத்து உந்தித் தள்ளினான். டயர் தேய சில அடிகள் வண்டி நகர்ந்தது. அந்தப்பெரிய மனிதர் தலை தூக்கி இவனைப் பார்த்து 'நன்றி' என்று ஆங்கிலத்தில் சொன்னார். மறுபடி முயற்சித்தார். கூட ஒரு அடி நகர்ந்தது. சற்றுக் கோணலாகி இடப்பக்கப் பாதையை பெரிதும் அடைத்துக் கொண்டது.

பரமு பானெட் திறந்து உள்ளே பார்த்தான். எட்டு போல்ட் கழட்டினால் கியர்பாக்ஸ் தொட்டுவிட முடியும். பிறகு இன்ஜின் இணைப்பைக் கழற்றி விட்டால் உள்ளே உள்ள சிக்கலைத் தளர்த்திவிட முடியும். உபகரணங்கள் வேண்டும். வெகுதூரம் பயணப்பட்ட வண்டி.. உள்ளே எங்கு தொட்டாலும் நெருப்பாய்க் கொதிக்கிறது. பன்னிரண்டுக்குப் பதினாலு ஸ்பேனர் போதும்.

''உங்களுக்கு கார் சிப்பேர் தெரியுமா...கியரில் ஏதோ நேர்ந்து விட்டது.''—அவர் விசாரித்தார். பையன் ஓடி வந்து எட்டிப் பார்த்தான். ''அப்பா, தூக்கிக் காட்டு'' என்றான். குழந்தையைத் தூக்கி இன்ஜின் காட்டுகிறபோது கூடப் பரமுவின் சிந்தனை முழுக்க எப்படிப் பிரிப்பது என்பதிலேயே இருந்தது.

ரிப்பேர் பண்ணபோறியாப்பா...''—லதாக்குட்டி அருகே வந்தாள். ''ரொம்ப கடுது—எப்படித் தொடுவே'' ரேடியேட்டரைத் தொடப் போனவளைச் சட்டென்று விலக்கினான்.

'என்னங்க, இங்க நின்னுட்டிங்க...பஸ் வருமே...''—சரசு சற்றுத் தொலைவில் நின்று அழைத்தாள்.

பேசும் பாஷை புரியாது அந்தப் பெரிய மனிதர் தனியே இருக்க, பரமு அவரையும் தன் குடும்பத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

வீட்டுக்குப் போய் என்ன வேலை...ஏதுமில்லை... இந்த வேலை செய்தால் என்ன...பிரித்து மாட்டினால் என்ன...? ஒரு போல்ட்டில் ஸ்பேனர் மாட்டி இழுத்து எவ்வளவு நாளாயிற்று. சட்டை அழுக்காகும். ஆகட்டும் குழந்தைகள் தனியே போக வேண்டும். சரசு துணையிருக்கிறாள்.

வண்டலூர் ஹைவேஸில் இவருக்கு யார் இதைப் பிரித்து மாட்டுவார்கள். நல்ல மெக்கானிக்கு எட்டு கிலோ மீட்டர் போக வேண்டும். நான் நல்ல மெக்கானிக் இல்லையா...செய்தால் என்ன...?

''சரசு, நீ குழந்தைகளைக் கூட்டிட்டுப் போ... இதைச் சரி பண்ணிக் குடுத்துட்டு வரேன்.''

''எதுக்குங்க...இன்னும் ஒரு மணில இருட்டிடும் அப்புறம் எப்ப பஸ் பிடிச்சு எப்ப வர்றது...?''

''அதான் சரசு இவரு ஆள் கூட்டியாறதுக்குள்ளே இருட்டிடும். அதான் நானே பிரிச்சுடலாம்னு பாக்கறேன். நீங்க போங்க.''

'நாமளும் கூட இருக்கலாம்மா'—லதா கிசுகிசுத்தது. 'எப்படி ரிப்பேர் பண்றாங்கன்னு பார்க்கலாம்'' என்றது.

''ஏங்க நாங்களும் இருக்கட்டுமா?''



''வேணாம் சரசு நீங்க போங்க—''

''நான் மாட்டேன்'' —பையன் கார் அருகே குதித்து உட்கார்ந்து கொண்டான். ''நீ போம்மா. நான் அப்பா கூட வரேன்''— பெண் நகர்ந்து கொண்டது.

ஆட்களை இறக்கி ஏற்றிக்கொண்டு பஸ் நகர்ந்தது. பரமு அசையாது கியர்பாக்ஸ் பார்த்துக் கொண்டிருந்தான். பஸ் அவர்களைக் கடந்து புழுதி வாரி இறைத்தபடி போயிற்று.

''டு யூ ஹேவ் டூல் பாக்ஸ்?'' பரமு வினவினான். பின் டிக்கி திறந்து டூல் பாக்ஸ் பிரிக்கப்பட்டது. பரமு சட்டையைக் கழட்டி மனைவியிடம் கொடுத்தான். ஸ்பானரை எடுத்து நெற்றியில் வைத்து 'பிள்ளையாரப்பா' என்று முனகினான். இன்ஜினையும் கியர்பாக்ஸையும் பிணைத்திருக்கும் இணைப்பில் கை வைத்தான்.

குழந்தைகள் சுற்றி சுற்றி வந்தன. பெரியவருடன் பேசின. பரமு கேட்ட உபகரணங்களைப் போட்டி போட்டு எடுத்துக் கொடுத்தன. பரமுவின் சட்டையை மடித்துக் கையில் வைத்தபடி சரசு ஒரு குத்துக்கல்லில் உட்கார்ந்து கொண்டாள்.

பெரியவர் குழந்தைகளைக் கூட்டிப் போய் மிருகக் காட்சி சாலை வாசலில் உள்ள கடையில் சாக்லேட் வாங்கிக் கொடுத்தார். கடைப் பையனைக் குளிர் பானம் கொண்டு வரும்படி சொன்னார்.

''எனக்கு வேணாங்க...'' —சரசு எழுந்து நின்று வெட்கப்பட்ட போது கைகூப்பி, எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

மராத்திக்காரர் போலத் தெரிந்தது.

பரமு கியர்பாக்ஸ் மூடியைப் பிடித்து எடுத்து விட்டான். பானெட்டுக்குள் தெரிந்த மெல்லிய விளக்கொளியில் விரல் விட்டு கியர்களைப் பரிசோதித்தான்.

லாக்வாஷர் நகர்ந்து சிக்கியிருக்கிறது. கியர் ஆயில் தேவைக்கேற்றபடி இல்லை. சூடாகி நெளிந்து நார்ந்து மற்ற கியர்களோடு உரசி உடைந்து, இரண்டு துண்டுகள் சக்கரங்களுக்கிடையே மாட்டிக் கொண்டிருக்கிறது. நீட்டியிருந்த ஒரு துண்டை கட்டிங் ப்ளேயரால் முழு பலம் காட்டித் தூண்டித்தான். மறு துண்டு பல் சக்கரங்களுக்கு இடையே இருக்கிறது. முதல் கியரைச் சற்று நகர்த்தினான். குழந்தைகளை வண்டி தள்ளச் சொன்னான். பெரியவர், குழந்தைகள் தள்ளியும் வண்டி அசையவில்லை. சுத்தமாய் இருட்டி விட்டது.

''சரசு, ஒரு கை குடும்மா.''

சரசுவும் பின்பக்கம் நின்று உந்தித் தள்ளினாள். 'ம்ம்—இன்னும் இன்னும்' என்று உலுக்கி உலுக்கி அசக்க கியர் மெல்ல உள்ளே சிக்கியிருந்த தகட்டை அழுத்தி வெளியே கக்கிற்று. டூல் பாக்ஸில் ஏதாவது லாக்வாஷர் இருக்குமா என்று தேடினான். பழைய துருப்பிடித்த லாக்வாஷர் கிடைத்தது. எடுத்து தேய்த்து ஆயில் போட்டு உள்ளே மாட்டினான். மேல் தகட்டை பொருத்தினான்.

பையன் உள்ளே ஏறிப் படுத்துக் கொண்டான். இன்ஜின் இணைப்பைச் சரி செய்தபோது குழந்தை தூங்கிப் போயிருந்தான்.

குழந்தையை சரசு வெளியே எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டாள். பானெட் மூடி வண்டியைப் பெரியவர் ஸ்டார்ட் செய்தார்.

''இப்ப வண்டி ஓடும். எட்டி கிலோ மீட்டர் போய் விட்டால் நல்ல பட்டறை உண்டு. இப்படியே சென்னை நகரம் வரைக்கும் போய்விட முடியும். என் அபிப்ராயம் இது.''



கார் மெல்லக் கிளம்பிற்று. புகை கக்கிற்று. முழு வேகத்தில் பறந்தது. பரமு கர்சீப்பால் கைகளைத் துடைத்துக் கொண்டான். பஸ்ஸுக்குக் காத்திருந்தான்.

''என்ன, சொல்லாத கொள்ளாத போயிட்டாரு''—சரசு சலிப்புடன் கேட்டாள்.

''போவட்டும். எத்தினி நாளாச்சு. இப்படி வேலை செஞ்சு.''

பத்து நிமிடத்தில் பஸ் வந்தது.

ஏற முயற்சித்த போது நீண்ட ஹாரன் கேட்டது. அதே வண்டி திரும்ப வந்து அருகே வட்டமடித்து நின்றது.

பெரியவர் கதவு திறந்து விட்டார்

''ஏறுங்கள்...

''எதுக்குங்க''

''ஏறுங்க மிஸ்டர்.''

பரமு முன் சீட்டில் அமர்ந்து கொள்ள, பின்னால் சரசு குழந்தைகளுடன் உட்கார்ந்து கொண்டாள். கார் கிளம்பிற்று. காற்றுப்பட, பையன் விழித்துக் கொண்டான்.

''ஏன் திரும்பி விட்டீர்கள்...எங்களை ஏற்றிக் கொள்ளவா?''

பெரியவர் சிரித்தார். ''நானும் மனிதன்தான் நண்பனே. எனக்கு உங்கள் குடும்பமே உதவி செய்திருக்கிறது. உன்னை நடுத்தெருவில் விட்டுவிட்டா போவேன். வண்டி ஏ கிளாஸ். ஒற்றை ஆளாய் எப்படி கியர்பாக்ஸ் பிரித்தாய். நீ மெக்கானிக் ஷாப் வைத்திருக்கிறாயா?''

பரமு தன் சரிதம் சொன்னான்.

''ஆக இப்போது வேலை இல்லை. எப்படிக் குடும்பம் நடத்துகிறாய்?''

பாமு திரும்பி மனைவியைக் காட்டினான்.

தாம்பரம் நெருங்கிற்று. ஸ்டேஷன் அருகே இறங்கி விடுவதாய்ப் பாமு சொல்லியும் கேட்கவில்லை. வீட்டுக்கு வழி கேட்டு வண்டி திரும்பிற்று வீட்டு வாசலில் குலுங்கி நின்றது.

பாமு இறங்கிக் கைகூப்பினான்.

''சட்டுன்னு கை கூப்பிட்டா... வீடு வரைக்கும் வந்து விட்டிருக்காரு உள்ளாற கூப்பிடுங்க''– சரசு கடிந்து கொண்டாள்.

வீட்டுக்குள் வந்து உட்கார, காபி கொடுத்தாள்.

''என் பெயர் குந்தன் ஷியாம். சேல்ஸ் மானேஜர்.'' கார்டு கொடுத்தார். கம்பெனி பெயர் படித்தவுடன் பாமு மலைத்துப் போனான். இந்தியா முழுக்க இந்த கம்பெனி கார்கள் ஓடுகின்றன. உறுதிமிக்க வண்டிகள். மிக விரைவு ஓட்டத்துக்கு உண்டான சிறிய அமைப்பு வண்டிகள்.

''ஸோ... நீ வீட்டைப் பார்த்துக்கொள்ள, உன் மனைவி வேலைக்குப் போகிறாள், இல்லையா...''

''ஆமாங்க...''

''க்ரேட் வுமன். நீ கட்டளையிட்டவுடன் முணு முணுக்காமல் என் வண்டியை தள்ளினாள் இல்லையா உன் மனைவி.''

''அதுல என்னங்க...''

''நல்லது. இது என் அன்பளிப்பு''—பர்ஸ் பிரித்து சில நூறு ரூபாய் எடுக்க, பாமு மறுத்தான். பெரியவர் பையனிடம் திணித்து விட்டு காருக்குப் போனார்.



வண்டியை சாவி போட்டு ஸ்டார்ட் செய்தார்.

''மிஸ்டர் பரமசிவம்...''

''என்னங்க...''

''பம்பாய் வருகிறாயா?''

''எதுக்குங்க...''

''வேலை போட்டுத் தருகிறேன்.''

''பசங்க இருக்கு. படிப்பு இருக்கு. பம்பாய்க்கு நான் வந்துட்டா கஷ்டம்.''

''புரிகிறது. நான் முயற்சி செய்கிறேன். வீட்டு எண் என்ன?''

விவரம் தெரிந்து கொண்டு வண்டி கிளம்பிற்று.

பத்து நாட்கள் கழிந்துக் கடிதம் வந்தது. எல்லா சான்றிதழ்களுடனும் லோக்கல் மானேஜரைப் பார்க்கும்படி உத்தரவு வந்தது.

பார்த்தான்.

நாலுநாள் கழித்து மறுபடி தேர்வுக்கு என்று கடிதம் வந்தது.

கடிதத்தோடு லோக்கல் மானேஜரைப் பார்க்கப் போகையில் குந்தன் ஷியாம் இருந்தார்.

''மிஸ்டர் பரமசிவம், ஃபோர்மன் ட்ரெயினின்னு பம்பாய்ல அஸெம்பிளில ஆறுமாசம், ஃபோர்மன் ஆன் டெபுடேஷன்னு டில்லில ஆறுமாசம்... பிறகு மெட்ராஸ்ல போட்டுர்றேன். 'சர்வீஸ் ஸ்டேஷன் இன் சார்ஜா' இருக்க...'

வயிற்றுள் தாமரை மலர்ந்தது.

''கடவுள் மாதிரி... கடவுள் மாதிரி என் குடும்பத் துக்கு...''

''ஒரு சமயம் நீ எனக்குக் கடவுள் மாதிரி. உனக்கு இப்ப நான் கடவுள் மாதிரி. நடுரோட்ல உன் குடும்பமே என் வண்டி தள்ளிச்சே—அப்ப யாரை நான் கடவுள்னு சொல்ல. மனுஷன்தான் கடவுள்—மனுஷன் தானிருக்கும்.''

''நான் என் சுயநலத்துக்காக உங்க வண்டி பிரிச்சேன். என் சந்தோஷத்துக்காக வேலை பார்த்தேன்—ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு வண்டி கிடைச்சிருக்குன்னு...''

''யார் சுயநலமில்லாதவர்கள், சொல் பார்க்கலாம் ஒரு பிராணி உண்டா. சொல் பார்க்கலாம் உன் சுயநலம் ஊருக்கு உதவுகிறபோது, பிறருக்குப் பயன்படுகிறபோது நாலு மடங்கு சந்தோஷம் இல்லையா. நிமிர்ந்து நில் பரமசிவம். உன் குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள். என் அன்பைச்சொல் உன் மனைவிக்கு என்வணக்கம். போய் வா, பம்பாயில் சந்திக்கலாம். என் மனைவிகூட நன்றாய் காபி போடுவாள். உன்னை பார்க்க ஆவலாய் இருக்கிறாள். சியர் அப் மேன்.''

உத்தரவில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க, மனசு நூறுகிலோ மீட்டர் வேகத்தில் இரண்டே நிமிஷத்தில் வீடு வந்து சேர்ந்தது.

''சரசு வேலை கிடைச்சிருக்கு சரசு. வேலை கிடைச்சிருக்கு.''

''சரசு, நீ தேர் ஓட்டினது போதும். இறங்கு. இனி நான் ஓட்டறேன். போய் பின்னாடி சௌகரியமா உட்கார். நான் பார்த்துக்கறேன். சண்டை முடிஞ்சு போச்சு சரசு. யுத்தம் நின்னுடுச்சு. இனி உன் இடத்துக்கு வா.''



சத்யபாமா கிருஷ்ணன் மயங்கித் தேரில் சரிய தானே தேர் ஓட்டி, சண்டையிட்ட சத்யபாமா, பின் தரை இறங்கி கிருஷ்ணன் கையில் புரவிக் கயிற்றைக் கொடுத்துவிட்டுப் பின் பக்கம் போர்த்திக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். பாசறைக்குத் தேர் திரும்ப...

'சாகித்யம் கீதாக சங்கீதம் நாளாக
வாழ்கின்ற நம் ஜீவிதம்...'

இசையோடு பின்னிக் கொண்ட ஸ்ருதி மாதிரி இயங்கினாள்

விடிந்ததும் புருஷன் புறப்பட, ஒவ்வொரு சாமானாய் எடுத்துக் கட்டி வைத்தாள். போட்டோ ஆல்பத்தைப் பிரித்து அதில் குழந்தைகளும் சரசுவும் இருக்கின்ற போட்டோவைப் பிரித்துப் பரமு பெட்டியில் வைத்துக் கொண்டான்.

''ஐயோ...! அது வேணாம்...'

''என் சரசு?''

''அதுல புடவை கொஞ்சம் விலகியிருக்கு''

''அதான் இதை எடுத்துக்கிட்டேன்.''

''எதுக்குப்பா—யாராச்சும் பார்த்தா...''

''எனக்கு என் பெட்டிக்குள்ள—ரகசியமா—யார் பார்க்கப் போறா. நான் மட்டும் பாக்கறதுக்கு எடுத்துட்டுப் போறேன்.''

''போட்டோல உடம்புதாங்க இருக்கும். அதையேவா நினைச்சுக்கிட்டிருக்க முடியும். இல்ல. போட்டோவுல இருக்கிற மாதிரி எப்பவும் இருந்துட முடியுமா...வெறும் ஆசைக்கு மட்டுமே இருக்கிற பொம்பளையத்தான் பாடீஸ், பாவாடையோட போட்டோவா புஸ்தகத்துல போடறான். அது நிறைவாயிடுமா. அது மாதிரி நான் ஆயிட முடியுமா...இது வேணாங்க.''

பரமு போட்டோவை எடுத்து சரசுவிடம் கொடுத்தான்.

பெட்டியை மூடினான்.

உள்ளே கிழம் சிரித்தது.

'நெருப்புக்குள் நெஞ்சை வைத்து
விந்தைகள் செய்தானடி—கிளியே
வேடிக்கை உலகமடி'

வெறும் ஆசைக்கு மட்டும் மனைவியாக முடியுமா. ஆசையால் வருகிற விழைவை, வேகத்தை அன்பென்று சொல்ல முடியுமா? அப்போது அன்பு என்பது என்ன...? ஆசையின் விளைவா. அன்பை அறு.

அன்பை அறுக்க முடியுமா—என்னால் இயலுமா.

நான் பிடித்துக் கொண்டிருக்கிற ஒரே கயிறு அன்புதான்.

நான் நல்லவனாகவோ, வல்லவனாகவோ இருக்கிற ஒரே காரணம் இந்தக் குடும்பம்தான். இதை அறுத்து விட்டு எந்த அதல பாதாளத்தில் விழ முடியும். எந்த ஒளியோடு கரைந்து காணாமல் போக முடியும்.

ஆசையால் விளைவதே அன்பு. வாஸ்தவம். இருக்கட்டும். அன்பையும் ஆசையையும் வேரோடு அறுத்து விட்டு இங்கு வேறு என்ன செய்ய...

புலம்புகிறவனுக்குத்தான் இதை அறு. அதை அறு என்கிற கட்டளைகள். ஆத்திரமும் ஆவேசமும் வருகிற போது தலையில் தட்டி சூன்யம் காட்டுகிறார்கள். நானும் புலம்பினேன். கிழம் அன்பை அறு என்றது. முடியலைங்களே என்று புலம்பினேன் விழிப்பும் வரலை... தூக்கமும் வரலை... ஒரு வழி சொல்லுங்கய்யா என்று புலம்பினேன்.



மிதமான ஆகாரம், மிதமான நித்திரை, மிதமான பேச்சு என்று கற்றுக் கொடுத்தது கிழம்.

புரிகிறது இதனால் ஆசை அறுபடாது போனாலும் அளவோடு நிற்கும். அன்பு பொங்கி அலையாது. அமைதியாய்ப் பரவும்.

''புரிகிறது சிவோஹம். போட்டோ வேண்டாம் சரசு, நீ கூடியதும் ஊடியதும் நெஞ்சிலிருக்கிறது. குழந்தைகளின் அழுகையும் ஆனந்தமும் உள்ளே பசுமையாய்க் கிடக்கிறது உயிர் இருக்கிறவரை இந்தப்பசுமை மாறாது. இந்த ஒரு வருடத்து சொச்ச அனுபவம் மறையாது கம்பெனி கம்பீரம் தொலைந்து போய் வீட்டுக்குள் அடங்கியதில் விவேகம் வந்து விட்டது இனி இந்த விவேகம் தொடரும்.

சரசுவும் குழந்தைகளும் பின்தொடர, பரமு சென்ட்ரல் ரயில் நிலையத்துக்குள் நுழைந்தான்.

''அப்பா இல்லாம குழந்தைங்க 'ரொம்ப சிரமப் படும்னு தோணுது.''—சரசு காதோரம் முணுமுணுத்தாள்

''நீ இருக்கியே சரசு. பத்து அப்பாவுக்குச் சமம் நீ. பெண் பிள்ளை சமயத்துல ஆம்பிளையாவும்இருக்கணுங்கறதுக்கு சாட்சி நீ. இருந்தியே தாயி.''

''அப்போ நீ அம்மாவா இருந்தியா?''—குழந்தை திரும்பி வெடுக்கென்று கேட்டாள்.

இந்தப் பெண் குழந்தை தாயையும் தந்தையையும் கூர்மையாகக் கவனிக்கத் துவங்கி விட்டது.

''அங்க பாரு... இன்ஜின் சேக்கறாங்க.''—சரசு குழந்தையைத் திசை திருப்பினாள்.

''நீங்க இருந்திங்களே... பொம்பளைக்கு உண்டான பொறுப்போட வீட்டைக் கவனிச்சுக்கிட்டிங்களே...''

"பொம்பளை வேஷம் கட்டினப்பதான் உலகமே மாறிப் போச்சு எனக்கு. விசில் ஊதியாச்சு. வரட்டுமா? குழந்தைகளைப் பாத்துக்க சரசு." பரமு குழந்தைகளை அணைத்து முத்தமிட்டான். வண்டி நகருமுன் ஓடிப் போய் ஏறிக்கொண்டான்.

சீ வண்டி நகர அன்பில் வயிறு குழைந்தது. நெஞ்சில் பொங்கின ஆசை கண்களில் நீராய்த் தளும்பிற்று. இது மிதமான ஆசை. மிதமான அன்பு. பிடுங்கி எடுத்து ருசிக்காமல் பெண்டாளத் தவிக்காமல் இருக்கிற அன்பு புரிகிறது. சிவோஹம். பெண் பிள்ளையாய் ஆண் இருப்பது கூட முக்கியமில்லை. தாயாய் இருக்க வேணும். தகப்பன் தாயாக மாற வேண்டும். அம்மா என்கிற பதவி எப்படிப் பெண்ணுக்கு மட்டும் சொந்தமாகும்... அது எனக்கும் உண்டு. எல்லா உயிருக்குள்ளும் உண்டு. எனக்கும் புரிந்து விட்டது. சிவோஹம். நான் தாயுமானவன்.

20192